UNIVERSAL LIBRARY

OU_208013

UNIVERSAL LIBRARY

கழக வெளியீடு - ௨௧௫

ஓம்

தண்டியாசிரியர்

இயற்றிய

# தண்டியலங்காரம்

## சுப்பிரமணிய தேசிகர் உரையுடன்

தமிழ்ப் பண்டிதர்

**திரு. கோ. இராமலிங்கத்தம்பிரானவர்களால்**

பார்வையிடப் பெற்று,

குறிப்புரை எழுதிச் சேர்க்கப்பெற்றுளது.

**திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த**
**நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்**
**திருநெல்வேலி & சென்னை.**

சருவசித்து - புரட்டாசி

*First Edition : Feb. 1938*
*Second Edition : Feb. 1943.*

[*All Rights Reserved*]

**PUBLISHED BY**

**THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., TIRUNELVELI & MADRAS.**

*October 1947.*

Q. H. Ms. 95 B.—500 Copies.

Printed at the Sri Bharathi Press, Choolai, Madras.

# முன்னுரை

மொழியின் அழகை விளக்குவது அணியிலக்கணம். இதிற் பயில்வது, நம்மைத் திறனுறப் பேசவும், எழுதவும் ஊக்குவதோடு, பொருள், நடை இவற்றின் நுட்பத்தை யுணரவும், சிறந்த நூலியற்றவும் உதவுகின்றது. எனவே, இவ்விலக்கணப் பயிற்சி இன்றியமையாததென்பது வெள்ளிடை; மேலும், அணியிலக்கணம், எழுத்து முதலிய இலக்கணங்கள்போ லல்லாது பல மொழிகளுக்கும் பொதுவா யிருத்தலானும் என்க.

தண்டியலங்கார மென்ற இத் தமிழ்நூல் ஐவகை யிலக்கணங்களுள் அணியிலக்கணத்தைத் தனியே யுணர்த்துவது. இது காவிய தரிசனமென்னும் வடநூலின் பெயர்ப்பு; அணியிய லென்னும் மறுபெயரையு முடையது.

இந் நூல், பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று இயலாகப் பகுக்கப்பட்டு கஉ௫ சூத்திரங்களை யுடையது. இதற்கும் இதன் முதனூலுக்கும் ஒரோவழி சிறிது வேறுபாடு காணப்படுகின்றது. இவ் வேற்றுமை, வழிநூலிலக்கணம் பற்றியது போலும்.

இந் நூலாசிரியரின் வரலாறு துணிவாகத் தெரியவில்லை. இவர், தண்டி யென்னும் பெயருடையவர் என ஒரு சாராரும், "வடதிசை யிருந்து ... . ... ..தண்டி யென்பவனே" என்ற சிறப்புப் பாயிரச் செய்யுளின் துணையால், இவர் சோழ நாட்டவர், கம்பர் மகனார் அம்பிகாபதியின் குமாரர்-தண்டி யென்னும் பெயரினர் என்று மற்றொரு சாராரும் கூறுவர். தண்டி என்பது இவர் இயற்பெயரோ அல்லது வடநாட்டுத் தண்டியாரின் நூலைப் பெயர்த்த காரணத்தால் அடைந்த புகழ்ப்பெயரோ எனத் துணிவதற் கில்லை. இவர் வரலாறு எவ்வாறாயினும் ஆகுக. இந்நூல் மிகச் சிறந்ததென்பதையும், இந் நூலார் வடமொழி, தென்மொழிகளில் மிக வல்லுநரென்பதையும், இவர் தமிழ்க் கவித் திறமுடையார் என்பதையும் மறுப்பா ரில்லை.

இந் நூலுக்கு நல்லுரை எழுதி நாட்டிய நாவலர் இன்னா ரென்பதும், அவர் தம் வரலாறும் அறிய இயலவில்லை. இந் நூலின் பழைய பிரதியில் "சுப்பிரமணிய தேசிகராற் செய்யப் பட்ட உரை" என்று மாத்திரம் காணப்படுகின்றது, அதன் உண்மை யாதும் புலப்பட்டிலது. இவ்வுரை, சூத்திர பொருளை நன்கு விளக்கி, அச் சூத்திரங்களிற் காணப்படும் அணி வேறு பாடுகளின் இலக்கணத்தை எடுத்துக் காட்டி உதாரணச் செய்யுள் களின் பொருளையும் விளக்கிச் சில விடங்களில் மறுபடும் விளக்க மும் கூறுதலுடன் முதனூற் கருத்தையும் தழுவி யுள்ளதனால் மிகச் சிறப்புடையது

இந் நூலின் உதாரணச் செய்யுள்களிற் பல வடநூல் பெயர்ப்பாயும், சில அவற்றோடு ஒத்த கருத்துடையனவாயும், சில ஒவ்வாதனவாயும் அமைந்தவை. உதாரணச் செய்யுளுக்கும், அணியின் இலக்கணத்துக்கும் உள்ள பொருத்தத்தை நன்கு விளக்க, முற்றும் எடுத்துக் காட்டாமை இவ்வுரைக்கு ஒரு குறை யென்பர் சிலர். அப் பொருத்தம், உணர்வுடையோரால் எளி தில் அறியக்கூடும் என்னும் எண்ணத்தால் அதனை உரை யாசிரியர் காட்டாது விட்டனர் போலும்.

இத் தண்டியலங்காரத்தையும், இதன் உரையையும் இயன்ற வளவு திருத்தமாகப் பதிப்பித்து வெளியிடக் கருதிய எங்கள் கருத்திற் கிணங்கித் திருவாளர் கோ. இராமலிங்கத் தம்பிரா னவர்கள் தண்டியலங்கார உரை நூல்கள் சிலவற்றின் துணை கொண்டும், தம் ஆசிரியர்பால் தெளிந்து குறித்து வைத்திருந்த விளக்கங்களின் துணைகொண்டும், இரு முறையும் ஒப்புநோக்கிச் சில நயங்களும், பாட பேதங்களும், கருத்துக்களும் விளங்கக் குறிப்புரை எழுதி யுதவினார்கள். இவர்கட்கும், இந்நூலை அச் சிடும்போது பிழைதிருத்தம் பார்த்துதவிய கழக வெளியீட்டு உட்கழக உறுப்பினரும், பாளையங்கோட்டை அர்ச் சவேரியர் கல்லூரித் தலைமைத் தமிழ் விரிவுரையாளருமாகிய வித்துவான் திருவாளர் பு. சி. புன்னைவனநாத முதலியா ரவர்களுக்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# பொருளடக்கம்

## க. பொதுவியல்

| | பக்கம் |
|---|---|
| தற்சிறப்புப்பாயிரம் | க |
| க. செய்யுள் வகை (4) | உ |
| (க) முத்தகச் செய்யுள் | உ |
| (உ) குளகச் செய்யுள் | ௩ |
| (௩) தொகைநிலைச் செய்யுள் | ௪ |
| (௪) தொடர்நிலைச் செய்யுள் (2-வகை) | ௫ |
| (1) பொருட்டொடர்நிலைச் செய்யுளின் பகுப்பு (இரண்டு) | ௬ |
| (i) பெருங்காப்பியம் | ௭ |
| பெருங்காப்பிய விலக்கணத்திற்கு ஓர் புறனடை | க0 |
| (ii) காப்பியம் | க0 |
| காப்பியங்கட்கோர் இலக்கணம் | க0 |
| (2) சொற்றொடர்நிலைச் செய்யுள் | கக |
| உ. செய்யுள் நெறி (2) | கக |
| (க) வைதருப்பநெறி (பத்து) | கக |
| (உ) கௌடநெறி | கஉ |
| (1) செறிவு | க௩ |
| (2) தெளிவு | க௪ |
| (3) சமநிலை | க௫ |
| (4) இன்பம் | க௭ |
| (5) ஒழுகிசை | க௯ |
| (6) உதாரம் | உ0 |
| (7) உய்த்தலில் பொருண்மை | உஉ |
| (8) காந்தம் | உஉ |

| | பக்கம் |
|---|---|
| (9) வலி | உச |
| (10) சமாதி | உசு |
| இவ்வியலுக்குப் புறனடை | உஅ |


## உ. பொருளணியியல்


| | |
|---|---|
| காப்பு | உகூ |
| பொருளணிகள் (முப்பத்தைந்து) | உகூ |
| க. தன்மையணி (4) | ஙக |
| (க) பொருட்டன்மை | ஙஉ |
| (உ) குணத்தன்மை | ஙங |
| (ங) சாதித்தன்மை | ஙச |
| (ச) தொழிற்றன்மை | ஙச |
| உ. உவமையணி (3) | ஙரு |
| (1) பண்புவமை | ஙசு |
| (2) தொழிலுவமை | ஙசு |
| (3) பயனுவமை | ஙசு |
| (க) ஒரு பொருளோ டொரு பொருள் | ஙஎ |
| (உ) ஒரு பொருளோடு பல பொருள் | ஙஎ |
| (ங) பல பொருளோடு பல பொருள் | ஙஎ |
| (ச) பல பொருளோ டொரு பொருள் | ஙஎ |
| (ரு) பண்பியென்பன | ஙஅ |
| (சு) பண்பென்பன | ஙஅ |
| (எ) தொழிலென்பன | ஙஅ |
| (அ) பயனென்பன | ஙஅ |
| ஷை உவம வகை : | ஙகூ |
| (க) விரி யுவமை | ஙகூ |
| (உ) தொகை யுவமை | ச0 |
| (ங) இதரவிதர வுவமை | ச0 |
| (ச) சமுச்சய வுவமை | சக |
| (ரு) உண்மை யுவமை | சஉ |
| (சு) மறுபொருளுவமை | சஉ |
| (எ) புகழுவமை | சங |

| | | பக்கம் |
|---|---|---|
| (௮) | நிந்தை யுவமை | ௪௩ |
| (௯) | நியம வுவமை | ௪௩ |
| (௧௦) | அநியம வுவமை | ௪௪ |
| (௧௧) | ஐய வுவமை | ௪௪ |
| (௧௨) | தெரிதருதேற்ற வுவமை | ௪௫ |
| (௧௩) | இன்சொலுவமை | ௪௫ |
| (௧௪) | விபரீத வுவமை | ௪௫ |
| (௧௫) | இயம்புதல் வேட்கை யுவமை | ௪௬ |
| (௧௬) | பல பொரு ளுவமை | ௪௬ |
| (௧௭) | விகார வுவமை | ௪௭ |
| (௧௮) | மோக வுவமை | ௪௭ |
| (௧௯) | அபூத வுவமை | ௪௮ |
| (௨௦) | பலவயிற்போலி யுவமை | ௪௯ |
| (௨௧) | ஒருவயிற்போலி யுவமை | ௪௯ |
| (௨௨) | கூடா வுவமை | ௪௯ |
| (௨௩) | பொதுநீங்கு வுவமை | ௫௦ |
| (௨௪) | மாலை யுவமை (2) | ௫௦ |
| ௸ | உவமையணி பிற அலங்காரங்களோடு கூடி வருமாறு உணர்த்தல் | ௫௧ |
| (௧) | அற்புத வுவமை | ௫௧ |
| (௨) | சிலேடை யுவமை | ௫௧ |
| | (1) செம்மொழிச் சிலேடை யுவமை | ௫௧ |
| | (2) பிரிமொழிச் சிலேடை யுவமை | ௫௨ |
| (௩) | அதிசய வுவமை | ௫௩ |
| (௪) | விரோத வுவமை | ௫௪ |
| (௫) | ஒப்புமைக் கூட்ட வுவமை | ௫௪ |
| (௬) | தற்குறிப்பேற்ற வுவமை | ௫௫ |
| (௭) | விலக்குவமை | ௫௫ |
| (௮) | ஏது உவமை | ௫௬ |
| ௸ | உவமையணிக்கு எய்தியதோர் வேறுபாடு உணர்த்தல் | ௫௭ |
| | இடை நிற்கும் உவமைச் சொற்கள் (௩௫) | ௫௯ |

பக்கம்

௩. உருவகவணி (15) ௫௬

(௧) தொகை யுருவகம் ௬௦
(௨) விரி யுருவகம் ௬௧
(௩) தொகைவிரி யுருவகம் ௬௧
(௪) இயைபுருவகம் ௬௨
(௫) இயைபிலுருவகம் ௬௨
(௬) வியனிலை யுருவகம் ௬௩
(௭) சிறப்புருவகம் ௬௩
(௮) விருபக வுருவகம் ௬௪
(௯) சமாதான வுருவகம் ௬௫
(௧௦) உருவக வுருவகம் ௬௫
(௧௧) ஏகாங்க வுருவகம் ௬௬
(௧௨) அநேகாங்க வுருவகம் ௬௬
(௧௩) முற்றுருவகம் ௬௭
(௧௪) அவயவ வுருவகம் ௬௭
(௧௫) அவயவி யுருவகம் ௬௭

ஷை உருவக அலங்காரம் பிற அலங்காரங்களோடுங் கூடி வருமாறு உணர்த்தல் ௬௮

(௧) உவமை யுருவகம் ௬௮
(௨) ஏது வுருவகம் ௬௯
(௩) வேற்றுமை யுருவகம் ௬௯
(௪) விலக்குருவகம் ௭௦
(௫) அவநுதி யுருவகம் ௭௦
(௬) சிலேடை யுருவகம் ௭௧

ஷை உருவகம் உவமை யென்னும் இரண்டு திறத்து அலங்காரங்களுக்கும் புறனடை உணர்த்தல் ௭௨

(௧) ஏது வுருவகம் ௭௨
(௨) இயைபுருவகம் ௭௩
(௩) விலக்குருவகம் ௭௩
(௪) சிறப்புருவகம் ௭௪
(௫) அற்புத வுருவகம் ௭௪

பக்கம்

உவமை வருமாறு : (6) ௭௫

(௧) தெரிதரு தேற்ற வுவமை ௭௫
(௨) பலவயிற போலி யுவமை ௭௬
(௩) பண்புவமை ௭௬
(௪) ஒப்புமை யுவமை ௭௭
(௫) சந்தான வுவமை ௭௭
(௬) விலக்குவமை ௭௯

௪. தீவகவணி (12)

(௧) முதனிலைக் குணதீவகம் ௮௰
(௨) முதனிலைத் தொழிற்றீவகம் ௮௧
(௩) முதனிலைச் சாதித்தீவகம் ௮௧
(௪) முதனிலைப் பொருட்டீவகம் ௮௨
(௫) இடைநிலைக் குணத்தீவகம் ௮௩
(௬) இடைநிலைத் தொழிற்றீவகம் ௮௩
(௭) இடைநிலைச் சாதித்தீவகம் ௮௪
(௮) இடைநிலைப் பொருட்டீவகம் ௮௪
(௯) கடைநிலைக் குணத்தீவகம். இதற்கு உதாரணம் அனுபந்தத்திற் காண்க.
(௧௰) கடைநிலைத் தொழிற்றீவகம் ௮௫
(௧௧) கடைநிலைச் சாதித்தீவகம். இதற்கு உதாரணமும் உரையும் கிடைக்கவில்லை.
(௧௨) கடைநிலைப் பொருட்டீவகம் ௮௬

ஷை தீவகாலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடி வருமாறு உணர்த்தல் ௮௭

(௧) மாலா தீவகம் ௮௭
(௨) விருத்த தீவகம் ௮௭
(௩) ஒருபொருட்டீவகம் ௮௮
(௪) சிலேடா தீவகம் ௮௮

ஷை தீவக அலங்காரம் பிற வகையால் வருவன உணர்த்தல் ௮௯

(௧) உவமா தீவகம் ௮௯
(௨) உருவக தீவகம் ௮௯

| | பக்கம் |
|---|---|
| ௫. பின்வருநிலையணி (2) | ௯௦ |
| (௧) சொற்பின்வருநிலை | ௯௦ |
| (௨) பொருட்பின்வருநிலை | ௯௧ |
| ஷை பின்வருநிலையணி பிற அலங்காரங்களோடு கூடி வருமாறு உணர்த்தல் | ௯௧ |
| (௧) உவமைப் பொருட்பின் வருநிலை | ௯௨ |
| ௬. முன்னவிலக்கணி (3) | ௯௨ |
| (௧) இறந்தவினை விலக்கு | ௯௩ |
| (௨) எதிர்வினை விலக்கு | ௯௩ |
| (௩) நிகழ்வினை விலக்கு | ௯௪ |
| ஷை விலக்கணிக்குச் சில வேறுபாடு உணர்த்தல் | ௯௪ |
| (௧) பொருள் விலக்கு | ௯௪ |
| (௨) குண விலக்கு | ௯௫ |
| (௩) காரண விலக்கு | ௯௫ |
| (௪) காரிய விலக்கு | ௯௫ |
| ஷை விலக்கு என்னும் அலங்காரத்தை விரித்து உணர்த்தல் | ௯௬ |
| (௧) வன்சொல் விலக்கு | ௯௬ |
| (௨) வாழ்த்து விலக்கு | ௯௭ |
| (௩) தலைமை விலக்கு | ௯௭ |
| (௪) இகழ்ச்சி விலக்கு | ௯௮ |
| (௫) துணைசெயல் விலக்கு | ௯௮ |
| (௬) முயற்சி விலக்கு | ௯௯ |
| (௭) பரவச விலக்கு | ௯௯ |
| (௮) உபாய விலக்கு | ௧௦௦ |
| (௯) கையறல் விலக்கு | ௧௦௦ |
| (௧௦) உடன்படல் விலக்கு | ௧௦௦ |
| (௧௧) வெகுளி விலக்கு | ௧௦௧ |
| (௧௨) இரங்கல் விலக்கு | ௧௦௧ |
| (௧௩) ஐய விலக்கு | ௧௦௨ |
| ஷை விலக்கு என்னும் அலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடிவருமாறு உணர்த்தல் | ௧௦௨ |
| (௧) வேற்றுப் பொருள்வைப்பு விலக்கு | ௧௦௩ |

| | பக்கம் |
|---|---|
| (உ) சிலேடை விலக்கு | க0ங |
| (ங) ஏது விலக்கு | க0ங |
| எ. வேற்றுப்பொருள்வைப்பணி (8) | க0ச |
| (க) முழுவதுஞ் சேறல் | க0ரு |
| (உ) ஒருவழிச் சேறல் | க0ரு |
| (ங) முரணித் தோன்றல் | க0ரு |
| (ச) சிலேடையின் முடித்தல் | க0சா |
| (ரு) கூடா வியற்கை | க0சா |
| (சா) கூடுமியற்கை | க0எ |
| (எ) இருமை யியற்கை | க0எ |
| (அ) விபரீதம் | க0அ |
| அ வேற்றுமையணி (5) | க0அ |
| (க) ஒருபொருள் வேற்றுமைச் சமம் | க0கூ |
| (உ) இருபொருள் வேற்றுமைச் சமம் | க0கூ |
| (ங) உயர்ச்சி வேற்றுமை | கக0 |
| (ச) இருபொருள் வேற்றுமைச் சமம் | ககக |
| (ரு) உயர்ச்சி வேற்றுமை | ககக |
| ஷை வேற்றுமை அலங்காரத்தை விரித்து உணர்த்தல் | ககஉ |
| (க) குணவேற்றுமை | ககஉ |
| (உ) பொருள் வேற்றுமை | ககஉ |
| (ங) சாதி வேற்றுமை | ககங |
| (ச) தொழில் வேற்றுமை | ககங |
| ஷை அலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடி வருவன உணர்த்தல் | ககச |
| (க) விலக்கியல் வேற்றுமை | ககச |
| (உ) சிலேடை வேற்றுமை | ககச |
| கூ. விபாவனையணி (2) | ககரு |
| (க) அயற்காரண விபாவனை | ககரு |
| (உ) இயல்பு விபாவனை | ககசா |
| விபாவனையைப் பின்னும் விளக்கல் : | |
| (க) வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்துவது | ககஎ |

பக்கம்

(உ) பொதுவகையாற காரணம் விலக்கிக காரியம் புலப்படுத்துவது ககஎ

கo. ஓட்டணி (4) கககூ

(க) அடையும் பொருளும் அயல்பட மொழிதல் கககூ
(உ) அடை பொதுவாககிப் பொருள் வேறுபட மொழிதல் கஉ0
(௩) அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதல் கஉ0
(ச) அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல் கஉக

கக அதிசயவணி (6) கஉக

(க) பொருள் அதிசயம் கஉஉ
(உ) குண அதிசயம் கஉஉ
(௩) தொழிலதிசயம் கஉ௩
(ச) ஐய வதிசயம் கஉ௩
(ரு) துணிவதிசயம் கஉச
(சா) திரிபதிசயம் கஉச

கஉ தற்குறிப்பேற்றவணி (2) கஉச

(க) பெயர்பொருள் தற்குறிப்பேற்றம் கஉரு
(உ) பெயராதபொருள் தற்குறிப்பேற்றம் கஉரு

ஷை அலங்காரத்திற்கு உரியதோர் இலக்கணம் உணர்ந்தல் கஉசா

க௩. ஏதுவணி (3) கஉசா

(1) காரகவேது (4) கஉஎ
(க) கருத்தாக் காரகவேது கஉஎ
(உ) பொருட் காரகவேது கஉஎ
(௩) கரும காரகவேது கஉஅ
(ச) கருவிக் காரகவேது கஉகூ
(2) ஞாபக வேது கஉகூ
(க) அபாவம் (5) க௩0

அபாவத்தை விரித்துணர்த்தல் ஷை க௩0
(க) என்றுமபாவம் க௩0

பக்கம்

(உ) இன்மையபாவம் கஙக
(ங) ஒன்றினொன்றபாவம் கஙக
(ச) உள்ளதனபாவம் கஙஉ
(ரு) அழிவுபாட்டபாவம் கஙஉ

ஷை ஏது அலங்காரத்தினையே பிறிதொரு வகையால் வகுத்துணர்த்தல் கஙஉ

(க) ஆரகாரியம் கஙங
(உ) ஒருங்குடன் றோற்றம் கஙங
(ங) காரண முந்துறூஉங் காரியநிலை கஙச
(ச) யுத்தம் கஙச
(ரு) அயுத்தம் கஙரு

கச. நுட்பவணி (2) கஙசா

(க) குறிப்பு கஙசா
(உ) தொழில் கஙசா

கரு. இலேசவணி கஙஎ

ஷை அணியின்பாற் படுத்துப் பிறர் வேண்டுவன சில அலங்காரம் உணர்த்தல் கஙஅ

(க) புகழ்வதுபோலப் பழித்தல் கஙஅ
(உ) பழிப்பதுபோலப் புகழ்தல் கஙகூ

கசா. நிரனிறையணி (2) கஙகூ

(க) நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது கஙகூ
(உ) நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்வது கச0

கஎ. ஆர்வமொழியணி கசக

கஅ. சுவையணி கசக

ஷை அலங்காரத்தை விரித்துணர்த்தல் (உட்பிரிவு 9) கசஉ

(க) வீரம் கசஉ
(உ) அச்சம் கசஉ
(ங) இழிப்பு கசங
(ச) வியப்பு கசச
(ரு) காமம் கசச

பக்கம்

(சு) அவலம் கசரு
(எ) உருத்திரம் கசரு
(அ) நகை கசசு
(கூ) சாந்தம் கசஎ

கக. தன்மேம்பாட்டுரையணி கசஎ

உ0. பரியாயவணி கசஅ

உக. சமாகிதவணி கசகூ

உஉ. உதாத்தவணி (2) கரு0

(க) வியக்கத்தக்க செல்வத்து உயர்ச்சியை மிகுத்துச் சொல்லுதல் (செல்வ மிகுதி) கரு0

(உ) மேம்பட்ட உள்ளத்து உயர்ச்சியை மிகுத்துச் சொல்லுதல் (உள்ள மிகுதி) கரு0

உங. அவநுதியணி (3) கருக

(க) சிறப்பவநுதி கருக
(உ) பொருளவநுதி கருஉ
(ங) குணவவநுதி கருஉ

மேற்படி அலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடி வருதலை யுணர்த்தல் கருங

மேற்படி அணி

(க) வெற்றொழிப்பு
(உ) காரணவொழிப்பு
(ங) வேறுபாட்டொழிப்பு
(ச) மயக்கவொழிப்பு
(ரு) வல்லோரொழிப்பு
(சு) வஞ்சவொழிப்பு

எனப் பலவாறு விகற்பமாகக் கூறவும்படும் எனல் கருங

உச. சிலேடையணி கருங

மேற்படி அணியின் இருவித பகுப்பு கருச

(க) செம்மொழிச் சிலேடை கருச
(உ) பிரிமொழிச் சிலேடை கருச

பக்கம்

மேற்படி அணியை விரித்து உணர்த்தல் கருரு
(க) ஒருவினைச் சிலேடை கருசு
(உ) பலவினைச் சிலேடை கருஎ
(ங) முரண்வினைச் சிலேடை கருஎ
(ச) நியமச் சிலேடை கருஅ
(ரு) நியமவிலக்குச் சிலேடை கருகூ
(சு) விரோதச் சிலேடை கருகூ
(எ) அவிரோதச் சிலேடை கசுய

உரு. விசேடவணி கசுக
மேற்படி அணியின் உட்பிரிவு: கசுக
(க) குணக்குறை விசேடம் கசுக
(உ) தொழிற்குறை விசேடம் கசுஉ
(ங) சாதிக்குறை விசேடம் கசுஉ
(ச) பொருட்குறை விசேடம் கசுங
(ரு) உறுப்புக்குறை விசேடம் கசுச

உசு ஒப்புமைக்கூட்டவணி கசுச
மேற்படி அலங்காரத்தை விரித்துணர்த்தல் கசுச
(க) புகழொப்புமைக் கூட்டம் கசுரு
(உ) பழிப்பொப்புமைக் கூட்டம் கசுரு

உஎ. விரோதவணி கசுசு
(க) ஷை அணியில் மாறுபட்ட சொல்லால் மாறுபாட்டுத் தன்மை தோன்ற உரைத்தல் (சொல் விரோதம்) கசுசு
(உ) மாறுபட்ட பொருளால் மாறுபாட்டுத் தன்மை தோன்ற உரைத்தல் (பொருள் விரோதம்) கசுசு
மேற்படி அலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடி வருதலை யுணர்த்தல் கசுஎ

உஅ. மாறுபடு புகழ் நிலையணி கசுஅ
உகூ. புகழாப்புகழ்ச்சியணி கஎய
ஙய. நிதரிசனவணி கஎக
(க) மேற்படி அணியில் புகழ்மை கஎஉ
(உ) தீமை கஎஉ

பக்கம்

௩௧. புணர்நிலையணி (2) ௧௭௩
(௧) வினைப் புணர்நிலை ௧௭௩
(௨) பண்புப் புணர்நிலை ௧௭௩
௩௨. பரிவருத்தனையணி ௧௭௪
௩௩. வாழ்த்தணி ௧௭௪
௩௪. சங்கீரணவணி ௧௭௫
உவமை யுருவகங்கட்குப் புறனடை ௧௭௬
(௧) இடத்துக்கேற்ற உவமை ௧௭௮
(௨) காலத்துக்கேற்ற உவமை ௧௭௮
(௩) பொருளுக்கேற்ற உவமை ௧௭௮
(௪) பண்பிற்கேற்ற உவமை ௧௭௯
(௫) சாதிக்கேற்ற உவமை ௧௭௯
(௬) மரபிற்கேற்ற உவமை ௧௮௦
௩௫. பாவிகவணி ௧௮௧

## ௩. சொல்லணியியல்

௧. மடக்கு இலக்கணம் ௧௮௩
மேற்படி மடக்கின் விவரங்கள் ௧௮௪
அடி முதன் மடக்கு ௧௮௫
(௧) முதலடி முதன்மடக்கு ௧௮௫
(௨) இரண்டாமடி முதன்மடக்கு ௧௮௬
(௩) மூன்றாமடி முதன்மடக்கு ௧௮௬
(௪) ஈற்றடி முதன்மடக்கு ௧௮௭
(௫) முதலடியும் இரண்டாமடியு முதன்மடக்கு ௧௮௭
(௬) முதலடியு மூன்றாமடியு முதன்மடக்கு ௧௮௮
(௭) முதலடியு மீற்றடியு முதன்மடக்கு ௧௮௮
(௮) மூன்றாமடியு நான்காமடியு முதன்மடக்கு ௧௮௯
(௯) இரண்டாமடியு மூன்றாமடியு முதன்மடக்கு ௧௮௯
(௧௦) இரண்டாமடியு மீற்றடியு முதன் மடக்கு ௧௯௦
(௧௧) ஈற்றடி யொழிந்த ஏனை மூன்றடியு முதன்மடக்கு ௧௯௦

பக்கம்

(கஉ) முதலயலடி யொழிந்த வினை மூன்றடிய முதன் மடக்கு — ககக
(கங) ஈற்றயலடி யொழிந்த வினை மூன்றடிய முதன் மடக்கு — ககக
(கச) முதலடி யொழிந்த வினை மூன்றடிய முதன் மடக்கு — ககஉ
(கரு) முற்று மடக்கு — ககஉ
(க) இடை முற்று மடக்கு — ககங
(உ) இறுதி முற்று மடக்கு — ககங
(ங) முதற்கண்ணும் இடைக்கண்ணும் முற்று மடக்கு — ககச
(ச) முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் முற்று மடக்கு — ககரு
(ரு) இடைக்கண்ணும் இறுதிக்கண்ணும் முற்று மடக்கு — ககரு
(சா) அடிதோறும் மூன்றிடத்து மடக்கு — ககசா
(எ) இடையிட்டு வந்த முதல் முற்று மடக்கு — ககஎ
(அ) இடையிட்டு வந்த இடைமுற்று மடக்கு — ககஎ
(கூ) இடையிட்டு வந்த இறுதிமுற்று மடக்கு — ககஅ
(க0) இடையிட்டும் இடையிடாது வந்த இடையும் இறுதிமுற்று மடக்கு — ககஅ

இம் மடக்கு என்னும் அலங்காரத்தைப் பொருத்திக் கூறுதல் — உ00

ஈரடி மடக்கு (6) — உ0க
(க) முதலீரடி மடக்கு — உ0க
(உ) முதலடியும் மூன்றாமடியும் மடக்கு — உ0க
(ங) இடையீரடிய மடக்கு — உ0உ
(ச) முதலடியும் ஈற்றடியும் மடக்கு — உ0உ
(ரு) கடையீரடிய மடக்கு — உ0ங
(சா) இரண்டாமடியும் ஈற்றடியும் மடக்கு — உ0ங

மூன்றடி மடக்கு (4) — உ0ச
(க) ஈற்றடி யொழிந்த வினை மூன்றடிய மடக்கு — உ0ச
(உ) முதலடி யொழிந்த வினை மூன்றடிய மடக்கு — உ0ச
(ங) இரண்டாமடி யொழிந்த வினை மூன்றடிய மடக்கு — உ0ரு

| | பக்கம் |
|---|---|
| (௪) மூன்றாமடி யொழிந்த வேனை மூன்றடியு மடக்கு | ௨௱௫ |
| நான்கடி மடக்கு | ௨௱௬ |
| (௧) நான்கடிகளும் ஒரே விதமாக மடங்குதல் (ஏகபாதம்) | ௨௱௬ |
| (௨) ஒரு சொல்லானே நான்கடியு மடங்குதல் (இயமாவியமகம்) | ௨௱௬ |
| (௩) இரண்டடிப்பாட்டு மடக்கு | ௨௱௭ |
| (௪) அந்தாதி மடக்கு | ௨௱௯ |
| (௫) அந்தாதி மடக்கு (வேறு) | ௨௱௯ |
| அடி மடக்கிற்கு எய்தியதோர் வேறுபாடு உணர்த்தல் | ௨௱௰ |
| (௧) ஒரெழுத்து மடக்கு | ௨௱௰ |
| ஓருயிர் மடக்கு குற்றுயிரான் வந்த மடக்கு | ௨௱௧௧ |
| (௨) நெட்டுயிரான் வந்த மடக்கு | ௨௱௧௧ |
| (௩) ககர விகற்பத்தான் வந்த மடக்கு | ௨௱௧௨ |
| (௪) தகர விகற்பத்தான் வந்த மடக்கு | ௨௱௧௨ |
| (௫) ஈரெழுத்தான் வந்த மடக்கு | ௨௱௧௩ |
| (௬) மூன்றெழுத்தான் வருவது | ௨௱௧௩ |
| (௭) நான்கெழுத்துக்களால் வருவது | ௨௱௧௪ |
| (௮) ஒற்றெழுத்தின்றி வருவது | ௨௱௧௪ |
| (௯) வல்லினத்தான் வருவது | ௨௱௧௪ |
| (௰) மெல்லினத்தான் வருவது | ௨௱௧௫ |
| (௧௧) இடையினத்தான் வருவது | ௨௱௧௫ |
| ௨. சித்திரகவி | ௨௱௧௬ |
| (௧) கோமூத்திரி | ௨௱௧௭ |
| (௨) கூடசதுக்கம் | ௨௱௧௭ |
| (௩) மாலை மாற்று | ௨௱௧௯ |
| (௪) எழுத்து வருத்தனம் | ௨௱௨௰ |
| (௫) நாகபந்தம் | ௨௱௨௧ |
| (௬) வினாவுத்தரம் | ௨௱௨௨ |
| (௭) காதை கரப்பு | ௨௱௨௬ |
| (௮) கரந்துறைப்பாட்டு | ௨௱௨௬ |
| (௯) சக்கரபந்தம் | ௨௱௨௭ |

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| (i) நான்காரைச் சக்கரம் | ௨௨௯ |
| (ii) ஆறாரைச் சக்கரம் | ௨௨௯ |
| (iii) எட்டாரைச் சக்கரம் | ௨௩௦ |
| (iv) நான்காரைச் சக்கரம் (வேறுவகை) | ௨௩௫ |
| (௧௦) சுழிகுளம் | ௨௩௫ |
| (௧௧) சருப்பதோபத்திரம் | ௨௩௭ |
| (௧௨) அக்கரச் சுதகம் | ௨௩௯ |
| (௧௩) நிரோட்டம் | ௨௩௯ |
| (௧௪) ஒற்றுப் பெயர்த்தல் | ௨௪௦ |
| (௧௫) மாத்திரைச் சுருக்கம் | ௨௪௧ |
| (௧௬) மாத்திரை வருத்தனம் | ௨௪௨ |
| (௧௭) முரசபந்தம் | ௨௪௨ |
| (௧௮) திரிபாகி | ௨௪௪ |
| (௧௯) திரிபங்கி | ௨௪௫ |
| (௨௦) பிறிதுபடுபாட்டு | ௨௪௭ |
| ௩. வழுக்களின் வகை | ௨௪௮ |
| [முன் ஓதப்பட்ட அணிபெறுஞ் செய்யுள்கட்குப் பொருந்தாத வழுவாவன இவையென்று தொகுத்துணர்த்தல்] | ௨௪௮ |
| பிறன்கோட் கூறி மறுத்தல் | ௨௪௯ |
| (௧) பிரிபொருட் சொற்றொடர் | ௨௪௯ |
| இதற்குச் சிறப்புவிதி | ௨௫௦ |
| (i) களியூரன் மொழிந்தது | ௨௫௧ |
| (ii) பித்தினன் மயங்கிய கூற்று | ௨௫௧ |
| (௨) மாறுபடு பொருண்மொழி | ௨௫௧ |
| இதற்குச் சிறப்புவிதி | ௨௫௨ |
| (௩) மொழிந்தது மொழிவு | ௨௫௨ |
| (i) சொற்பின் வருநிலையாவது | ௨௫௩ |
| (ii) பொருட்பின் வருநிலையாவது | ௨௫௩ |
| (iii) சொற்பொருட்பின் வருநிலையாவது | ௨௫௪ |
| இதற்குச் சிறப்புவிதி | ௨௫௪ |
| (௪) கவர்படு பொருண்மொழி | ௨௫௪ |
| இதற்குச் சிறப்புவிதி | ௨௫௫ |

| | பக்கம் |
| --- | --- |
| (௫) நிரனிறைவழு | ௨௫௬ |
| இதற்குச் சிறப்புவிதி | ௨௫௭ |
| (௬) சொல்வழு | ௨௫௭ |
| இதற்குச் சிறப்புவிதி | ௨௫௮ |
| (௭) யதிவழு | ௨௫௯ |
| இதற்குச் சிறப்புவிதி | ௨௬0 |
| (௮) செய்யுள்வழு | ௨௬௧ |
| இதற்குச் சிறப்புவிதி | ௨௬௧ |
| (௯) சந்திவழு | ௨௬௨ |
| இதற்குச் சிறப்புவிதி | ௨௬௩ |
| ௪. மலைவு | ௨௬௪ |
| (௧) இடமலைவு : | ௨௬௪ |
| (i) மலையிடமலைவு | ௨௬௫ |
| (ii) நாட்டிடமலைவு | ௨௬௫ |
| (iii) யாற்றிடமலைவு | ௨௬௫ |
| (௨) காலமலைவு : | ௨௬௫ |
| (i) பொழுதுமலைவு | ௨௬௫ |
| (ii) பருவமலைவு | ௨௬௬ |
| (௩) கலைமலைவு : | ௨௬௭ |
| (i) சங்கீத நூன்மலைவு | ௨௬௭ |
| (௪) உலகமலைவு | ௨௬௭ |
| (௫) நியாயமலைவு | ௨௬௮ |
| (௬) ஆகமமலைவு | ௨௬௯ |
| இடமலைவு முதலியவற்றிற்குச் சிறப்புவிதி | ௨௭0 |
| (௧) இடமலைவமைதி | ௨௭0 |
| (௨) காலமலைவமைதி | ௨௭௧ |
| (௩) கலைமலைவமைதி | ௨௭௧ |
| (௪) உலகமலைவமைதி | ௨௭௨ |
| (௫) நியாயமலைவமைதி | ௨௭௨ |
| (௬) ஆகமமலைவமைதி | ௨௭௩ |
| புறனடை | ௨௭௩ |
| ௫. அட்டநாகபந்தத்தின் விதி | ௨௭௬ |

உ

திருச்சிற்றம்பலம்

# தண்டியலங்காரம்

## மூலமும்—உரையும்

## க. பொதுவணியியல்

### தற்சிறப்புப் பாயிரம்

க. சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிந்தைவைத் தியம்புவல் செய்யுட் கணியே.

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், அணியின திலக்கண முணர்த்தினமையின் அணியதிகார மென்னும் பெயர்த்து. இவ்வதிகாரத்துள் இவ்வோத் தென்ன பெயர்த்தோவெனின், அணிபெறுஞ் செய்யுட்கும், ஒருசாரணிகட்கும், இலக்கண முணர்த்தினமையின் பொதுவியலோத் தென்னும் பெயர்த்து. இவ்வோத்தினுள் இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், கடவுள் வணக்கமும், அதிகாரமு முணர்த்துத னுதலிற்று.

(இதன் பொருள்.) கலைமடந்தை துணைத்தாளைக் கருத்துள் வைத்து, யாப்புக் கலங்கார விலக்கணஞ் சொல்லுவன்; (என்றவாறு.)

அணியென்ப தாகுபெயர். ஏகாரம்-ஈற்றசை, ஒழிந்த அகலம் உரையிற் கொள்க.

(குறிப்புரை.) 'சொல்லின் கிழத்தி மெல்லியல் இணை அடி' என்பதற்குச் சொற்களுக்குரிய தலைவியான சரசுவதியினது மென்மையான தன்மையையுடைய உபய பாதத்தை யென்றாவது, சொற்களுக்கு உரிய தலைவியும் மென்மையுமான தன்மையை யுடையவளுமான சரசுவதியினது உபயபாதத்தை யென்றாவது பதப்பொருள்

காண்க. மெல்லியல்-விகுதியுருபு தொக்க தொகையாகக் கொள்க (அன்மொழி); பிந்திய உரைக்கு "வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொலச் சிறபபென்னும் பாயிரமாம்". "தெய் வணக்கமுஞ் செயப்படு பொருளும், எய்த வுரைப்பது தற்சிறப் பாகும்," என்றபடி இத் தலைச் சூத்திரம் தற்சிறப்புப்பாயிர மாம். (௧)

## நூல்

### ௧. செய்யுள் வகை

௨. செய்யு ளென்பவை தெரிவுற விரிப்பின்
முத்தகங் குளகந் தொகைதொடர் நிலையென
எத்திறத் தனவு மீரிரண் டாகும.

(எ-ன்.) 'செய்புட் கணியிலக்கண முணர்த்துவல்' என்றார். அச் செய்யுளாமா றுணர்ந்தே அணியுணரப்படு மாதலான், அவ்வணி பெறுஞ் செய்யுளினது பெயரும், முறையும், தொகையு முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) செய்யுளென்று கூறப்படுவன, விளங்க விரித்துணர்த்துங்கால், எவ்வகைப்பட்ட பாவேனும், முத்தகச் செய்யுளும், குளகச் செய்யுளும், தொகைநிலைச் செய்யுளும், தொடர்நிலைச் செய்யுளும், என நான்கு வகைப்படும்; (எ-று.)

செய்யுளென்பதை நான்கினோடும், நிலையென்பதைப் பின்னிரண்டினோடுங் கூட்டி யுரைக்கப்பட்டன. முத்தகம் குளகம் என்பன வடமொழிப்பெயர். ஏனை யிரண்டுந் தமிழ்மொழிப் பெயர்.

அவை யாமாறு முன்னர் அறியப்படும்.

(கு-ரை.) தொகை - எண். பா - வெண்பா முதலியன. நான்கு - முத்தக முதலியன. பின் இரண்டு - தொகை, தொடர் என்பன. அவை ஆம் ஆறு-முத்தகம் முதலியவற்றின் இயல்பு. முன்னர் - மேல்; அடுத்த சூத்திரம் முதலாக. (௨)

## முத்தகச் செய்யுள்

௩. அவற்றுள்,
முத்தகச் செய்யு டனிநின்று முடியும்.

(இ-ள்.) மேற்சொன்ன நான்கனுள் முத்தகச் செய்யு ளென்பது தனியே நின்று ஒரு பொருள் பயந்து முற்றுப் பெறுவது; (எ - று.)

நேரிசை வெண்பா

வரலாறு :-"என்னேய் சிலமடவா ரெய்தற் கெளியவோ
பொன்னே யனபாயன் பொன்னெடுந் [தோள்-முன்னே
தனவேயென் றாளுஞ் சயமடந்தை தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு."

(இ-ள்.) பொன்னை யொப்பாய்! அடிப்படத் தனக்கே சொம்மாக நினைத்துத் துய்க்கின்ற கொற்றவையுடைய தோளாகிய செறிந்த வேயினாலே நெருங்கப்பட்ட பொருப் பாகிய அனபாயனுடைய அழகினையுடையவாய்ப் பெரிய வாகிய தோள்களானவை, என்னை யொக்குந் தன்மை யுடையராகிய பெண்டிர் பலரும் புல்லுதற் கெளிவந்தன வாமோ? ஆகா; (எ - று.)

வேய்மிடைந்த பொருப்பாகிய தோளெனக் கூட்டுக. தோளாகிய பொருப்பென்பாருமுளர். என்னேயென்புழி யிரண்டனுருபு தொக்கு நின்றதெனக் கொள்க. என் னென்பதனை யிரக்கத்தின்கட் குறிப்பென்பாரு முளர். சில என்பது - பல. சயமடந்தை - வன துர்க்கை. அந பாயன் - அபாய ரகிதன்.

(கு - ரை.) அடிப்பட - நெடுநாளாக, சொம்- உரியபொருள், சொத்து. சேமமாக என்பது சுப்பிரமணிய தேசிகர் உரையிற் காண்பது. துய்க்கின்ற - அநுபவிக் கின்ற. அனபாயன் - சோழர்களில் ஒருவன் பெயர்; அபாயரகிதன் - அபாயமில்லாதவன். சயமடந்தை தோ ளுக்கு மூங்கிலும், அது தழுவும் அனபாயன் தோளுக்கு மூங்கில் சாரும் பொருப்பும் உவமை என்க.

சயமடந்தையினுடைய மூங்கில் போன்ற தோள் களால் தழுவப்பட்ட மலைபோன்ற அனபாயனின் தோள் களென்க.

இச்செய்யுள் தனியே நின்று ஒரு பொருள் தந்து முடிந்தமை காண்க. (௯)

## குளகச் செய்யுள்

௪. குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்.

(இ-ள்,) குளகச்செய்யு ளென்பது, பல பாட்டாய் ஒரு வினைகொண்டு முடிவது; (எ - று.)

'ஒருவினை' என்ற விதப்பான், ஒரு பெயர்கொண்டும் முற்றுப்பெறு மென்க. இதற்கிலக்கியம் வந்துழிக் காண்க.

(கு - ரை.) 'வினை' என்றது ஈண்டு முடிக்குஞ் சொல்லை. குளகச் செய்யுள் தனியே ஒரு நூலாய் நின்றதற்கும், பெயர்கொண்டு முடிவதற்கும் உதாரணம் அரிதாதலின், 'இதற்கு இலக்கியம் வந்துழிக்காண்க' என்றார். பெயர்கொண்டு முடிவதற்குதாரணம்.

"முன்புலக மேழினையுந் தாயதுவு மூதுணர்வோர்
இன்புறக்கங் காநதியை யீன்றதுவும்—நன்பரதன்
கண்டிருப்ப வைகியதுங் கான்போ யதுமிரதம்
உண்டிருப்பா ருட்கொண் டதும்"

"வெந்த கரியதனை மீட்டுமக வாக்கியதும்
அந்தச் சிலையினைப்பெண் ணாக்கியதும்—செந்தமிழ்
[தேர்
காவலபின் போந்ததுவு நன்னீர்த் திருவரங்கக்
காவலவன் மாவலவன் கால்". (௪)

## தொகைநிலைச் செய்யுள்

௫. தொகைநிலைச் செய்யுட் டோன்றக் கூறின்
ஒருவ ருரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருளிடங் காலந் தொழிலென நான்கினும்
பாட்டினு மளவினுங் கூட்டிய வாகும்.

(இ - ள்.) தொகைநிலைச் செய்யு ளென்பதனை விளங்கச் சொல்லின், ஒருவரா லுரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவும், பலரா லுரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவுமாம். அவை பொருளாற் றொகுத்த பெயர் பெற்றனவும், இடத்தாற்றொகுத்த பெயர் பெற்றனவும், காலத்தாற் றொகுத்த பெயர் பெற்றனவும், தொழிலாற் றொகுத்த பெயர்பெற்றனவும், பாட்டாற் றொகுத்த பெயர் பெற்றனவும், அளவாற் றொகுத்த பெயர்பெற்றனவுமாம்; (எ - று.)

அவற்றுள், ஒருவராலுரைக்கப்பட்டது - திருவள்ளுவப்பயன். பலராலுரைக்கப்பட்டது - நெடுந்தொகை; இஃது எல்லாத் தொகைக்கும் பொதுவிலக்கணம். பொருளாற்றொகுத்தது - புறநானூறு. இடத்தாற்றொகுத்தது - களவழிநாற்பது. காலத்தாற்றொகுத்தது - கார்நாற்பது. தொழிலாற்றொகுத்தது - ஐந்திணை. பாட்டாற்றொகுத்தது - கலித்தொகை. அளவாற்றொகுத்தது - குறுந்தொகை. இவை, சிறப்பிலக்கணம்.

கூட்டியவென்ற விதப்பான் - இவ்வறுவகையானு மன்றிப் பிறவற்றாற் பெயர்பெற்று வருவனவுமுளவேல் அவையுங் கொள்க.

(கு-ரை.) தொகை நிலைச் செய்யுளாவது - ஒரு செய்யுளோடு மற்றொரு செய்யுளுக்குத் தொடர்பு யாதுமின்றித் தனித் தனியே ஒரு பொருளுணர்த்துஞ் செய்யுள்கள் பல தொகுக்கப்பட்ட நூல். நெடுந்தொகை யென்பது அகநானூற்றின் மறு பெயர். ஐந்திணை - முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற ஐந்து நிலத்திற்கும் முறையே உரிய இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்னும் ஒழுக்கங்களைக்கூறுஞ் செய்யுளால் அமைந்த நூல். குறுந்தொகை - அடிவரையறையிற் குறைந்த செய்யுள்களைக்கொண்டு தொகுத்த நூல். (ரு)

## தொடர்நிலைச் செய்யுள்

சூ. பொருளினுஞ் சொல்லினு மிருவகை தொடர்நிலை.

(இ-ள்.) பொருளிறுற்றொடர்தலும், சொல்லிறுற்றொடர்தலுமென இருவகைப்படும் தொடர்நிலைச் செய்யுள்; (எ-று.)

எனவே, பொருட்டொடர் நிலைச் செய்யுளும், சொற்றொடர் நிலைச் செய்யுளும் என இருவகைப்படும்.

இரண்டென்னாது 'வகை' என்ற மிகையான், மூன்றாவது பொருளினும், சொல்லினும், தொடர்தலும் உண்டெனக் கொள்க.

(கு-ரை.) பொருட்டொடர்நிலைச் செய்யுள் - முற்செய்யுளோடு பிற்செய்யுள் பொருளினால் தொடர்ந்து

வரப்பெறும் நூல்; ஒரு சரித்திரத்தைத் தொடர்ச்சியாகக் கூறும் சிந்தாமணி, கம்பராமாயணம் முதலியன. சொற்றொடர்நிலைச் செய்யுள் - முற்செய்யுளோடு பிற்செய்யுள் சொல்லினால் தொடர்ந்து வரப்பெறும் நூல். அந்தாதியாகப் பாடப்பட்ட பிரபந்தங்கள். (௬)

## பொருட்டொடர்நிலைச் செய்யுளின் பகுப்பு

௭. பெருங்காப் பியமே காப்பிய மென்றாங்
கிரண்டா கியலும் பொருட்டொடர் நிலையே.

(இ-ள்.) பெருங்காப்பியம் காப்பியம் என இரண்டு வகையாய் நடக்கும், பொருட்டொடர்நிலைச் செய்யுள்; (எ-று.)

'பெருங்காப்பியம்' என்றாசிரியரடைசொற் புணர்த்தமையின், காப்பியமென்பது சிறிதெனப் பெறப்பட்டது. இஃது உய்த்துக் கொண்டுணர்தல். இதனைச் சிறுகாப்பியமெனினு மிழுக்காது. அல்லதூஉம் "எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே" (தொல்-சொல். கிளவி-சூ.-௬௧) என்றார்க்குச் செப்பாமையும் உரித்தென்று கொள்ளப்படுமெனின், ஒன்றே இனமாயக்காற் கோடலும், பலவினமாயக்காற் கொள்ளாமையுமாம். அஃதேல், "இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை வழக்கா றல்ல செய்யு ளாறே" (தொல் - கிள. சூ -௧௮) என்றதென்றாமோவெனின், அவை செய்யுட்கே யுரியன சில சொல்லுதல் வகைமையின் இஃதன்னதன்றென்பது.

அஃதேல், கவியாற் பாடப்படுவன வெல்லாங் காப்பிய மன்றே? பொருட்டொடர் நிலையைக் காப்பியமென்றதென்னை? எனின், சேற்றுட் டோன்றுவன வெல்லாம் பங்கயமெனப் பெயர் பெறுமாயினும், அப்பெயர் தாமரையொன்றன் மேற்றே யாயினவாறுபோல இப் பெயர் பொருட்டொடர் நிலைக்கே யாயிற்று. ஒழிந்தனவும் ஒழிந்தனபோலத் தமக்கேற்ற பெயர் பெற்றன வெனக் கொள்க.

இரண்டென்றது 'இயலும்' என்ற மிகையால் பத்து வகைப்பட்ட நாடக சாதியும், கோவையும், பொருட்டொடர் நிலைப்பாற் படுமெனக் கொள்க. பத்து வகைப்பட்ட

நாடக சாதியாவன - நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம, டிமம், வியாயோகம், சமவாகாரம், வீதி அங்கம், ஊஹாமிருகம் எனவிவை. கோவை யென்பன தமிழ்முத்தரையர் கோவை முதலாயின. அல்லதவ் விலே சானே முற்கூறிய முத்தக முதன்மூன்றும், பின்னர்க் கூறியபொருட் டொடர்நிலைச்செய்யுட் குறுப்பாய் வருதலுமுடையவெனக் கொள்க.

(கு-ரை.) 'ஒழிந்தனவும்' என்றது முத்தகம், குளகம், தொகைநிலை என்பவற்றை. அவை தமக்கேற்ற பெயர் பெறுதல்-முத்தக மென்ற வடமொழிப் பெயர் - வேறொரு செய்யுளை அவாவாது தன்னில் தான் முடிந்துவிட்ட தென்றும், குளகமென்ற வடமொழிப் பெயர்-அங்ஙனம் முடியாமற் பல செய்யுள்கள் பொருளில் தொடர்ந்த தென்றும், தொகைநிலை யென்ற தமிழ்ப் பெயர்-பல செய்யுள் கள் தொகுக்கப்பட்டு நின்றதென்றும் பொருள் படுதல் காண்க. (எ)

## பெருங்காப்பியம்

அ. அவற்றுள்,

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகட லுநாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி

சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

(இ-ள்.) 'பெருங்காப்பியநிலை—வியன்று', எ - து. பெருங்காப்பியத்தி னிலக்கணத்தைச் சொல்லுமிடத்து வாழ்த்துதல், தெய்வம்வணங்குதல், உரைக்கும்பொருளுணர்த்தலென்னு மூன்றனுள் ஒன்று முன்வர நடப்பது; எ-று 'ஏற்புடைத்தாகி' என்றதனான் அவற்றுளொன்றேயன்றி, இரண்டுவரினும் மூன்றுவரினு மிழுக்கன்றென்பது. 'வாழ்த்து' என்பதோ ரலங்காரம்; அது முன்னருரைக்கப்படும். 'நாற்பொருள்—நெறித்தாகி'; எ - து, அறம், பொருள், இன்பம், வீடென்னு நான்கினையும் பயக்கு மொழுகலாறுடைத்தாய்; எ-று. 'தன்னிகரில்லா—யுடைத்தாய்'; எ-து. தன்னோ டொப்பாரு மிக்காரு மில்லாதானை நாயகனாக வுடைத்தாய்; எ-று. "பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்" என்பதனால், தன்னி னுயர்ந்தாரில்லாதானென்று கொள்ளப்பட்டதாயிற்று. 'மலை கடல்—புனைந்து'; எ-து. மலைவருணனையும், கடல் வருணனையும், நாட்டு வருணனையும், நகரவருணனையும், இருது வருணனையும், ஆதித்தோதய வருணனையும், சந்திரோதய வருணனையும், என்றின்னோரன்ன வருணனையுடைத்தாய்; எ - று. 'நன்மணம்—நன்னடைத்தாகி'; எ-து. இன்னோரன்ன செய்கைச் சிறப்புப் புகழ்ந்து தொடுக்கப்பட்ட நல்லொழுக்க முடைத்தாய்; எ - று. 'இன்னன' என்றதனாற் பலவருணனைகளையுமுடைத்தாய் வருவதெனக் கொள்க. 'மந்திரம்—தொடர்ந்து'; எ - து. மந்திரமிருத்தலும், தூதுவிடுத்தலும், மேற்செலவும், செருச்செய்கையும், வென்றியெய்தலும், சந்திபோலத் தொடரப்பட்டு; எ-று. 'சந்தி' என்பது - நாடகத்தே நிலைபெறுதலான், ஈண்டு, அதுபோல வெனக் கூறப்பட்டது. அஃதாவது - வித்தல், விளைத்தல், விளைவு துய்த்த லென்பது போல்வது. 'சருக்கம்—விளங்கி'; எ - து. சருக்க மென்றுதல் இலம்பகமென்றுதல், பரிச்சேத மென்றுதல், பாகுபட்டு விளங்கி; எ - று. 'நெருங்கிய—விரும்ப'; எ-து. எட்டுவகைப்பட்ட சுவையும்,

மெய்ப்பாட்டுக்குறிப்பும், இடைவிடாமற் 'கேட்போர் மதிக்க ; எ-று. 'கற்றோர்—தென்ப; எ-து, இவ்வகைத் தாகப் புலவராற் புனையப்படுந் தன்மையை யுடைத் தென்ப ராசிரியர்: (எ-று.)

'நாற்பொருள் பயக்குநடை' எ-து. அகமும், அகப் புறமும், புறமும், புறப்புறமும் பயந்தநடை யென்றுமாம்.

(கு-ரை.) வாழ்த்து வணக்கம், உரைக்கும் பொரு ளுணர்த்தல் என்பவற்றை முறையே வடநூலார் ஆசி;, நமஸ்க்ரியா வஸ்துநிர்த்தேசம் என்பர்; இம்மூன்றும், மங்களத்தின் வகை. வணக்கம் வழிபடு கடவுள் வணக்க மென்றும், ஏற்புடைக் கடவுள் வணக்கமென்றும் இரு வகைப்படும்.

எட்டு வகைப்பட்ட சுவையாவன - உவகை, பெரு மிதம், அழுகை. வியப்பு, நகை, அச்சம், இளிவரல், வெகுளி என்பன. இவற்றோடு சமநிலை என்னும் சாந்தி ரஸத்தைக் கூட்டி நவரஸ மென்றலும் உண்டு மெய்ப் பாடென்பது - பொருட்பாடு; அஃதாவது உலகத்தா ருள்ளநிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே, புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுத்தல் என்பது, தொல்காப்பிய நச்சினார்க்கினியருரை. உவகை முதலிய சுவையுணர்வு பிறந்த வழியுண்டாகும் உள்ள நிகழ்ச்சி மெய்ப்பாட்டுக் குறி யெனவும், அதனால் உடலில் தோன் றும் மயிர்ச்சிலிர்த்தல், வியர்த்தல், கண்ணீரரும்பல், அசைவின்றி நிற்றல், நடுங்குதல், நிறம் வேறுபடுதல், குரல் மாறுதல் முதலியன மெய்ப்பாடெனவும்படும்.

அகம் - அகப்பொருள்: தகுதியாக அமைந்த காம வின்பம். குறிஞ்சித்திணை முதலிய ஐந்திணையும் அவற் றின் ஒழுக்கமாகிய புணர்தலும் புணர்தல் நிமித்தமும் முதலியன.

அகப்புறம் - கைக்கிளை யெனப்படுகின்ற ஒருதலைக் காமமும், பெருந்திணை யெனப்படுகின்ற பொருந்தாக் காமமும். புறம் - புறப்பொருள் : அறமும், பொருளும், வெட்சித்திணை முதலியனவும். புறப்புறம் - வாகை, பாடாண், பொதுவியல் என்பன. (அ)

## பெருங்காப்பிய விலக்கணத்திற்கு ஓர் புறனடை

கூ. கூறிய உறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றென விளம்பினர் புலவர்.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட உறுப்பிற் சில குறைந்துவரினும், பெருங்காப்பியத்திற் பிறிதனறென விளம்பின ரறிவுடையோர்; (எ - று.)

(கு - ரை.) சில குறைதலாவது நாற்பொருளிற் குறையாது வருணனைகளில் சில குறைதலாம்; என்னை? 'நால்வகைப் பொருளிற் குறைபாடுடையது காப்பியம்' என்றலின் இலக்கண விளக்கவுரை (அஉகூ.) இங்கு நோக்கத் தக்கது. (கூ)

## காப்பியம்

ய. அறமுத லொன்கினுங் குறைபா டுடையது
காப்பிய மென்று கருதப் படுமே.

(இ-ள்) அறம், பொருள், இன்பம், வீடென்னு நான்கினுள் ஒன்றும் பலவுங் குறைந்துவருவது காப்பிய மென்று கருதப்படுவது; (எ-று.)

இதனால் 'கூறியவுறுப்பிற் சிலகுறைந்தியலு' மென்பதற்கு அறமுதனான்கு மொழிந்தல்லாத வுறுப்பிற் சில குறைவதே பெருங்காப்பியமென்று கொள்ளப்படும். இது, 'வந்ததுகொண்டு வாராதது முடித்த' லென்பது.

(கு-ரை.) வந்ததுகொண்டு வாராதது முடித்தல் என்பது முப்பத்திரண்டு உத்திகளுள் ஒன்று; பின் ஓரிடத்து வந்தது கொண்டு முன் வாராததோர் பொருளை அறியவைத்தல், அதன் இலக்கணம்.

காப்பியமெனினும், சிறு காப்பியமெனினும் ஒக்கும். அது, மேற்கூறியபடி பல வருணனைகளைப் பெறாது வருவது; உலா, மடல், பிள்ளைத்தமிழ், பரணி, ஆற்றுப்படை முதலியன. (ய)

## காப்பியங்கட்கோர் இலக்கணம்

யக. அவைதாம்,
ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே

(இ-ள்.) மேற்கூறிய பெருங்காப்பியமும், காப்பியமும், ஒருவகைச் செய்யுளானும், பலவகைச் செய்யுளானும், உரைவிரவியும், பிறபாடை விரவியும் வருத லுடைய; (எ-று.)

ஈண்டுச் 'செய்யு'ளென்பது பாவும் இனமு நோக்கியது. 'விரவியும் வரும்' என்ற உம்மையான் விரவாது செய்யுளான் வருவதே சிறப்புடைத்தெனக் கொள்க.

(கு-ரை.) பிறபாடை வடமொழி முதலியன. பாவும் இனமும் என்றது வெண்பா முதலிய பா நான்கும், துறை முதலிய இனம் மூன்றும் என்பவற்றை. உரை - வசனம். வசனமும் பாட்டுமாகிய விரவி வருகிற நூல், வடமொழியில்-'சம்பூ' எனப்படும். தமிழில், 'தொன்மை' என்ப. அவை, பெருந் தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை முதலியன. (௧௧)

## சொற்றொடர் நிலைச்செய்யுள்

௧௨. செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே.

(இ-ள்.) ஒரு செய்யுளி னிறுதி அடுத்த மற்றொரு செய்யுட் காதியாகத் தொடுப்பது, சொற்றொடர் நிலைச் செய்யுளாம்; (எ-று.)

அவை கலம்பக முதலியன. அல்லதூஉம்-ஒரு செய்யுளுள்ளே யோரடியிறுதி மற்றையடிக்கு முதலாகத் தொடுப்பனவுமுள; அவை, முன்னருரைக்கப்படும். இவற்றிற் கிலக்கியம் வந்துழிக் காண்க. ஈண்டுரைக்கிற் பெருகும். (௧௨)

## செய்யுள் நெறி

௧௩ மெய்பெறு மரபின் விரித்தசெய் யுட்கு
வைதருப் பமமே கௌட மென்றாங்
கெய்திய நெறிதா மிருவகைப் படுமே.

(இ-ள்.) பொருள்பெறு மிலக்கணநெறியான் விரித்தோதப்பட்ட செய்யுளனைத்திற்கும் வைதருப்பமும், கௌடமும் எனப் பொருந்திய நெறி யிருவகைப்படும்; (எ-று.)

அஃதேல், மேற்கூறிய செய்யுளனைத்தும் இருவகை நெறிப்படுமென்றமையின், ஒன்றற்கே இருவகை நெறியு முளவென்று கொள்ளற்க. வைதருப்பநெறியான் வருவனவு முள, கௌடநெறியான் வருவனவுமுள, மேற் கூறிய செய்யுளனைத்துமெனக் கொள்க.

(கு-ரை.) நெறியானது-சொல்லமைப்பு வகை. வைதருப்ப மென்பது விதர்ப்ப நாட்டார் ஆதரித்த நெறி. கௌட மென்பதும் அது. இவை ஒப்புமை பற்றித் தமிழுக்குங் கொள்ளப்பட்டன. (கா.)

## வைதருப்பநெறி

கச. செறிவே தெளிவே சமநிலை யின்பம்
ஒழுகிசை யுதார முய்த்தலில் பொருண்மை
காந்தம் வலியே சமாதி யென்றாங்
காய்ந்த வீரைங் குணனு முயிரா
வாய்ந்த வென்ப வைதருப் பம்மே.

(இ-ள்.) செறிவுமுதல் சமாதி யீறாகக் கூறப்பட்ட பத்துக்குணனு முயிராகப் புலப்படுவது, வைதருப்ப நெறி; (எ-று.)

'வாய்த்த' என்பது வாய்ந்தவென மெலிந்து நின்றது. 'உயிரா' என்பதனை உயிர்போல இன்றியமையாத எனவுங் கொள்க.

(கு-ரை.) 'உயிரா' என்றதனால், 'இக் குணங்களில்லாதது கை, கால் முதலிய உறுப்புக்களிலிருந்தும், பதுமை உயிரின்மையால் மனிதனெனச் சொல்லத் தகாததுபோலச் செய்யுளென்று கொள்ளப்படாதென்றறிக' என்பது, தண்டியலங்காரசாரம். 'உயிரா'— என்றதில், 'ஆ' என்றது ஆக என்பதன் விகாரம். (கச)

## கௌடநெறி

கரு. கௌட மென்பது கருதிய பத்தொடும்
கூடா தியலுங் கொள்கைத் தென்ப.

(இ-ள்.) கௌடநெறியென்று சொல்லப்படுவது மேற்குறித்துரைக்கப்பட்ட பத்துக் குணவலங்காரங்களோடுங் கூடாது நடக்கு மொழுகலாறுடையது; (எ-று.)

'பத்தொடும் கூடாது' என்னு முற்றும்மையை யெச்சவும்மையாக்கிச் சிலவற்றோடு கூடியும் வருமெனக் கொள்க.

(கு-ரை.) 'கௌடமாவது-வைதருப்பத்துக்கு மாறாயிருப்பது; என்றால் சிலவற்றைத் தழுவியும், சிலவற்றிறகு மாறுகொண்டும் வருவதெனக் கொள்க' என்பது தண்டியலங்காரசாரம். எனவே, செறிவு முதலிய பத்துக் குணங்களுட் சிலவற்றைக் கௌடர் வேண்டுவர், சில வற்றை வேண்டா ரென்றதாயிற்று. (கரு)

## க. செறிவு

செறிவு - இறுகுதல், நெருங்குதல். இதனை முதனூலார் சிலிட்டம என்பர். சிலிட்டம - ஒன்றையொன்று இறுகத் தழுவியது. பெரும்பாலும் வல்லினம ஒற்றடுத்தும் அடாதும வருதலும நெடில் வருதலும் செறிவுக்குக காரணமாகும.

௧௬. செறிவெனப் படுவது நெகிழிசை யின்மை.

(இ-ள்.) செறிவென்று சொல்லப்படுவது நெகிழ்ந்த இசையின்றி வரத்தொடுப்பது; (எ-று.)

நேரிசை வெண்பா.

வ - று. "சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்--மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது," என வரும்.

(இ-ள்.) (புணர்ச்சிக் கண்ணே நின்னுடைய மார்பஞ்செறிய முயங்குங்கால்) முலை சிறிது விலங்கா நிற்ப, அதனை நோக்கிப் பொருளாய் விற்போல வளைந்து நீண்ட புருவமானது நெற்றி மிசையேறி வளைய ஊடுந் தன்மையை யுடையாள். மாறுபாடிலங்கிய (பலவகைப் பட்ட பூவாலாக்கப்பட்ட) தாரினையும் மாலையினையு முடைய மார்பினை யுடையபாய்! (நீ வினைகருதிப் பிரியுங் கால் இவட்குண்டாகிய) தனிமையால் வருந் துயரம் ஆற்றுந் தன்மையளோ? இருளோடுகூடிய மாலை வந்து சேருமிடத்து; (எ-று.)

'மலை விலங்கு தார்மாலை மார்ப' என்பதற்குத் தாரும், மாலையுங் கிடக்கப்பட்ட பரப்பினையுடைத்தாகிய

மலைபோன்ற மார்பனெனினு மமையும். இனி, 'நெகிழிசை' என்பது வல்லினம் விரவாது ஓரினத்தெழுத்தானே நெகிழ்த் தொடுப்பது.

(கு-ரை.) விலங்குதல் - வளைதல். சென்று ஓசிதல் - (நெற்றிமீது) ஏறிவளைதல். விலங்குதல் - விலக்குதல். முனிதல் - ஊடுதல். மலைவு - மாறுபாடு. இலங்குதல் - விளங்குதல் கார் - இருள். மாலை - அந்திப்பொழுது. கண் - இடம். கூடுதல் - சேர்தல்.

நேரிசை வெண்பா.

வ - று. "விரவலராய் வாழ்வாரை வெல்வா யொழிவாய்
இரவுலவா வேலை யொலியே—வரவொழிவாய்
ஆயர்வா யேயரிவை யாருயிரை யீராவோ
ஆயர்வாய் வேயோ வழல்." என வரும்.

(இ-ள்) தமியரா யுயிரோடு கூடிவாழ்வாரை வருத்துவாய், வருத்தா தொழிவாய்; இரவின்கண்ணுங் குறையாதே யரவஞ் செய்கின்ற கடலொலியே! இவளுடைய ஆருயிரைத் தாயராயுள்ளாருடைய வாயிலுண்டாகிய வசையே யறுக்குந் தன்மைத்தாயிருக்க, (அதன் மேலும்) இடைக்குலமாக்கள் வாயிலுண்டாகிய வேய் விளை யிசையும் அழலைக் கொடாநின்றது, அதனு லிப் பொழு திவளைக் கருதி வருகின்ற வரவை யொழிவாயாக; (எ-று.)

இவ்வாறு ஓரினத்தெழுத்தாற் றொடுக்கப்படுவ தோர் சுவை நோக்கிச் கௌடநெறியார் விரும்புவர். இஃதிரண்டு நெறியார்க்கு மொக்கும்.

(கு-ரை.) விரவலர் - பிரிந்தார். வாழ்வார் - இருந் தார். வெல்லுதல் - வருத்துதல் உலத்தல் - குறைதல். ஆயர்-தாயர்; யாயர் எனினுமமையும். ஈர்தல் - அறுத்தல். வேய் - புல்லாங்குழல். (கசு)

## உ. தெளிவு

தெளிவு - வெளிப்படை. இதனை முதனூலார் பிரசாதம் என்பர். பிரசாதம் - களங்கமில்லாதது. பல பொருள் பயக்கும் திரிசொற்கள் வாராமையே தெளிவுக்குக் காரணமாகும்.

கஎ. தெளிவெனப் படுவது பொருள் புலப் பாடே.

(இ-ள்.) தெளிவென்று சொல்லப்படுவது கவியாற் கருதப்பட்ட பொருள், கேட்போர்க்கு உளங்கொண்டு விளங்கத்தோன்றுவது; (எ-று.)

குறள் வெண்பா

வ-று. "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்" என வரும்.

இவ்வாறு தொடுத்தாற் கவியருமையும் நோக்குடைப் பொருள்கோளு மின்றித் தோன்றுமென இந்நெறிவிரும்பாது கௌடர் சொல்லுமாறு.

குறள் வெண்பா

வ-று. "பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று." என வரும்.

(த-ரை.) கௌடர், பொருள் புலப்பாடிலதாயினும் விசேடமான பொருளை யுணர்த்தும் சொல்லாற்ற லுடையதாகத் தொடுக்கப்படுவதே சிறப்பெனக் கொள்வர். (௧௭)

## ௩. சமநிலை

சமநிலை - வல்லின முதலிய மூவகை எழுத்துக்களும் சமமாக நிற்கப்பெறுவது. வலிதான எழுத்தாலாய தொடை முதலிய மூவகைத் தொடை எனினுமமையும்.

௧௮. விரவத் தொடுப்பது சமநிலை யாகும்.

(இ-ள்.) வன்மை, மென்மை, இடைமை என்னும் மூவின முந் தம்முள் விரவத்தொடுப்பது சமநிலை யாம்; (எ-று)

கட்டளைக் கலித்துறை

வ-று. "சோக மெவண்கொ ளிதழிபொன் றூக்கின சோர்குழலாய்
மேக முழங்க விரைசூழ் தளவ மொடியெடுப்ப
மாக நெருங்கவண் டானங் களிவண்டு பாடவெங்கும்
தோகை நடஞ்செய்யு மன்பர்தின் றேரினித் தோன்றியதே"
என வரும்.

(இ-ள்.) நான்ற குழலினையுடையாய்! கொன்றைகளானவை பொன்மாலைநாற்ற, ஆகாசம் நெருங்க, மேகங்

கள் முழவென முழங்காநிற்ப, விரையுடைய மலரோடு கூடிய முல்லை பலவும் கொடியெடாநிற்ப, அழகிய தானத்திலே வண்டுகள் களித்துப் பாட, எப்பக்கமும் மயில்களாடா நின்றன; இதனாலே, இப்பொழுதே நம்முடைய தலைவரேறியதேர் வந்து அவரோடு தோன்றுவதாயிருந்தது; அதனாலே, நின்னுடைய வருத்தமெங்கே போகக் கடவது; (எ-று.)

'சோகமெவன்கொல்' எனப் பாடங் கொண்டு அதற்கேற்பச் சோகமென்னென நிறுத்தி விகுவாக்குமாரு முளர். இனிக் கௌடநெறி வருமாறு:—

கட்டளைக் கலித்துறை

வ - ற.

"இடர்தநிறத தைத்துற பொற்றொடி கீபிடித் துத்தடித்துச
சுடாக்கொடித திக்கனைத் திற்றடு மாறத துளிகுமைகார்
மடகுயிற் கொடதொளிக ககளிக கப்புகக தோகைவெற்றிக்
கடற்படைக கொற்றவன் பொற்கொடித தேரினிக கணுறறதே"

என வரும்.

(இ-ள்.) பொன்னாற் செய்யப்பட்ட தொடியினையுடையாய், இருண்ட நிறத்தையுடைய மேகமானது, முழங்குவதுஞ் செய்து! மின்னுகிய வொளியோடுங் கூடிய வொழுங்கு பலதிக்கினுந் தோன்றி நடுங்க, மழையைத் தரா நின்றது; அதுவேயு மன்றி, மடப்பத்தையுடைய குயிற்றிரள்கள் ஒளிக்கக் களிக்கத் தொடங்கா நின்றன மயில்களானவை; ஆதலால் வெற்றிகொண்ட கடல் போன்ற பெருமை யுடைத்தாகிய தானையையுடைய தலைவனேறிய பொற்கொடியுடைய தேரானது இப்பொழுதே வந்து நம்மைச் சேர்வதாயிருந்தது; நீ வருத்த மொழிவாயாக; (எ-று)

இச் சூத்திரங் கூறுக்கால் மேல், 'செறிவு' என்று கூறிய வதனானே நெகிழத்தொடாமையே யன்றி, வற்கெனத் தொடுப்பினும், செறிவென்று வைதருப்பருக்குங் கொள்ளக்கிடக்கும்.

(கு-ரை.) வற்கெனத் தொடுத்தல் - வல்லோசை மிகுமாறு சொற்களை யமைத்தல். வற்கெனத் தொடுப்படுதே விழுமிய தென வேண்டுவர் கௌடர். நெகிழிசை

யின்மையாகிய செறிவையும், விரவத் தொடுப்பதாகிய சமநிலையையும் வைதருப்பா ரொருங்கு வேண்டிக் கொண்டதனால், வற்கெனத் தொடுத்தல் அவர்க்கு உடன்பாடன்றென்பதும், அது செறிவின் பாற் படாதெனபதும போதரும். சமனிலை யெனவும் பாடம். ()

## ச. இன்பம்

இனபம-இனிமையுடையது இதனை முதல நூலார மாதுரியம என்பர். மாதுரியம - மதுரத தனமை யுடையது.

கசு. சொல்லினும் பொருளினுஞ் சுவைபட லின்பம்.

(இ-ள்) சொல்லினுற் சுவைபடத தொடுத்தலும், பொருளினுற சுவைபடத் தொடுத்தலும் இன்பமாம் (எ - று.)

அவற்றுள், சொற்காரணமாகிய வின்பமாவது வழிமோனை முதலாக வரத் தொடுப்பது.

(கு-ரை.) வழிமோனையாவது ஒவவோ ரடியிலும் சீர்கள் இடையிட்டு மோனைத்தொடைகொண்டு வருவது. மோனைத் தொடையாவது - முதலெழுத்து ஒற்றுமைப்பட்டு வருதல்.

### விருத்தம்

வ-று. "முன்னைத தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் போக
அன்னைகரு ரைப்ப னறிவாய் கடலேயென் றலறிப்பேருந்
தன்மைமட வார்தளர்ந் துகுத்தவெண் முத்தந் தயங்கு
[கானற்
புன்னையரும் பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும்
[புகாரே யெம்மூர்"

என வரும்.

(இ-ள்.) முன்பு தமமுடைய சிறு வீடானது ஒலிக்கின்ற கடல் வெள்ளத்தில் மூழ்கிப்போக (அதைக்கண்டு) 'என்னுடைய அன்னைக்குச சொல்வேன்; கடலே! யறிவாயாக' வென்று அலறி யோடுகின்ற தன்மையினையுடைய பெண்கள் கானலின்கண் வருந்தி அறுததுச சிதறிய வெண்மையான முத்தம் பிரகாசிக்கின்ற புன்னை யரும்பை யொப்பாக (ஆண்டு)ப் போவாரை மயங்கச செய்கின்ற காவிரிப்பூம்பட்டினமே எம்மூர் (எ - று)

இத்துணைச சுருங்கத் தொடுப்ப தின்றென்று கௌடர் சொல்லுமாறு :—

## விருத்தம்

வ - று. "துனிவருநீர் துடைப்பவராய்த் துவள்கின்றேன்
றுணைவிழிசேர் துயிலை நீக்கி
இனவளைபோ லின்னலஞ்சோர்ந் திடருழப்ப
விறந்தவர்நாட் டில்லை போலும்
தனியவர்க டளாவெய்தத் தடங்கமலத்
தளையவிழ்க்குந் தருண வேனில்
பனிமதுவின் பசுந்தாது பைம்பொழிலிற்
பரப்பிவரும் பருவத் தென்றல்" என வரும்.

(இ - ள்.) (துயரமிகுதியாலே என் கண்ணினிடத்தது) விரைந்து இழிதரு நீரை மாற்றினராய் வருந்து மென்னுடைய இணைவிழியானவை இமைபொருந்துந் தன்மைத்தாகிய, உறக்கத்தை நீக்கி(க் கரத்தின்கண்) இனமாக இடப்பட்ட வளை (சோருதல்) போல இனிய அழகு குறைந்து யான் துயருறும்வண்ணம் பிரிந்து போனவருடைய நாட்டின்கண், பிரிந்திருந்தோர் நடுக்க மெய்தப் பெரிதாகிய பொய்கையி னுண்டாகிய தாமரையின் கட்டை விடுவிக்கும் இளவேனிலும், (அக்காலத்தி லுண்டாகிய) குளிர்ந்த தேனையும், பசிய தாதுக்களையும், பசுமையான சோலையின்கண் பரப்பிவருகின்ற இளந்தென்றலும் இல்லையோ? (சொல்லுவாயாக, தோழீ!) (எ - று.)

இனி, பொருள் காரணமாகிய இன்பமாவது அக கவி கேட்போர்க்கு, மது காரணமாக மதுகரங்கட்கு வரும் மகிழ்ச்சிபோல வரு மின்பமாம்.

(கு - ரை.) மது-தேன். மதுகரம்-வண்டு கவி-செய்யுள்.

## ஆசிரியப்பா

வ - று. "மானேர் நோக்கின் வளைக்கை யாய்ச்சியர்
கான முல்லை சூடார் கதுப்பில்
பூவைப் புதுமலர் சூடித் தாந்தம்
அடங்காப் பணைமுலை யிழைவளர் முற்றத்துச்
சுணங்கின் செவ்வி மறைப்பினு மலர்ந்த
பூவைப் புதுமலர் பரப்புவர் பூவையின்
ஆனிரை வருத்தம் வீடமலை யெடுத்து
மாரி காத்த காளை
நீல மேனி நிகர்க்குமா லெனவே" எனவும்

இதுவுமது

முற்றிழை மகளிர் முலைமுக மெழுக்கவும்
பொறசெறுடிப் புதல்வ ரோடி யாடவும்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூண்
அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்
திருமால் வளவன் றெவ்வர்க் கோசிய
வேலினும் வெய்ய கண்ணவன்
கோலினுந் திண்ணிய தடமென் றோளே"

எனவும் வரும்.

இப்பொருள் காரணமாகிய இன்பம் இரண்டு நெறியார்க்கு மொக்கும். இவ்வாறு தொடுக்குங்காற் கிராமியச் சொல்லும் பொருளும், இடக்கர்சசொல்லும் பொருளுந் தீண்டாமற் பாடுவது. (கக)

## ரு. ஒழுகிசை

ஒழுகிசை - செவிக்கு இனியதாய்ச் செல்லும் மெலலிசை. இதனை முதனூலார் சுகுமாரதை எனபர் சுகுமாரதை - மிருதுத தனமை.

உ0. ஒழுகிசை யென்பது வெறுத்திசை யின்மை.

(இ-ள்.) ஒழுகிசையென்று சொல்லப்படுவது வெறுக்கத் தரும் இன்னாவிசை யின்றி வரத்தொடுப்பது (எ - று.)

நேரிசை வெண்பா

வ - று. "இமையவர்கண் மௌலி யிணைமலாததாள் சூடச்
சமையந் தொறுநின்ற தையல்—சிமைய
மலைமடந்தை வாச மலாமடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோா கண்" என வரும்.

(இ - ள்.) துணையாகிய மலர்போன்ற சீர்பாதத்தைத் தேவாகளெல்லாரும் (தஙகள) முடிமேலே சூடும்வண்ணம் பல வகைப்பட்ட சமயஙகடோறும் புகருநின்ற மடவாள், சிகரங்களை யுடைய மலையரயன் மகளுமாய், நறுநாற்றத்தை யுடைத்தாகிய தாமரை மலர்மீதிருந்த சீதேவியுமாய்ப், பலவகைப்பட்ட கலை களுக்கு இறைவியுமாய் நின்ற சரசுவதி: அவள் நாவினால் வலி யோர்க்குக் கண்ணுயிருப்பவள (எ - று.)

மலைமடந்தை - பார்வதி.

இனி, 'இன்னாவிசை' என்பது மென்னடையொழுக்கத்து வல்லொற்றடுத்து மிக்கதுபோலவும், அந் நடையொழுக்கத்து

உயிரெழுத்தடுத்துப் பொய்ந்நலம்பட்டு அறுத்திசைப்பது போல வும் வரும்.

நேரிசை வெண்பா

வ - று. "ஆக்கம் புகழ்பெற்ற தாவி யிவள்பெற்றாள்
பூக்கட் குழற்கார் பொறைபெற்ற—மாக்கடல்சூழ்
மண்பெற்ற வொற்றைக் குடையாய் வரப்பெற்றேம்
கண்பெற்ற வின்று களி" என வரும்.

(இ - ள்) பெரிய கடல்சூழ்ந்த உலகத்துள்ளார் தங்கள் தவப்பலனாகப் பெற்ற ஒப்பற்ற குடையை யுடைய தலைவனே! (நீ யெங்களை நினைத்து) வந்த இதனானே, இன்று, நின்னுடைய புகழானது பெருக்கமபெற்றது; தலைமகளாகிய இவளுயிர் பெற்றாள்; இவளுடைய காரபோன்ற குழலானது மதுவினை யுடைத்தாகிய பூககளின் பாரததைப் பெற்றது; எங்களுடைய கண்களும் செருககுப்பெற்றன (எ - று.)

இவ்வாறு வேண்டார் இரண்டு நெறியாரும்.

(கு-ரை.) இரண்டு நெறியார் - கௌடர், விதர்ப்பர் என்னும் இரண்டு வழியினா.

இன்னா இசை - இனியதல்லாத ஓசை, அது வெறுத்திசை; செறிந்திசைக்கு மிசை. வெறுததல்-செறிதல். (உ-ம்.) 'பூக்கட் குழற்கார பொறை பெற்ற' எனவும், 'உரறிறுறக குமுறமு' என வும, சந்திவகை முதலிய காரணஙகளால் தம்பட்ட வோசை போல் காதுக்கு இனிமை பயவாது வருவது என்பது. வெளிப்பா யிராமற் பிரியமாயிருக்கும்படியான ஓசை, ஒழுகிசை யெனப் படும். இதறகு முந்திய பாட்டுக்களே உதாரணமாகலாம். (உ0)

## அ. உதாரம்

உதாரம - மகதது; அதிசயம, குறிபபினால ஒா சிறபபு விளஙகும் பொருளபடுவது

உக. உதார மென்ப தோதிய செய்யுளிற்
குறிப்பி னொருபொரு ணெறிப்படத் தோன்றல்.

(இ - ள்.) உதாரமென்று சொல்லப்படுவது சொல்லப் பட்ட செய்யுளுள் சொற்படு பொருளின்றி, அதன் குறிப்பினால் ஒருபொருள் நெறிப்படத் தோன்றுவது (எ - று.)

குறிப்பு - புத்தியினா லறியப்படுவது.

நேரிசை வெண்பா

வ - று. "செருமான வேற்சென்னி தென்னுறைந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்னா—ஒருநாளும்
பூதலத்தோரா தம்மைப் பொருணசையாற் பாராவாம்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்."

(இ - ள்.) பொருண்மேல் வைத்த அவாவினாலே தாழ்வு வைத்திரப்போர் கண்களானவை, போரின்கண் வலியுடைத்தாகிய வேலையும், சென்னி யென்னும் பெயரையு முடையவனாகிய தெறகின்கனுண்டாகிய உறந்தைப் பதியார்க்குத் தலைவனாகிய சோழனுடைய முகத்தைப் பார்த்தபின், பூமண்டலத்துள்ளார் முகங்களைப் பொருள் விருப்பினாற் பாரா (எ - று)

இதனுள் உறந்தையர் கோமானை ஒருநாள் முகம்பார்த்த இரவலர் பின்னைப் பிறரைப் பொருள் நசையாற் பாரார்' எனவே, அவன் இரப்போர வறுமை தீரக் கொடுப்பான் என்னும் பொருள் குறிப்பினாற் கொள்ளக் கிடந்தவாறு காண்க.

(கு - ரை.) சென்னி-சோழன் பெயர்களில் ஒன்று; தலைமை பற்றிவந்த பெயர். இவ்வுதாரணச் செய்யுளில் சோழராசனது, பெருவண்மை குறிப்பால் தோன்றுவது காண்க.

நேரிசை வெண்பா

"அவிழ்ந்த துணியிசைக்கு மம்பலமுஞ் சீக்கும்
மகிழ்நிடுவார் முனைனா மலரும்—கவிழ்ந்து
நிழறுழாம யானை நெடுந்தேரிரவி
கழறொழா மன்னவர்தங் கை" என்பதும் அது.

(இ-ள்) தன்னுடைய நிழலைக் கவிழ்ந்து சிதைக்கும் யானையினையும் நெடிய தேரினையு முடைய இரவிகுலத்துள்ளானுடைய பாதங்களைப் பணியாத அரசர்களுடைய கைகளானவை, (உடுக்க வேண்டின்) அவிழ்ந்த துணிகளைப் பின்பு முடியாநிற்கும்; (கிடக்க வேண்டின் ஊர்ப்புறத்து உண்டாகிய) அம்பலங்களைத் துடையாநிற்கும்; (உணவு வேண்டின்) இடுவார் முன்னர் (ச் சென்று நின்று) உள்ளத்து உவகையோடும் விரியாநிற்கும் (எ - று.)

(கு - ரை.) இசைத்தல் - முடிதல், சீத்தல் - துடைத்தல். தொழாவும் என்பது தொழாம் என விகாரமாயிற்று. தன் நிழல்

கண்டு சீறுதல், மதயானையின் இயல்பு. இரவி - சூரியன்; சோழராம், சூரிய குலத்தார்.

'இடுவோர் முன்னர் உவமையோடு விரியா நிற்கும்,' என்றதனால், இடாதார் முன்னர் உவமையின்றி விரியுமெனக் கொள்க. இஃது இரண்டு நெறியார்க்கும் ஒக்கும். (உக)

## எ உய்த்தலில் பொருண்மை

உய்த்தலில் பொருண்மை - சொற்களை வருவித்துச் சேர்த்தல் இல்லாத பொருளுடைமை.

உஉ. கருதிய பொருளைத் தெரிவுற விரித்தற்
குரியசொல் லுடைய துய்த்தலில் பொருண்மை.

(இ-ள்.) உய்த்தலில் பொருண்மை யென்பது கவி தன்னாற் கருதப்பட்ட பொருளை விளங்க விரிக்குஞ் சொல்லைச் செய்யுளுள்ளே யுடைத்தாய்ப் பிறிதுமொழி கூட்டி யுரைக்கும் பெற்றியின்றி வரத் தொடுப்பது (எ - று.)

(கு-ரை.) பிறிதுமொழி - வேறு சொல். பெற்றியின்றி - தன்மையில்லாமல்

நேரிசை வெண்பா

வ-று. "இன்றுமையாண் மாசிலா வாண்முகங்கண் டேக்கற்றோ
அன்றி விடவரவை யஞ்சியோ—கொன்றை
உளராவா றோடு மொளிர்சடையீர் சென்னி
வளராவா றென்னோ மதி" என வரும்.

(இ-ள்.) உமையாளுடைய குற்றமற்ற ஒளியினை யுடைத்தாகிய முக மண்டலத்தைக் கண்டு அதனுடைய நலனை ஆசைப்படுதலாலோ? அஃதன்றியே, (நீர் ஆபரணமாக அணிந்த) விடத்தையுடைத்தாகிய பாம்பினைக் கண்டு அஞ்சுதலாலோ? கொன்றையின் மலர்களை யீர்த்துக்கொண்டு கங்கையாறு விரைந்து திரியும் ஒளியோடு கூடிய சடையினை யுடையீர்! இன்று உம்முடைய திருமுடிமே லுண்டாகிய பிறையானது வளராதிருந்த காரணம் யாது? (சொல்லுவீர்) (எ - று.)

(கு - ரை.) உளர்தல் - கலக்குதல். வளரா ஆறு-வளராத தன்மை. மதி - ஈண்டுப் பிறை.

இனி உய்த்துணர்தல் வருமாறு:—

நேரிசை வெண்பா

வ-று. "இன்றுமையாண் மாசிலா வாண்முகங்கண் டேக்கறுமால்
அன்றி விடவாவு மங்குறையும்—கொன்றை
உளராவா றோடு மொளிர்சடையீர் சென்னி
வளராவா றென்றோ மதி."

என்பதனுள் 'யாதனாலோ' என்னுஞ் சொற் கூட்டி யுரைக்கப்படும்.

இவ்வாறு வேண்டுவார் இரண்டு நெறியாரும்.

(கு-ரை.) உய்த்துணர்தல் - கருதிய பொருள் புலப்படுத்தற்கு வேண்டிய சொல்லுடைமையை யுணர்தல். உய்த்தல் - சொற்களை வருவித்துச் சேர்த்தல். (உஉ)

அ. காந்தம்

காந்தம் - உலக இயற்கைக்கு ஒத்துக் கூறுவது: மனத்தினை மகிழ்விப்பது எனினுமாம்.

உரு. உலகொழுக் கிறவா துயர்புகழ் காந்தம்.

(இ-ள்.) காந்தமாவது ஒன்றனை உயர்த்துப் புகழுங்கால் உலகநடை யிறவாமல் உயர்த்துப் புகழ்வது (எ - று.)

நேரிசை வெண்பா

வ - று. "ஒருபே ருணர்வுடனே யொண்ணிறையுந் தேய
வருமே துறவென்பால் வைத்த—ஒருபேதை
போதளவு வாசப் புரிகுழல்சூழ் வாண்முகத்துக்
காதளவு நீண்டிலவுங் கண்" என வரும்.

(இ-ள்.) யான் வருத்தத்தை யுறும் வகையாகப் பேதைத் தன்மையை யுடையா ளொருத்தி என் உள்ளத்திடத்து வைத்த பூவொடு கலந்த நறுநாற்றத்தையுடைத்தாகிய சுருண்ட குழலினை யுடைத்தாய் ஒளியோடு கூடிய முகத்தின்கண் உண்டாகிய காதின் எல்லை யளவுஞ் சென்று மீண்டு திரியுங் கண்களானவை, இக் காலத்து எனது ஒரு தன்மையா யிருக்கப்பட்ட அறிவுடனே நன்றிதாகிய ஒழுக்கமுங் கெட வந்து தோன்றுகின்றன (எ-று.)

ஒருபேதை என் உள்ளத்து வைத்த கண் என்று கூட்டுக.

(கு - ரை.) உலகநடை இறவாமல் - உலக இயற்கை கடவாமல். 'தேய' என்பது, கெட வென்பதாம். ஏதமென்பது

ஏதென நின்று வருத்தமாயிற்று. 'என்பால் வைத்த' என்றது என் உள்ளத்து வைத்த என்றவாறு. ஒள் நிறை - ஒள்ளிதாகிய ஒழுக்கம்.

இனி, கௌடநெறி வருமாறு :—

நேரிசை வெண்பா

வ - று. "ஐயோ வகலல்குல் சூழ்வருதற் காழித்தேர்
வெய்யோற் கனேகநாள் வேண்டுமால்—கைபரந்து
வண்டிசைக்குங் கூந்தன் மதர்விழிகள் சென்றுலவ
வெண்டிசைக்கும் போதா திடம்" என்பது.

(இ-ள்.) திரளாகப் பரந்து வண்டுகள் பாடப்பட்ட கூந்தலினை யுடையாளுடைய அகன்ற அல்குற்பரப்பைச் சூழ்வருதற்கு, ஐயோ! ஆகாயப் பரப்பெல்லாம் ஒரு பொழுதிற் கடக்கும் ஒருகாற் றேரையுடைய பகலோனுக்குப் பன்னெடுநாள் வேண்டுவதாயிருந்தது; அதுவேயன்றி, இவளுடைய களிப்பையுடைத்தாகிய கண்கள் சென்று மீண்டு உலாவுவதற்கு எண்வகைப்பட்ட திக்குகளில் உண்டாகிய இடப்பரப்பும் போதாததா யிருந்தது; இஃது ஒருருவத் தன்மை யிருந்தபடி யென்! (எ - று)

'ஐயோ' என்பது இரக்கத்தின்கட் குறிப்பு; இவ்விரக்கம் ஆதித்தன்மே லேற்றுக.

(கு - ரை.) ஆழி - தேர்க்கால். கை - திரள். கூந்தல் - கூந்தலை யுடையாள்; (ஆகுபெயர்). மதர் - களித்தவிழி.

நேரிசை வெண்பா

வ-று. "அங்கண்மா ஞாலத் தகல்விசும்பை முன்படைத்த
பங்கயத்தோ னந்நாளிப் பைந்தொடிதன்—கொங்கைத்
தடம்பெருக வோங்குமெனத் தானினையா வாறே
இடம்பெருகச் செய்யா வியல்பு" என்பது.

(இ - ள்.) அழகினை யுடைத்தாகிய இடத்தை யுடைத்தாய்ப் பெரிதாகிய உலகத்தின்மீது உண்டாகிய அகன்ற விசும்பை முன்பு படைத்த நான்முகன் அந் நாளில் இவ்வாகாயத்தை இடப் பரப்புண்டாகப் படையாத காரணம், பசும்பொன்னாற் செய்த தொடியினையுடையாளுடைய முலைகள் புடைபரக்க வளர்ந்து மீதுயர்ந்தோங்குமென நினையாதவாறே? (சொல்லுவீர்), (எ-று.)

இவ்வாறு உலகநடை யிறப்பப் புணர்ப்பதே சுவையுடைய தென வேண்டுவர் கௌடர். (உக)

## சு. வலி

வலி - வன்மையுடையது. இதனை முதனூலார் ஓசம் என்பர். ஓசம் - சாமர்த்தியம்.

உச. வலியெனப் படுவது தொகைமிக வருதல்

(இ-ள்.) வலியென்று சொல்லப்படுவது, தொகைச்சொற்றொடர்பு உண்டாகத் தொடுப்பது (எ - று.)

'மிக' என்றது சிறப்புடையவாக வெனக் கொள்க.

### நேரிசை வெண்பா

வ-று. "காணிமிர்த்தாற் கண்பரிய வல்லியோ புல்லாதா
மானனையார் மங்கலநா ணல்லவோ—தான
மழைத்தடக்கை வாரகழற்கான் மானவேற் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு" என்பது.

(இ-ள்.) காலம் வரையாது உபகரிக்கின்ற மேகம்போன்ற பெரிய கையினையும், நீண்டிருக்கின்ற கழலோடு கூடிய காலினையும், வலிதாகிய வேலினையு முடையனாகிய சோழனுடைய, துளையை யுடைத்தாகிய பெரிய கையினையும், நான்ற வாயினையு முடைய மலையாகிய வாரணம், தன்னுடைய தாளை வலித்தால், அறுந்தன்மையையுடையன, நிகளத்தின்கண்ணேயோ? பகைத்த வேந்தருடைய உரிமைச் சுற்றத்து மான்போன்ற விழியினை யுடையார் கழுத்தில் நல்ல நாளிற் பூட்டிய வலியையுடைத்தாகிய மங்கலக் கயிறல்லவோ? (எ - று.)

(கு - ரை.) தொகைச் சொல் - வேற்றுமைத் தொகை முதலிய சொற்கள். இங்கே, 'தானமழை' என்பது தொடங்கித் தொகைநிலை மிக வருதல் காண்க. வல்லி - நிகளம் (விலங்கு). தானம்-கொடை. கால் நிமிர்த்தாற் பரிவ வல்லிக் கண்ணோ என மொழிமாறுக. கண்-பூட்டுவாய். சோழராசனது யானை சினந்து காலை வலிய இழுத்தால் அதன் விலங்கேயன்றிப் பகைவர் மனைவியரது மங்கல நாணும் அறுபடுமென்பது கருத்து.

இத்துணைச் சுருங்கத் தொடுத்தல் இன்றென்று கௌடர் சொல்லுமாறு :—

நேரிசை வெண்பா

வ-று. "செங்கலசக் கொங்கைச் செறிகுறங்கிற் சீறடிப்பேர்ப்
பொங்கரவ வல்குற் பொருகயற்கண்—செங்கனிவாய்க்
காருருவக் கூந்தற் கதிர்வளைக்கைக் காரிகைத்தாம்
ஓருருவென் னுள்ளத்தே யுண்டு" என்பது.

(இ-ள்.) செம்மை நிறத்தை யுடைத்தாகிய கலசம்போன்ற முலையினையும, செறிந்த குறங்கினையும், சிறிதாகிய அடியினையும், பெரிதாகிய பாம்பின் படம்போன்ற அல்குலினையும், பகைத் தெதிர்ந்த கயலையொத்த கண்ணினையும், செம்மையாகிய கொவ் வைக் கனிபோன்ற வாயினையும், கருமையாகிய நிறத்தினை யுடைய கூந்தலினையும், ஒளியோடு கூடிய வளைகளை யுடைத் தாகிய கையினையும், அழகினையு முடைத்தா யிருப்பதோர் வடிவம் என் உள்ளம் விட்டு அகலாது (எ - று.)

(கு - ரை.) பொங்குதல்-பெருமை. செறிகுறங்கு - (பருத் திருத்தலால்) ஒன்றோடொன்று நெருங்கிய தொடை. (உச)

## க0. சமாதி

சமாதி - ஒன்றாக ஆரோபிக்கப்படுவது. இதுவும் கொள்ளாகவும் உடம் பாடு.

உடு. உரியபொரு ளின்றி யொப்புடைப் பொருண்மேற் றரும்வினை புணர்ப்பது சமாதி யாகும்.

(இ - ள்.) முக்கியப்பொருளின் வினையை ஒப்புடைப் பொருண்மேல் தந்து புணர்த்து உரைப்பது, சமாதியென்னும் அலங்காரமாம் (எ - று.)

'சமாதி' என்னது 'ஆகும்' என்றதனாற் பெயரும் அவவாறு உரைக்கப்படும்.

ஆசிரியப்பா

வ - று. "அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி" எனவும்,

"விழித்த குவளைக் கழிப்போது வாக்கிய
கள்ளுண்டு களித்த வண்டினம்" எனவும்,

"கன்னிமெயில்," "குமரி ஞாழல்" எனவும்,

### நேரிசை வெண்பா

''கடுங்கை வயலுழவர் காலைத் தடிய
மடங்கி யரியுண்ட நீலம்—தடஞ்சேர்ந்து
நீளரிமேற கண்படுக்கு நீணீ ரவந்தியார்
கோளரியே றிங்கிருந்த கோ''   எனவும் வரும்.

இஃது, இரண்டு நெறியார்க்கும் ஒக்கும்.

இவற்றைக் துணைவலங்கார மென்றுங் கூறுப.

அஃதேல், இன்ன விலக்கணமெல்லாம் முன்னையோர் மொழிந்தது, நடைபல பயின்ற வடமொழிக்கன்றே; செந்தமிழ் மொழியின் வந்தவாறு என்னை? எனின்,—இதன் முதனூல் செய்த ஆசிரியர் உலகத்துச் சொல்லையெல்லாம் சமஸ்கிருதம், பிராகிருதம் அபப்பிரஞ்சம் என மூன்றுவகைப்படுத்தினார். அவற்றுள், சமஸ்கிருதம் புத்தேளிர மொழியெனவும், அபப்பிரஞ்சம் இதர சாதிகளாகிய இழிசனர் மொழி எனவுங் கூறினார். அதனால், பிராகிருதம் எல்லா நாட்டு மொழி யெனவும படும். அல்லதூஉம், பிரகிருதி யென்பது இயல்பாகலான், பிராகிருதம் இயல்புமொழி.

அந்தப் பிராகிருதத்தைத் தற்பவம், தற்சமம், தேசியம் என மூன்றாக்கினார். அவற்றுள், தற்பவம் என்பன—ஆரியமொழி திரிந்து ஆவன; அவை பாபம் - பாவம் எனவும், 'தசநான் கெய்திய பணைமரு றோன்றாள்' எனவும் வரும். தற்சமம் என்பன - ஆரியச்சொல்லும் தமிழ்ச்சொல்லும் பொதுவாய் வருவன; அவை - குங்குமம், மூலம், மலயமாருதம் என்பன. தேசியம் என்பன - அவ்வந்நாட்டார் ஆட்சிச்சொல்லேயாய்ப் பிறபாடை நோக்காதன; அவை - நிலம், நீர், தீ, சோறு என்பன.

இவற்றையே செய்யுட் சொல்லெனத் தமிழ் நூலாரும் வேண்டினாராகலின், இவ்வாற்றான் தமிழ்ச் சொல்லெல்லாம் பிராகிருத மெனப்படும். அச்சொற்களா லியற்றப்படும் எல்லாக கவிக்கும் அவ் வலங்காரமனைத்தும் உரியவாகலின், ஈண்டு மொழிபெயர்த்து உரைக்கப்பட்டன.

(கு - ரை.) சமாதியென்பது, வடசொல்; ஒரு பொருளினிடத்து மற்றொன்றின் தன்மையை நன்கு ஆரோபிப்பது. தந்து புணர்த்து உரைத்தல் - கொணர்ந்து சேர்த்துச் சொல்லுதல். இம் மேற்கோள்களில், உயர்திணைக்குரிய பருகுதல் காணு

தல் என்ற வினைகள் அஃறிணையாகிய சூரிய மண்டலத்தின் மேலேற்றிக் கூறப்பட்டனவும், பிராணிகட்குரிய விழித்தல், வார்த்தல் என்ற வினைகள் குவளைமலர்மேலேற்றிக் கூறப்பட்டனவும், இளமங்கையாக்குரிய கன்னித்தன்மை, மதில்மேலேற்றிக் கூறப்பட்டதும், மகளிர்ககுரிய குமரித்தன்மை, மரத்தின் மேலேற்றிக் கூறப்பட்டதும் காண்க. இவையிரண்டும் ஒப்புடை பொருளின்மேற் பெயர் புணராதத சமாதி. பெயர் - பெயர்ச சொல். மிகையை - 'அதிக வசனம்' என்பர் (௨௫)

## இவ்வியலுக்குப் புறனடை

௨௬. ஏற்ற செய்யுட் கியன்ற வணியெலாம்
முற்ற வுணர்த்தும் பெற்றிய தருமையிற்
காட்டிய நடைநெறி கடைப்பிடித் திவற்றொடு
கூட்டி யுணர்த லான்றோர் கடனே

(இ - ள்.) உலகத்து நிலைபேறுடைய செய்யுளனைத்திற்கும் பொருந்திய அணிவேறுபாடெல்லாம் ஒழிவின்றி யுணாத்தும் பெற்றி அரிதாகலான், காட்டப்பட்ட ஒழுககநெறியே பற்றுக் கோடாக இவற்றோடுங் கூட்டிககொண் டுணாதல் முற்றக் கற்றோரது கடனாம் (எ - று.)

மாங்கனியும், தீம்பாலும், வருககைச சுளையும், சருக்கரையும் தம்முள் வேறுபட்ட சுவையவெனினும் கூறுவது மதுரமொன்றன்றே? அதுபோல, எழுததுசசெறிவும், சொற்செறிவும், பொருட்செறிவும் செறிவெனவே சொல்லுவதல்லது, பிறிதொரு வகை பேசிற் பெருகிய அகலமுடைத்தாமெனக் கொள்க. ஒழிந்தனவும் அன்ன.

(த - ரை) இவ்வளவால் யாது கூறியதோவெனின், பொருள் எளிதில் விளஙகத் தககதாய்ச சொல்வன்மை யில்லாததாய் விளஙகுகின்ற மிடுக்கில்லாத நடையொன்றுணடு; அது வைதர்ப்பம் எனப் பெயா பெறுமெனவும், பொருளாழ்த்தமும் சொல் வன்மையுமுள்ள மிடுக்கான நடையொன்றுண்டு; அது கௌடம் என்று பெயர் பெறுமெனவுங் கூறியதாயிற்று. எந் நடைக்கும் ஓசையுடைமையும் ஆழமுடைமையும் இருத்தல் வேண்டும். (௨௬)

பொதுவணியியல் முற்றிற்று.

# ௨. பொருளணியியல்

## காப்பு

௨௭. என்னை யுடையாள் கலைமடந்தை யெவ்வுயிர்க்கும்
அன்னை யுடைய வடித்தளிர்கள்—இன்னளிசூழ்
மென்மலர்க்கே கன்று மெனவுரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து.

(இ-ள்.) (மிகவும் இழிவான) என்னை யடிமையாக வுடையாள், கலைமடந்தை, எல்லா வுயிருக்குந் தாயாயுள்ளவளது தளிராகிய அடியிணைகளானவை, இனிதாகிய பண் முரலும் வண்டுகள் சூழுகின்ற மிருதுவாகிய மலரின்மீது மிதிப்பினுங் கன்றுமென்று சொல்லாநிற்பர்; இத்தன்மையாகிய தளிரடிகள், உண்மையற்ற கடினமாகிய என் மனத்தின்கண் வந்து நிலையாக நிற்கும் (எ - று.)

ஓகாரம் - அசை.

(கு-ரை.) தங்குமோ என்ற ஓகாரத்தை வியப்புப் பொருளதாகக் கொள்ளினும் அமையும்; இனி, எதிர்மறையாகக் கொண்டு, தங்கக்கடவனவோ? அல்ல என உரைத்து, கவி தன் மனத்தின் இழிவைப் புலப்படுத்திய தாக்குதலும் ஒன்று. கலைமடந்தை என்பது சரசுவதியைக் குறிக்கும்போது, கலை - கல்வியும், அப்பெயர் வன துர்க்கையைக் குறிக்கும்போது, கலை-மானுமாம். மடந்தை-பெண். பண்முரலும்-இசைபாடும். கன்றும்-வாடும். ஊரும்-வாகனமாகக் கொண்டு ஏறி நடத்தும். ஓ - அசை. (௧)

## பொருளணிகள்

௨௮. தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பே வேற்றுமை விபாவனை
ஒட்டே யதிசயந் தற்குறிப் பேற்றம்
ஏது நுட்ப மிலேச நிரனிறை

ஆர்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாயித முதாத்தம்
அரிதுணை ரவநுதி சிலேடை விசேடம்
ஒப்புமைக் கூட்ட மெய்ப்படு விரோதம்
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதரிசனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்தொடு சங்கீ ரணம்பா விகமிவை
*ஏற்ற செய்யுட் கணியே யைந்தே.

இவ்வியல் பொருளாறும் அணிகள் இயல்புணர்த்தினமையால், பொருளணியோத்தென்னும் பெயர்த்து; அஃதேல், சொல்லாலுணர்த்தப்படும் அணியீண்டுணர்த்திலரோ வெனின், மிகுதி பொருண்மேலதாகலான் மிக்கதறைற பெயர் கொடுக்கப்பட்டது.

இவ்வியலினுள் இசுருத்திரம், அலங்காரங்களின் பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தன்மையும், உவமையும், உருவகமும், தீவகமும், பின்வருநிலையும், முன்னவிலக்கும், வேற்றுப்பொருள் வைப்பும், வேற்றுமையும், விபாவனையும், ஒட்டும், அதிசயமும், தற்குறிப் பேற்றமும், ஏதுவும், நுட்பமும், இலேசமும், நிரனிறையும், ஆர்வமொழியும், சுவையும், தன்மேம்பாட்டுரையும், பரியாயமும், சமாயிதமும், உதாத்தமும், அவநுதியும், சிலேடையும், விசேடமும், ஒப்புமைக் கூட்டமும், விரோதமும், மாறுபடுபுகழ்நிலையும், புகழாப்புகழ்ச்சியும், நிதரிசனமும், புணர்நிலையும், பரிவருத்தனையும், வாழ்த்தும், சங்கீரணமும், பாவிகமும் என இவை முப்பத்தைந்தும் மேற்கூறிய செய்யுட் கலங்காரமென்று சொல்லப்படும் (எ - று.)

இவை யெல்லாம் உம்மை தொகுத்து எண்ணேகார மிடையிட் டெண்ணப்பட்டவற்றை அவவும்மை விரித்துரைக்கப்பட்டன. தன்மையும் உவமையு மென விரித்துகொள்க.

அஃதேல், இது முறைமையாயினவா றென்னையோ வெனின், இயல்பு விகாரமென விரண்டல்லது வேறில்லை; அவற்றுள் தன்மை, இயல்பாகலான் முற்கூறப்பட்ட முறைமைத்தாய்த்

* ஏற்ற செய்யுட் கியன்ற வணியே' எனவும் பாடம்.

தன்மையென்றுஞ் சொன்னடை யென்றுஞ் சொல்லப்படும். உவமை, விகாரமாய் மிக்க வரவிற்றாய்ப் பின்வருகின்ற பலவலங் காரங்கட் குபகார முடைத்தாகலாற் றன்மையின்பின் வைக்கப் பட்டது. ஒழிந்தனவும் வைத்தவா றுய்த்துணர்ந்துகொள்க. ஈண்டுரைப்பிற் பெருகும். அல்லதூஉம் தொல்லாசிரியர் சொல்லிய நெறியெனினு மமையும்.

இனி 'ஏற்ற' என்றதனாற் சில செய்யுட் கேற்றுஞ் சில செய் யுட் கேலாதனவு முள வொருதிறத்தணி யெனக் கொள்க.

'அரிதுணரவநுதி' என்று சிறப்பித்தவதனாற் சிறப்பு முத லானவற் றுண்மை மறுக்குங்கால் அம் மறையானே, ஒருபுகழ் தோன்ற வைக்கப்படுமென்பது. அஃது அதனிலக்கணங் கூறும் வழியே யுணர்ந்துகொள்க, 'மெய்ப்படு விரோதம்' என்ப தற்கு மெய்யென அடைகொடுத்தது தமிழாசிரியர் முரண் டொடை யென்று தொடைப்பாற்படுத்துச் செய்யுட் குறுப்பாக்கி னார்; இவ்வாசிரியரதனை யலங்காரத்தின்பாற் படுத்தினாராகலி னவ்வேறுபா டறிவித்தற் கெனக் கொள்க. இவையெல்லாம் மேற்சூத்திரச் சுருக்க நோக்கி ஈண்டுரைக்கப்பட்டன. ஒழிந்த வகல முரையிற் கொள்க

(கு - ரை.) இதிற் கூறப்படும் பொருளணிகளுள் 'தீவகம்' பின்வருநிலை, நிரனிறை, சிலேடை, விரோதம் முதலிய சில அணிகள் ஒருசார் சொல்லைப்பற்றி நிற்றலால், 'மிகுதி பொருள் மேலதாதலால், மிக்கதனாற் பெயர் கொடுக்கப்பட்டது' என்றார். தன்மை முதல் வாழ்த்து ஈறாக வுள்ள முப்பத்து மூன்று அணி களும் தனியே வருவன; சங்கீரணமும் பாவிகமும் முறையே பல அணிகள் சேர்ந்தும் காப்பிய முழுவதிலும் அமைந்தும் வருவன; இவ்வேறுபாடு தோன்ற, இடையில் 'ஒடு' கொடுத்துப் பிரித்தார்: சங்கீரணம் பாவிகம் என்ற முறைமைக்குக் காரண மும் இதனால் விளங்கும். (௨)

## க. தன்மை யணி

தன்மை, சுவபாவம் (இயல்பு) தன்மையெனினும், தன்மை நவிற்சி யெனினும் ஒக்கும்; இதனை முதனூலார் சுவபாவோக்தி என்பர். சுவபாவம்- தன்மை உக்தி - சொல்லுதல்.

உக. எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்கும்.
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்.

என்பது. நிறுத்தமுறையானே தன்மையென்னு மலங்காரத்துப் பொதுவிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) எவ்வகைப்பட்ட பொருளும், மெய்ம்மைக் கூறு பாட்டான் விளக்குஞ் சொன்முறையாற் பாடப்படுவது தன்மை யென்னும் அலங்காரமாம் (எ - று.)

(கு - ரை.) மெய்ம்மைக் கூறுபாட்டான் – உண்மையின் வகையினால். இவ்வணி பொருளின் இயல்பை நேரிற் பார்த்தாற் போலத் தோன்றுமாறு உள்ளபடி விளங்கச் சொல்லுவது. அங் ஙனம் சொல்லுங்கால், 'உண்டு வளர்ந்தான்', 'இரண்டு கண்ணன்', 'ஓடிவந்தான்' என்றாற்போல யாதொரு சமத்காரத்துக்கும் இடமில்லாதபடி கூறின், அது அணியாகாதென்றும், இரசிகர்கள் கேட்டு உவக்கும்படியானதோர் தன்மை நிகழக் கூறினால் மாத்திரமே அணியாகுமென்றும் அறிக. இஃது, எல்லா வணி களுக்கும் பொதுவாம். (௩)

௩௦. அதுவே,
பொருள்குணஞ் சாதி தொழிலொடு புலனும்.

(இ-ள்.) அத் தன்மை பொருளும், குணமும், சாதியும், தொழிலும் என்னும் இவைபற்றித் தோன்றும் (எ - று.)

(கு - ரை) பொருட்டன்மை, குணத்தன்மை, சாதித் தன்மை, தொழிற்றன்மை எனத் தன்மையணி நான்கு வகைப் படும் என்க.

இவற்றுள்—க-வது, பொருட்டன்மை வருமாறு:—

பொருட்டன்மை-பொருளிடத்துள்ள பலவிதமான இயல்பு களை உள்ளவாறே அலங்கரித்துக் கூறுவது.

நேரிசை வெண்பா

"நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்ப னுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
எம்மா னிமையோர்க் கிறை" என்பது.

(இ-ள்.) கருங்குவளைபோன்ற அழகிய மிடற்றினையும், முடி யின்கண்ணே நீண்டிருக்கப்பட்ட சடையினையும் மாரபினிடத்தே

ப்பட்ட முப்புரி நூலினையும், நெற்றியின்கட் சேர்ந்த விழி யையும், உடையாக அசைத்த தோலினையும், காதலந் தோன்றிய பிறையும், கனல்போன்ற மழுவினையும், திருக்கச்சாலை யென்னும் பதியினையு முடையவனாய் எம்மை யாண்டுகொண்ட பெரி ர் இமையவர்க்குந் தலையான் (எ - று.)

அன் - சாரியை; நீலமணி போன்ற மிடற்றின னென்க. மமை மிடற்றன், சடையன், மார்பன், விழியன் என ஈசர் ஐவென் றிறு மமையும். 'கனமழுவன்' எனப் பாடமோதிப் 'பெரிய வினான்' என்பாரு முளர். கனலையும் மழுவையு முடைய னென றிறும் அமையும். 'கச்சாலை யெம்மான்' என்றது - கச்சாலையிலே றயும் பெரியோ னெனினு மமையும்.

(கு-ரை.) இங்கே கச்சாலை யெம்மான் என்பது பொருள் கரு யாசகம். நீலமணி மிடற்றுடைமை முதலியன அப்பொருளிடத் ர தன்மைகள். மிடறு-கழுத்து. அசைத்த-கட்டிய. தோல் - தோல். இப் பாட்டிலுள்ள 'மிடற்றன்' முதலியவற்றை அன் பெற்ற ஆண்பாற் பெயர்களாக வெடுத்தலே நேர். செய் ன - என்னும்மை தொக்கது. கனல் மழு-வெரலிக்கின்ற மழு னத்தொகை). இது ஒருபொருளின் தன்மையைக் கூறியதனால், ருட்டன்மையாம்.

௨-வது **குணத்தன்மை** வருமாறு:—

குணத்தன்மை - குணத்திலுள்ள பலவிதமான தன்மைகளை யவாறே அலங்கரித்துக் கூறுவது.

நேரிசை வெண்பா

'உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையும்
தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தாள்—புள்ளலைக்கும்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத போன்'' என்பது.

(இ-ள்.) நெஞ்சமானது குளிர மெய்ம்மயி ரரும்பி மாற்றமுந் கண்ணிலே புனல் தோன்றத் தன்னுருவத்தையு மறந்தாள். ம் அலைக்கின்ற மது நிறைந்த தாமரையையுடைய பழனஞ் தில்லைப் பொதுவின்கண்ணே அழகுடைத்தாகிய கூத்தை ன்ற (சபாபதியின்) பொலிவினையுடைய (திருவடித்) தாம ரய வணங்கின பொன்னை யொப்பாள் (எ - று.)

'உரையுந் தள்ள' என்னு மும்மையால் நாணம், மடம், அச்சம் பயிர்ப்புத் தளர வெனக் கொள்க.

(கு-ரை.) இங்கே மறந்தாள் என்பது குணங் கருதிய வாசக உள்ளங் குளிர்தல் முதலியன மறத்தலாகிய குணத்தோடு நிகழு அதன் தன்மைகள். மறத்தற்கண்ண அங் குணங்கள் இயல்பாக நிக றறிக. தில்லைப் பொது-சிதம்பர சபை. இது கடவுளைத் தொழு வாரும் ஆனந்தத்தின் தன்மையைக் கூறியதனால், குணத்தன் யாம.

௩-வது. **சாதித்தன்மை** வருமாறு:—

சாதித்தன்மை - சாதியிலுள்ள பலவிதமான தன்மைக உள்ளவாறே அலங்கரித்துக் கூறுவது. சாதியாவது ஒரு நிக ளாகிய பல பொருளுக்குப் பொதுவாக நிற்பதோர் தன்மை.

நேரிசை வெண்பா

"பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற—மெய்த்தவத்தோர்
ஆகந்தா னம்பலத்தா னாரா வமுதனையாள்
பாகத்தான் சூடும் பணி" என்ப

(இ-ள்.) பத்தியாகிய ரேகைகள் பொருந்திய வயிற்றினையு னவாயக் கருமையாகிய மிடற்றினை யுடையனவாய்ப் படத்தின்கண் பொறி நிறத்தையும், இரண்டு பிரிவான நாவையும், புரையையுடை பல்லினையு முடையனவா யிருப்பன: மெய்யாகிய தவத்தினை யுடையோர் அகத்தின்கண் ணுள்ளான, அம்பலத்திலே நிற்பான், பருக அமுதமன்ன உமாதேவியின் பாகத்தை யுடையான், சூடும் ப (எ - று.)

பத்தித்த அகட்ட-என்பது பத்தித்தகட்ட வென வி மாயிற்று. அகந்தா னென்பது ஆகந்தா னென முதனீண்டது.

(கு-ரை.) பணி என்றது ஆபரணமென்றும், பாம் பென்று பொருள்படும். இது சர்ப்ப சாதியின் தன்மையைக் கூறியதனால் சாதித்தன்மை.

௪-வது. **தொழிற்றன்மை** வருமாறு:—

தொழிற்றன்மை - தொழிலிலுள்ள பலவிதமான தன்மை உள்ளவாறே அலங்கரித்துக் கூறுவது.

நேரிசை வெண்பா

"சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தூதித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந் தும்—வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு" என்பது.

(இ-ள்.) பாசம் நீங்கிய முநிவரையும் விட்டு நீங்காத பரஞ்சோதி யின் வாசனையையுடைய பசுமையாகிய கொன்றைமாலையைப் பிரியாத வண்டு சூழ்ந்து பண்ணை முரன்று சேர்ச்சென்று மணத்தைச் செறிந்து மீதே பறந்து வீழ்ந்து மதுவையுண்டு தாதைக் கோதா நிற்கும் (எ-று.)

ஆசிரியப்பா

"மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
என்பிண வொழியப் போகி நோன்காழ்
இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மண்டி
விடுநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்புல் லடக்கிய வெண்பல் லெயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழன் முற்றி னிலவுரற் பெய்து" என்பது மது.

இஃது இலக்கியத்திற் சிறுபான்மை; இலக்கணத்துள்ளோ பயின்று வருமெனக் கொள்க. (௪)

(கு-ரை.) இது வண்டின் றொழிலைக் கூறியதாகலின், தொழிற் றன்மை. சூழ்ந்து முரலுதல் முதலியன வண்டினுக்கண் இயல் பாகநிகழுந் தன்மைகள்.

## ௨. உவமை யணி

௯௫. பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை.

(இ-ள்.) பண்பு, தொழில், பயன் என்பன காரணமாக ஒன்றா கியும், பலவாகியும் வரும் பொருளொடு பொருளினைப் புணர்த்து

ஒப்புமை புலப்படப் பாடுவது உவமை யென்னு மலங்காரமாம் (எ-று.)

ஒப்புமை பலவும் பொருளோடு பொருள் புணர்த்தலாவது— ஒரு பொருளோடு ஒரு பொருளும், ஒரு பொருளோடு பல பொருளும், பலபொருளோடு பலபொருளும், பல பொருளோடு ஒரு பொருளும் இயையப் புணர்த்தல்.

(த-ரை.) புணர்த்துச் சொல்லப்படும் அவ்விரு பொருள்களுள்ளே, ஒப்புமை பெறுதற்குக் காரணமாய் நிற்கும் பொருள் **உபமானம்** எனவும், அதனால் உவமிக்கப்படும்பொருள் **உபமேயம்** எனவும் சொல்லப்படும்.

௧-வது, **பண்புவமை** வருமாறு :—

"பவளத் தன்ன மேனி" எனவும்,

"வேய் புரை பணைத்தோள்" எனவும்,

"தெம்முனை யிடத்திற் சேய்கொல்
அம்மா வரிவை யயர்சென்ற நாடே" எனவும் வரும்.

௨-வது **தொழிலுவமை** வருமாறு :—

ஆசிரியப்பா

"அரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
றிருமால் வளவன்" எனவும்,

"களிற்றிரை தெரீஇப் பார்வ லொதுக்கின்
ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல" எனவும் வரும்.

௩-வது, **பயனுவமை** வருமாறு :—

ஆசிரியப்பா

"மாரி யன்ன வண்கைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே" எனவும்,

"செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை"
எனவும் வரும்.

அஃதேல்,

''வேய்புரை பணைத்தோள்''

என்பது, வடிவுவமை எனவும்,

''தெம்முனை யிடத்தராச் சேய்கொல்''

என்பது, எல்லையுவமை எனவுஞ் சொல்லுபவா லெனின்,

சூத்திரம்

''வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்
றன்ன பிறவு மதன்குண நுதலி
இன்ன திதுவென வரூஉ மியற்கை
என்ன கிளவியும் பண்பின் றொகையே''

என்புழி வடிவும் பண்பெனக் கூறினார் ஆசிரியர் தொல்காப்பியனார். சேய்மை பணிமை யென்பனவும், அவ்வாறாகலாற் பண்பெனப் படும்.

இனி, ஒருபொருளோ டொருபொருள்:—

''செவ்வா யன்ன மேனி'' எனவும்,

ஒருபொருளோடு பலபொருள் :—

''அவ்வாய், இலக்குநிறை பன்னா விளக்குவாய் வையெயிறு'' எனவும்,

பலபொருளோடு பலபொருள் :—

''களிறெறி சுறவினந் தந்த வாளோர் மொய்ப்ப
மாஇயோ ரறியாது மைத்தூறப் பட்டன்றே'' எனவும்,

பலபொருளோ டொருபொருள் :—

''பெரும்பெயர்க் கரிகாலன் முன்னிலைச் செல்லாப்
பீடின் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடை! நீ யெமக்கே'' எனவும் வரும்.

அஃதேல் உவமையும் பொருளும் ஒத்தபண்பு மாயவை யாவை யெனின், 'பவளம் போலுஞ் செய்வாய்' என்புழிப் பவளம் உவமை யெனவும், உவமான மெனவும் படும். வாய் பொருளெனவும், உவமேய மெனவும் படும். செம்மை இரண்டிற்கும் பொதுவாகிய குண

மெனப்படும். போலு மென்பது உவமை யுருபிடைச்சொல். இஃது பண்புகாரணமாக வந்த உவமை யெனப்படும். இதனை உவமை யென்ற தென்னையெனின், 'பவளவாய்' என்பதனைத் தொகை யுவமை யென்றும், 'பவளச் செவ்வாய்' என்பதனை விரியுவமை யென்றுங் கூறியவாகலின்; அல்லதூஉம், 'பவளம்போலச் செய்ய வாய்' என்பதனை முற்றுவமை யென்றுங் கூறுபவாகலின்.

ஈண்டு உவமை யலங்கார மென்பது அத் தொடர்ச்சொன் முழுவது மெனக் கொள்க.

மற்றும்: **பண்பியும், பண்பும், தொழிலும், பயனும்** எனக் கூறப் படுவன நான்கு. அவற்றுள்,

**பண்பி**யென்பன: காட்சிப்பொருளுங் கருத்துப் பொருளு மாகிய இயங்குதிணையு நிலைத்திணையு மாம்.

**பண்**பென்பன: அவற்றின் குணமாய்த் தோன்றித் தமக்கு வேறு குணமின்றி நிகழ்வன.

**தொழி**லென்பன: அவற்றின் புடைபெயர்ச்சியாய்க் காலம் புணர்ந்து நிற்பன.

**பய**னென்பன: அவை காரணமாகப் புலப்படுங் காரியம்.

பண்பியாகிய ஒரு பொருட்கு ஒரு பொருள் உவமையாங்கால், இரண்டற்கும் பொதுவாகியதோர் குணம் ஏதுவாகலானும், தொழில் ஏதுவாகலானும், பயன் ஏதுவாகலானும், ஒப்பித் துரைக்கப்படும். 'என்றிவற்றின்' என்பதனுள், பண்பு-தொழில்-பய னென்பன, ஒரோவொன்றேயன்றிப் பலவுங் காரணமாக வரும். அவை:—

"கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும்
கான நாடன்" என்பது: தொழிலும், பண்பும்.

"காந்த, ளணிமலர் நறுந்தா தூதும் தும்பி
கையாடு வட்டிற் றோன்றும்"
என்பது: பண்பும், தொழிலும்.

அல்லதூஉம், அவ்விலேசானே பண்பு தொழில் பயனென் பனவே யன்றிச் சொற்பொதுமை காரணமாகவும், பிறகாரண

மாகவும் வரும் உவமையலங்கார மென்பது. அவை முன்ன ருரைக்கப்படும்.

'ஒப்புமை தோன்ற' என்றதனால், அவ்வுவமை கேட்போருளங் கொண்டு விளங்கத் தோன்றுவதே யாகல்வேண்டும்; யாதானு மொரு முகத்தாற் கூறற்க வென்பது. (ரு)

**உவமை வகை**

௩௨. அதுவே,
விரியே தொகையே யிதர விதரம்
உரைபெறு சமுச்சய முண்மை மறுபொருள்
புகழ்த னிந்தை நியம மநியமம்
ஐயந் தெரிதரு தேற்ற மின்சொல்
எய்திய விபரீத மியம்புதல் வேட்கை
பலபொருள் விகார மோக மபூதம்
பலவயிற் போலி யொருவயிற் போலி
கூடா வுவமை பொதுநீங் குவமை
மாலை யென்னும் பாலதாகும்.

(இ-ள்.) அச்சொல்லப்பட்ட வுவமையலங்காரம்: விரியுவமையும், தொகையுவமையும், இதரவிதரவுவமையும், சமுச்சயவுவமையும், உண்மையுவமையும், மறுபொருளுவமையும், புகழுவமையும், நிந்தையுவமையும், நியமவுவமையும், அநியமவுவமையும், ஐயவுவமையும், தெரிதருதேற்றவுவமையும், இன்சொலுவமையும், விபரீதவுவமையும், இயம்புதல்வேட்கை யுவமையும், பலபொருளுவமையும், விகாரவுவமையும், மோகவுவமையும், அபூதவுவமையும், பலவயிற்போலி யுவமையும், ஒருவயிற்போலி யுவமையும், கூடாவுவமையும், பொதுநீங்குவமையும், மாலையுவமையும் என்னும் இருபத்துநான்கு பாகுபாடுடையதாம். (ப. - ரை.)

இவை யெல்லாஞ் சொல்லின் முடிபு மிலக்கணத்த வாகலாற் பெரும்பான்மையும் தம்பொருளோ டிலக்கணம் புலப்படுத்தும்; அல்லவை உரையினுங் கொள்க.

அவற்றுள், க-வது-**விரியுவமை** யென்பது, பண்பு முதலியன விரிந்து நிற்பது.

## நேரிசை வெண்பா

௰ - று. "பால்போலு மின்சொற் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போற் பிறழுந் திருநெடுங்கண்—மேலாம்
பல்போற் றொடைகளைப் பனுவலுடன் கொல்லி
அடல்போலும் வாழ்வு நமர்" மகிழ்வு.

(இ-ள்.) பாலைப்போன் றினிதாகிய சொல்லினையும், பவளத்தைப்போன்று சிவந்து விளங்கிய வாயினையும், சேலையொத்துப் பிறழுதலால் விளங்கிய அழகினை யுடைத்தாகிய நெடிய கண்ணினையு முடைய அவள் வாழுமிடம், இன்னும் முழங்கும், காலமழைமின் றிச் சாமரேசாலே பழுப்பட்டுப் பாக்கு நெறியே ஒழுகிய மழை போன்று கொங்கு நலம் விளங்கிய கையை யுடையனுகிய சோழனுடைய கொல்லிமலைப் பக்கம்போலும் (எ - று.)

௨-வது **நேரிசையுவமை** யென்பது பண்பு முதலியன தொகு திற்பது.

## நேரிசை வெண்பா

௰௧ - று. "தாமரைபோன் முகத்துத் தண்டரளம் போன்முறுவல்
காமரு மேய்ப்புரைதோட் காரிகையீர்!—தேமருவும்
பூங்குழலின் பாரப் பொறைசுமந்து நேர்ந்தநோ
பாடுற்று நின்றது பரிசு" மெய்ப்பொருள்.

(இ-ள்.) தாமரையைப்போன்ற ஒளியையுடைய முகத்தினையும் குளிர்ந்த முத்தைப்போன்ற நகையினையும், அழகு மருவிய வேய் போன்ற தோளினையு முடைய மாதரீர்! உம்முடைய பக்கத்திலே பலாமகின்ற தென்றலின் தன்மை உம்முடைய தேன் பொருந்திய பூவினையுடைத்தாகிய குழலின்கண் ணுண்டாகிய நறுநாற்றப் பாரத்தைத் தாங்கிக்கொண்டு வருகின்ற வருத்தத்தாலோ மெல்லிய வருகை யுடைத்தானது? சொல்லுவீராக (எ - று.)

௩-வது **இதரவிதர வுவமை** யென்பது, பொரு ளொருகா லுவமையாயும், உவமை பொருளாயும் பொருளாயும் ஒரு தொடர்ச்சிக் கண்ணே வருவது.

(த - ரை.) பொருள் - உபமேயம்.

### நேரிசை வெண்பா

வ - று. “ களிக்குங் கயல்போலு நுங்கணுங் கண்போல்
களிக்குங் கயலுங் கனிவாய்த் — தளிர்க்கொடியீர் !
தாமரைபோன் மலரு நும்முக நும்முகம்போல்
தாமரையுஞ் செவ்வி தரும் ” என்பது.

(இ - ள்.) கொவ்வைக்கனிபோன்ற வாயினையுடைத்தாகிய தளிரோடு கூடிய கொடிபோன்ற மடவீர்! செருக்கினையுடைத்தாகிய கயல்போன்ற தன்மையையுடைத்தாயிருந்தன நும்முடைய நாட்டங்களானவை. இந்தத் தன்மைத்தாகிய நும்முடைய நாட்டங்களிற் குவமையாகின்றன, கயற்குலமானவை. இதன்றியே, உம்முடைய முகமண்டலமானது தாமரைபோன் மலராநின்றது; அத்தன்மைத்தாகிய தாமரை உம்முடைய முகமண்டலம் போலச் செவ்வியினையுடைத்தாநின்றது (எ-று.)

### நேரிசை வெண்பா

“ தளிபெற்று வைகிய தண்சுனை நீலம்
அளிபெற்றார் கண்போ லலரும் — அளிபெற்ற
நல்லார் திருமுகத் தாற்ற களிபெற்ற
கல்லாரம் போன்மலருங் கண் ” என்பது.

(இ - ள்.) மழையை யேற்றுக்கோடலிற் றட்பத்தையுடைத்தாகிய சுனையின்கண்ணிருக்கின்ற நீலப்பூவானது தலைவரா னலம் பாராட்டப்பெற்ற மடவார் கண்ணேபோல மலராநின்றது; அந்தன்மைத்தாக அளிபெற்ற மடவாருடைய அழகிய முகமண்டலத்து மிகக் குளிர்ச்சியை யுடைத்தாகிய கண்களும் நீலம்போல மலரா நின்றன (எ - று.)

௬-வது - **சமுச்சய வுவமை** யென்பது, அதனை யொப்பதிதனையன்றி யிதனு மொக்கு மென்பது.

### நேரிசை வெண்பா

வ - று. “ அளவே யடிவொப்ப தன்றியே பச்சை
இளவேய் நிறத்தானு மேய்க்கும் — துளவேய்
கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரம்
தொலைக்குமரி யேறுகைப்பா டோள் ” என்பது

(இ - ள்) துழாய் மாலையைச் சூடிய கலைமடந்தையாகிய கன்னி, போரிடத்துப் பகைவரை நடுக்கஞ் செய்யும் கருமையான நிறத்தையுடைய அசுரரின் ஆண்மையைக் கெடுக்கும் சிங்கப்போத்தை வாகனமாகவுடையாள் தோள்களைப் பசிய இளவேயானது அளவி னானும் வடிவினானு மொப்பதன்றிப் பசுமை நிறத்தானு மொக்கும். (எ - று.)

௫-வது - **உண்மை யுவமை** யென்பது, உவமையைக் கூறி மறுத்துப் பொருளினையே கூறி முடிப்பது.

### நேரிசை வெண்பா

உ - று. " தாமரை யன்று முக மேயீ தீங்கிவையும்
காமருவண் டல்ல கருநெடுங்கண் — தேமருவு
வல்லியி னல்ல ளிவளென் மனங்கவரும்
அல்லி மலர்க்கோதை யாள் " என்பது.

**(இ - ள்.)** இது தாமரை மலரன்று முகமே; இவையும் அழகு மருவிய வண்டல்ல நீண்ட கண்களே; தேன் மருவப்பட்ட கொடியல்லள் இவள் மடந்தையே. இத்தன்மையாகிய அவயவங்களையுடைய இவள் என்னுள்ளங் கவரும் அகவிதழ்களையுடைய பூவாற் செய்யப்பட்ட மாலையினை யுடையாள் (எ-று.)

இன் - சாரியை.

௬ - வது, **மறுபொரு ளுவமை** யென்பது, முன்னர் வைத்த பொருட்கு நிகராவதோர் பொருட் பின்னர் வைப்பது.

### நேரிசை வெண்பா

உ - று. " அன்னைபோ லெவ்வுயிருந் தாங்கு மனபாயா
நின்னையா ரொப்பார் நிலவேந்தர் — அன்னதே
வாரிபுடை சூழ்ந்த வையகத்திற் கில்லையால்
சூரியனே போலுஞ் சுடர் " என்பது.

**(இ - ள்.)** தாயினை யொப்பாக எவ்வகைப்பட்ட உயிர்களையும் தாங்கு மனபாயனே ! நிலத்திலுண்டாகிய வேந்தரில் உன்னை யொப்பாருமில்லை; அதுபோலக் கடல் சூழ்ந்த வையகத்திற்குச் சூரியனை யொக்குஞ் சுடரு மில்லை (எ - று.)

எ - வது, புகழுவமை யென்பது, உவமையைப் புகழ்ந் உவமிப்பது.

நேரிசை வெண்பா

ய - று. " இறையோன் சடைமுடிமே லெந்நாளுந் தங்கும்
பிறையேர் திருநுதலும் பெற்ற—தறைகடல்சூழ்
பூவலயந் தாங்கு மரவின் படம்புரையும்
பாவைநின் னல்குற் பரப்பு " என்

(இ - ள்.) ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட நிலப்பரப்ப தாங்குகின்ற சேடனுடைய படப்பரப்பை ஒக்கின்றது உனது குல்; அதுவேயன்றி, முக்கட்கடவுண் முடியினைப் பிரியாது ளுந் தங்கும் பிறையினுடைய அழகினை நின்னுடைய அழகிய லும் பெற்றது: ஆதலால், பாவாய்! நின் னுருவத்தன்மை யிருந்: யென் (எ - று.) ாக

அ - வது, நிந்தையுவமை யென்பது, உவமையைப் ப று.) உவமிப்பது. மக்

நேரிசை வெண்பா டத்

வ - று. " மறுப்பயின்ற வாண்மதியு ... த்குத் தோற்கும்
நிறத்தலரு நேரொக்கு மே... றப்புடைத்துத்
தில்லைப் பெருமா னருள்பே... ருமேனி
முல்லைப்பூங் கோதை முகம் " எ

(இ - ள்.) தில்லைக்கட் கூத்தாடுகின்ற பெரியோன் யொத்த அழகிய மேனியினையுடைய, முல்லைப்பூவாற் செய்ய கோதையினை யுடையாள் முகமானது மறுப் பிரியாத ஒ யுடைத்தாகிய மதியமும், அம் மதியத்திற்குக் கருகுகின்ற டைய மலரும் உவமிக்கப் பொருந்துமெனினுஞ் சிறப்புறுது; (எ - று.) றுதுந்

ஐ - வது, நியம வுவமை யென்பது, இன்னதற்கு இத்தை யுவமையா மெனத் தேற்றேகாரம் புணர்த்துத் துணிந்து யெம்? வது.

நேரிசை வெண்பா .வமை

வ - று. " தாதொன்று தாமரையே நின்முக மொப்பதுமற் வமை
றியாதொன்று மொவ்வா திளங்கொடியே!—மீ

சேலே பணியப் புலியுயர்த்த செம்பியர்கோன்
வேலே விழிக்கு நிகர்'' என்பது.

(இ - ள்.) இளங்கொடியை ஒப்பாய்! எல்லாருடைய [illegible] அடிக்கு மேலாகிய உயர்ந்த பாண்டியனுடைய சேற்கொடி தாழ [illegible] புலிக்கொடி யுயர்த்த சோழனுடைய [illegible] விழிக்கு [illegible] தாரகங்கள் பொருந்தியிருக்கப்பட்ட [illegible] மைமலரோ [illegible] ஒப்பது. [illegible] நல்லது உல[illegible] முகத்தினை [illegible] துண்டாகிய யாவும் ஒவ்வா [illegible]

எகாரம் - அசை.

௧௦ - வது, அதிசய உவமை யென்பது, [illegible] உவமையை [illegible] ந்கிப் பிறிது மிப்பெற்றியனவா மென்பது.

நேரிசை வெண்பா

உ. ''வெள்ளை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்
மெனாயல் கமழுங் குழன்மடவாய்!—முழு
மதுவார் கமலோதின் வாய்போல்வ து
அதுபோல்வ துண்டெனினு மாம்.''

(இ - ள்.) ஆரவா[illegible]ம் பரந்த திரைக[illegible] [illegible] முடைத்தாகிய [illegible]சூழ் நன்னாட்டி[illegible] [illegible] மனாவற் பூவார்[illegible] [illegible] செய்த மாலையானது [illegible]பட்ட குழலினை [illegible] மடவாய் [illegible] செவ்வியும் தேனும் [illegible]த முருக்கிலே [illegible] வாயை [illegible] பொட் [illegible] அ[illegible] [illegible]ல்வது உலகத்துண்டாயினும் [illegible]து; அதுவன்றி, அப் [illegible] வாயை யொக்கும் [illegible].)

௧௧—வது, ஐய உவமை யென்பது, உவமையையும் பொருளை [illegible]ற் றுரைப்பது.

நேரிசை வெண்பா

'' தாதளவி வண்டு நடுமாறுந் தாமரைகொல்
மாதர் விழியுலவு வாண்முகங்கொல்—யாதென்
றிருபாற் கவருற் றிடையூச லாடி
ஒருபாற் படாதென் னுளம்.''

(இ - ள்.) தாதைக்கலந்து வண்டுகள் சூழப்பட்ட தாமரை காதலைச் செய்யப்பட்ட விழியுலவுகின்ற ஒளியினையுடைய

முகமண்டலமோ என்னென்று என் மனமானது ஊசலைப்போலாடி இருதலைப்பட்டு ஒன்றன்கட் டுணிகின்றதில்லை (எ - று.)

கஉ-வது, **தெரிதருதேற்ற வுவமை** யென்பது, ஐயுற்றதனைத் தெரிந்து துணிவது.

## நேரிசை வெண்பா

வ - று. "தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியும்
காமர் மதியுங் கறைவிரவும்—ஆமிதனால்
பொன்னை மயக்கும் புனைசுணங்கி னார்முகமே
என்னை மயக்கு மிது."

(இ - ள்.) காலை மலருந் தாமரையும் குளிர்ந்த மதியினாலே அழகு கெடும்; அழகிய மதியும் களங்கத்தோடு கூடியிருக்கும்; ஆதலால், என்னை மயக்கஞ் செய்த இது, பொன்னை யொப்பாக அலங்கரிக்கப்பட்ட சுணங்கினை யுடையாளுடைய முகமே (எ-று.)

கங-வது **இன்சொ லுவமை** யென்பது, பொருளினு முவமைக் கோர் மிகுதி தோன்றக் கூறி யுவமித்து, இன்ன மிகுதியையுடைத் தேனும் ஒப்பதன்றிச் சிறந்ததன் றென்பது.

## நேரிசை வெண்பா

வ - று. "மான்விழி தாங்கு மடக்கொடியே! நின்வதனம்
மான்முழுதுந் தாங்கி வருமதியம்—ஆனாலும்
முற்றிழை நல்லாய்! முகமொப்ப தன்றியே
மற்றுயர்ச்சி யுண்டோ மதிக்கு."

(இ - ள்.) நிறைந்த அணிகளையுடைய நல்லாய்! நின்னுடைய முகமானது மானின்விழி யொன்றனையே தாங்காநின்றது; (ஆகாயத்தின்கண்) வருகின்ற மதியானது மானின் அவயவ முழுதுந் தாங்காநின்றது; இப்படி முழுவதுந் தாங்கினும் நின் முகத்தை யொப்பதன்றியே விசேடமுடைத்தாகவற்றோ அம்மதியம்? (எ - று.)

கச-வது, **விபரீத வுவமை** யென்பது, மேற்றொட்டு உவமை யாய் வருவதனைப் பொருளாக்கிப், பொருளாய் வருவதனை யுவமை யாக்கி யுரைப்பன.

### நேரிசை வெண்பா

உ - ம். "திருமுகம் போன்மலருஞ் செய்ய கமலம்
கருநெடுங்கண் போலுங் கயல்கள்—அரிவை
இயல்போலு மஞ்ஞை யிடைபோலும் கொம்பர்
மயல்போலும் யாம்போம் வழி."

(இ - ள்.) அரிவையுடைய திருமுகத்தை யொக்க மலரும் சிவந்த கமலம்; கறுத்து நெடிதாகிய கண்கள்போலும் கயல்கள்; சாயல்போலும் மயில்; மருங்குல்போலும் கொம்பு; ஆதலால், இவ்வழியில் யாம் போகின்ற போக்கு மயல்போலும் (எ-று.)

மயல் - ஆசை.

### ஆசிரியப்பா

"ஓவத் தன்ன வொண்டுறை மருங்கின்
கோவத் தன்ன நொங்குசேர் புறைதலின்
வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை" என்பதூஉம் அது.

௧௫-வது, **இயம்புதல்வேட்கை யுவமை** யென்பது, பொருளை இன்னது போலு மென்று சொல்ல வேட்கின்ற தென்னுள்ள மென்பது.

### நேரிசை வெண்பா

உ - று.

"நன்றுதீ தென்றுணரா தென்னுடைய நன்னெஞ்சம்
பொன்றுதைந்த பொற்சுணங்கிற் பூங்கொடியே!—மன்றல்
மடுத்ததைந்த தாமரைநின் வாண்முகத்திற் கொப்பென்
றெடுத்தியம்ப வேண்டுகின்ற தின்று."

(இ - ள்.) பொன்றுதைந்த போலு மழகிய சுணங்கினையும் பொலிவினையு முடைத்தாய்க் கொடியை யொப்பாய்! நன்று தீ தென்பதனை ஒன்றுந் தெளியாது நறுநாற்றத்தை யுடைத்தாய் மடுவிடத்து நின்று தயங்காநின்ற தாமரை நின்னொளியினை யுடைத்தாகிய முகத்திற் கொப்பாமென்று எடுத்துரைக்கவேண்டுகின்றது, இன்று என் னெஞ்சம் (எ - று.)

௧௬-வது, **பல்பொரு ளுவமை** யென்பது, ஒரு பொருட்குப் பல வுவமை காட்டுவது.

### நேரிசை வெண்பா

வ-று. "வேலுங் கருவிளையு மென்மானுங் காவியும்
சேலும் வடுவகிருஞ் செஞ்சரமும்—போலுமால்
தேமருவி யுண்டு சிறைவண் டறைகூந்தற்
காமருவு பூங்கோதை கண்."

(இ - ள்.) மதுவை விரும்பியுண்டு சிறைவண்டு முரல்கின்ற கூந்தலையும், அழகிய மாலையையு முடையாருடைய கண்களானவை வேலையும், கருவிளை மலரையும், மிருதுவாகிய நோக்கத்தையுடைய மானையும், காவிமலரையும், சேலையும், மாவடுவையும், செவ்விய சரத்தினையும் போலும் (எ-று.)

ஆல் - அசை.

௧௭-வது, **விகார வுவமை** யென்பது, ஒருவமையை விகாரப் படுத்தி யுவமிப்பது.

### நேரிசை வெண்பா

வ-று. "சீத மதியி னொளியுஞ் செழுங்கமலப்
போதின் புதுமலர்ச்சி யுங்கொண்டு—வேதாதன்
கைம்மலரா னன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்."

(இ - ள்.) செறிந்த மலர்களாற் பொலிவுபெற்ற கூந்தலினை யுடையாள் முகத்தினைப் பிரமன் குளிர்ந்த மதியினக லுண்டாகிய ஒளியினையும், செழித்த கமலப்போதி லுண்டாகிய புதிய மலர்ச்சியையுங் கொண்டு, தன் கைத்தாமரையினானன்றித் தன்னுள்ளக் கருத்தா னமைத்தான் (எ-று.)

### ஆசிரியப்பா

"முத்துக்கூர்த் தன்ன முளையிளங் கூரெயிற்று
மணிதொடுத் தன்ன வைம்பால் மறுத்துடைத்து
மதியம்வைத் தன்ன வாண்முகத் தொருத்தி"

எனவும் வரும்.

௧௮-வது, **மோக வுவமை** யென்பது, ஒரு பொருண்மே லெழுந்த வேட்கையால் வந்த உள்ள மயக்கந் தோன்ற உரைப்பது.

### நேரிசை வெண்பா

௨௰. "கயல்போலு மென்றுநின் கண்பழிப்பல் கண்ணின்
செயல்போற் பிறழுந் திறத்தாற்—கயல்புகழ்வல்
ஆரத்தா னேர்மருங்கு லந்தராள வாண்முறுவல்
ஈரத்தா லுள்வெதும்பும் யான்."

(இ - ள்.) முத்தினாற் செய்யப்பட்ட பூணால் வருந்தாநின்ற மருங்குலினையும், அழகிய முத்தினுடைய ஒளிபோன்ற முறுவலினையு முடையாய்! உன்னுடைய குறிப்பினால் மனமழியும் யான், கயல்போலு மென்று நின் கண்ணினைப் பழிப்பன்; நின் கண்போற் பிறழுந் திறப்பாட்டாற் கயலைப் புகழ்வன் (எ-று.)

(கு - ரை.) பிறழுதல் - விளங்குதல். ஆரம் - முத்துவடம். ஈரம் - குறிப்பு. இதனை மயக்கவுவமை யென வழங்குதலு முண்டு. இங்கு உவமை கூறுமிடத்து மதிமயக்கமுண்மை தோன்றக் கூறினமை காண்க.

௧௧-வது **அபூத வுவமை** யென்பது, முன்பு இல்லதனை யுவமை யாக்கி யுரைப்பது.

### நேரிசை வெண்பா

௨௰௧. "எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின்
வில்லேர் புருவத்து வேனெடுங்கண்—நல்லீர்!
முகம்போலு மென்ன முறுவலித்தார் வாழும்
அகம்போலு மெங்க ளகம்."

(இ - ள்.) வில்லினையொத்த புருவத்தினையும், வேல்போன்ற நெடிய கண்ணினையுமுடைய நல்லீர்! உம்முடைய முகத்தினை யொக்கும்; எங்குமுள்ள கமலப் பூக்களின் செவ்வியும் செறிந் தொன்றுமாயி னென்ன, முறுவலைச் செய்தார் மருவிவாழு மிடம் போலும் எங்க ளுள்ளம் (எ-று.)

அஃதேல், விகாரவுவமையோ டிதனிடை வேற்றுமை யென்னை யெனின், விகாரவுவமை, பிறரான் விகாரப்பட்டதாகக் கொண்டு அஃதொன்றற்கு உவமையாக்கி யுரைப்பது. இஃது அன்னதன் றென்க.

(கு - ரை.) இதனை இல்பொரு ளுவமை யென வழங்குதலு முண்டு.

உ0-வது, **பல்வயிற்போலியுவமை** யென்பது, ஒரு தொடர் மொழிக்கண் பல உவமை வந்தால் வந்த உவமைதோறும் உவமைச் சொற் றோன்றப் புணர்ப்பது.

நேரிசை வெண்பா

உ-று. "மலராவி போல்வாரான் மாதர் கமல
மலர்போலு மாதர் வதனம்—மலர்சூழ்
அளிக்குலங்கள் போலு மளக மதனுட்
களிக்குங் கயல்போலுங் கண்."

(இ - ள்.) கமல மலர்ந்த வாவிபோல்வார மாதர்; கமலமலர் போலும மாதர் வதனம்; மலர்சூழளிக்குலங்கள் போலும் அளகம்; அதனுள் களிக்காநின்ற கயல்போலுங் கண்கள் (எ-று.)

உ௧-வது, **ஒருவயிற்போலியுவமை** யென்பது, ஒரு தொடர் மொழிக்கண் பலவுவமை வந்தால், அவ் வந்த உவமைதோறும் உவமைச்சொற் புணராது ஒருவமைச்சொற் புணர்ப்பது.

(கு - ரை.) ஒருவயிற்போலி - ஓரிடத்திற் போல் என்னும் உவமவுருபுடையது.

நேரிசை வெண்பா

உ-று. "கிழற்கோப மல்க நிறைமலர்ப்பூங் காயா
சுழற்கலவ மேல்விரித்த தோகை—யழற்குலவு
தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார்
யாம்பிரிந்தோர்க் கென்னோ மினி."

(இ - ள்.) காயாமலரி னிழலின்கண் இந்திரகோபஞ் செறிய. அப் பொலிவினையுடைய காயாவின் நிறைந்த மலரின் சூழலிலே தன் கலாபத்தை விரித்த மயிலானது அழலின்கட் டோன்றிய நறும் புகையினை யூட்டும் செறிந்த குழலினையுடைய மடவாரைப் போலுங் கார்காலம்; யாம் பிரிந்துபோகப்பட்டார்க்கு என்னோ மினி? (எ-று.)

உ௨-வது, **கூடாவுவமை** யென்பது, ஒரு பொருட்குக் கூடாத வதனைக் கூடுவதாகக் கொண்டு அதனை யொன்றற்கு உவமையாக்கி யுரைப்பது.

### நேரிசை வெண்பா

வ-று. "சந்தனத்திற் செந்தழலுந் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலுமா லும்மாற்றம்—பைந்தொடியீர் !
வாவிக் கமல மதிமுகங்கண் டேகலுழா
ஆவிக் கிவையோ வரண்."

(இ - ள்) பைந்தொடியீர் ! சந்தனத்தின்கண் செந்தழலும், குளிர்ந்த மதியினிடத்து வெவ்விய விடமும் பிறந்தாற்போலும், நம்முடைய வார்த்தைகள் ; ஆகில், குளிர்ந்த வாவியிடத்துக் கமலமலரும் மதியமும்போலும் முகங்கண்டேகலுழா ஆவிக் கிவையோ காவல் (எ-று.)

௨௩.-வது, **பொதுநீங்குவமை** யென்பது, உவமையைக் கூறி மற்றதைப் பொருடன்னையே யுவமையாக உரைப்பது.

### நேரிசை வெண்பா

வ - று. "திருமருவு தண்மதிக்குஞ் செந்தா மரையின்
விரைமலர்க்கு மேலாந் தகையால்—கருநெடுங்கண்
மானே ! யிருளளகஞ் சூழ்ந்தநின் வாண்முகந்
தானே யுவமை தனக்கு."

(இ - ள்.) கரிய நெடிய கண்ணினையுடைய மானே ! குளிர்ந்த மதிக்கும், திரு மருவப்பட்ட சிவந்த தாமரையினது நறு நாற்றத்தை யுடைய மலருக்கும் மேலாகிய தன்மையை யுடைத்தாகலான், இருளாகிய அளகஞ் சூழ்ந்த நின் ஒளியினையுடைய முகந் தானே தனக்கு உவமையாம் (எ-று.)

திரு-கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம்.

(கு - ரை.) இப்பொருளுக்கு ஒப்பு வேறொன்றுமில்லை யென்பது, இதன் கருத்து.

௨௪-வது, **மாலையுவமை** யென்பது, ஒரு பொருட்குப் பல வுவமை வந்தால் அவை யொன்றினொன் றிடைவிடாது தொடர்ச்சி யுடையவாகிப் புணர்ந்துங் கடைக்கண் பொருள்கூட்டி முடிப்பது.

### நேரிசை வெண்பா

வ-று. "மலயத்து மாதவனே போன்று மவன்பால்
அலைகடலே போன்று மதனுட்—குலவும்

நிலவலய மேபோன்று நேரியன்பா னிற்கும்
சிலைகெழுதோள் வேந்தர் திரு.”

(இ - ள்.) பொதிய மலையிடத்து அகத்தியனைப் போன்றும், அவனுண்ணப்பட்ட அலையையுடைய கடல்போன்றும், அதனுளுண்டாகிய நிலவட்டம் போன்றும், சோழனுடைய இடத்தே பேராதே நிற்கும், விற்பயின்ற தோள்களையுடைய வேந்தர் செல்வம் (எ-று.) (௬)

௧௧. அற்புதஞ் சிலேடை யதிசயம் விரோதம்
ஒப்புமைக் கூட்டந் தற்குறிப் பேற்றம்
விலக்கே யேதுவென வேண்டவும் படுமே

என்பது, இவ்வுவமை யலங்காரம் பிற வலங்காரங்களோடுங் கூடி வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அற்புதமும், சிலேடையும், அதிசயமும், விரோதமும், ஒப்புமைக் கூட்டமும், தற்குறிப் பேற்றமும், விலக்கும், ஏதுவும் எனச் சொல்லப்பட்ட எட்டலங்காரங்களோடு கூடியும் வரும் அவ்வுவமை யலங்காரம் (எ-று.)

அவற்றுள், க-வது, **அற்புதவுவமை.**

## நேரிசை வெண்பா

வ-று. “குழையருகு தாழக் குனிபுருவந் தாங்கி
உழைய ருயிர்பருகி நீண்ட—விழியுடைத்தாய்
வண்டே றிருளளகஞ் சூழ வருமதியொன்
றுண்டே லிவண் முகத்திற் கொப்பு.”

(இ - ள்.) குழை தாழ்ந்த முகத்தினை யுடைத்தாய், வளைந்த புருவத்தினை யுடைத்தாய்ப், பக்கத்தினின்றுங் கண்டாருடைய உயிரை யுண்டு வளர்ந்த கண்களை யுடைத்தாய்ச், சுரும்புகளாலே மேவப்பட்டிருக்குங் குழலைச் சூழ்க்கொண்டு வருவதொரு மதிய முண்டாயின் இவளுடைய முகத்திற் கொப்பாம் (எ-று.)

உ-வது, **சிலேடை யுவமை.** அஃது இருவகைப்படும்; **செம்மொழிச் சிலேடை யுவமையும், பிரிமொழிச்சிலேடை யுவமையும்** என.

அவற்றுள், **(1) செம்மொழிச் சிலேடை யுவமை.**

### நேரிசை வெண்பா

ை-று. "செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்பச்
சந்தத் தொடையோ டணிதழுவிச்—செந்தமிழ்நூல்
கற்றார் புனையுங் கவிபோன் மனங்கவரும்
முற்றா முலையாண் முகம்."

(இ - ள்.) திருவென்றும், திங்களென்றும், பூவென்றுஞ் சொல்லப்பட்ட இவற்றது பெயரை முதற்கண்ணே யுடைத்தா யோசையோடு கூடிச், சொற்கோவையோடு அலங்காரம் புணர்ந்து, பயின்றா ருள்ளங் கவருந் தன்மையுடைத்தாய்ச், செந்தமிழ் நூல் கற்றாராலே சொல்லப்பட்ட கவிபோலத், திருவினுருவத்தையுந் திங்களினுருவத்தையும் பூவையும் உச்சிமீதி லுடைத்தாய், நிறத் தோடுங் கூடியிருந்துள்ள பூமாலையோடும் அழகு தழுவிப் பயின்றா ருள்ளங்களைக் கவரு முகம்.

இனிக் கவிமேற் செல்லுங்கால்: சந்தம்-ஓசை, தொடை-சொற்கோவை, அணி அலங்காரம் எனவும்,

முகமேற் செல்லுங்கால்: சந்தம்-நிறம், தொடை - மாலை, அணி-அழகு எனவும் வரும்.

#### (2) பிரிமொழிச் சிலேடை யுவமை.

### நேரிசை வெண்பா

வ-று. "களிதடத்த வல்லியின் கண்ணெகிழ ஞாலந்
தனவி னிறைகடாஞ் சிந்திக்—களிறிகலும்
கந்த மலையா நிலவுங் கவடசைய
வந்த மலையா நிலம்."

(இ - ள்.) செறிவினையும், பெருமையினையுமுடைய [காலிலே செறிந்திருக்கின்ற) விலங்கின் கண் அறத் தரைமீது நிறைந்த கடாம் பொழியத தறியைச் சீறிப் புரைசைக் கயிறு அசைய வரும் யானை போன்று, தென்றல் பெரிய பொய்கைப் பூவல்லித தேன் சோர உலகத்தார் நிறைகளை யழித்து விரை கமழ நெருங்கிய பணைகளை யசைத்து வருகின்றது [எ-று.)

**யானையின்மேற் செல்லுங்கால்:** களி - செறிவு. தடம் - பெருமை. வல்லி - விலங்கு. கண் — மூட்டுவாய். நெகிழ்தல் - கழலுதல். ஞாலம்-பூமி, நிறைகடாம்-பெரியமதம். சிந்தி-பொழிய.

கந்து - தறி. மலையா-சீறா. நிலவுதல் - பொருந்துதல். கவடு - புரைசைக் கயிறு. அசைய - ஆட. வந்த - வரும் எனவும்,

**தென்றன்மேற் செல்லுங்கால்:** நளி - பெருமை. நடம் - பொய்கை. அல்லி-பூ. கள்-தேன். நெகிழ்தல்-சோர்தல். ஞாலம்-உலகம். நிறை - ஒழுக்கம். சிந்தி - அழித்து. கந்தம் - விரை. அலைதல் - நாறுதல். நிலவுதல் - பொருந்தல். கவடு - மரக்கொம்பு. அசைதல் - அலைதல் எனவும் வரும்.

இதனைச் **சந்தான உவமை** யென்பாரு முளர். **சந்தான** மென்பது:-இரண்டு பொருளுக்கு உபகாரமாயிருக்குஞ் சொற்களாலே பாடப்படுவது. இதனை இவ்வகை வேறுபடுத்துக் காட்டிய தென்னையெனின், மேல், பண்பு முதலியனவே யன்றிச் சொற் பொதுமை காரணமாகவும் உவமை புணர்க்கப்படு மென்றற்கு; அது காட்டற் கென்க.

௩-வது, **அதிசய உவமை.**

### நேரிசை வெண்பா

வ-று. ''நின்னுழையே நின்முகங் கண்டு நெடுந்தடந்
தன்னுழையே தாமரைக் காண்குவம்—என்னும்
இதுவொன்றே யன்றி வேற்றுமை யுண்டோ
மதுவொன்று செந்தா மரைக்கு.''

**(இ-ள்.)** நல்லாய்; நின்னிடத்திலே நின் முகத்தினைக் காணா நின்றேம்; பெரிதாகிய பொய்கையிலே தாமரையையும் காணா நின்றேம் என்கிற இத்தன்மையேயன்றி வேறுபாடு கண்டிலேம், மதுவினையுடைத்தாகிய தாமரைக்கும் நின்முகத்தினுக்கும் (எ-று.)

**(கு-ரை.)** உழை - இடம். இங்கே உபமேயமாகிய முகத்திற்கு ''நின்னுழையே'' எனவும், உபமானமாகிய தாமரைக்குத் ''தடந்தன்னுழையே'' எனவும் இரண்டுக்கும் வேறு வேறு கண்டோர் கூறி, இதனாலன்றி வேறு பேதமில்லை என்பதனால் அதிசயந் தோன்றியவாறு அறிக.

### நேரிசை வெண்பா

வ-று. ''பாலினிடை நீல மணிநிறஞ்சேர் பான்மைபோல்
ஞாலம் பரந்த நகைநிலவு—மாலிருளாம்

வைம்மருவு மூவிலைவேல் வன்கட் டமருகக்கைச்
செம்மல் கருமாமை சேர்ந்து.'' என்பதும் அது.

(இ - ள்.) நீலமணியானது பாலைச் சேர்ந்து தன்னொளியைப் பாலுக்குக் கொடுத்தாற்போலக், கூர்மை மருவிய மூன்று தலையையுடைய சூலத்தையும், வலிய கண்ணையுடைய தமருகத்தையுமுடைய கையனாகிய பரமசிவன் (மிடற்றி லுண்டாகிய) கறுத்த நிறத்தைச் சேர்ந்து உலகத்திற் பரந்த வெண்மையையுடைய நிலவும் பெரிய இருணிறம் பெற்றது (எ-று.)

௪-வது, விரோதவுவமை.

நேரிசை வெண்பா

௩௨. ''செம்மை மரைமலருந் திங்களு நும்முகமும்
தம்மிற் பகைவிளைக்குந் தன்மையவே—எம்முடைய
வைப்பாகுஞ் சென்னி வளம்புகார் போலினியீர்!
ஒப்பாகு மென்பா ருளார்.''

(இ - ள்.) நமது தனமாகிய சோழனது வளவிய புகார் போன்ற இனிமையையுடையீர்! சிவந்த தாமரை மலரும் மதியமும் நுமது முகமும் தம்முள்ளே பகைபெருக்குந் தன்மையாயிருக்க, இவற்றை யுவமைக்குப் பொருந்து மென்பாரு முளர்; இதற்குக் காரணஞ் சொல்லுவீராமின் (எ-று.)

(கு - ரை.) வைப்பு - தனம் (நிதி). சென்னி - சோழன்.

௫-வது, ஒப்புமைக்கூட்டவுவமை.

நேரிசை வெண்பா

௩௩. ''விண்ணின்மேற் காவல்புரிந்துறங்கான் விண்ணவர்கோன்
மண்ணின்மே லன்னை வயவேந்தே!—தண்ணளியில்
சேரா வவுணர் குலங்களையுந் தேவர்கோன்
நேரார்மே லத்தகையை நீ.''

(இ - ள்.) விண்ணின்மே லுண்டாகிய உலகத்தைக் காக்குந் தொழிலின் மிக்கு உறங்காதொழிவான், தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரன்; மண்ணின்மே லுண்டாகிய உயிர்களைக் காக்கவேண்டி, வலியையுடைய வேந்தனே! நீயும் உறங்காவாயினாய்; உள்ளங் குளிர்ந்து பிறரைக் காக்குந் தன்மையிற் சேராத அசுரர் குலங்களைக் களையாநிற்கும், இந்திரன்; சத்துருக்களிடத்திலே நீயும் அத் தன்மையை (எ - று.)

சா-வது **தற்குறிப்பேற்றவுவமை**

### நேரிசை வெண்பா

ஒ - று. " உண்ணீர்மை தாங்கி யுயர்ந்த நெறியொழுகி
வெண்ணீர்மை நீங்கி விளங்குமால் — தண்ணீர்த்
தரம்போலு மென்னக் கருங்கடம்பை மாறன்
கரம்போற் கொடைபொழிவான் கார்."

**(இ - ள்.)** (முதுவேனிற் காலத்தில்) நடாத்தி உண்டாகிய குளிர்ந்த நீர்போல (ச் சேர்ந்தோர் யாவருக்கும் வருத்தம் நீங்கக்) கொடுக்க வல்ல கடம்பை யென்னும் பதியி லுண்டாகிய மாற னென்னும் இயற்பெயரை யுடையவனது கரம்போலக் கொடுப்பா னிளைந்து, மேகமானதும், உள்ளே நீரையுடைத்தா யுயர்ந்த வானெறியே நடந்து வெளுத்த தன்மையை நீங்கி விளங்காநின்றது (எ - று.)

இவன் கையும், பிறர்க்கு நீர் பெய்து கொடுக்குந் தொழிலானே நீர புலராது உலகத்தார் கைகளுக்கு மேலாகப் பயின்று சிவந்த தன்மையை யுடைத்தாய் விளங்குதல் கண்டுகொள்க. தண்ணீர்த் தரம்போலு மென்னத் தருவ கர மெனவுங் கூட்டுக. இத் தொழிற் கைக்கேற்ற மென்க.

எ-வது, **விலக்குவமை.**

### நேரிசை வெண்பா

வ - று. " குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா
உழைபொருதென் னுள்ளங் கவரா — மழைபோல்
தருநெடுங்கைச் சென்னி தமிழ்நா டனையார்
கருநெடுங்கண் போலுங் கயல்."

**(இ - ள்)** மழையைப்போலக் கொடுக்கவல்ல பெரிய கையினை யுடைய சென்னியுடைய தமிழ் நாட்டை யொப்பாருடைய கரிய நெடிய கண்போலும், கயலும், சங்கொடு பொருது வளர்ந்து நீர்க் குமிழி மேலே மறிந்து தன்னிடத்திலே பொருதும், என்னுள்ளத் தைக் கவரமாட்டா என்ற விதனானே, கண்ணும் காதிலுண்டாகிய குழையோடு சேர்ந்து வளர்ந்து குமிழுக்குமீதே தாவுவதுபோன்று மானின் விழியோடு பகைத்து என்னுள்ளத்தைக் கவருமென நின்ற வாறு காண்க (எ-று.)

**கயல்மேற் செல்லுங்கால்:**—குமிழ் - நீர்க்குமிழி. குழை - சங்கு. உழை - பக்கம். கவர்தல் - கொள்ளுதல் எனவும், **கண்ணின்மேற் செல்லுங்கால்:**—குழை-மகரக்குழை. நீடல்-வார்தல். குமிழ் - மூக்கு. மறிதல் - தாவுதல். உழை - மான். பொருதல்-பகைத்தல். சென்னி - சோழன். தமிழ் நாடு - சோணாடு எனவும் வரும்.

௭—வது, **அற்புதவுவமை.**

நேரிசை வெண்பா

௰௬. "வாளரவின் செம்மணியும் வன்னியிளம் பாசிலையும்
நாளிளைய திங்க ணமைநிலவும்—நீளொளியால்
தேனுலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்
வானுலவு விற்போல் வரும்."

(இ - ள்.) ஒளியினையுடைய அரவின் சூட்டி னுண்டாகிய மணியானது சிவந்த வொளியை மிகுத்தலானும், வன்னியாகிய மரத்தின் இளைய இலை தன்னுடைய பசுமையை மிகுத்தலானும், குழவித் திங்களானது தன்னுடைய வெண்மையை மிகுத்தலானும், தேனுலவப்பட்ட பொலிவினையுடைய கொன்றையினது பூ தன்கண் ணுண்டாகிய பொற்கென்ற நிறத்தை மிகுத்தலானும், தேவர்கட்குத் தலைவனாகிய முக்கட் கடவுளுடைய சிவந்த சடையானது வான்மீ துண்டாகிய வில்லுப்போலத் தோன்றுகின்றது (எ - று.)

அஃதேல், உவமையை விரித்த சூத்திரங்களெல்லாம் ஒன்றாக்கியுரையாது இரண்டாக்கியுரைத்த தென்னையெனின், மேலைச் சூத்திரத்திற் சொல்லப்பட்டன, "சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்" என்னுந் தந்திர வுத்தியான். இவை "எதிரது போற்றல்" என்னுந் தந்திரவுத்தியாகலான் இரண்டாக வைத்தா ரென்பது.

(கு - ரை.) முந்தின சூத்திரத்திற் சொல்லப்பட்ட விரியுவமை முதலியன தத்தம் பெயரிலேயே தமது இலக்கணம் தோன்ற நின்றதனால், 'சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல் என்னும் தந்திரவுத்தியின" என்றும், இச்சூத்திரத்தில் வந்த அற்புதவுவமை முதலியன எதிரது போற்றல் என்னும் உத்தியால் மேல் வருகிற அவ்வவ்வணியின் இலக்கணத்தை நோக்கிக் கூறப்பட்டன வாதலால், 'எதிரது போற்றலென்னுந் தந்திரவுத்தியின' என்றுங் கூறினர். (எ)

௩௪. மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும்
பான்மாறு படுதலும் பாகுபா டுடைய

என்பது, அவ்வுவமைக் கெய்தியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**(இ-ள்.)** உவமேய அடைக்கு உவமான அடை மிகப் புணர்தலும், உவமேய அடைக்கு உவமான அடை குறையப் புணர்தலும், இழிந்த உவமையோடு உயர்ந்தபொரு ளுவமையாகலும், உயர்ந்த உவமையோடு இழிந்தபொரு ளுவமையாகலும், ஆண்பாற்குப் பெண்பா லுவமையாகலும், பெண்பாற்கு ஆண்பா லுவமையாகலும், ஒருமைப்பாற்குப் பன்மைப்பா லுவமையாகலும், பன்மைப்பாற்கு ஒருமைப்பா லுவமையாதலு மாகிய வேறுபா டுடைய (எ - று.)

வேறுபா டென்பது, புன்புலவர் புணர்க்குங்கால் நன்புலவரால் வேறுபடுத்துச் சிறப்பின்மையிற் குற்றமெனக் கூறப்படுவதூஉம், அல்லதூஉம் நன்புலவராற் சிறப்புடையவென்று கொள்ளப் புணர்க்கப்படுவதூஉமா மென்க.

அவற்றுட் சில வருமாறு:—

### நேரிசை வெண்பா

"நீலப் புருவங் குனிய விழிமதர்ப்ப
மாலைக் குழல்சூழ்ந்த நின்வதனம்—போலும்
கயல்பாய வாசங் கவருங் களிவண்
டயல்பாய வம்போ ருகம்."

**(இ-ள்.)** நீல நிறத்தையுடைய புருவமானது முரியக், கண் மதர்ப்பப், பூமாலையையுடைய குழலாற் சூழப்பட்ட நின்னுடைய முகம்போன்றது, கயல்மிளிர, மதுவை யுண்ணப்பட்ட களித்த சுரும்பு பக்கத்திலேயே பரவ, மலர்ந்த தாமரை (எ-று.)

இதனுள் உவமையாகிய முகத்திற் புருவ முரிவிற் கொப்ப தொன்று, பொருளாகிய தாமரைக்கண் புணராமையின், உவமேய அடைக்கு உவமான அடை மிக்கு வழுவாயிற்று.

**(கு-ரை.)** இங்கு, 'நீலப்புருவங் குனிய' என்றது பயனின்றி நின்றதனால், வழு வெனப்பட்டது.

### நேரிசை வெண்பா

"நாட்டந் தடுமாறச் செவ்வாய் நலந்திகழத்
தீட்டரிய பாவை திருமுகம்—நாட்டுமால்
கெண்டைமீ தாட நறுஞ்சே யிதழ்கிளர
வண்டுசூழ் செந்தா மரை."

**(இ-ள்.)** மீதே கண் தடுமாறி யலாவச், சிவந்த வாய் அழகு தெரிப்ப, எழுதற்கரிய உருவையுடைய பாவைபோன்றாள் திருமுகத்தை யொப்பாநின்றது, மீதே கெண்டை யலாவ, நறு நாற்றத்தை யுடைத்தாய்ச் சிவந்த இதழ் விளங்க, வண்டாற் சூழப்பட்ட சிவந்த தாமரை (எ-று.)

தீட்டரிய பாவை - கொல்லியம்பாவை. இதனுள், பொருளாகிய தாமரைக்கண் வண்டொழுக்கிற் கேற்ப வோருவமை உவமையாகிய முகத்துக்கண் தோற்றப் புணர்த்தலில்லாமையின், உவமேய அடைக்கு உவமான அடை குறைந்து குற்றமாயிற்று.

**(கு-ரை.)** 'வண்டுசூழ்' என்றது பயனின்றி நின்றதனால், வழுவாயிற்று.

### நேரிசை வெண்பா

"மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர்
மின்மினியும் வெஞ்சுடரோன் போல்விளங்கும்—அன்னப்
பெடைபோலுஞ் சந்திரன் பைந்தடங்கள் போலும்
மிடைமாசொன் றில்லா விசும்பு."

**(இ-ள்.)** வேந்தரிடை நாயிடத்துண்டாகிய நற்செய்கையைச் செய்தலால், வாளினையுடைய வலியோர் நாயை யொப்பர்; மின்மினியும், வெய்ய சுடரோனைப்போல விளங்கும்; அன்னப் பெடையை யொக்கும், மதியம்; பசிய தடங்கள்போலும், செறிந்திருக்கப்பட்ட மாசில்லாத ஆகாயம் (எ-று.)

இதனுள், 'மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர்' என்புழி, இறப்ப இழிந்து இன்னாதாகப் புணர்க்கப்பட்டது உவமை.

'மின்மினியும் வெஞ்சுடரோன் போல்விளங்கும்' என்புழி மின்மினிக்கு நிகராக்க லாகாத வெஞ்சுடரை யுவமிக்க, உவமை வழுவாயிற்று.

'அன்னப்பெடை போலுஞ் சந்திரன்' என்புழி, ஆண்பாற்குப் பெண்பா லுவமையாய்க் குற்றமாயிற்று.

'பைந்தடங்கள் போலும், மிடைமாசொன் றில்லா விசும்பு' என்புழி, ஒருமைப் பாலுக்குப் பன்மைப்பாலை உவமை காட்ட வழுவாயிற்று; பிறவுமன்ன.

இனி, வழுவின்றி வருஞ் செய்யுளை வந்துழிக் காண்க. மிகுதல், குறைதல், தாழ்தல், உயர்தல், பான்மாறுபடுதல் முதலியன குற்றமேனும், குணம் மிக்குழிக் கொள்க. (அ)

௩௫. போல மானப் புரையப் பொருவ
நேரக் கடுப்ப நிகர நிகர்ப்ப
ஏய்ப்ப மலைய வியைய
ஒப்ப வெள்ள வுறழ வேற்ப
அன்ன வனைய வமர வாங்க
என்ன விகல விழைய வெதிரத்
துணைதக காண்டாங் கிருதகை வீழ
இணைசிவண் கெழுற்றுச் செத்தொடு பிறவும்
நவைதீர் பான்மை யுவமைச் சொல்லே.

என்பது, இடைநிற்கும் உவமைச் சொற்களை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) போல முதல் செத்து ஈறாகச் சொல்லப்பட்ட முப்பதைந்தும், இவைபோல்வன பிறவும், குற்றமற்ற பாகுபாடுடைய உவமைச் சொல்லாம் (எ-று.)

பாகுபாடுடைய என்றதனால், போல வென்பது 'புலிபோலும் மறவன்' எனப் பெயரெச்சமாயும், 'புலிபோலவந்தான்' என வினையெச்சமாயும் வரும்; பிறவுமன்ன.

பிறவு மென்றதனால், நாட, நட, நடுங்க, நந்த, கள்ள, கருத, காட்ட, மிளிர, எய்ப்ப, மருள என்பன முதலியனவுங் கொள்க.

இவற்றுள் தொக்கும் விரிந்தும் தொகாதே விரிந்தும் நிற்பன வெல்லாங் கண்டுகொள்க.

## ௬. உருவகவணி

௩௬. உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டினஃ துருவக மாகும்.

(இ-ள்.) உவமையாம் பொருளையும், உவமிக்கப்படும் பொருளோடும், வேறுபா டொழிவித்து ஒன்றென்பதோர் குள்ளுணர்வு தோன்ற வொற்றுமை கொளுத்தின் அஃது உருவகமென்னும் அலங்கார மாம்.

(கு-ரை.) உபமானம் உபமேயம் என்னும் இரண்டிற்கும் பேத மின்மை தோன்றச் சொல்லப்படுவது உருவகவணி என உணர்க. இதன் இலக்கணம்:—உபமேயத்தில் உபமானத்தை ஏற்றிக் கூறுதல். ஒற்றுமை கொளுத்துதல்-பேதமில்லாததாகச் சொல்லல்.

௩௭. தொகையே விரியே தொகைவிரி யென்றா
இயைபே யியைபிலி வியனிலை யென்றாச்
சிறப்பே விருபகஞ் சமாதான மென்றா
உருவக மேக மநேகாங்க மென்றா
முற்றே யவயவ மவயவி யென்றாச்
சொற்றவை யைந்து மற்றதன் விரியே.

என்பது, அவ்வுருவகமென்னும் அலங்காரத்தை விரித்துணர்த் துதல் நுதலிற்று.

(இ-ள்.) அச் சொல்லப்பட்ட உருவக அலங்காரம், தொகை யுருவகமும், விரியுருவகமும், தொகைவிரியுருவகமும், இயைபுருவக மும், இயைபிலுருவகமும், வியனிலையுருவகமும், சிறப்புருவகமும், விருபகவுருவகமும், சமாதானவுருவகமும், உருவகவுருவகமும், ஏகாங்கவுருவகமும், அநேகாங்கவுருவகமும், முற்றுருவகமும், அவயவவுருவகமும், அவயவியுருவகமும் எனச் சொல்லப்பட்ட பதினைந்து பாகுபா டுடையதாகும்.

அவற்றிற்கு உருவகமென்னுஞ் சொல்லும், ஏகமென்பதனோடு அங்கமென்னுஞ் சொல்லுங் கூட்டி யுரைக்க. இவையெல்லாஞ் சொல்லின் முடியு மிலக்கணத்தன.

அவற்றுள், ௧-வது, **தொகையுருவகம்** என்பது, ஆகிய வென் னும் மாட்டேற்றுச்சொற் றொகுத்துக் கூறுவது.

### நேரிசை வெண்பா

௬ - ரு. " அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டும்
கொங்கை முகிழுங் குழற்காரும்—தாங்கியதோர்

> மாதர்க் கொடியுளதா னண்பா! அதற்கெழுந்த
> காதற் குளதோ கரை."

(இ-ள்.) அழகிய கையாகிய மலரினையும், அடியாகிய தளிரினையும், கண்ணாகிய வண்டினையும், கொங்கையாகிய அரும்பினையும், குழலாகிய மேகத்தினையு முடைத்தாய்ப் பிறர்க்குக் காதல் செய்ய வற்றா யிருப்பதொரு கொடியுளது, (நான் நேருநற் கண்டது;) நண்பனே! அக் கொடிமேலெழுந்த காதலுக் கெல்லையுளதுண்டோவெனில், இல்லையாயிருந்தது (எ-று.)

உ-வது, **விரியுருவகம்** என்பது, அச்சொல் விரிந்து நிற்பது.

(கு-ரை.) அச்சொல் - உருவக உருபு. அவை - ஆகிய, ஆக என்பன.

### நேரிசை வெண்பா

உ-று. "கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக
அங்கை மலரா வடிதளிரா—திங்கள்
அளிநின்ற மூர லணங்கா மெனக்கு
வெளிநின்ற வேனிற் றிரு."

(இ-ள்.) கொங்கை அரும்பாக, நுண்ணிடை வஞ்சிக்கொம்பாக, அழகிய கையே மலராக, அடி தளிராக, நிலவுபோல வெள்ளிய வொளியினையுடைத்தாய், என்மேல் வைத்த தண்ணளியுடைத்தாகிய நகையினையுடைத்தாய் (நேருநல்) தோன்றிய அணங்குபோன் றிருந்தாள், (இப்பொழுது) எனக்கு இளவேனிற் காலத்தைக்கொண்டு வெளிப்பட்ட திருவை யொப்பாள் (எ-று.)

இவை யிரண்டும் எல்லாவற்றிற்கும் பொது விலக்கணம். இதனுட் டொகையை முற்கூறியது, உம்மை விரித்த சூத்திரம் நோக்கி "முந்து மொழிந்த தலைதடு மாற்றம்" என்னுந் தந்திர வுத்தியான்.

௩-வது, **தொகைவிரியுருவகம்** என்பது, அச்சொற் றொக்கும் விரிந்தும் நிற்பது.

### நேரிசை வெண்பா

வ-று. "வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று."

**(இ-ள்.)** உலகமே தகளியாகவும், நெடிய கடலே நெய்யாகவும், வெம்மையையுடைய பகலவனே விளக்காகவும், சிவந்த நிறத்தை யுடைத்தாகிய சக்கரத்தையுடையா னடிக்கே சேர்த்தினேன்; சொல்லினாற் றொடுத்த மாலையை, என்னுடைய துக்கமாகிய கடல் வறப்பதாக (எ-று.)

௪-வது, **இணைப்புருவகம்** என்பது, பலபொருளை உருவகஞ் செய்யுங்கால் தம்முள் இயைபுடையவாக வைத்து உருவகஞ் செய்வது.

**(கு-ரை.)** இயைபு - சம்பந்தம்.

### நேரிசை வெண்பா

வ-று. "செவ்வாய்த் தளிரு நகைமுகிழுங் கண்மலரும்
மைவா ரளக மதுகரமும்—செவ்வி
உடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார்
துடைத்தாரே யன்றோ துயர்."

**(இ-ள்.)** சிவந்த வாயாகிய தளிரினையும், நகையாகிய முல்லை அரும்பினையும், கண்ணாகிய மலரினையும், கரிய நீண்ட அளகமாகிய வண்டினையும், செவ்வியினையுமுடைய கண்டாரால் விரும்புந் தன்மையுடைத்தாகிய முகத்தை யென் னுள்ளத்திலே வைத்தார்; இதனாலே என்னுடைய உள்ளத்தி லுண்டாகிய துயரத்தை நீக்கு வாரன்றோ, சொல்லுவீராக (எ-று.)

இதனுள் - தளிரும், முகிழும், மலரும், மதுகரமும், தம்மு ளியைபுடைமையின், அப்பெயர்த்தாயிற்று.

௫-வது, **இயைபிலுருவகம்** என்பது, பல பொருளுந் தம்மு ளியையாமை வைத்து உருவகஞ் செய்வது.

### நேரிசை வெண்பா

வ - று. "தேனங் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத் — தானம்
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு."

(இ-ள்.) மதுவைத் தாலப்பட்ட கொன்றைமலர் பொன்னாக வும், சிவந்த சடை விளக்கந் தன்மை யுடைத்தாகிய பவளக்கொடி யாகவும், மதம் மழையாகவும், மருப்பு மதியாகவும் தோன்றா நின்றது; துளையை யுடைத்தாகிய பெரிய கையையுடைய யானை யாகிய மலை (எ-று.)

'தடக்கைப்பொருப்பு' என்றது விசேடணம்.

௬-வது, **வியநிலையுருவகம்** என்பது, ஒன்ற னங்கம் பலவற்றி னுள்ளுஞ் சிலவற்றை உருவகஞ் செய்தும், சிலவற்றை உருவகஞ் செய்யாதும் உரைத்து அங்கியை உருவகஞ் செய்து உரைப் பது.

(கு - ரை.) அங்கி - அங்கத்தையுடையது (அவயவி.)

### நேரிசை வெண்பா

வ - று. "செய்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர்விளங்க
மைவா ணெடுங்கண் மதர்த்துலவச் — செவ்வி
நறவலருஞ் சோலைவாய் நின்றதே நண்பா!
குறவர் மடமகளாங் கொம்பு."

(இ-ள்.) சிவந்தவாய் எயிற்றை யரும்பச், செங்கரங்கள் தளிரை விளக்க, வருத்தஞ் செய்யும் வாளாகிய கண்கள் சிவந்த அரியோ டுலாவப், புதிதாகிய தேனையுடைத்தா யலருஞ் சோலையின் கண்ணே தோன்றிற்று; நண்பனே! குறவர்க்கு மடப்பத்துடனே கூடிய மகளாந்தன்மை யுடைத்தா யிருப்பதொரு வஞ்சிக்கொம்பு (எ-று.)

௭-வது, **சிறப்புருவகம்** என்பது, ஒரு பொருளை யெடுத்து, அதற்குச் சிறந்த அடைகளை உருவகஞ் செய்து அவற்றானே யுருவக மாக்கி யுரைப்பது.

## நேரிசை வெண்பா

வ - று. " விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ கானாச்
சுரநதிபா யச்சி ரொருந்த—அரிதிருத்தாள்
கூம்பாக வெப்பொருளுங் கொண்ட பெருநாவாய்
ஆம்பொலிவிற் றாயினதா லின்று."

(இ-ள்) பரந்த கடல் சூழ்ந்த உலகமானது, நான்முகக்கோன் மீகாமனாகவும், தேவநதியை பாயாகவும், அப்பாயை யுச்சியிலே யுடைத்தாகிய திருமால் மேனோங்கி யெடுத்த சீர்பாதம் கூம்பாக வும், பலவகைப்பட்ட பொருள்களையு முடைத்தாய்ப் பெரிதாகிய அழகோடு கூடிய நாவாயானது (எ-று.)

இதனுள், நான்முகன் மீகாமனாகவும், சுரநதி பாயாகவும், அரி திருத்தாள் கூம்பாகவும் உருவகஞ்செய்யப் புவி நாவாயாயினமை யின், அப்பெயர்த்தாயிற்று.

இங்கே மேதினியின் விசேடணங்களாகிய நான்முகன் முதலி யன உருவகிக்கப்பட்டமை காரணமாக அம்மேதினி நாவாயாக உருவகிக்கப்பட்டது.

அ-வது, **விரூபகவுருவகம்** என்பது, ஒரு பொருட்கும் கூடாத தன்மை பலவுங் கூட்டி உருவகஞ்செய்வது.

## நேரிசை வெண்பா

வ - று. " தண்மதிக்குத் தோலாது தாழ்தடத்து வைகாது
முண்மருவுந் தாண்மேன் முகிழாது—நண்ணி
இருபொழுதுஞ் செவ்வி யியல்பாய் மலரும்
அரிவை வதனம் புயம்."

(இ-ள்.) தட்பத்தினையுடைய மதியின் றெழிற்குக் கெடாது, ஆழ்ந்த கயத்திற் றங்காது, முள்ளை யுடைத்தாகிய தாளின்மீது மொட்டியாது, காலையு மாலையுஞ் சேர்ந்து செவ்வியை யுடைத்தாய் மலர்ந்து நிற்கும்; என் காதலியுடைய முகமாகிய தாமரை (எ-று.)

(கு-ரை.) மொட்டியாது - முகிழாது.

கூ-வது, **சமாதானவுருவகம்** என்பது, ஒரு பொருளை நன்றாக உருவகஞ் செய்து, அதனையே நீங்கு தருவதாகக் கூறி, அது நீங்கும் அதனானே வருகின்றதன் றென்பதற்குப் பிறிதோர் காரணங் கூறுவது.

### நேரிசை வெண்பா

வ - று.

"கைகாந்தள் வாய்குமுதங் கண்ணெய்தல் காரிகையீர்!
மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்கம்—இவ்வனைத்தும்
வன்மைசேர்ந் தாவி வருத்துவது மாதவமொன்
றின்மையே யன்றோ வெமக்கு."

(இ - ள்.) அழகினையுடையீர்! உம்முடைய காந்தள் மலராகிய கையும், குமுதமாகிய வாயும், நெய்தல் மலராகிய கண்ணும், நீண்ட தளிராகிய மெய்யும், மென்மையுடைய கோங்கரும்பாகிய கொங்கையு மென்று சொல்லப்பட்டன நம்முடைய அவயவமாகி லும் அவை யனைத்துந் தன்மை திரிந்து வன்கண்மையைச் சேர்ந்து எம்முடைய உயிரை வருத்தஞ் செய்யும்; இது, முற்காலத்தில் யாஞ் செய்த தீவினைப் பயன் இக் காலத்து எமக்குப் பயந்ததல வன்றோ? நும்மேற் றவறுண்டோ? (எ - று.)

கொங்கைக்கு அடையாகிய மென்மையைத் தீவகமாக்கிக் காந்தளுள்ளிட்ட உறுப்புகளனைத்தினுங் கொள்க.

கo-வது, **உருவகவுருவகம்** என்பது, ஒன்றனை யுருவகஞ்செய்து அதனைப் பெயர்த்தும் பிறிதொன்றாக உருவகஞ் செய்வது.

(கு - ரை.) அதனை - உருவகஞ் செய்ததனை.

### நேரிசை வெண்பா

வ-ரு. "கன்னிதன் கொங்கைக் குவடாங் கடாக்களிற்றைப்
பொன்னெடுந்தோட் குன்றே புனைகந்தா—மன்னவநின்
ஆகத் தடஞ்சே வகமாக யானணைப்பல்
சோகித் தருளேற் றுவண்டு."

(இ - ள்.) தலைவனே! நீ காதலித்த கன்னியுடைய முலை யென்னும் மலையாகிய மதக்களிற்றை, நின் பொற்கலனணிந்த பெரிய தோளாகிய குன்றமே கந்தாகவும், மார்பாகிய பரந்த

இடமே கூடமாகவும், யான் சேர்த்துவன்; நீ அழகழிந்து வருந்தா தொழிக (எ - று.)

இதனுள், கொங்கையைக் குவடாக உருவகஞ் செய்து அதனையே மீண்டும் களிறாக உருவகஞ் செய்தவாறு காண்க.

கக-வது, **ஏகாங்கவுருவகம்** என்பது, ஒரு பொருளினது அங்கம் பலவற்றுள்ளும் ஒரங்கமே யுருவகஞ் செய்து ஒழிந்த அங்கங்களை வாளாவே கூறுவது.

### நேரிசை வெண்பா

உ-று. "காதலனைத் தாவென்ன றுலவுங் கருநெடுங்கண்
ஏதிலனேல் யாதென்னு மின்மொழித்தேன்—மாதரா
மருண்ட மனமகிழ்ச்சி வாண்முகத்து வந்த
இரண்டினுக் கென்செய்கோ யான்."

(இ - ள்.) நெஞ்சமே! நமக்கொரு கணவனைத் தருவாயாக வென்பது போன்றிருந்தது, காதளவு முலவுகின்ற கரிய நெடிய கண்கள்; அயலானாற் பயனில்லை யென்பது போன்றிருந்தது, இனிய தேனாகிய மொழி; மாதருடைய, கண்டார்க்கு மயக்கத்தோடு கூடிய உள்ளக் களிப்பைக் கொடுக்கின்ற ஒளியையுடைய முகத்திலே தோற்றிய இவ்விரண்டினுக்கும் யான் என்ன செய்யக் கடவேன்? (எ - று.)

கஉ-வது, **அநேகாங்க வுருவகம்** என்பது, ஒன்றனங்கம் பலவற்றையும் உருவகஞ்செய் துரைப்பது.

### நேரிசை வெண்பா

உ-று. "கைத்தளிராற் கொங்கை முகிழ்தாங்கிக் கண்ணென்னு
மைத்தடஞ்சேன் மைந்தர் மனங்கலங்க—வைத்ததோர்
மின்னுளதான் மேக மிசையுளதான் மற்றதுவும்
என்னுளதா நண்பா வினி."

(இ - ள்.) கையாகிய தளிரினாலே முலையாகிய அரும்பினைத் தாங்குகின்ற தன்மையையுடைத்தாகவும், கண்ணெனப்பட்ட கரிதாய்க் குளிர்ந்த சேல்களாலே ஆடவருள்ளங்களை யழிக்குந் தன்மையையுடைத்தாகவும், கறுத்த மேகத்தைச் சுமந்துகொண்டு

நிற்பதாகவும், ஒரு மின் தோன்றிப் பூமியைக் கண்டேன் நின்றதேல், அது நண்பனே! என் உள்ளத்ததுவேயாம்.

௧௩-வது, **முற்றுருவகம்** என்பது, அவயவ அவயவிகளை யேற்ற இடத்தோடும், பிறவற்றோடும் முற்ற உருவகஞ் செய்துரைப்பது.

### நேரிசை வெண்பா

௨௬. "விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல்—பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரையென் னுள்ளத் தடத்து."

(இ - ள்.) தேன் மருவிய கூந்தலையுடைய தெரிவை திருமுகமே தாமரை; விழிகளே களிக்கப்படாநின்ற வண்டு; மெல்லியவாகிய நகையே தாது; வார்த்தையே நறைநாற்ற முலாவுகின்ற மது; என்னுள்ளமாகிய தடந்தான் (எ - று.)

௧௪-வது, **அவயவவுருவகம்** என்பது, அவயவத்தை உருவகஞ் செய்து, அவயவியை வாளாவே கூறுவது.

### நேரிசை வெண்பா

௨௭. "புருவச் சிலைகுனியக் கண்ணம்பெ னுள்ளத்
துருவத் தொடுத்தார் ஒருவர்—அருவி
பொருநாகச் சிலம்பிற் புல்லல்குற் றேர்மேல்
மருங்குற் கொடிநுடங்க வந்து."

(இ - ள்.) அலங்கரிக்கப்பட்ட அல்குலாகிய தேரின்மேலேறி, மருங்குற்கொடி யசைய வந்து, அருவி யலைக்கப்பட்ட மலைச் சிலம்பிலே தோற்றித் தம்முடைய புருவமாகிய வில்லை வளைத்துக, கண்ணாகிய அம்பினாலே என்னுள்ளத்திலே உருவிப்போக ஒருவர் எய்தார்; இதற்குச் செயக்கடவதென்? சொல்லுவாயாக (எ - று.)

௧௫-வது, **அவயவியுருவகம்** என்பது, அவயவியை உருவகஞ் செய்து, அவயவங்களை வாளாவே கூறுவது.

(கு - ரை.) இதனை, உறுப்பியுருவக மெனவும் வழங்குதலும் உண்டு. இங்கு உறுப்பியாகிய முகத்தை மாத்திரமே தாமரையாக உருவகஞ்செய்து புருவம், மொழி, விழி, முறுவல் என்னும்

அதன் உறுப்புக்களை உருவகஞ் செய்யாதொழிந்தமை காண்க. அவயவி-அவயவத்தினையுடையது.

### நேரிசை வெண்பா

௪௫. "வார்புருவங் கூத்தாட வாய்மழலை சோர்ந்தசைய
வேரரும்பச் சேந்து விழிமதர்ப்ப—மூரல்
அளிக்குந் தெரிவை வதனம் புயத்தால்
களிக்குந் தவமுடையேன் கண்."

(இ - ள்.) நல்லாருடைய புருவமசைய, வாயின் வார்த்தை யானது உருத்தெரியாது அழிந்து தளரக், குறுவியர்ப்பை யுடைத் தாக விழியானது சிவந்து மதர்ப்ப, முறுவலிப்பதொரு தாமரை யாகிய முகத்தினாலே களிக்குந் தன்மையைப் பெற்றது; முற் காலத்தில் யான் செய்த நல்வினைப்பயத்தினாலே, எனது கண்; (எ - று.)

**௩௮. உவமை யேது வேற்றுமை விலக்கே
அவநுதி சிலேடையென் றவற்றொடும் வருமே.**

என்பது, அவ்வுருவக அலங்காரம் பிற அலங்காரங்களோடுங் கூடி வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமையும், ஏதுவும், வேற்றுமையும், விலக்கும், அவநுதியும், சிலேடையும் என்னும் ஆறு அலங்காரங்களோடு கூடி யும் வரும், அவ்வுருவக அலங்காரம்.

அவற்றுள்,

க-வது, **உவமையுருவகம்.**

### நேரிசை வெண்பா

௪௬. "மதுமகிழ்ந்த மாதர் வதன மதியம்
உதய மதியமே யொக்கும்—மதிதளர்வேன்
வெம்மை தணிய மதராக மேமிகுக்கும்
செம்மை யொளியாற் றிகழ்ந்து."

(இ - ள்.) மதுவுண்டு களித்த மடவாருடைய முகமதியம், உதயஞ் செய்த நிறைந்த மதியம் போன்றது; அறிவழியுந் தன்மையை யுடையேனுடைய ஆற்றலழியக் களிப்போடு கூடிய

காதலைப் பெரிதும் புலப்படுத்தித் தோற்றுகின்ற சிவந்த நிறத்தாலே யழகு பெற்று (எ - று.)

(கு - ரை.) மதம் - களிப்பு. ராகம் - காதல். திகழ்தல் - அழகு பெறுதல்.

இதனுள், முக்கியப் பொருளொடு குணப் பொருளையும் ஒப்புமை காட்டினமையான், உவமையுருவக மாயிற்று.

(கு - ரை.) முக்கியப் பொருள் - உபமேயம். குணப் பொருள் - உபமானம்.

௨-வது, ஏதுவுருவகம்.

(கு - ரை.) காரணத்தோடு கூடிவரும் உருவகம்.

## நேரிசை வெண்பா

ல-று. "மாற்றத்தாற் கிள்ளை நடையான் மடவன்னம்
தோற்றத்தாற் றண்ணென் சுடர்விளக்கம்—போற்றும்
இயலான் மயிலெம்மை யின்னீர்மை யாக்கும்
மயலார் மதர்நெடுங்கண் மான்."

(இ - ள்.) நண்பனே! எம்மை இப்படித் தாழ்வு பண்ணிய கெடிதாய்ச் சிவந்து காதலைக் கொடுக்கின்ற கண்களை யுடைமையான் மான்போன்றாள்; மொழியினாற் கிள்ளையாயினாள்; நடையினால் மடவிய அன்னமாயினாள்; மேனியாற் குளிர்ந்த உருவத்தை யுடைய விளக்கி னிறமாயினாள்; யாவரும் பாவப்படுஞ் சாயலால் மயிலாயினாள் (எ - று.)

(கு - ரை.) விளக்கம் - நிறம். இங்கே கிள்ளை முதலிய உருவகம் மாற்றம் முதலிய ஏதுவோடு கூடி வந்தவாறு அறிக.

௩-வது, வேற்றுமையுருவகம்.

## நேரிசை வெண்பா

ல - று. "வையம் புரக்குமான் மன்னவனின் கைக்காரும்
பொய்யின்றி வானிற் பொழிகாரும்—கையாம்
இருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கும்
ஒருகார் பருவ முடைத்து."

(இ - ள்.) அரசனே! உன்னுடைய கையாகிய மேகமும், காலம் பிறழாது ஆகாயத்தின்கண்ணின்று பொழிகின்ற மேகமும், உலகத்தைப் புரக்குந் தன்மையி னொக்குமாயினும், கை யென்கிற இரண்டு மேகங்களுக்கும் பருவமில்லை; இடியையுடைய ஒரு மேகத்திற்குப் பருவ முண்டு.

இதனுள், குணப்பொருளோடும், முக்கியப் பொருளையும், 'வையம் புரக்கும்' என் றொப்புமை காட்டிக், 'கைக்காருக்குப் பருவமில்லை; ஏனைக் கார் பருவ முடைத்து' என வேற்றுமை செய்தமையின் அப் பெயர்த்தாயிற்று. ஆல் - அசை.

௪-வது, **விலக்குருவகம்.**

(கு - ரை.) விலக்கு - ஆக்ஷேபம், தடை.

### நேரிசை வெண்பா

௯ - று. "வல்லி வதன மதிக்கு மதித்தன்மை
இல்லை யளதே விரயன்றி—எல்லை
விளக்கு மொளிவளர்த்து வெம்மையா லெம்மைத்
துளக்கு மியல்புளதோ சொல்."

(இ - ள்.) வல்லியாயினுள் முகமாகிய மதியத்திற்கு, மதியினுடைய தன்மை யில்லை போலும்; உண்டாயின், பகற்பொழுது தன்னிடத்திலே யொளியை மிகுத்து நம்மை வருத்தி அறிவை யழிக்கும் இயல்புடைத்தாமோ? நண்பனே! சொல்லுவாயாக (எ - று.)

௫-வது, **அவநுதியுருவகம்.**

(கு - ரை.) அவநுதி - உண்மையை மறுத்தல்.

### நேரிசை வெண்பா

௰ - று. "பொங்களக மல்ல புயலே யிதுயிவையும்
கொங்கை யிணையல்ல கோங்கரும்பே—மங்கைநின்
மையரிக்க ணல்ல மதர்வண் டிவையிவையும்
கையல்ல காந்தண் மலர்."

(இ - ள்.) மங்கைப் பருவத்தை யுடையவளே! உன்னுடைய மிக்க கருமையையுடைய கூந்தலன்று, இது, மேகப்பரப்பே;

இரண்டாகிய தனங்களல்ல, இவை, கோங்கரும்புகளே; மையணிந்த செவ்வரி பரந்த கண்களல்ல, இவை, செருக்கினையுடைய வண்டுகளே; கையல்ல, இவை, காந்தண்மலர்களே (எ - று.)

இதனுள், உண்மைப்பொருளை மறுத்து ஒப்புமைப் பொருளை யுடன்பட்டமையான், அப் பெயர்த்தாயிற்று.

(கு - ரை.) உபமேயத்தை மறுத்து உபமானத்தால் உருவகித்து இங்ஙனம் உபமேயத்தைச் சிறப்பித்தல் இதன் இலக்கணம். இங்கே உண்மையாகிய அவயவம் முதலியன மறுக்கப்பட்டவாறும், புயல் முதலியனவாக உருவகஞ் செய்யப்பட்டவாறும் அறிக.

சா-வது, **சிலேடையுருவகம்:**

### நேரிசை வெண்பா

எ - டு.

"உண்ணெகிழ்ந்த செவ்வித்தாய்ப் பொற்றோட் டொளியளாத்
தண்ணளிசூழ்ந் தின்பந் தரமலர்ந்து—கண்ணெகிழ்ந்து
காதல் கரையிறப்ப வாவி கடவாது
மாதர் வதனாம் புயம்."

(இ-ள்.) உள்ளே விரியாநின்ற பொலிவினை யுடைத்தாய் அழகிய இதழ்களினொளி மிகக் குளிர்ந்திருக்கின்ற வண்டுகளாற் சூழப்பட்டுக் கண்டார்க் கினிமை தோன்ற இதழ் விரிந்து மதுப் பொசிந்து கண்டார்க்கு ஆசைமிகுப்பப் பொய்கையிடத்து நீங்காது தோன்றிய தாமரை என்றும்; உள்ளக் கசிவான் மலர்ந்த பதுமையுடைத்தாய்ப், பொன்னணியன்ற தோடுகளின் ஒளி தழைப்பக் குளிர்ந்த விருப்பத்தை மேவிக், கண்டார்க்கு ஆசை யளிக்குந் தோற்றரவினை யுடைத்தாய்க் கண்ணினையு முடைத்தாய், ஆசைப்பாட் டெல்லை கடப்ப, உள்ளங் கடவாது இவளுடைய வதனமாகிய தாமரை என்றும் வந்தவாறு காண்க.

இது தாமரைக்கும், முகத்திற்குஞ் சிலேடை.

(கு-ரை.) இதனுள், தாமரை யொழுக்கத்தையும் முகவொழுக்கத்தையும் ஒரு சொற்றொடர்பால் சிலேடித்து, வதனாம்புயம் என்று உருவகஞ் செய்தவாறு கண்டுகொள்க.

## புறநடை

௩௬ உருவக முவமை யெனவிரு திறத்தவும்
நிரம்ப வுணர்த்தும் வரம்பு தமக் கின்மையிற்
கூறிய நெறியின் வேறுபட வருபவை
தேறினர் கோடல் தெள்ளியோர் கடனே.

என்பது, மேற்சொல்லிய உருவக உவமை யென்னும் இரண்டு திறத்த அலங்காரங்களுக்கும் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உருவகமும் உவமையு மென்னு மிரண்டுதிறத்த அலங்காரங்களும், ஒழிவின்றி யுணர்த்தும் வரையறை யுடையனவல்ல வாகலாற், சொல்லப்பட்ட நெறியின் வேறுபட வருபவை யறிந்து அவற்றின்பாற் சார்த்திக்கோட லறிவுடையோர் கடன் (எ - று.)

ஈண்டு உருவகம் முற்கூறியது அதிகார மிடையறாமல் எய்தற்கு. அவற்றுட் சில வுருவகம் வருமாறு.

க-வது, ஏதுவுருவகம்.

### குறள் வெண்பா

வ - று. "வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை."

(இ - ள்.) ஒருவன் வில்லை ஏராக உடைய (வீரராகிய) உழவரோடு பகைகொண்டானாயினும், நீதிநூற்களை ஏராக உடைய (சூழ்ச்சியின் வல்ல புலவராகிய) உழவரோடு பகை கொள்ளாமலிருக்கக்கடவன் (எ - று.)

சொல் கருவியாகு பெயராய் நீதிநூற்களை யுணர்த்தியது. வீரரோடு பகை கொண்டாற் கேடு உண்டாதல் உறுதி யன்று; வரினும் அவனொடேயாம். சூழ்ச்சியின் வல்ல புலவரோடு பகை கொண்டால் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்க்குந் தப்பாது கேடு வருதலின் அவர் பகை ஆகா தென்றார்.

போர்த்தொழிலில் வல்ல வீரர்களையும், சூழ்ச்சியின் வல்ல புலவர்களையும் 'உழவர்' என உருவகப்படுத்தினார். வீரர்களுடைய போர்த்தொழிலுக்கு வில்லும், புலவர்களுடைய சூழ்ந்தியற்றுதலாகிய தொழிலுக்கு நீதிநூலும் கருவியாகிய காரணமாக [ஏது

வாக)க் காட்டப்பட்டமையின் இஃது **ஏதுஉருவக**மாம் என்பது. (எண்டுக் குறித்த கருவி துணைக்கருவி.)

௨-வது, **இயைபுருவகம்.**

நேரிசை வெண்பா

௰ - று. "எரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறாக்
காருடைய பீலி கடிகாவா — நீர்வண்ணன்
அத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றோரான் கச்சிப் பொலிவு."

**(இ - ள்.)** அழகிய தேரையுடைய சோழனது நகரமாகிய கச்சியினது தோற்றமானது, இரண்டு பக்கங்களிலுமுள்ள இரண்டேரிகளும் இரண்டு சிறகுகளாகவும், நடுவினமைந்த மதில் வயிறாகவும், வாசனையையுடைய சோலை கருநிறத்தினையுடைய தோகையாகவும், கடல்போலுங் கருநிறத்தினையுடையராகிய திருமாலினது அத்தியூர் வாயாகவும் (அமைந்திருத்தலின்) அழகிய மயிலின் தோற்றத்தையே போன்றிருக்கின்றது (எ - று.)

எயில் - மதில். பீலி - தோகை. கடி - வாசனை. கா - சோலை. பொலிவு - தோற்றம்; அழகு எனினுமாம். இதில் சிறகு, வயிறு, தோகை, வாய் ஆக உருவகப்படுத்தப்பட்ட பொருள்கள் யாவும் ஒன்றோடொன்று இயைபு உடையனவாகையால் இஃது **இயைபுருவக**மாம் என்க.

௩-வது, **விலக்குருவகம்.**

நேரிசை வெண்பா

௰௧-று. "மலையிற் பயிலா மடமஞ்ஞை வாரி
அலையிற் பிறவா வமுதம் — விலையிட்
டளவாத நித்தில மாராத தேறல்
வளவாண் மதர்நெடுங்கண் மான்."

**(இ - ள்.)** வளவிய வாள்போன்ற அழகிய நீண்ட கண்களையுடைய மான்போன்ற பெண், மலையிற் சஞ்சரியாத இளமையாகிய மயிலும், கடலினது அலையிலே பிறவாத அமுதமும், விலை இவ்வளவெனக் குறித்துச் சொல்லமுடியாத முத்தும், உண்ணாத தேனும் ஆவள் (எ - று.)

மடமஞ்ஞை - இளமையாகிய மயில். வாரி - கடல். நித்திலம்- முத்து. தேறல் - தேன். மதர் - அழகு

இதில் ஒரு பெண்ணை மயில் முதலியனவாக உருவகப்படுத்துமிடத்து விசேடணமாகச் சேர்த்த மலையிற் பயிலாமை, அலையிற் பிறவாமை, விலையிட்டளவாமை, ஆராமை முதலிய அடைமொழிகள், இங்ஙன மலையிற் பயிலுதல் முதலியன இல்லாத இவளுக்கு மலையிற் பயிலுதன் முதலிய உடைய மயில் முதலியன உவமையாகா என்ன அவற்றை விலக்கலின், இது **விலக்குருவக**மாம் என்பது.

௪-வது, **சிறப்புருவகம்.**

**நேரிசை வெண்பா**

வ-று. ''மழலைவாய் நவ்வி மதர்நெடுங்கண் மஞ்ஞை
குழலின் பொறைமெலிந்த கொம்பர் — சுழல்கலவந்
தாங்கிய வன்னந் தடங்கொங்கை பாரமுந்தம்
தேங்கொள் கமலத் திரு.''

(இ - ள்.) தேனைக் கொண்ட செந்தாமரை மலரிலே வீற்றிருக்கின்ற திருமகளைப் போன்ற பெண், மழலைச் சொற்களைப் பேசும் வாயையுடைய மானும், அழகிய நீண்ட கண்களையுடைய மயிலும், கூந்தலின் பாரத்தைச் சுமந்திருத்தலால் மெலிவுற்ற கொம்பும், திரட்சியாகிய தோகையையுடைய அன்னமும், பெரிய கொங்கைகளையுடைய அமுதமும் ஆவள் (எ - று.)

நவ்வி - மான். மதர் - அழகு. குழல் - கூந்தல். பொறை- பாரம். கலவம் - தோகை. கமலத்திரு - செந்தாமரையில் வீற்றிருக்குந் திருமகள்.

இங்கு ஒரு பெண்ணை நவ்வி முதலியனவாக உருவகப்படுத்துமிடத்துக் கூறிய நவ்வி முதலியவற்றை மற்றை நவ்வி முதலியவற்றிற் கில்லாத மழலைவாய் முதலியவற்றைக் கொண்டு சிறப்பித்துக் கூறுதலின் இது **சிறப்புருவக**மாம் என்க.

௫-வது, **அற்புதவுருவகம்.**

**நேரிசை வெண்பா**

வ - று. ''மன்றற் குழலா ருயிர்மேன் மதன்கடவும்
தென்றற் கரிதடுக்குந் திண்கணையம் — மன்றலரைக்

சங்குற் கடலிற் கரையேற்று நீள்புணையாம்
பொங்குநீர் நாடன் புயம்."

(இ - ள்.) மேன்மேலும் பெருகி வரும் காவிரியாற்றையுடைய சோழநாட்டின் அரசனாகிய சோழனது தோள், வாசனையையுடைய கூந்தலையுடையவர்களாகிய பெண்களது உயிரின்மீது மன்மதன் செலுத்துகின்ற தென்றற் காற்றாகிய யானையைத் தடுக்கும் பாணமாம்; புணர்ச்சிக்குரிய (இளந்தன்மையினையுடைய) அம்மாதர்களை இரவாகிய கடலினின்று கரை ஏற்றுதற்குரிய தெப்பமாம் (எ - று.)

மன்றல் - வாசனை. தென்றல் - தென்றற் காற்று. கரி-யானை. கணையம் - பாணம்; யானை பாராமற் றடுக்கும் மரமுமாம். 'கணை யாம்' என்றும் பாடம். மன்றலர் - புணர்ச்சிக்குரிய மாதர். புணை - தெப்பம். பொங்குநீர் - மிக்க நீரையுடைய காவிரி. புயம் - தோள். இங்குச் சோழனது தோளைக் கணையமும், புணையுமாக உருவகப் படுத்துமிடத்து வியப்புச் சுவை தோன்றக் கூறப்படுதலின் இஃது **அற்புத வுருவக**மாம் என்பது.

இவ்வாறு வருவனவற்றை உருவகத்தின்பாற் சார்த்தியுணர்க.

**உவமை வருமாறு :**

க-வது, **தெரிந்துதேற்ற வுவமை.**

குறள் வெண்பா

உ. - று. " நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு."

(இ - ள்.) கல்லாதாரிடத்திற் பொருந்திய செல்வம், கற்றாரிடத்திற் பொருந்திய வறுமையினும் துன்பஞ்செய்வதாம் (எ-று.)

ஈண்டு 'நல்லார்' என்றது கற்றாரை. வறுமை - தரித்திரம். கல்லார்மாட்டுச் செல்வம் அவரைக் கெடுக்கும்; கற்றார்மாட்டு வறுமை அவரைக் கெடுக்காது. ஆதலின், கல்லார் மாட்டுச் செல்வத்திற்குக் கற்றார் மாட்டு வறுமை உவமை கூறத் தக்கதன்றென்பது பெறப்பட்டது.

இதில் கல்லார்மாட்டுச் செல்வத்திற்குக் கற்றார்மாட்டு வறுமை உவமை கூறத் தக்கதன்று என்பது தெளிந்து கூறப்படுதலின் இது **தெரிந்துதேற்ற வுவமை**யாம் என்பது.

உ-வது, **பலவயிற்போலியுவமை.**

நேரிசை வெண்பா

வ-று. "அடிநோக்கி னாழ்கடல் வண்ண னவன்றன்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரான்—முடிநோக்கித்
தேர்வளவ னாகத் தெளிந்தேன்றன் சென்னிமேல்,
ஆரலங்க றோன்றியது கண்டு."

**(இ-ள்.)** (அவனது) அடியை நோக்கினால் ஆழமாகிய கடலினது நிறத்தினையுடைய திருமாலாகத் தோன்றுகின்றான்; வடிவத்தை நோக்கினால் பசுமையாகிய கொன்றைப் பூமாலையை அணிந்த சிவனாகத் தோன்றுகின்றான்; (இங்ஙனம் பலவாறாகத் தோன்றும் இவனை இன்னனென்று தெளிதல் எவ்வாறென உன்னி) அவனது முடியை நோக்கி முடியின்மேல் ஆத்திப்பூமாலை இருத்தலைக் கண்டு தேர்ச் சேனையையுடைய சோழன் என்று தெளிந்தேன் (எ-று.)

இதிற் சோழனாகிய ஒரு பொருளுக்குத் திருமாலும், சிவபிரானுமாகிய இரண்டுவமைகள் கூறப்பட்டமையின் இது **பலவயிற் போலியுவமை**யாம் என்பது.

௩-வது, **பண்புவமை.**

ஆசிரியப்பா

வ-று. "கருங்கால் வேங்கை வீயுறு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே."

**(இ-ள்.)** பரவிய வெண்மையாகிய நிலவே! கருமையாகிய அடியையுடைய வேங்கைமரத்தினது மலர்கள் பரவப்பெற்ற வலிய கல்லானது பெரிய புலியினது குட்டியைப்போலத் தோன்றுங் காட்டின் வழியாக இரவிலே (தனியே) வருபவராகிய (எமது) தலைவருடைய களவொழுக்கத்திற்கு நீ நலம்புரிவாய் அல்லை (எ-று.)

வீ - மலர். துறுகல் - வலிய கல். இரும்புலி - பெரிய புலி. குருளை - குட்டி. எல்லி - இரவு. வருநர் - வருகின்றவராகிய தலை

வர். களவிற்கு - களவொழுக்கத்திற்கு. இதில் வேங்கை மரத்தினது மலர்கள் பரவப்பெற்ற கல், புலிக்குட்டிக்கு உவமையாகக் கூறப்பட்டது.

வேங்கை மரத்தினது மலர் பரவப்பெற்ற கல்லின் வண்ணமும் வடிவமும், புலிக்குட்டியின் வண்ணத்திற்கும் வடிவத்திற்கும் ஒப்புமையாகக் கூறப்பட்டமையின் இது **பண்புவமை**யாம் என்பது.

(கு-ரை.) வடிவு பண்பில் அடங்கும்.

௪-வது, **ஒப்புமையுவமை.**

### நேரிசை வெண்பா

உ-று. "முத்துக்கோத் தன்ன முறுவல் முறுவலே
ஒத்தரும்பு முல்லைக் கொடிமருங்குல்—மற்றதன்மேல்
மின்னளிக்குங் கார்போல் விரைக்கூந்தல் மெல்லியலாள்
தன்னளிக்கு முண்டோ தரம்."

**(இ-ள்.)** முத்துக்களை வரிசையாகக் கோத்தாற்போன்ற பற்களையும், அப் பற்களையே போன்று அரும்புகளை விடும் முல்லைக் கொடியைப்போன்ற இடையினையும், அக் கொடியின்மேல் மின்னை வீச மேகம்போன்ற நறுநாற்றத்தையுடைய கூந்தலையும் உடைய மென்மைத் தன்மையினளாகிய தலைவியினது குளிர்ந்த கருணைக்கும் எல்லையுண்டோ? (எ-று.)

முறுவல் - பல். மருங்குல் - இடை. கார் - மேகம். விரை - மணம். மெல் இயலாள் - மென்மைத் தன்மையுடையாள்,

இதில் 'முத்துக்கோத்தன்ன' என்று முத்துக்களை முறுவலுக்கு உவமை கூறி, 'முறுவலே, ஒத்தரும்பு முல்லை' என அம் முறுவலை முல்லை அரும்புகளுக்கு உவமையாகக் கூறலின் இஃது **ஒப்புவமை உவமை**யாம் என்பது.

ரு-வது, **சந்தானவுவமை.**

### ஆசிரியப்பா

உ-று. "ஈர்ந்து நிலந்தோய மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கு குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்

பூவெனப் பொலிந்த வோதி யோதியின்
அளிச்சினை வேங்கை நாண்மலர் நாண்மலர்க்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கு சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கின் விரைமுகை முகையெனப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்டோட்டுப் பெண்ணை வளர்த்த நுங்கின்
செறிநீர் தருமெ யிற்றின்''

என்னும் இதனை மாலையுவமை யெனினு மமையும்.

(இ-ள்.) இழுக்கப்பட்டுப் பூமியிலே பொருந்தப்பெற்ற பெண் யானையினது பெரிய துதிக்கைபோலத் திரண்டுருண்டு ஒன்றோடொன்று நெருங்கிப் பொருந்திய தொடைகளையும் அந்தத் தொடைகளைப்போலப் பெரிய மலையிலே வரிசையாகப் பொருந்தின வாழைமரங்கள்; அந்த வாழைமரங்களின் பூவைப்போல அழகுற் றமைந்த கூந்தன் முடியையும், அக் கூந்தன் முடியைப்போலக் கரிதாய்க் குளிர்ந்த கிளைகளையுடைய வேங்கை மரத்தினது புதியமலர் (மலர்ந்து விளங்கின); அவ் வேங்கை மரத்தின் புதியமலர் என்று கருதிக் களிப்பையுடைய வண்டுகள் (மொய்த்துக்கொண்டு) ஆரவாரிக்குந் தேமலையும், அத தேமல் பொறியாகப் பரந்தாற்போலக் கோங்கமரத்தினது புதிய அழகிய புதுமலர்கள் (தோன்றும்); அந்த அரும்பைப்போல (விளங்கும்) ஆபரணங்களைத் தன்னிடத்தே கொண்ட கொங்கைகளையும், பெரிய மடல்களையுடைய பனைமரம் அந்தக் கொங்கைகளைப்போல வளர்த்த நுங்குபோல் இனிமை பொருந்திய நீரைத்தரும் பற்களையும் (எ - று.)

உடையார் என இது மகளிர்க்கு அடைமொழியாம். இங்குக் கூறப்பட்ட உவமைகள் பலவும் இடையீடின்றி ஒன்றோடொன்று தொடர்புடையனவாகப் புணர்க்கப்பட்டமையின் இது **சந்தான உவமை**யாம் என்பது. இனி மாலையுவமையோடு இதற்கு வேற்றுமை யுண்டென்பாரு முண்டு. அங்ஙனங் கூறுவார் மாலையுவமை ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருள்களை ஒரு பொருளுக்கு உவமையாக வைக்கப்படுவதாம் எனவும், இஃது அங்ஙனம் ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருள்களை வெவ்வேறு பொருள்களுக்கு உவமையாக வைக்கப் படுவதாம் எனவுங் கூறுவர்.

௩௰-வது, **விலக்குவமை**

ஆசிரியப்பா

வ - று. "பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே."

(இ - ள்.) (புலமையினாற்) செப்பமாகிய நாவினையுடைய புலவர்கள் 'பாரி பாரி' என்று சொல்லி (அவன்றன் புகழ்) பலவற்றையுந் துதித்து (அவன்) ஒருவனையே புகழ்வர்; உலகத்தைப் பாதுகாத்தற்குப் பாரி ஒருவனே அல்லன்; மழையும் உண்டு (எ - று.)

இவ்வாறு வருவனவற்றை யுவமையின்பாற் சார்த்தி யுணர்க. உருவகமும் உவமையும் ஒன்றாக்கிப் புணர்த்தமையால் உருவகத்திற்கு ஓதிய இலக்கணம் உவமைக்காதலும், உவமைக்கு ஓதிய இலக்கணம் உருவகத்திற் காதலு முள. அவை வருமாறறிந்து கொள்க.

இதில் பாரிக்கு மேகத்தை உவமை கூறுதல் பலர்க்குங் கருத்தன்று என்னுங் கருத்தைத் தொனிப்பித்து உவமையை விலக்குதலால் இது **விலக்குவமை**யாகும். இதில் உபமேயத்தை ஒருபுடை விலக்கி உபமானத்தை உடன் நிறுத்தினமையால், விலக்குவமையாயிற்று என்றலுமாம்.

பாரி - கடை எழு வள்ளல்களில் ஒருவன்; கொடையிற் சிறந்தவன். (௧௩)

## ௪. தீவகவணி

ஓரிடத்து வைக்கப்பட்ட விளக்கானது பல விடங்களிற் சென்று பொருள்களை விளக்குதல்போல இதுவும் ஓரிடத்து நின்று பல விடங்களிலுஞ் சென்று பொருள்களை விளக்குதலாலே தீபகமெனப்பட்டது. தீபகம் - விளக்கு.

### ௪௰. குணந்தொழில் சாதி பொருள்குறித் தொருசொல்

ஒருவயி னின்றும் பலவயிற் பொருடரிற்
றீவகஞ் செய்யுண் மூவிடத் தியலும்.

என்பது, நிறுத்த முறையானே தீவக மென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) குணத்தானும், தொழிலானும், சாதியானும், பொருளானும் குறித்து ஒருசொல் ஓரிடத்து நின்று, செய்யுளிற் பலவிடத்து நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளைப்பது தீவக மென்னும் அலங்காரமாம். அது **முதனிலைத்தீவகம், இடைநிலைத்தீவகம், கடைநிலைத்தீவகம்** என மூன்றாகி நடக்கும் (எ-று.)

எனவே, இம்மூன்றையும், குணம், தொழில், சாதி, பொருள் என்பனவற்றோடு கூட்டி யறுழப் பன்னிரண்டா மெனக் கொள்க.

அவற்றுள்,

க-வது, **முதனிலைக் குணத்தீவகம்.**

### நேரிசை வெண்பா

வ - று. "சேந்தன வேந்தன் றிருநெடுங்கண் டெவ்வேந்தர்
ஏந்து தடந்தோ ளிழிகுருதி—பாய்ந்து
திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பும்
மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து" என வரும்.

இதனுள் புட்குலங்களும், அம்பும், வேந்தர் தோள்களும் திசைகளும் சிவந்தன வென்க.

(இ - ள்.) அரசனது அழகிய நீண்ட கண்கள் (கோபத்தினால்) சிவந்தன: (அவை சிவந்த அளவில்) பகைவேந்தர்களினுடைய உயர்ந்த பெரிய தோள்கள் (அம்புகள் பட்டு இரத்தங் குழம்பிச்) சிவந்தன; (அந்த தோள்களினின்று) பெருகி வருகின்ற இரத்தம் பாய்தலால் திசைகள் சிவந்தன; (அந்த இரத்தத்திற் படிதலால்) வலிமையினையுடைய வில்லினாற் சொரியப்பட்ட பாணங்கள் சிவந்தன; அந்த இரத்தம் மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும சிவந்தன (எ - று.)

இச் செய்யுளின் முதலில் உள்ள **சேந்தன** என்னும் பண்பு, கண், தோள், திசை முதலியவற்றோடுஞ் சென்று சேர்ந்து உபகாரப்பட்டமையால், இது **முதனிலைக் குணத்தீவக**மாம். சேந்தன என்பது வினைச்சொல்லாயினும் அதனாற் பெறும் பொருள்

செந்நிறமாகிய பண்பாகலின், அது பண் பெனப்பட்டது. சேந்தன என்பது செம்மை என்னும் பண்புப் பெயரி னடியாகப் பிறந்த வினை யாதலையும் நோக்குக.

உ-வது, முதனிலைத் தொழிற்றீவகம்.

நேரிசை வெண்பா

வ - று. "சரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி
வரியுந் தனதடஞ்சூழ் வம்பும்—திருமான
ஆரந் தழுவுந் தடந்தோ ளகளங்கன்
சோரந் தொழுத கொடிக்கு" என வரும்.

(இ - ள்.) திருமகள் வீற்றிருத்தற்குரிய மேன்மையினையுடைய முத்துமாலையை அணிந்த பெரிய தோள்களையுடைய குற்றமற்ற சோழனுடைய குதிரையைத் தொழுத பூங்கொடியைப் போன்றவளாகிய பெண்ணுக்கு (அவள் கையில்) அணிந்த வளையல்களும் சரிந்தன; குளிர்ச்சியாகிய தளிரைப்போன்ற உடம்பின் அழகும் சரிந்தது; பெரிய தனங்களில் தரித்த கச்சுஞ் சரிந்தது (எ - று.)

சோழன் உலாப்போன காட்சியைக் கண்டு அவ்வளவிலே அவன்பால் தமக்குண்டாகிய பெருங்காதலை ஆற்றாளாகிய ஒரு பெண் உடல்மெலிந்து, கை வளை கழன்று வீழ, உடம்பின் அழகு குறையக், கச்சுத் தளர்ச்சியுற நின்றனள் என்பது இதன் கருத்து. இதில் சரியும் என்னும் வினைச்சொல் சங்கு முதலியவற்றோடு சென்றியைந்து உபகாரப்பட்டமையால், இது முதனிலைத் தொழிற்றீவகம் ஆம்.

இதனுள் வளையும், அழகும், கச்சும் சரியு மென்க.

௩-வது, முதனிலைச் சாதித்தீவகம்.

நேரிசை வெண்பா

வ - று. "தென்ற லனங்கன் றுணையாஞ் சிலநோம்பர்
மன்றற் றலைமகனும் வான்பொருண்மேற்-சென்றவர்க்குச்
சாற்றவிடுந் தூதாகும் தங்கும் பெரும்புலவி
மாற்று மருவிருந்து மாம்" என வரும்.

(இ - ள்.) தென்றற் காற்றானது (காமத்தை வளர்த்தலால்) மன்மதனுக்குத் துணையாகும்; சில பூங்கொம்புகளுக்குத் (தான் வந்த வளவில் அவற்றைத் தளிர்ப்பித்தலால்) மணம் புரிந்த நாயகனாகும்; சிறந்த பொருளினிடத்து விருப்பமுற்று (தம்முடைய தலைவியர்களைப் பிரிந்து) சென்ற தலைவர்களுக்கு (அத்தலைவியர்கள்பாற் காதலை எழுப்புதலால் அத் தலைவியர்களால் தம்முடைய வருத்தங்களைச்) சொல்லும்படி அனுப்பப்பட்ட தூதாகும்; (நாயகர்பால் நாயகியர்க்கு உண்டான பெரிய ஊடலை நீக்குதலால்) அவ்வூடலை நீக்க வந்த புதுமகனுமாகும் (எ - று.)

தென்றல் - தெற்கிலிருந்து வருங் காற்று; அது கால வேறுபாட்டாற் பலவாம். இங்குத் **தென்றல்** என்றது அங்ஙனம் பலவாகிய காற்றுகள் அனைத்தையும் உணர்த்தி முதலில் நின்று, 'துணையாம்' என்பது முதலியவற்றோடு சென்றியைந்து உபகாரப் பட்டமையால் இது **முதனிலைச் சாதித்தீவகம்** ஆம்.

இதனுள் - தென்றல் துணையாதலும், தூதாதலும், விருந்தாதலும் கண்டுகொள்க.

௪-வது, **முதனிலைப் பொருட் டீவகம்.**

**நேரிசை வெண்பா**

வ - று. " முருகவேள் சூர்மா முதறடிந்தான் வள்ளி
புரிகுழன்மேன் மாலை புனைந்தான்—சரணளித்து
மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்
வேலா னிடைகிழித்தான் வெற்பு" என வரும்.

(இ - ள்.) முருகப்பிரான் சூரபன்மனாகிய மாமரத்தை வேரோடு சாய்த்தான்; வள்ளியம்மையினது புரிவாகிய கூந்தலின் கண் மாலையைச் சூட்டினான்; அடைக்கலமாகி மேன்மை பொருந்திய தேவர்களுடைய பெரிய சேனையைக் காத்தருளினான்; வேலினாலே (கிரௌஞ்சம் என்னும்) மலையை இடையிலே பிளந்தான் (எ - று.)

'சூர்மா முதல் தடிந்தான் என்பதற்குச் 'சூரபன்மனாகிய (அவுணர்களின்) சிறந்த தலைவனைக் கொன்றான்' என்று பொருள் கூறுதலுமாம்.

இதில் முதலில் நின்ற முருகவேள் என்ற பொருட்பெயர் தடிந்தான் என்பது முதலியவற்றோடு சென்றியைந்து உபகாரப் பட்டமையால் இது முதனிலைப் பொருட்டீவகம் ஆம்.

௫-வது, இடைநிலைக் குணத்தீவகம்.

### நேரிசை வெண்பா

வ - று. "எடுத்த நிரைகொணா வென்றலுமே வென்றி
வடித்திலங்கு வைவாளை வாங்கத்—துடித்தனவே
தண்டார மார்புந் தடந்தோளும் வேல்விழியும்
எண்ணாத மன்னரிடம்" என வரும்.

(இ-ள்.) குறித்த பசுக்கூட்டங்களைக் கொண்டுவருக என்று (வேந்தன்) கூறிய அளவிலே, (மறவன்) வெற்றியைத் தருவதாகிய வடிக்கப்பட்டு விளங்கும் கூர்மையாகிய வாளைக் கையிலே ஏந்தினனாகப் பகையரசர்களுக்குக் குளிர்ச்சியாகிய முத்துமாலையை அணிந்த மார்பும், பெரிய தோள்களும் வேல் போன்ற கண்களும் இடப்புறத்துத் துடித்தன (எ-று.)

இதில் இடைநின்ற துடித்தனவே என்னும் பண்புணர்த்துஞ் சொல் மார்பு என்பது முதலியவற்றோடு சென்றியைந்து உபகாரப் பட்டமையின் இடைநிலைக் குணத்தீவகம் ஆம்.

இதனுள், துடித்தல் - பண்பு.

(கு-ரை.) தொழில் பண்பில் அடங்கும்.

௬-வது, இடைநிலைத் தொழிற்றீவகம்.

### நேரிசை வெண்பா

வ - று. "எடுங்குஞ் சிலைநின் றெதிர்ந்தவருஞ் சேரும்
வடுக்கொண் டுரந்துணிய வாளி—தொடுக்கும்
கொடையுந் திருவருளுங் கோடாத செங்கோல்
நடையும் பெரும்புலவர் நா" என வரும்.

(இ-ள்.) வேந்தன் கையிலே ஏந்திய வில்லிலே அம்புகள் நிற்றலால் (உடனே அவனை) எதிர்த்தவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் தழும்புபட்டுத் (தம்முடைய மார்பு) துணிக்கப் பட்டனராக (அவ்வளவிலே) புலவர்களுடைய நாவுகள் (இவ்

வேந்தனுடைய) ஈகையையும், மேன்மையாகிய அருளையும், முறை கெடாத செங்கோலினது நடையையும் (பாக்களிலே) தொடுத்துப் புகழ்வனவாயின (எ - று.)

இதில் இடையிலே நின்ற தொடுக்கும் என்னும் தொழி லுணர்த்துஞ் சொல், கொடை, அருள், செங்கோலின் நடை என்பவற்றோடு சென்றியைந்து உபகாரப்பட்டமையால், இஃது இடைநிலைத் தொழிற்றீவகம் ஆம்.

எடுக்குஞ் சிலை வாளி நின்று என இயைக்க. 'நின்று', என்றதை நிற்க என்னுஞ் செயவெ னெச்சமாகக் கொள்க.

இதனுள், தொடுத்தல் - தொழில்.

எ-வது, இடைநிலைச் சாதித்தீவகம்.

நேரிசை வெண்பா

வ-று. "கரமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம்
பொருவில் புயவலய மாகும்—அரவரைமேல்
நாணு மாற்கு நகைமணிசேர் தாழ்குழைபாம்
பூணும் புனைமாலை யாம்" என வரும்.

(இ-ள்.) பாம்பானது சிவபிரானுக்குக் கரத்திற் பொருந்தும் அழகிய வளையாகும்; காலிலே அணியும் வீரகண்டையாகும்! ஒப்பில்லாத தோள்வளையாகும்; இடையில் அணியும் நாணுகும்; ஒளியினையுடைய இரத்தினங்கள் பொருந்திய தொங்குகின்ற குண்டலம் என்னுங் காதணியாகும்; மற்றும் பல ஆபரணங்க ளாகும்; அழகிய மாலையும் ஆகும் (எ - று.)

இதில் இடையினின்ற அரவு என்னும் பாம்புகளின் சாதிப் பெயர் 'தொடியாம்' என்பது முதலியவற்றோடு சென்றியைந்து உபகாரப்பட்டமையின் இஃது இடைநிலைச் சாதித்தீவகம் ஆம்.

அ-வது, இடைநிலைப் பொருட்டீவகம்.

நேரிசை வெண்பா

வ-று. "மானமருங் கண்ணாள் மணிவயிற்றில் வந்துதித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான்—யானைமுகன்
ஓட்டினான் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து
வீட்டினா னம்மேல் வினை" என வரும்.

(இ-ள்.) யானை முகத்தினையுடைய கடவுளாகிய விநாயகன், மான்போன்ற கண்களையுடைய பார்வதியினது அழகிய வயிற்றில் வந்து பிறந்தனன்; எப்பொழுதும் அசுரர்களுடைய தலைகளைத் துணித்தனன்; வெவ்விய வறுமையைப் போக்கினன்; நம்முடைய மனத்தின்கண்ணே நன்கமர்ந்து நம்மேல் வரும் (தீய) வினைகளை நீக்கினன் (எ - று.)

இதில் இடைநின்ற யானைமுகன் என்பது உதித்தான் என்பது முதலியவற்றோடு சென்றியைந்து உபகாரப்பட்டமையின், இஃது இடைநிலைப் பொருட்டீவகம் ஆம்.

கம-வது, கடைநிலைத் தொழிற்றீவகம்.

நேரிசை வெண்பா

உ-று. " துறவுளவாச் சான்றோ ரிளிவரவுந் தூய
பிறவுளவா வூன்றுறவா வூணும்—பறைகறங்கக்
கொண்டா னிருப்பக் கொடுங்குழையா டெய்வமுமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று" என வரும்.

(இ-ள்) ஞானத்தாற் சிறந்த பெரியோர்க்குத் துறவாகிய ஒழுக்கம் உளது ஆக இழிந்ததாகிய (கூடா) ஒழுக்கமும், தூய்மையாகிய வேறு உணவுகள் பல உள்ளனவாகத் தசை கலந்த உணவும், ஒரு மாதுக்குப் பல வாத்தியங்கள் ஒலிக்க மணம்புரிந்துகொண்ட (அவளுடைய) கணவன் இருக்க வேறொரு தெய்வமும் உள்ளதாகக் கொண்டு வைத்தற்குரிய தன்மையதன்று (எ - று.)

இளிவரவு - தாழ்வு; அஃது ஈண்டு இழிவாகிய ஒழுக்கத்தை உணர்த்தியது. ஊன் - தசை. ஊண் - உணவு. பறை - வாத்தியம். கறங்கல் - ஒலித்தல். கொடுங்குழையாள் - வளைவாகிய குழையை அணிந்த மாது. 'வைக்கற்பாற்று அன்று' என்றதை இளிவரவு என்றது முதலியவற்றோடு தனித்தனி இயைத்து முடித்துக் கொள்க.

இதில் கடைநின்ற வைக்கற்பாற்றன்று என்பது இளிவரவு முதலியவற்றோடு சென்றியைந்து உபகாரப்பட்டமையின் இது கடைநிலைத் தொழிற்றீவகம் ஆம்.

## கஉ வது, கடைநிலைப் பொருட்டீவகம்.

### நேரிசை வெண்பா

வ-று. "புறத்தன வூரன நீரன மாவின்
றிறத்தன கொற்சே ரியவே—அறத்தின்
மகனை முறைசெய்தான் மாவஞ்சி யாட்டி
முகனை முறைசெய்த கண்" என வரும்.

(இ - ள்.) (பசுவின் கன்றின்மீது தேரைச் செலுத்தி அதைக் கொன்றவனாகிய தன்) மைந்தனை (அரசருக்குரிய) தருமத்தின்படி கொன்றவனாகிய மனுநீதி சோழனது மேன்மையாகிய வஞ்சி நாட்டிலே வாழ்பவளாகிய ஒரு மாதினுடைய முகத்தை அலங் கரித்த கண்கள், வெளிகளிலுள்ள மான்களினுடைய கண்களைப் போன்றனவும், நாட்டின்கண் உள்ள அம்புகளைப்போன்றனவும், நீரிலுள்ள தாமரை மலர்களைப்போன்றனவும், மாவடுக்களைப் போன்றனவும், கொல்லர்களின் சேரியிலே செய்யப்படும் வாள் களைப் போன்றனவுமா யிருக்கின்றன (எ-று.)

'நீரன' என்பதைக் கருங்குவளை என்று கொள்ளுதலுமாம.

இதில் கடைநின்ற கண் என்னும் பொருட்பெயர் புறத்தன என்பது முதலியவற்றோடு சென்றியைந்து உபகாரப்பட்டமை யின் இது கடைநிலைப் பொருட்டீவகம் ஆம்.

இதனுள், கண் - பொருள். புறத்தன - மான். ஊரன - அம்பு. நீரன - தாமரை. மாவின்றிறத்தன - மாவடு. கொற்சேரிய - வாள். மற்றவை யுதாரணம் வந்துழிக் காண்க.

அஃதேல், குணமென்று சொல்லப்பட்டனவும், தொழிலாய்க் காலம் புணர்ந்து நின்றனவாலெனின் அவ்வாறே குணமுந் தொழி லுங் காலம் புணர்ந்தல்லது தோன்றா. தொழிலென்பது பொருளது புடைபெயர்ச்சி. குணமென்பது அப் பொருட்குப் பண்பாய்த் தனக்கு வேறு பொருளின்றிப் பொருளை நீங்காது நிற்பது. அது முன்ன ருணர்த்தப்பட்டது. (கச)

## சக. அதுவே

மாலை விருத்த மொருபொருள் சிலேடையென
நால்வகை யானு நடைபெறு மென்ப.

என்பது, அந்த தீவகாலங்காரம் பிற அலங்காரங்களோடுங் கூடி வருமா றுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) அச் சொல்லப்பட்ட தீவகம், மாலா தீவகம், விருத்த தீவகம், ஒரு பொருட் டீவகம், சிலேடா தீவகம் என நான் கலங்காரங்களோடு கூடியும் வருமென்று சொல்லுவர் புலவர் (எ-று.)

அவற்றுள்,

க-வது, மாலா தீவகம்.

### நேரிசை வெண்பா

வ - று. "மனைக்கு விளக்க மடவார் மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்
ஓதிற் புகழ்சா லுணர்வு."

(இ - ள்.) இல்லறத்திற்கு விளக்கம், மடப்பத்தினையுடைய பெண்டிருண்டாதல்; அப்பெண்டிர்க்கு விளக்கம், அழகு சான்ற புதல்வரைப் பெறுதல்; அப்புதல்வருக்கு விளக்கம், இனிமையான கல்வி; அக் கல்விக்கு விளக்கம், மறவாமை (எ - று.)

இதனுள், விளக்க மென்பதனை யெவ்விடத்துங் கூட்டுக.

உ-வது, விருத்த தீவகம்.

### நேரிசை வெண்பா

வ - று. "வரிவண்டு நாணு மதுமல ரம்பாப்
பொருவெஞ் சிலைக்குப் பொலிவும்—பிரிவின்
விளர்க்கு நிறமுடையார் தம்மேன் மெலிவும்
வளர்க்கு மலயா நிலம்" என வரும்.

(இ - ள்) பொறிவண்டு நாணாகவும், மதுமலரே கணையாகவுங் கொண்டு, காமன் தனியிருந்தாரைப் பொருகின்ற விருப்பத்தை யுடைய சிலைக்குப் பொலிவினையும், பிரிவிற் பசலையுற்றார் தம்பால் மெலிவினையும் வளர்க்கும் தென்றற் காற்று (எ - று.)

இதனுள், ஒரு பொருளே பொலிவும் மெலிவுமாகிய இரண்டு குணஞ் செய்தலின் விருத்தம்.

(கு - ரை.) விருத்தம் - சொல்லும் பொருளும் மாறுபடுதல்.

௩-வது, ஒரு பொருட் டீவகம்.

### நேரிசை வெண்பா

உ-ம். "வியன்ஞாலஞ் சூழ்திசைக ளெல்லாம் விழுங்கும்
அயலார் துணைநீத்த தகன்றார்—உயிர்பருகும்
விண்கவரும் வேரிப் பொழில்புதைக்கு மென்மயில்கள்
கண்கவரு மீதெழுந்த கார்" என வரும்.

(இ - ள்,) அகண்ட உலகத்தைச் சூழ்ந்த திக்குகளெல்லா வற்றையும் தன்னிடத் தடக்கும்; துணையைப் பிரிந்து அயலவர் போலப் போயினார் உயிரை யுண்ணும்; ஆகாயத்தை மறைக்கும்; நறுநாற்றத்தையுடைய பொழிலை மூடும்; மென்மையையுடைய மயில்களின் கண்களை வவ்விக்கொள்ளும்; உயரவெழுந்த மேகம் (எ - று.)

இதிலே விழுங்கும், பருகும், புதைக்கும், கவரும் என வந்த பல சொற்கள் ஒரு பொருளையே குறித்து நிற்க, கார் என்னுஞ் சொல் விழுங்கும் என்பது முதலிய பல இடங்களிலுஞ் சென் றியைந்து உபகாரப்பட்டமையின் இஃது ஒரு பொருட் டீவகமாம்.

௪-வது, சிலேடா தீவகம்.

### நேரிசை வெண்பா

உ-ம். "மான்மருவி வாளரிகள் சேர்ந்து மருண்டுள்ளம்
தான்மறுக நீண்ட தகைமையவாம்—கான
வழியு மொருதனிநாம் வைத்தகலு மாதர்
விழியுந் தருமான் மெலிவு" என வரும்.

(இ - ள்.) மான்கள் மருவி ஒளியையுடைய சிங்கங்கள் சேர்ந்து, மயங்கிக் கண்டாருள்ளம் வெருவும்படி நீண்ட தன் மையையுடைத்தாய காட்டு நெறியும், மயக்க மருவி ஒளியினை யுடைய அரிகள் பரந்து கண்டா ருள்ளமானது மயங்கித் தடுமாறும் படி பெரிதாய நான் தனியிருந்திப் போந்த கிழத்தியுடைய கண்ணும், நமக்கு வருத்தத்தைத் தாநின்றன (எ - று.)

இது வழிக்கும், விழிக்குஞ் சிலேடை. மான்மருவி - (வழி) மான்கள் பொருந்தி; (கண்) மயக்கம் மருவி; வாள் அரிகள்

சேர்ந்து - (வழி) ஒளியை யுடைய சிங்கங்கள் சேர்ந்து; (கண்) ஒளியை உடைய செவ்வரிகள் சேர்ந்து; உள்ளம் மருண்டு மருக - (வழி) மனம் மயங்கி வருந்த; (கண்) மனம் மயங்கித் தடுமாற.

நால்வகையானு மென்கிற முற்றும்மையை எச்சவும்மையாக்கிப் பிறவகையால் வருவனவு முள வெனக் கொள்க. அவை வருமாறு:

உவமா தீவகம்.

நேரிசை வெண்பா

வ — று. "முன்னங் குடைபோன் முடிநா யகமணிபோல்
மன்னுந் திலகம்போல் வானிரவி—பொன்னகலம்
தங்கு கவுத்துவம்போ லுந்தித் தடமலர்போல்
அங்க ணுலகளந்தாற் காம்" என வரும்.

(இ - ள்) அழகிய இடத்தினையுடைய உலகங்களை அளந்த திருமாலுக்கு (அங்ஙனம் உலகளந்தபோது) ஒளியை உடைய சூரியன் முன்னே குடைபோன் றிருந்து, பின்பு கிரீடத்தின் நடுவிலுள்ள நாயகரத்தினம்போ லாய், (அதன் பிறகு) நெற்றியிலே அணிந்த திலகம் போலாய், (அதன்பின்னர்) அழகிய மார்பிலே பொருந்திய கவுத்துவமணிபோலாய், (அதன்பிறகு) உந்தியாகிய குளத்திலே தோன்றிய செந்தாமரை மலர்போல் ஆயிற்று (வி-று.)

திலகம்-பொட்டு, உந்தி - கொப்பூழ்.

உருவக தீவகம்.

நேரிசை வெண்பா

வ - று. "கானற் கயலாம் வயலிற் கமலமாம்
ஏனற் கருவிளையா மின்புறவில்—மானும்
கடத்துமேல் வேடர் கடுஞ்சரமா நீங்கிக்
கடத்துமேன் மெல்லியலாள் கண்" என வரும்.

(இ - ள்) (நெஞ்சமே!,) இம் மெல்லிய தன்மையை உடையாளைப் பிரிந்து செல்வோமாயின் இவளது கண் நெய்தல் நிலத்திலே கயன் மீனாய்த் தோன்றியும், முல்லை நிலத்திலே கருவிளை மலராய்த் தோன்றியும், குறிஞ்சி நிலத்திலே மானாய்த் தோன்றியும், பாலை நிலத்திலே வேடுவரது (கையிலுள்ள) கொடிய பாண

மாய்த் தோன்றியும் நமது போக்கை விலக்கும்; (ஆதலால்) இவளைப் பிரிந்து செல்லுதல் நமக்கு அரிதாகும் (எ - று.)

கானல் - நெய்தல்; வயல் - மருதம்; ஏனல் - முல்லை; புறவு - குறிஞ்சி; கடம் - பாலை; சரம் - பாணம்; மெல் இயலாள் - மென்மையாகிய தன்மையை உடைய தலைவி.

இதில் கண் என்கின்ற ஒரு சொல் பல இடத்துஞ் சென்றியைந்து உபகாரப்பட்டமையின் இது தீவக அணியாம். இதனோடு கண்ணைக் கயல் முதலியனவாகக் கூறிய உருவகமும் பொருந்துதலால் இஃது உருவக தீவகம் ஆயிற்று. (௧௫)

## ௫. பின்வருநிலை யணி.

**௪௨. முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்**
**பின்வரு மென்னிற் பின்வரு நிலையே.**

(இ - ள்) ஒரு செய்யுளுள், முன்னர் வந்த சொல்லாவது பொருளாவது பின்னர்ப் பலவிடத்தும் வருமாயின், அது பின்வரு நிலை யென்னும் அலங்காரமாம் (எ - று.)

அவற்றுள்,

௧-வது, சொற்பின் வருநிலை.

### நேரிசை வெண்பா

வ - று. "மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோ ளாதரித்த மாலையார்—மாலிருள்சூழ்
மாலையின் மால்கட லார்ப்ப மதன்றொடுக்கு
மாலையின் வாளி மலர்" என வரும்.

(இ - ள்,) மதத்தால் மயங்கிய யானையின் இடர் தீர்த்தளித்த அரியுடைய தொடையல் சூழப்பட்ட பெரிய மலையை யொத்த தோள்களை விரும்பிய இயல்புடையார்மேல், மயங்கிருள் சூழ்ந்த அந்திப்பொழுதில் கருங்கடல் ஆர்ப்பக் காமன் இடையறாது மலராகிய கணைகளைத் தொடுக்கும் (எ - று.)

இதனுள், முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்து வந்தமையின் சொற் பின்வருநிலை.

(கு - ரை.) அரி - திருமால்.

உ-வது, பொருட்பின் வருநிலை

### நேரிசை வெண்பா

வ - று. "அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை—மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை" எனவரும்.

(இ - ள்.) தோன்றி மரங்கள் மலர்ந்தன; காசாஞ்செடிகள் மலர்ந்தன; அழகிய அரும்புகளை உடைய முல்லைகள் மலர்ந்தன; கொன்றை மரங்கள் குளிர்ச்சியுற்று இதழ்கள் மலர்ந்தன; கருவிளைகள் மலர்ந்தன; காந்தள் குலைகளை எடுத்தன (எ - று.)

இதனுள் அவிழ்தலும், அலர்தலும், நெகிழ்தலும், விள்ளலும், விரிதலும், மலர்தல் என்னு மொருபொருண்மே னின்றன வாதலின் அப் பெயர்த்தாயிற்று.

'வருவது' என்றாது, 'வருமென்னின்' என்றதனான், முன்னா வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவிடத்தும் வருவது, சொற்பொருட் பின்வருநிலை யெனக் கொள்க.

### நேரிசை வெண்பா

வ - று. "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்" எனவரும்.

(இ - ள்.) நாள்தோறும் பொழுது கழிகலைத் தமது ஆயுளின் மேல் தங்குதலாக வைத்துப் அப்பொழுதுகழிவை உணரும் இயல்பில்லாதவர்கள், நாள்தோறும் பொழுதுகழிவு வாராநிற்கக் கண்கூடாகப் பார்த்திருந்தும் அப் பொழுதுகழிவை உணர்ந்து துன்புறாமல் நாள்தோறும் அப் பொழுதுகழிவை முட்டின்றிக் கழியாநிற்கும் என்று மகிழ்வார் (எ - று.)

இதில் வைகல் என்னும் முன்வந்த சொல் பின்னும் பலவிடத்தும் வந்து ஒரு பொருளே தந்தமையின், இது சொற்பொருள் பின்வரு நிலையாம் என்பது.

இன்னும் அவ்விலேசானே பிறவலங்காரங்களோடு கூடி வருவனவுங் கொள்க.

நேரிசை வெண்பா

வ - று. "செங்கமல நாட்டஞ் செழுந்தா மரைவதனம்
பங்கயஞ் செவ்வாய் பதுமம்போல்—செங்கரங்கள்
அம்போ ருகந்தா ளரவிந்த மாரனார்
தம்போ ருகந்தா டனம்" என வரும்.

(இ - ள்.) மன்மதனது அழகிய போரை (காமப்போரை) விரும்பினவளது கண்கள் செவ்விய தாமரையைப் போல்வன வாம்; முகஞ் செழிய தாமரையைப்போல்வதாம்; செவ்வாய் தாம ரையைப் போல்வதாம்; சிவந்த கைகள் தாமரையைப் போல்வன வாம்; பாதங்கள் தாமரையைப் போல்வனவாம்; தனங்கள் தாமரையைப் போல்வனவாம் (எ - று.)

இதில் கமலம், தாமரை, பங்கயம், பதுமம், அம்போருகம், அரவிந்தம் என்னும் சொற்கள் தாமரை என்னும் ஒரு பொரு ளுணர்த்தி நின்றமையின், இது பொருட்பின் வருநிலையாம்; அவை கண்கள் முதலியவற்றிற்கு உவமையாய் வந்தமையின் இஃது உவமைப்பொருட் பின்வருநிலையாம் என்பது.

கமல முதலியன ஒருபொருட் பன்மொழிகள். பிறவும் வந்த வழிக் கண்டுகொள்க. (௧௬)

## ௬. முன்னவிலக் கணி

### ௪௧. முன்னத்தின் மறுப்பினது முன்ன விலக்கே மூவகைக் காலமு மேவிய தாகும்

என்பது, நிறுத்தமுறையானே முன்னவிலக்கு என்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒரு பொருளைக் குறிப்பினான் விலக்கின் அது முன்னவிலக் கென்னும் அலங்காரமாம். அஃது இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் மூவகைப்பட்ட காலங்களோடும் கூடியதாம்.

'மறுப்பது' என்னாது 'மறுப்பின்' என்றதனால், கூற்றினான் மறுப்பினும் அவ் அலங்காரமாம். குறிப்பினான் மறுப்பது பொருட்

பொலிவுஞ் செய்யுட் சிறப்பு நோக்கி யெடுத்தோதினர் ; வினையது அன்னது அன்மையின் இலேசா னுடன்பட்டா ரென்பது.

இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்பனவற்றைக் கூற்றெருடுங் குறிப் பொடுங் கூட்ட அறுவகையாம்.

அவற்றுள்,

க-வது, **இறந்தவினை விலக்கு:**

### நேரிசை வெண்பா

வ-று. "பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின்
　　மேலன்று கண்டுயின்றாய் மெய்யென்பர் — ஆலன்று
　　வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
　　சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்"　　　　என வரும்.

(இ - ள்.) சோலை சூழ்ந்த குன்றமெடுத்த மாயவனே நீ! உலகம் எழையு முண்டு பால னுருவத்தைக் கொண்டு ஆலிலையிலே யறங்காநின்று யென்பது உலகத்துள்ளோர் மெய்யென்று சொல்லுவர். நீ உலகத்தை உண்டுறங்கிய ஆலானது, அன்று, கடலுள்ளே நின்றதோ? மண்ணிலே நின்றதோ? ஆகாயத்தே நின்றதோ? சொல்லுவாயாக (எ - று.)

உலகமுழுவதும் உண்ணப்பட்ட காலத்து ஆலிலை யொன்று தனியாக இருந்த தென்பது பொருந்தாது என அது குறிப்பால் விலக்கப்பட்டது.

உ-வது, **எதிர்வினை விலக்கு.**

### நேரிசை வெண்பா

வ-து. "முல்லைக் கொடிநடுங்க மொய்காந்தள் கைகுலைப்ப
　　வல்லை யினவண் டெழுந்திரங்க — மெல்லியன்மேற்
　　றீவாய் நெடுவாடை வந்தாற் செயலறியேன்
　　போவா யொழிவாய் பொருட்கு'　　　　என வரும்.

(இ - ள்.) தலைவனே! முல்லைக்கொடியானது நடுங்க, நெருங்கிய காந்தண் மலரானது விரிய, ஒளியினையுடைய வண்டின் கூட்டங்க ளெழுந்தொலிக்கத், தீயையுடைய நெடிய வாடையா

னது மெல்லிய நடையையுடைய இவள்மேல் வந்தால் பின் விளை யஞ் செய்தி யறியமாட்டேன்; ஆதலின், பொருளீட்டுதற்குப் போவா யொழிவாய்! (எ - று.)

கூ-வது, நிகழ்வினை விலக்கு.

நேரிசை வெண்பா

வ-று. "மாதர் நுழைமருங்கு ணேவ மணிக்குழைசேர்
காதின் மிசைநீலங் கைபுனைவீர்! — மீதுலவு
நீணீல வாட்க ணெடுங்கடையே செய்யாவோ
நாணீலஞ் செய்யு நலம்" என வரும்.

(இ - ள்.) காதலைச் செய்யும் நுண்ணிடை வருந்த, மணிக் குழையையுடைய உமது காதின்மீதே மிகையாக நீலப்பூவைச் சாத்துகின்றவரே! அக் காதின்மீதே யலாவுகின்ற நீண்ட நீல மாகிய நிறத்தையுடைய கண்களின் நெடியகடையே செய்யாவோ, நீவிர் நன்றாகச் சூடிய நீலப்பூச் செய்யும் நலத்தை (எ - று.)

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (கூ0)

சச. அதுவே

பொருள்குணங் காரணங் காரியம் புணரும்.

என்பது, அவ் வலங்காரத்துச் சில வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அவ் விலக்கு, பொருள் விலக்கும், குண விலக்கும், காரண விலக்கும், காரிய விலக்கும் என நான்குவகையானும் வரும் (எ - று.)

அவற்றுள்,

க-வது, பொருள் விலக்கு.

நேரிசை வெண்பா

வ-று. "கண்ணு மனமுங் கவர்ந்தவ ளாடிடமென்
றண்ண லருளு மடையாளம் — தண்ணிழலின்
சுற்றெல்லை கொண்டுலவுஞ் சோதித் திரளல்லால்
மற்றில்லை காணும் வடிவு" என வரும்.

(இ - ள்.) நம்முடைய தலைவன் தன்னுடைய கண்களையும் மனத்தையும் கவர்ந்துகொண்ட மடவாள் விளையாடு மிடமென்று

நமக்கு அருளிச்செய்த சோலையின்க ணுண்டாகிய குளிர்ந்த நிழலைச் சேர்ந்த சூழலிடத்தைக் கைக்கொண்டு உலாவித் திரிவதொரு சோதிப்புருவ மல்லது, அச் சோதிப்புருவின் அவயவங்களைக் காண்டற் கரிதாயிருந்தது. இஃது ஒருருவத் தன்மை இருந்தபடி (எ - று.)

உ-வது, **குண விலக்கு.**

**நேரிசை வெண்பா**

வ-று. "மாதர் துவரிதழ்வாய் வந்தென் னுயிர்கவரும்
சீத முறுவ லறிவழிக்கும் — மீதுலவி
நீண்ட மதர்விழியென் னெஞ்சங் கிழித்துலவும்
யாண்டையதோ மென்மை யிவர்க்கு" என வரும்.

(இ - ள்.) இவருடைய அழகிய பவளம்போன்ற வாயானது, என்னுடைய உயிரை வந்து கவராநின்றது; குளிர்ந்த நகையானது, அறிவை யழிக்காநின்றது; காதின்மீது உலாவி மதர்த்து நீண்ட விழியானது, என்னுடைய நெஞ்சத்தைக் கிழித்து உலவாநின்றது; ஆதலால், இவர்க்கு மென்மை எங்குள்ளதோ சொல்லுவாயாக (எ - று.)

ங-வது, **காரண விலக்கு.**

**நேரிசை வெண்பா**

வ-று. "மதாரிக் கண்சிவப்ப வார்புருவங் கோட
அதரந் துடிப்ப வணிசேர் — நுதல்வியர்ப்ப
நின்பா னிகழ்வனகண் டஞ்சாதா லென்னெஞ்சம்
என்பாற் றவறின்மை யால்" என வரும்.

(இ - ள்.) மடவாய்! செவ்வரி பரந்து மதர்த்த கண் சிவப்ப, நீண்ட புருவம் வளைய, அதரந் துடிக்க, அழகு சேர்ந்த நெற்றியானது வியர்ப்ப, உன்னிடத்தில் நிகழ்வனவற்றைக் கண்டு என்னுடைய நெஞ்சம் பயப்படமாட்டாது; என்னிடத்தில் குற்றமில்லாமையால் (எ - று.)

ச-வது, **காரிய விலக்கு.**

**நேரிசை வெண்பா**

வ-று. "மன்னவர் சேயா மயிலகவி யாடலும்
பொன்னலருங் கொன்றையும் பூத்தனவின் — மென்மலரும்

இன்னுயிரா நீண்முகிலு மெய்யென்று கொள்வதேல்
என்னுயிரோ வின்னு முளது'' என வரும்.

(இ - ள்.) நம் காதலர் (வினை கருதிச்) சேய்த்தாகிய நாட்டுளாராக, மயிலினங்கள் கூவி யாடுதலும், கொன்றைகள் பொன்போல் மலர்தலும், அழகிய முல்லையின் மிருதுவாகிய மலரும், மின்னலைக் கொடுக்கின்ற நெடிய மேகமுமாகிய இவை மெய்யென்று கொள்வோமாயின், என்னுயிரோ இன்னும் உடலோடு பொருந்தி நின்றது (எ - று.)

இதனுள், காரியம் - உயிரில்லாதாதல். (௯அ)

சரு. வன்சொல் வாழ்த்துத் தலைமை யிகழ்ச்சி
துணைசெயன் முயற்சி பரவச முபாயம்
கையற வுடன்படல் வெகுளி யிரங்கல்
ஐய மென்றுங் குறித்தனர் கொளலே

என்பதும், அவ் விலக் கென்னும் அலங்காரத்தை விரித் துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வன்சொல் விலக்கும், வாழ்த்து விலக்கும், தலைமை விலக்கும், இகழ்ச்சி விலக்கும், துணைசெயல் விலக்கும், முயற்சி விலக்கும், பரவச விலக்கும், உபாயவிலக்கும், கையறல் விலக்கும், உடம்படல் விலக்கும், வெகுளி விலக்கும், இரங்கல் விலக்கும், ஐய விலக்கும் என்று சொல்லிய பதின்மூன்று பாகுபாட்டை யுடைய தென்று அறிந்துகோடலை யுடைத்து அவ் விலக் கலங் காரம் (எ - று.)

அவற்றுள்,

க-வது, **வன்சொல் விலக்கு.**

என்பது, வன்சொற் சொல்லி விலக்குவது.

**நேரிசை வெண்பா**

வ-று. ''மெய்யே பொருண்மேற் பிரிதியேல் வேறொரு
தையலை நாடத் தகுநினக்கு — நெய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைக்
கொள்ள வுழலுமாங் கூற்று'' என வரும்.

(இ - ள்.) ஒருதலையாய்ப் பொருண்மே லாசையாற் பிரிதி யேல்; இப்பொழுதே யுனகொரு மனையாளைத் தேடத் தகுவதா யிருந்தது; நெய்யை யுடைத்தாகிய வேலையுடைய வள்ளலே! நீ பிரிந்த அவகாசதைதைப் பார்தது, அப்பொழுதே யெங்கள் வாழ் நாளைக் கொள்வதாக நினைத்துத் திரியாநின்றது கூற்றம் (எ - று.)

உ-வது, **வாழ்த்துவிலக்கு** என்பது, வாழ்த்திவைத்து விலக்குவது.

### நேரிசை வெண்பா

வ-று. "செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறகக — வெல்லும
அடற்றோர் விடலை யகன்றுறைவ தாங்கோர்
இடத்தே பிறக்க வியாம்" என வரும்.

(இ - ள்.) வென்றியினையும் வலியினையமுடைய தேரினை யுடைய வீரனே! நீ எம்மைப் பிரிந்து போகக் கருதிப் போகும் வழியனைத்தும் உனக்குக் காவலாகிப் பரிகாரஞ் செய்வதாக! நினக்குப் பொருள் வருவாயும் பெருகுவதாக! செல்வம் பெருக! நீ இப்படிப் பிரிந்து நிலையாக நிற்ப தெவ்விடம்? அவ்விடத்தை எங்கட்குச் சொல்லவேண்டும்; நாங்கள் அவ்விடத்தே அறிந்து பிறப்போமாக (எ - று.)

இறக்குங்காலத்து உண்டாய நினைவு இறந்த பின்னர் வந்து ஊட்டு மென்பதனு லறிக.

(கு - ரை) இங்கே ஆக, மல்க, சிறக்க என்று வாழ்த்தி, "விடலை யகன்றுறைவ தாங்கோர் இடத்தே பிறக்க" என்பதனுல் மரணம் சம்பவிக்கும் என்பது பெறப்படக் கூறிச் செல்லுதலை விலக்கியவா றுணர்க.

ங-வது, **தலைமைவிலக்கு** என்பது, தன்பாற் றலைமை தோன்றக் கூறி விலக்குவது.

### நேரிசை வெண்பா

வ - று. "பொய்ம்மை நெறிதீர் பொருளு மிகப்பயக்கும்
எம்முயிர்க்கு மேது மிடரில்லை — வெம்மைதீர்ந்
தேக வினிய நெறியணிய வென்றுநும்
போக லொழிவாய் பொருட்டு" என வரும்.

(இ - ள்.) பொய்யாகிய வழியினைத் தப்புவிக்கின்ற பொருளும் பெரிது உண்டாகும்; எங்களுயிர்க்கும் ஓரிட ருண்டாகமாட்டாது; அவ் வழிநடையும் வருத்தமின்றி இன்பமுண்டாக்கும்; அவ் வழிதானுஞ் சிறுகித் தோன்றுமென்று சொன்னேமே யாயினும் பொருள் கருதிப் போகின்ற போக்கை நீ யொழிவாயாக (எ - று.)

(க - ரை.) இங்கே "எம்முயிர்க்கு மேதமிடரில்லை" என்பதனாலே சுவாதீன நிலைமை தோன்றுமாறு அறிக.

௪-வது, **இகழ்ச்சிவிலக்கு** என்பது, விலக்குதற் கேதுவை யிகழ்ந்து விலக்குவது.

## நேரிசை வெண்பா

வ - று. "ஆசை பெரிதுடையே மாருயிர்மே லப்பொருண்மேல்
ஆசை சிறிது மடைவிலமால் — தேசு
வழுவா நெறியின் வருபொருண்மே லண்ணல்
எழுவா யொழிவா யினி" என வரும்.

(இ - ள்.) தலைமை கெடாதவண்ணம் நல்வழிக்கண்ணே யொழுகுகின்ற பொருள்கருதிப் பிரிகின்ற பெரியோனே! யாம் எங்கள் அரிதாகிய உயிரின்மேல் மிக ஆசையுடையேம்; நீ நினைத்துப் பிரிகின்ற பொருண்மே லாசையுண்டாதற்குக் காரணஞ் சிறிது மிலேம்; ஆதலால், நீ பொருண்மே லேகுவாய்; அன்றி யதனைத் தவிர்வாய்; எங்கள் தன்மை இது (எ - று.)

(க - ரை.) உயிர்மேலன்றிப் பொருள்மேல் எமக்கு விருப்பமில்லை என்பதனால், செல்லுதைக்குக் காரணமான பொருளை இகழ்ந்து கூறிச் செல்லுதலை விலக்கியவாறு அறிக.

௫-வது, **துணைசெயல் விலக்கு** என்பது, துணைசெய்வாரைப் போலக் கூறி விலக்குவது.

## நேரிசை வெண்பா

வ - று. "வினைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெம்
கிளையழுகை கேட்பதற்கு முன்னே — வினைதேன்
புடையூறு பூந்தார் புனைமலராய் போக்கிற்
கிடையூறு வாராம லேகு" என வரும்.

(இ - ள்.) மிகுதியாகிய தேனூறுகின்ற பூமாலையினையும், அலங்கரிக்கப்பட்ட கழலினையு முடைய தலைவனே! நன்மை பயக்கும் பொருண்மேலே போதல் விரும்பினையாயின், எங்கள் சுற்றத்தா ரழுவது கேட்பதற்கு முன்னே யிப்பொழுதே உன்னுடைய போக்கிற்கு விலக்கு வாராவண்ணம் போவாய் (எ - று.)

கூ-வது, **முயற்சி விலக்கு** என்பது, முயற்சி தோன்றக் கூறி விலக்குவது.

## நேரிசை வெண்பா

வ-று. "மல்லணிந்த தோளாய்! இதென்கொலோ வான்பொருண்
செல்க விரைந்தென் றுளந்தெளிந்து—சொல்லுதற்கே [மேற்
என்று முயல்வலியா னேனீ யென்றிடையே
தோன்றுகின்ற தென்வாயிற் சொல்" என வரும்.

(இ - ள்.) வளப்பத்தினையுடைய தோளினையுடையாய்! நீ நன்மை பயக்கும் பொருளின் றிறத்தே கடுகிப் போவாயாக என்று என்னுள்ளமானது கலக்கமறச் சொல்லுவதாக நினைத்துத் தொழிற்படாநின்றது; அச் சொல்லுள்ளே யொருசொற் போகா தொழிவாயாக என்று சொல்லுவதாகத் தோன்றாநின்றது. இஃது என்னாகுமோ? சொல்லுவாயாக (எ - று.)

எ-வது, **பரவசவிலக்கு** என்பது, தன் வசமல்லாமை தோன்றக் கூறி விலக்குவது.

## நேரிசை வெண்பா

வ-று. "செல்லக் திருவுளமேல் யானறியேன் றேங்கமழ்தார்
மல்லகலந் தங்கு மதர்விழியின் — மெல்லிமைகள்
நோக்கு விலக்குமே னோவா ளிவள்காதல்
போக்கி யகல்வாய் பொருட்கு" என வரும்.

(இ - ள்.) இவளைப் பிரிவதே காரியமாகத் திருவுள்ளத் தடைத்துப் பொருட்குப் பிரிவாயானால், அதன்மே லடுக்குங் காரிய மென்னை லறியப்படா தாகலான், நறுநாற்றத்தை யுடைத்தாகிய தாரினையும் வளப்பத்தினையு முடைத்தாகிய நின்னுடைய மார்பின் கண்ணே பிரியாது தங்கப்பட்ட விழியினிடத்து உண்டாகிய மெல்

லியதாகிய இமையானதுவே எம்முடைய தலைவன் மார்பினைப் பார்க்கின்ற பார்வையினை விலக்காநின்றன என்றதற்கு வருந்துந் தன்மையையுடைய இவள், நின்மேல் வைத்த ஆசையினைப் போக்கிப் போவாயாக (எ - று.)

அ-வது, **உபாயவிலக்கு** என்பது, விலக்குவதனை ஒருபாயங் காரணமாக விலக்குவது.

## நேரிசை வெண்பா

வ - று. "இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே யிளவேனில்
மன்னவனுங் கூற்றுவனும் வந்தணைந்தால்—அன்னோர்
தமக்கெம்மைத் தோன்றாத் தகைமையதோர் விஞ்சை
எமக்கின் றருள்புரிந்தே யேகு" என வரும்.

(இ - ள்.) எங்களுடைய இனிய உயிரைக் காக்குந் தன்மையை யுடையையாகிய நீ பிரியக் கருதினையாயின், எங்களிடத்து இளவேனிற்காலத்துத் தலைவனாகிய காமனும், கூற்றுவனும் வந்து சேர்ந்தால் அவர் கண்ணுக்கு நாங்கள் தோன்றாதேயிருப்பதொரு விஞ்சையை யெங்களுக்குத் தந்து போவாயாக (எ - று.)

கூ-வது, **கையறல் விலக்கு** என்பது, தத்தமக்கு வேண்டிய பொருண்மேல் முயலு மொழுக்கமின்மை தோன்றக் கூறுவது.

(கு - ரை.) கையறல் - செய்யாதொழிந்த வினைகளுக்கு வருந்துதல்.

## நேரிசை வெண்பா

வ - று. "வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
ஆர்த்த வறிவில்லை யம்பலத்துக் — கூத்துடையான்
சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழிந்து" என வரும்.

(இ - ள்.) நற்பொருளை விளைத்தற்குக் காரணமாகிய யாதொரு முயற்சியுஞ் செய்யவில்லை; பெரிய தவத்தைத் தேடிக் கொள்ளத்தக்க அறிவுமில்லை; சிதாகாசத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்கின்ற நடேசனுடைய மான்மியத்தைச் சிறிதேனும் நினைக்க வில்லை; ஆதலால், என் வாணாளை வீணாளாக்கிவிட்டேன் (எ - று.)

௧௦-வது, **உடன்படல் விலக்கு**, என்பது, உடன்பட்டார் போல விலக்குவது.

### நேரிசை வெண்பா

வ - று. "அப்போ தடுப்ப தறியே னருள்செய்த
இப்போ திவளு மிசைகின்றாள் — தப்பில்
பொருளோ புகழோ தரப்போவீர் மாலை
இருளோ நிலவோ வெழும் " என வரும்.

(இ - ள்.) குற்றமற்ற பொருளென்ன புகழென்ன இவற்றை யுண்டாக்குதற்குப் பிரிந்துபோவீர்; நீர் பிரிந்த அப்பொழுதே இவளுக்கு அடுப்பதொன்றும் ஒன்று மறியப்படாது; நீர் அருளிச் செய்த பிரிவுக்கு இப்போது இவளும் உடன்படாநின்றாள்; இது கிடக்க, மாலைக்காலம் வந்தபொழுதே அதனோடு இருளோ மதியமோ வருதல்செய்யும்; இதனை நீர் அறிவீர (எ - று.)

கக-வது, வெகுளி விலக்கு என்பது, வெகுளிதோன்றக் கூறி விலக்குவது.

### நேரிசை வெண்பா

வ - று. "வண்ணங் கருக வளைசரிய வாய்புலர
எண்ணந் தளாவே யெதிர்நின்று — கண்ணின்றிப்
போதல் புரிந்து பொருட்காதல் செய்வீரால்
யாதும் பயமிலேம் யாம் " என வரும்.

(இ - ள்.) இவளுடைய நிறங் கருகி வேறுபடவும், கையில் வளையானது சிந்தவும், வாயானது நீரற்று உலரவும, நன்மை யெய்துவதாக நாங்களெண்ணிய வெண்ணமெல்லாம் பழுதாகவும் எங்களெதிரே கண்ணோட்ட மின்றிப் பிரிதல் விரும்பி எங்களை வெறுத்துப் பொருளை ஆசைப்படுவீரானால் இனி எங்களுக்கு ஒரு பயனுமில்லை (எ - று.)

(கு - ரை.) இங்கே தலைவன் பிரியின் வண்ணங் கருகுதல் முதலிய நிகழ, எதிர் நின்று "யாதும் பயமிலேம் யாம்" என்றதனால் வெகுளி தோன்றக் கூறிச் செலவை விலக்கியவாறு அறிக.

கஉ-வது, இரங்கல் விலக்கு என்பது, இரங்கல் தோன்றக் கூறி விலக்குவது.

### நேரிசை வெண்பா

வ - று. "வைச ரொழிலிழக்கு மொப்பு மயிலிழக்கும்
வாசஞ் சுனையிழக்கும் வன்னாலே! — தேசு
பொழிலிழக்கு நாளையெம் பூங்குழலி நீங்க
எழிலிழக்கு மந்தோ விவண் " என வரும்.

(இ-ள்.) எம்முடைய பூவினா லலங்கரிக்கப்பட்ட குழலினை யுடைய இவள் உயிரிழப்பதேயன்றி நாளை ஆடுகின்ற ஊசல்களும் விளையாடற் றொழிலை யிழக்கும்; மயிலும் உவமையை யிழக்கும்; சுனைகளும் நறுநாற்றத்தை யிழக்கும்; பொழிலும் ஒளியை யிழக்கும்; இவ்விடமும் அழகை யிழக்கும்; தலைவனே! இனி யடுத்த வாறு செய் (எ-று.)

௧௩-வது, **ஐயவிலக்கு** என்பது, ஐயற்றதனை விலக்குவது.

நேரிசை வெண்பா

வ-று. "மின்னோ பொழிலின் விளையாடு மிவ்வுருவம்
பொன்னோ வெனுஞ்சுணங்கிற் பூங்கொடியோ—என்னோ
திசையுலவுங் கண்ணுந் திரண்முலையுந் தோளும்
மிசையிருளுந் தாங்குமோ மின்" என வரும்.

(இ-ள்.) இப்பொழிலின்கண்ணே விளையாடுகின்ற இவ் வுருவம், மின்னினது உருவமோ? அன்றியே, பொன்னோ வென்று ஐயுறு நிறத்தையுடைய சுணங்கை யுடைத்தா யிருப்ப தொரு உருவத்தை யுடைத்தாகிய கொடியோ? யாதோ வென்று ஐயுறுகின்ற நெஞ்சமே! திக்கனைத்தும் பரந்து உலாவித் திரி கின்ற கண்ணினையும், திரண்ட முலையினையும், இரண்டு தோளி னையும், தன்மீதே யிருளினையுந் தாங்கி யிருப்பதொரு மின்னு முண்டோ? சொல்லுவாயாக (எ-று.)

(கு-ரை.) இங்கே மின்னோ கொடியோ என்னும் ஐயம், கண் முதலியவைகளை மின் தாங்குமோ என்பதனால் விலக்கப் பட்டது. (௧௩)

## இதுவு மது

**௪௬. வேற்றுப்பொருள் சிலேடை யேதுவென் றின்னவை
மேற்கூ றியற்கையின் விளங்கித் தோன்றும்**

என்பது, இவ்வலங்காரம் பிறவலங்காரங்களோடு கூடி வருமா றுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வேற்றுப்பொருள்வைப்பும், சிலேடையும், ஏதுவும் என்று சொல்லப்பட்டவைகளோடு இவ் விலக்கென்னும் அலங்காரம் கூடி மேற்சொல்லப்பட்ட அலங்காரங்கள் போல வரும் (எ - று.)

அவற்றுள்,

௧—வது, **வேற்றுப் பொருள்வைப்பு விலக்கு.**

**நேரிசை வெண்பா**

வ - று. "தண்கவிகை யாலுலகந் தாங்கு மனபாயன்
வெண்கவிகைக் குள்ளடங்கா வேந்தில்லை—எங்கும்
மதியத் துடனிரவி வந்துலவும் வானிற்
பொதியப் படாத பொருள்" என வரும்.

(இ—ள்.) உள்ளங் குளிர்ந்து தொடுக்கும் கொடையை யுடைய அனபாய சோழனுடைய வெண்கொற்றக் குடைக்கீழ் அடங்காத வேந்தர் எங்கு மில்லை: மதியம், இரவியும் தவழுகின்ற ஆகாயத்தில் அடங்காத பொருளும் எங்கும் இல்லை (எ — று.)

௨—வது, **சிலேடை விலக்கு.**

**நேரிசை வெண்பா**

வ - று. "அம்போ ருகஞ்செற் றமுத மயமாகி
வம்பார் முறுவ லொளிவளர்க—இம்பர்
முகைமதுவார் கோதை முகமுண் டுலகின்
மிகைமதியும் வேண்டுமோ வேறு" என வரும்.

(இ - ள்.) தாமரையினது அழகை யழித்து, அமிருதத் தன்மைத்தாய்ப் புதுமையோடு கூடி விரியாநின்ற ஒளியை யுடைத்தாதற்கு, முல்லை முகைகளையுடைய கோதையை யுடை யாளுடைய முகமல்லது, தாமரையைக் கருகுவித்து அமிருத கலைகளா லியன்ற வடிவுடைத்தாய்ச் செவ்வி தாராநின்ற வொளி நிலாவிரி மதி உலகத்திற்கு மிகை (எ - று.)

இது, முகத்திற்கும் மதிக்குஞ் சிலேடை.

௩—வது, **ஏதுவிலக்கு.**

**நேரிசை வெண்பா**

வ — று. "பூதலத்து ளெல்லாப் பொருளும் வறியோர்க்
காதலித்தார் தாமே கவர்தலால் —நீதி

அடுத்துயர்ந்த சீர்த்தி யனபாயா! யார்க்கும்
கொடுத்தியெனக் கொள்கின் றிலேம்" என வரும்.

(இ - ள்.) பூமண்டலத்துள்ளே வறிஞராய் ஆசைப்பட்டார் யாவரும், தாம் ஆசைப்பட்ட பொருள்களைத் தடையின்றித் தாமே யெடுத்துக்கொள்ளுகின்றா ராதலால், நீ யுலகத்து வறியோர்க்குக் கொடுக்கின்றாயாக நினைக்கின்றிலோம்; நீதியைச் செய்தலாலே உயர்ந்த கீர்த்தியையுடைய அனபாயனே (எ - று.) (௨௦)

## ௭. வேற்றுப்பொருள் வைப்பணி

௬௭. முன்னொன் றுதொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை யுலகறி பெற்றி
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்
[பொருள் வைப்பே.

(இ - ள்.) முன் ஒரு பொருட்டிறந் தொடங்கிப் பின்னர் அது முடித்தற்கு வலியுடைய பிறிதொரு பொருளை உலகறி பெற்றியான் வைத்து மொழிவது வேற்றுப்பொருள் வைப்பென்னும் அலங்காரமாம் (எ - று.)

இதன் அகலம் உரையிற் கொள்க. (௨௧)

௬௮. முழுவதுஞ் சேற லொருவழிச் சேறல்
முரணித் தோன்றல் சிலேடையின் முடித்தல்
கூடா வியற்கை கூடு மியற்கை
இருமை யியற்கை விபரீதப் படுத்தலென்
றின்னவை யெட்டு மதனா தியல்பே

என்பது அவ்வலங்காரத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முழுவதுஞ் சேறலும், ஒருவழிச் சேறலும், முரணித் தோற்றலும், சிலேடையின் முடித்தலும், கூடாவியற்கையும், கூடுமியற்கையும், இருமையியற்கையும், விபரீதப்படுத்தலும் என எண் வகையான் வரும் அவ்வலங்காரம் (எ - று.)

அவற்றுள்,

௧-வது முழுவதுஞ் சேறல் என்பது, ஒருதிற முறைத்தால் அத்திற மெல்லாவற்றின்மேலும் முற்றச் செல்ல வுரைப்பது.

நேரிசை வெண்பா.

வ - று. " புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார் " என வரும்.

(இ - ள்.) இருள் புறங்காட்டி ஓடும்படி அழகிய சக்கரத்தைச் செலுத்திச் சிறந்த ஒளியை வளர்க்குந் தேரை உடையவனாகிய சூரியன் மறைந்தான்; புறத்தே கடலாற் சூழப்பட்ட இவ்வுலகில் இறவாமல் வாழ்பவர் யார்? (எ - று.)

சேறல்-செல்லுதல்.

௨-வது, ஒருவழிச் சேறல் என்பது, ஒரு திற முறைத்தால் அத்திறமெல்லாவற்றின்மேலும் முற்றச் செல்லாது, சிலவற்றின் மேலே சென்றொழிவது.

(கு - ரை) ஒரு வழி - சிலவிடம்.

நேரிசை வெண்பா

வ - று. " எண்ணும் பயன்றாக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்கும்—மின்னுறுந்தேன்
பூத்தளிக்குந் தாராய் ! புகழாளர்க் கெவ்வுயிரும்
காத்தளிக்கை யன்றோ கடன் " என வரும்.

(இ - ள்.) திருமால் (பிறரால்) கருதப்படும் பயனொன்றையும் (தன் பொருட்டாக) நினையாமல், யாவர்க்கும் வரையறை இல்லாமல் கருணையை வளர்ப்பன்; குளிர்ந்த நல்ல தேனை மலர்ந்து கொடுக்கின்ற (மலர்) மாலையை உடையவனே ! புகழையுடையவர்களுக்குக் கடமையாவது எல்லா உயிர்களையுங் காத்தளிப்ப தல்லவா? (எ - று.)

வாமன் என்பது அருகன், சிவன் ஆகிய இவர்கட்கும் பெயராய் வழங்கும்.

௩-வது, முரணித்தோன்றல் என்பது, தம்முள் மாறுபட்டிருக்கும் இயல்புடைத்தாய பொருள் வைப்பது.

### நேரிசை வெண்பா

வ-று. "வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்ய முகிறன்னைப் பேணுவரால்—வையத்
திருள்பொழியுங் குற்றம் பலவரினும் யார்க்கும்
பொருள் பொழிவார் மேற்றே புகழ்" என வரும்.

(இ - ள்.) கொடிய இடியோசையைத் தோற்றுவித்தது (அதற்குக் காரணமான) மிக்க உக்கிரமான இடியை உட்கொண்டிருந்தாலும், மழை பொழியு மேகத்தை யாவரும் விரும்புவர்; யாவர்க்கும் புகழ்தல், இருளினது தன்மை மிக்க பல குற்றங்கள் உளவாயினும் பொருளைச் சொரிவார் மேலதே யாம் (எ - று)

இதில் ஈகைக்கும் கடுங்குரல் முதலியவற்றிற்கும் மாறுபாடு இருத்தலைக் காண்க.

ச-வது, சிலேடையின் முடித்தல் என்பது, முன்னர் வைத்த பொருளையும், பின்னர் வைத்த பொருளையும், ஒரு சொற் றொடர்பாற் சொல்லுவது.

### நேரிசை வெண்பா

வ - று. எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் வாட முறுவலிக்கும்—முற்று
முடியாப் பரவை முழங்குலகத் தென்றுங்
கொடியார்க்கு முண்டோ குணம்" என வரும்.

(இ - ள்.) முல்லைக் கொடியானது தன்னை வளர்த்தெடுத்த (தொழில்) முதிர்ந்த ஆபரணங்களை அணிந்த தலைவி மனம் வாடும்படி செய்யாநின்றது; என்றும் அழியாத கடல் முழங்கிக்கொண்டிருக்கும் இவ்வுலகத்திற் கொடியவர்களுக்குக் குணமுண்டோ? (எ - று.)

இதில் கொடியார் என்றது முல்லைக் கொடிகளையும், கொடியவர்களையும் உணர்த்தியது. இதனுள் கொடுமை யுடையார்க்கும் கொடிக்குஞ் சிலேடை வந்தவாறு காண்க.

ரு-வது, கூடா வியற்கை என்பது, கூடாததனைக் கூடுவதாக்கிக் கூறுவது.

### நேரிசை வெண்பா.

வ — று. "ஆர வடமு மதிசித சந்தனமும்
ஈர நிலவு மெரிவிரியும்—பாரில்

துதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம்
விதிவகையான் வேறு படும்''   என வரும்.

(இ - ள்.) (குளிர்ந்த) முத்து மாலையும், மிக்க குளிர்ச்சியாகிய சந்தனமும், குளிர்ந்த நிலவும் (காதல் நோயை யடையார்க்கு) அழலின் தன்மையை விரிக்கின்றன; இப்பூமியின்கண் துதித்தற் குரிய வகையினான் மேம்பட்ட அனுபவப்பொருள்களும், தமது தமது விதியினாய வகையினால் மாறுபடுவனவாம் (எ - று.)

இதனுள் குளிர்ச்சியாகிய முத்துமாலை முதலியவற்றில் அழலின் தன்மையாகிய கூடாததனைக் கூடுவதாக நியாயங்காட்டி நாட்டினமை யுணர்க.

௪-வது, கூடுமியற்கை என்பது, கூடுவதனைக் கூடுவதாகக் கூறுவது.

## நேரிசை வெண்பா

வ - று. ''பொய்யுரையா நண்பர் புனைதேர் நெறிநோக்கிக்
கைவளைசோர்ந் தாவி கரைந்துகுவார்—மெய்வெதும்பப்
பூத்தகையுஞ் செங்காந்தள் பொங்கொலிநீர் ஞாலத்துத்
தீத்தகையார்க் கீதே செயல்''   என வரும்.

(இ - ள்.) எக்காலத்தும் பொய்பேசாத காதலரது தேர் வரும் வழியைப் பார்த்துக்கொண்டு கையினின்று வளையல் கழன்று வீழ, உயிர் நைந்து வருந்துகின்ற பெண்களினுடைய உடல் வெதும்பும்படி செங்காந்தட் பூக்கள் மலர்ந்து வருத்தாநின்றன; மிக்க ஒலியினையுடைய பூமியில் தீக்குணம் உடையவர்களுக்கு இது தான் செயல் (எ - று.)

தீத்தகையார் - தீக்குணமுடையார்; தீப்போலும் நிறத்தினை உடைய காந்தட் பூக்கள்.

௭-வது, இருமை யியற்கை என்பது, கூடாததனையும் கூடு வதனையும் ஒருங்கு கூறுவது.

## நேரிசை வெண்பா

வ - று. '' கோவலர்வாய் வேய்ங்குழலே யன்றிக் குரைகடலும்
கூவித் தமியோரைக் கொல்லுமால்—பாவாய்!

பெரியோரும் பேணாது செய்வாரே போலும்
சிறியோர் பிறர்க்கியற்றுந் தீங்கு'' என வரும்.

(இ - ள்.) பாவையைப் போன்ற பெண்ணே! இடையர்கள் வாயின் புல்லாங்குழலே யல்லாமல் ஒலிக்கின்ற கடலும் கந்தித தலைவர்களைப் பிரிந்திருக்கின்ற மாதர்களைக் கொல்லுகின்றது; சிறியோர் பிறர்க்குச் செய்யுந் தீமையைப் பெருந்தன்மையினை யுடையாரும் விசாரியாமற் செய்வார்போற் றேன்றுகிறது (எ-று.)

பாவை - பதுமை. இதில் சிறியோர் பிறர்க்கு விசாரியாமல் தீங்கு செய்தலாகிய கூடுமியற்கையும், பெரியோர் பிறர்க்கு விசாரி யாமல் தீங்குசெய்தலாகிய கூடாமையும் ஒருங்கு வந்தன.

அ-வது, விபரீதம் என்பது, விபரீதப்படச் சொல்லுவது.

நேரிசை வெண்பா.

வ - று. ''தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றங் கடிந்தான்—உலகிற்
றனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேற் றப்பாம்
வினையும் விபரீத மாம்'' என வரும்.

(இ - ள்.) எல்லா உயிர்களையும் படைத்த பிரமன் தலையை இழந்தான்; தந்தையைக் கொன்ற சண்டேசன் குற்ற நீங்கினான்; உலகத்தில் ஒப்பற்ற மேன்மையைக் கொண்டுயர்ந்துள்ளோர் நினைத்தால் நல்வினை தீவினைகளின் பயனு மாறுபடும் (எ - று.)

இதனுள், நல்வினைப் பயன் தீதாகவும், தீவினைப் பயன் நன்மையாகவும் வந்து விபரீதமானது காண்க. (௨௨)

## அ. வேற்றுமையணி

௪௯. கூற்றினுங் குறிப்பினு மொப்புடை யிரு [பொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே.

என்பது, நிறுத்தமுறையானே வேற்றுமை யென்னு மலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கூற்றினானுதல், குறிப்பினானுதல், ஒப்புடைய இரு பொருளை ஒரு பொருளாக வைத்து இவற்றைத் தம்முள் வேற் றுமைபடச் சொல்லுவது வேற்றுமை யென்னு மலங்காரமாம்.

'வேற்றுமை' என்றது 'அதுவே' என்ற மிகையால், அவை யொருபொருளான் வேற்றுமை செய்தலும் இருபொருளான் வேற்றுமை செய்தலும் உடையன. அல்லதூஉம், அவ்விலேசானே வேற்றுமைபடக் கூறுதலுமன்றி, ஒன்றின் ஒன்று மிகுதிபடக் கூறவும்படும்.

### க-வது, ஒருபொருள் வேற்றுமைச் சமம்.

#### நேரிசை வெண்பா

வ-று. "அனைத்துலகுஞ் சூழ்போ யரும்பொருள் கைக்கொண்டு
இனைத்தளவைத் தென்றற் கரிதாம்—பனிக்கடல்
மன்னவநின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற்
றென்னு மிதுவொன்றே வேறு" என வரும்.

(இ - ள்.) மன்னவனே! உலக முழுதுஞ் சூழ்ந்து அரிய பொருள்களைத் தன்பாற் கொண்டு இவ்வளவினதென்று அறிதற்கரிதாகிய குளிர்ந்த கடலானது, பகைவர்களின் நாடுகளையெல்லாஞ் சூழ்ந்து அந்நாட்டரசர்களின் அரிய பொருள்களையெல்லாங் கைக்கொண்டு இவ்வளவினதென்று அறிதற்கரிதாயுள்ள உனது சேனையைப்போன் றிருக்கின்றது; (ஆனால்) அது நீர் வடிவினது என்னும் இவ்வொரு குணமாத்திரந்தான் வேறுபட்டிருக்கின்றது (எ - று).

'போலும்' என்பது ஈற்றயல் உகரங் கெட்டுப் 'போன்ம்' என நின்றது; இதன் ஈற்று மகரமெய் வருமொழி முதலில் மெல்லினம் வரக்கெட்டு, 'போன் மற்றது' என நின்றது. இச்செய்யுளில் முன்னிரண்டடியுஞ் சிலேடை. இதில் சேனை, கடல் என்னும் இரு பொருளுக்கு வெளிப்படையாக ஒப்புமை கூறிப் பிறகு கடல் என்னும் ஒரு பொருளுக்கு, 'நீர் வடிவிற்று' என்னும் வேறுபாடு கூறினமையான் ஒரு பொருள் வேற்றுமையாயிற்று. அவ்விரண்டிற்கும் உயர்வு தாழ்வு தோன்றாமையாற் சமமாயிற்று.

### உ-வது, இருபொருள் வேற்றுமைச் சமம்.

#### நேரிசை வெண்பா

வ-று. "சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள்—ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு" என வரும்.

(இ - ள்.) போய்க் காதை அளவிடுஞ் செம்மையை உடையனவாய், மனத்தில் தங்கியமாத்திரத்தில் அளவில்லாத இன்பததை நிறையச் செய்வனவற்றுள், ஒன்று மலர்கள் பொருந்திய கூந்தலை உடைய பெண்களின் அழகிய கண்ணுகும்; ஒன்று மலரி என்னும் ஊரில் தோன்றிய கூத்தன் என்னும் இயற்பெயரை உடைய புலவரது கவியாகும் (எ - று.)

மலரிவரும் என்னுஞ் சொற்கள் இரண்டனுள் முதலதை மலர்+இவரும் எனவும், இரண்டாவதை மலரி+வரும் எனவும் பிரிக்க. இச் செய்யுளில் முன்னிரண்டடிகளால் (வெளிப்படையாக) இருபொருள்களுககு ஒப்புமை கூறிப் பிறகு 'ஒன்று மாதர் நோககு, ஒன்று கூத்தன்றன் கவி', என அவ்விரு பொருள்களுக்கும் வேறுபாடு கூறினமையின் இஃது இருபொருள் வேற்றுமையாயிற்று. அவ்விரு பொருள்களுக்குள் உயர்வு தாழ்வு கூருமையின் சமமாயிற்று. இதனுள், ஒன்று கண்ணுகவும், மற்ருென்று கவியாகவும் நின்றவாறு கண்டுகொள்க. மலரி யென்பது ஒரூர்.

௩-வது, உயர்ச்சி வேற்றுமை.

உபமானத்தினின்றும் உபமேயததிற்கு உயர்ச்சியாகிய வேற்றுமை சொல்லப்படுவது உயர்ச்சி வேற்றுமையாகும்.

நேரிசை வெண்பா

வ - று. ''மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும்—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்'' என வரும்.

(இ - ள்.) மிக்க தேர்ச்சேனையை உடைய (எம்முடைய) அரசனது கச்சிப்பதியும், பெரிய கடலும் தமக்குள் ஒலியினுலும் பெருமையினுலும் ஒப்பனவாம்; (ஆனல்) மிக்க தேர்ச்சேனையை உடைய எம்முடைய அரசனது கச்சிப்பதியில் உண்டாவன வெல்லாங் கடலில் உண்டாகா; கடலில் உண்டாவன வெல்லாங கச்சிப்பதியில் உண்டாம் (எ - று.)

இச் செய்யுளில் முன்னிரண்டடிகளால் ஒலியாலும் பெருமையாலும் வெளிப்படையாகக் கச்சிக்கும், கடலுககும் ஒப்புமை கூறிப் பிறகு கடலினுங் கச்சிக்கு உயர்வு கூறினமை காண்க. இவை கூற்று வேற்றுமை. (கூற்று-சொல்.)

௫-வது, இருபொருள் வேற்றுமைச் சமம்.

நேரிசை வெண்பா

வ-று. "கார்க்குலமும் பாய்திரையுங் காட்டும் கடல்படையும்
போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமால் — ஏற்ற
கலமுடைத்து முந்நீர் கதிராழித் திண்டேர்
பலவுடைத்து வேந்தன் படை" என வரும்.

(இ - ள்.) கடலானது மேகக் கூட்டங்களையும் கரையிற் பாய்கின்ற அலைகளையும் (தன்பாற்) காட்டும்; (எம்முடைய) அரசனது சேனையிலும், போர்க்குரிய ஆண் யானைகளும், பாய்ந்து செல்லும் குதிரைகளு மிக்கிருக்கும்; கடல் தனக்கேற்ற மரக்கலத்தைக் கொண்டிருக்கின்றது; எம்முடைய அரசனது சேனை, ஒளியினை உடைய சக்கரங்களையும் வன்மையினையும் உடைய பல தேர்களைக் கொண்டிருக்கின்றது (எ - று.)

'ஏற்றுகலம்' எனவும் பாடமுண்டு; இப்பாடத்திற்குப் 'பல பொருள்களையும் ஏற்றுதற்குரிய மரக்கலம்' என்று பொருள் கொள்க. இச் செய்யுளில் கார்க்குலத்தையும், பாய்திரையையும் உடைய கடலுக்கும், போர்க்களிற்றையும் பாய்மாவையும் உடைய சேனைக்கும் (குறிப்பாக) ஒப்புமை கூறிப் பிறகு அவ்விருபொருள்களுக்கும் வேறுபாடு கூறினமையின், இஃது இருபொருள் வேற்றுமை யாயிற்று. அவ்விரு பொருளுக்கும் உயர்வு தாழ்வு கூறாமையின் சம மாயிற்று.

௬-வது, உயர்ச்சி வேற்றுமை.

நேரிசை வெண்பா

வ-று. "பதுமங் களிக்கு மளியுடைத்துப் பாவை
வதன மதர்நோக் குடைத்துப் — புதையிருள்சூழ்
அப்போ தியல்பழியு மம்போ ருகவதனம்
எப்போது நீங்கா தியல்பு" என வரும்.

(இ - ள்) தாமரைமலர் (தன்பால்) களிக்கின்ற வண்டுகளை உடையது; (எமது) மாதின் முகம் மதர்த்த கண்களை உடையது; (ஆனால்) தாமரைமலர் (உலகத்தை) மறைக்கும் இருள்சூழும் இராக் காலத்தில் தன்னியல்பு கெடும்; (எமது) மாதின் முகம் எப்போதுந் தன்னியல்பு கெடாது (எ - று.)

பதுமம், அம்போருகம் - தாமரை. இச் செய்யுளில் களிக்கும் வண்டுகளை உடைய தாமரைக்கும், மதர்த்த கண்களை உடைய முகத்துக்கும் (குறிப்பால்) ஒப்புமை கூறிப் பிறகு தாமரையினும் முகத்திற்கு உயர்வு கூறினமை அறிக.

இவை குறிப்புவேற்றுமை. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. (உரு)

௫௰. அதுவே,

குணம்பொருள் சாதி தொழிலொடும் புணரும்.

என்பது அவ்வலங்காரத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அவ்வேற்றுமை யென்னும் அலங்காரம் குணத்தோடும், பொருளோடும், சாதியோடும், தொழிலோடும் கூடியும் வரும் (எ - று.)

அவற்றுள்,

க-வது, **குணவேற்றுமை.**

**நேரிசை வெண்பா**

வ - று.

"சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானுங்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார்-பொற்றொடியே!
ஆழி யுடையான் மகன்மாயன் சேயனே
கோழி யுடையான் மகன்" என வரும்.

(இ - ள்.) காமனும், சோழனும் தம்மில் நிறமொவ்வார். பொன்னாற் செய்த வளையலை யுடையவளே! சக்கரத்தை யுடையனாகிய மாயனுடைய மகனாகிய காமன் கறுத்திருப்பான்; கோழி யென்னும் ஊரையுடையவனாகிய சோழனுடைய மகன் சிவந்திருப்பான் (எ - று.)

௨-வது, **பொருள் வேற்றுமை.**

**நேரிசை வெண்பா**

வ - று. "ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்

மின்னோர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்'' என வரும்.

(இ-ள்.) உதயமலையிற் றோன்றி, மேன்மக்கள் தொழுதேத்த விளங்கி, இரைந்தொலிக்கும் கடல்சூழ்ந்த உலகத்திருள் அகற்றுவதாயும், பொதியமலையிற் றோன்றி, அறிவுடையோர் தொழுதேத்தவிளங்கி, இரைந்தொலிக்கும் கடல்சூழுலகத்தில் மக்களுள்ளத்து உள்ள மயக்கந் தீர்க்கப்பட்டதாயு மிருக்கின்றவற்றுள் ஒன்று ஒளியும் அழகும் தனிக்காற்றேரும் விரும்பும் வெயிலு முடைய ஆதித்தன்; ஏனையது, தனக் கொப்பற்ற தமிழ் (எ - று.)

ந-வது, சாதி வேற்றுமை.

நேரிசை வெண்பா

வ - று. ''வெங்கதிர்க்குஞ் செந்தீ விரிசுடர்க்கு நீங்காது
பொஃகு மதியொளிக்கும் போகாது—தங்கும்
வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்
கிளமையான் வந்த விருள்'' என வரும்.

(இ - ள்.) சூரியனுக்கும் விளக்குக்கும் நீங்காது; மதியொளிக்கும் போகாதே நிற்கும்; இளமைப் பருவத்தில் செல்வக்களிப்பான் வந்த அறியாமையாகிய இருள் (எ - று)

(கு - ரை.) இங்கே மருட்சி, இருள் என்னும் இரண்டும் இருளென்னும் ஒரு சாதியாதல்பற்றி ஒன்றாக வைதது வேற்றுமை சொல்லப்பட்டவாறு அறிக.

ச-வது, தொழில் வேற்றுமை.

நேரிசை வெண்பா

வ - று. ''புனனாடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையான் வேறு படுவர்—புனனாடன்
ஏற்றெறிந்து மாற்றலர்பா லெய்தியபார் மாயவன்
ஏற்றிரந்து கொண்டமையி னால்'' என வரும்.

(இ - ள்.) நீர்நாடர் கோமானாகிய சோழனும், பொலிவினையுடைய துளசிமாலையை யணிந்த மாயனும் தொழிலான் வேறுபட்டிருப்பர்; சோழன் பகைஞர் எறிந்த வேலைத் தன்மீது ஏற்றும்,

தனது வேலைப் பகைஞர்மேலெறிந்துங் கைக்கொண்ட உலகை, மாயத்தையுடைய திருமால் நீரேற்றும் இரந்துங் கொண்டமையி னால் (எ - று.)

அஃதேல் மேற் காட்டியவற்றுள் இந் நான்கும் ஒழித்துக் காட்டியன உளவோ வெனின், இல்லை. இச் சூத்திரம் வேண்டா கூறினார்; வேண்டியது முடித்தற்கு. மற்றும் வேண்டியதியாதோ வெனின், இவ்வலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடிவருவன கோடற்கு என்றது. என்னை?

"விலக்கியல் சிலேடையின் மேவவும் பெறுமே" என்றலின்.

அவை வருமாறு :—

க-வது, **விலக்கியல் வேற்றுமை.**

நேரிசை வெண்பா

வ - று. "தம்மாற் பயன்றூக்கா தியாவரையுந் தாங்கினும்
கைம்மாறுங் கால முடைத்தன்றே—எம்மாவி
அன்னவனை யாழி யனபா யனையலராள்
மன்னவனை மானுமோ வான்" எனவரும்.

(இ - ள்) உலகத்தாராற் பயனை விரும்பாது யாவரையுந் தாங்கினும் மேகம் கைம்மாறுங் காலவரைவுமுடைத்து; ஆதலால், கைம் மாறுங் காலவரைவு மின்றிக் கொடுக்கின்ற எம்முடைய உயிரை ஒத்தவனை, அனபாயனைத் திருமகளுக்கு நாயகனை மேகம் ஒக்குமோ (எ - று.)

(கு - ரை.) இங்கே சோழனுக்கும் முகிலுக்கும் வேற்றுமை விலக்கோடு கூடிவந்தது.

உ-வது., **சிலேடை வேற்றுமை.**

நேரிசை வெண்பா

வ-று. "ஏறடர்த்து வின்முருக்கி யெவ்வுலகுங் கைக்கொண்டு
மாறடர்த்த யாழி வலவனை—நாறெழுதற்
கெஞ்சினா ரில்லெனினு மாய னிகரெனுமால்
வஞ்சியா னீர்நாட்டார் மன்" எனவரும்.

(இ-ள்.) விடை தழுவி, வில்லிறுத்து, மூன்றுலகும் அளந்து கைக்கொண்டு, பகைஞரைத் தொலைத்த சக்கரத்தையுடைய மாலை, உலகத்துள்ளார் யாவரும் வணங்குவா ரெனினும் மாயனென்று சொல்லப்படுவான். பாண்டியனுடைய சுறவேற்றுக் கொடியை யழித்துச் சேரனுடைய விற்கொடியைச் சிதைத்து எல்லா நாட்டையுங் கைக்கொண்டு தன்னோ டொப்பார் உலகத்திலில்லை யெனச் சக்கரம் செலுத்திய சோழனைத் தொழுதற்கு ஒழிந்தா ரில்லை யென மாயனோடு ஒப்பித்துச் சொல்லினும, சோழன், வஞ்சியான் [கரு ஆருடைமையின்) (எ - று.)

ஏறென்பது முன்மொழி கெட்ட பின்மொழி நிலையல். 'ஏற்றுக் கொடி' என்றதற்குக் 'காடவர்கோன் கொடி' என்று கூறுவாரு முளர். (உ_ரு)

## கூ. விபாவனை யணி

ருக. உலகறி காரண மொழித்தொன் றுரைப்புழி
வேறொரு காரண மியல்பு குறிப்பின்
வெளிப்பட வுரைப்பது விபாவனை யாகும்.

(இ - ள்) ஒன்றன் வினை யுரைக்குங்கால் அவ்வினைக்குப் பலரு மறிய வருங் காரண மொழிந்து பிறிதொரு காரணமாக இயல் பாகக், குறிப்பின் வெளிப்பட வுரைப்பது, விபாவனை யென்னும் அலங்காரமாம் (எ - று)

விபாவனை- விசேடமாக வெண்ணுதல். குறிப்பின் வெளிப் படல் - சிந்தித்தாராய்தலினாலே வெளிப்படுதல்.

அவற்றுள், க-வது, அ:பர்நார்ண விபாவனை.

### நேரிசை வெண்பா

வ - று. ''தீயின்றி வேந்தமியோர் சிந்தை செழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும்—வாயிலார்
இன்றிச் சிலரூட றீர்ந்தா ரமரின்றிக்
கன்றிச் சிலைவளைக்குங் கார்'' என வரும்.

(இ - ள்.) இணை தணந்து தனிப்பட்டிருக்கும் விரகிகளது உள்ளமானது, அங்கினியில்லாமலே வேம்; மயில்கள், செழுமையான

மதுவை வாயிற் கொள்ளாமலே களிப்புற் றாடும்; சிலர் (மாதர்) ஊடல் தீர்ப்பாரில்லாமலே பிணக்கொழிந்தார்கள்; கொண்டலானது, யுத்தமில்லாமலே வெகுண்டு (நறுத்து) வில்லை வளைக்கும் (எ - று.)

தமியோர் - தனிப்பட்டவர். மஞ்ஞை - மயில். தூங்குதல் - ஆடுதல். வாயிலார் - ஊடல் தணிப்போர். கன்றல் - கறுத்தல். சிலை - வில். அதாவது: இந்திரதனுசு. கார் - கார்காலம்; நாண், வேதல் முதலியவற்றிற்கு உலகறி காரணமாகிய நெருப்பு முதலியவைகளை நீக்கக் கார்ப்பருவ மென்பதாகிய வொரு காரணம் ஊகிக்கப்படுதலால், இஃது அயற்காரண விபாவனை யாயிற்று. காரெனக் கூறினும் அது காலநாதை யுணர்த்தாமையின் ஊகிக்கப்படுவதே யாம்; அயற்காரணம் - பிறிதொரு காரணம்; வேறொரு காரண விபாவனை எனினு மமையும்.

உ-வது, **இயல்பு விபாவனை.**

### நேரிசை வெண்பா

வ - று. "கடையாமே கூர்த்த கருநெடுங்கண் டேடிப்
படையாமே யேய்ந்ததனம் பாவாய்!—கடைகுழிரக்
கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே
ரூட்டாமே சேந்த வடி" என வரும்.

(இ - ள்.) சித்திரப் பாவை போன்ற பெண்ணே! உன்னுடைய நீட்சி பெற்ற கரிய கடைக்கண்கள், எவரும் கடைதல் செய்யாமலே கூர்மையைக் கொண்டன; தனங்கள், ஆராய்ந்து செய்யாமலே தக்க உருவத்தோடு பொருந்தின; புருவங்கள், கடைப்பாகம் கோடி அழுங்கும்படி வளைக்கப்படாமலே வளைவுற்றன; அடிகள், சாதிலிங்கக் குழம்பில் தோய்க்கப்படாமலே சிவப்புற்றன (எ - று.)

கடை - கோடி. குழிர்தல் - வளைதல். கோட்டுதல் - வளைத்தல். குலிகம் - சாதிலிங்கம். சேத்தல் - சிவத்தல். ஈண்டுக் கடைதல் முதலிய காரணத்தை நீக்கக் கூர்த்தல் முதலாகிய காரியங்களை இயற்கையாக அமைந்தன வென ஊகிக்கப்படுதலால், இஃது இயல்பு விபாவனை யாயிற்று. இதனைக் குறிப்புக்காரண விபாவனை யென்றும், அயற் காரண விபாவனையை இயல்பு காரண விபாவனை யென்றும் கூறுப.

'வியாவினை' என்னாது 'ஆகும்' என்றதனால், வினை யெதிர் மறுத்துப் பொருள் புலப்படுப்பினும், பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பினும் அவ்வலங்காரமா மென்க.

அவற்றுள், க-வது, **வினை யெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்துவது.**

நேரிசை வெண்பா

வ - று. "பூட்டாத விற்குனித்துப் பொங்கு முகிலெங்கும்
தீட்டாத வம்பு சிதறுமால்— ஈட்டமாய்க்
காணாத கண்பரப்புந் தோகை கடும்பழிக்கு
நாணா தயர்த்தார் நமா" என வரும்.

(இ - ள்.) அதிர்ந்தெழுந்த மேகங்கள், நாரி பூட்டப்படாத வில்லை வளைத்து, (அதாவது: இந்திரதனுசைத் தன்னிடத்திலே கொண்டு) கூர்மையாக்கப்படாத அம்புகளை (அதாவது: மழைத்துளிகளை) எத்திசையிலும் பொழிகின்றன; மயில்கள் கூட்டமாகிக் காணாத கண்களை (அதாவது: பீலியிலுள்ள கண்களை)ப் பரப்புகின்றன; (இத்தகைய கார்காலத்திலே தணந்த யாம் இறந்துபடுத லுளதாம்) கடுமையாகிய பழிக்கு நாணாமல் நம் தலைவர் நம்மை மறந்தார் (எ - று)

பூட்டாத வில்-வானிடு வில். குனித்தல் - வளைத்தல். தீட்டுதல் - கூராக்குதல். தீட்டாத அம்பு-மழைத்துளி. அம்பு-நீர். ஈட்டம்-கூட்டம். பீலிக்கண்-மயிற்றோகையிலுள்ள கண். நமர்-நம்மவர்.

இது, கார்ப்பருவத்தில் வருவதாகச் சொல்லிக் காலங் குறித்துச் சென்ற தலைவன், அப்பருவங் குறுகிய பின்னரும் வாரானாக, அது குறித்துக் கவலும் தலைவி இரக்கமுற்றுக் கூறுங் கூற்று. ஈண்டு, பூட்டாத, தீட்டாத, காணாத என்றவற்றால் வில், அம்பு, கண் என்பவற்றின் வினையை எதிர்மறுத்து, இந்திரவில், நீர், பீலிக்கண் என்பவற்றின் பொருளைப் புலப்படுத்தியமை யுணர்க.

உ-வது, **பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்துவது.**

**நேரிசை வெண்பா**

வ - று. "காரண மின்றி மலயா நிலங்கனலும்
ஈர மதிவெதும்பற் கென்னிமித்தம்—காரிகையார்க்

கியாமே தளர வியல்பாக நீண்டனகண்
தாமே திரண்ட தனம்" என வரும்.

(இ - ள்.) பொதிகையி லிருந்து வருந் தென்றற் காற்றானது, காரணமில்லாமலே வெதுப்புகின்றது; இயல்பிற் குளிர்ச்சியை யுடைய சந்திரன், இப்போது தகித்தற்குக் காரணமி யாது? யாம் தளர்வுறுமாறு இவ்வழகிய மாதர்களுக் காரணமில்லாமலே கண்கள் இயல்பாக நீண்டுள்ளன; தனங்களும் காரணமில்லாமல் இயல் பாகவே திரட்சிபெற்றன (எ - று.)

நிமித்தம் - காரணம். மலயாநிலம் - பொதிகையி லிருந்து வரும் காற்று; அஃதாவது தென்றல். மலயம்-மலை; இது பொதிகை மலையை யுணர்த்தும். அநிலம் - காற்று. காரிகை - அழகு.

ஈண்டு, கனலல், வெதுப்பல், நீளல், திரளல் என்பவற்றின் காரணங்களைப் பொதுவாக விலக்கி அக் காரியங்களைக் கூறியமை யுணர்க.

## வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்தல்

### நேரிசை வெண்பா

வ - று. "பாயாத வேங்கை மலரப் படுமதமா
பூவாத புண்டரிக மென்றஞ்சி—மேவும்
பிடிதழுவி மாறதிருங் கானிற் பிழையால்
வடிதவழும் வேலோய் வரவு" என வரும்.

(இ - ள்.) கூர்மை பெற்ற வேலாயுதத்தை யுடையாய்! பாயாத வேங்கை (வேங்கைமரமானது) மலர, அதனை மலராத புண்டரிகமென்று (அஃதாவது: புலியென்று) நினைத்து அச்ச முற்றுத் தம்மிடத்திற் சாரும் பெட்டை யானைகளை, மதம் பொருந்திய ஆண் யானைகள் தழுவிக்கொண்டு அப் புலியினுக்கு மாறாகக் கர்ச்சனை புரிகின்ற கானகத்தில் நீ இரவில் தனித்து வருதல் தவறாகும் (எ - று.)

பாயாத வேங்கை - வேங்கை மரம். பாயும் வேங்கை - புலி. பூவாத புண்டரிகம் - புலி. பூக்கும் புண்டரிகம் - தாமரை. ஆல்-அசை. வடி-கூர்மை. பிடி - பெண்யானை. வரவு - வருதல். இது குறிப்பு விபாவனையின் வேறுபாடாம். (உ௪)

## க௦. ஒட்டணி

ருஉ. கருதிய பொருடொகுத் ததுபுலப் படுத்தற்
கொத்ததொன் றுரைப்பினஃ தொட்டென
[மொழிப.

(இ - ள்.) கவி, தன்றாற் கருதப்பட்ட பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றினைச் சொல்லின், அஃது ஒட்டென்னும் அலங்காரமாம் (எ - று.)

(கு-ரை.) இதனை உவமைப்போலி எனவும், பிறிது மொழிதல் எனவும், நுவலாநுவற்சி எனவும் கூறுப. (உ௫).

### ஒட்டணி வகை

ருங. அதுவே,
அடையும் பொருளு மயல்பட மொழிதலும்
அடைபொது வாக்கி யாங்ஙன மொழிதலும்
விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்
எனநால் வகையினு மியலு மென்ப

என்பது அவ்வலங்காரத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கூறுகின்ற பொருளும் அதனது அடையும் வேறு பட மொழிதலும், அடை பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதலும், அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதலும், அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதலும் என நான்கு வகையினை யுடைத்து அவ் வொட்டென்னும் அலங்காரம் (எ - று.)

அவற்றுள், க- வது, அடையும் பொருளும் அயல்பட மொழிதல்:

### நேரிசை வெண்பா

வ - று. "வெற்றிகொ ளினச்சுரும்பு மேய்ந்தோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகும்—நிறைமதுச்சேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு" என வரும்.

(இ - ள்.) தன்னிடத்துச் செவ்வியையும் வளப்பத்தையு முடைய தாமரைக்கண் குறைவற்ற நிறைமதுவைச் சேர்ந்து உண்டு களித்து விளையாடுகின்ற வண்டும், களித்த பல வண்டுகள் சேர்ந்து உண்டு வெறுத்துவிட்ட குறைபடு காவியின் மதுவை ஆசைப்பட்டுச் சேருமானதே! (எ - று)

இதனுள், தாமரை யென்றது தலைமகளை; காவி என்றது பரத்தையை; வண்டாமரை பிரிந்த வண்டென்றது தலைமகனை. இது, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்கு வாயினேர்ந்த தோழி சொல்லியது.

உ-வது, அடை பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல்.

நேரிசை வெண்பா

வ - று. "உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து
தண்ணளி தாங்கு மலர்முகத்துக—கண்ணெகிழ்ந்து
நீங்க லரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கே
ஓங்கியதோர் சோலை யுளது" என வரும்.

(இ - ள்.) மனத்துள்ளே யுண்டாகிய குணமுடைத்தாய்ப், பலர்க்கு மேற உபகரித்துத் தண்ணளி யுடைத்தாகிய விரிந்த முகத்தையும், கண்ணோட்டத்தையு முடைத்தாய்ப் பிரிதற்கரிய சாயலோடு கூடி நிற்பதொன ஒரு வள்ளல்மேலும், நடுவுண்டாகிய நீரை யுடைத்தாய் மாறாது பல வளங்களைக் கொடுத்துத் தட்ப முடைய வண்டுகளைத் தாங்கிய மலர்களைத் தோற்றத்திலே யுடைத்தாய் மதுச் சோர்ந்து விட்டுப்போதற்கரிய நிழலுடைத்தாய் ஓங்கி நிற்பதென்று சோலை மேலுஞ் செலுத்துக.

ங-வது, அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல்.

நேரிசை வெண்பா

வ - று. "தண்ணளிசேர் இன்சொன் மருவுந் தகைமைத்தாய்
எண்ணிய வெப்பொருளு மெந்நாளும்—மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழு முகிலொன்று
தந்ததான் முன்னைத் தவம்" என வரும்.

(இ - ள்.) குளிர்ந்த கருணையையும் இன்சொல்லையு முடைத்தாய், எல்லாரும் ஆசைப்பட்ட எல்லாப் பொருளையும் காலம்

வரையாது மண்ணுலகிலே பிறந்து எம்போல்வார்க்கு அளித்து வாழும் என்று ஓர் வள்ளல் மேலும், உலகத்தார்க்குக் குளிர்ச்சியோடு கூடக் கொடுக்கின்ற கொடை சேர்ந்து நன்றாய புகழ் மருவி, எண்ணப்பட்ட எல்லாப் பொருளையும், எக்காலமும் உலகிற்குச் சேர்ந்து கொடுத்து வாழுமென, மேகத்தின் மேலுஞ் செலுத்துக.

உலகிற்றோன்றும் பொருள்களுக்கு முதற்காரணம் நீராதலால் அக் காரணத்தை மேகங் கொடுப்ப அதன் காரியமாகிய பொருளெல்லாம் புலப்படும்.

ச-வது, அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்.

நேரிசை வெண்பா

வ-று. "கடைகொ ளுலகியற்கை காலத்தின் நீங்கால்
அடைய வறிதாயிற் றன்றே—அடைவோர்க்
கருமை யுடைத்தன்றி யந்தேன் சுவைத்தாய்க்
கருமை விரவாக் கடல்" என வரும்.

(இ - ள்.) மிகவுந் தாழ்வுடைத்துப்போலும் உயர்ந்தோர் செய்தி. காலவியற்கையாலே மிடியாய்ச் சென்று இரப்பவும் வறுமையுற்றது; சேர்வோர்க்கு அருமையின்றித் தேன்போலுங் கிளவிபுமுடைத்தாய் வெகுளி யில்லாக் கடல் (எ - று.)

இது, வறுமையுற்றான் ஓர் வள்ளலைக் கொள்ள நின்றது. சேர்வோர்க்கு அருமையும், இனிமை யில்லாமையும் கருமையும் கடற்கு உண்டென்க.

'வகையினும்' என்ற மிகையான் இது பிற அலங்காரங்களோடு கூடி வருவனவுங் கொள்க. (உ௬)

## கக. அதிசயவணி

ருச. மனப்படு மொருபொருள் வனப்புவந் துரைப்புழி
உலகுவரம் பிறவா நிலைமைத் தாகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவ ததிசயம்.

(இ - ள்.) கவி, தான் கருதிய பொருளினது வனப்பை உவந்து சொல்லுங்கால், உலகநடை யிறவாத தன்மைத்தாகி

உயர்ந்தோர் வியப்புறச் சொல்லுவது அதிசயமென்னும் அலங்கார மாம் (எ - று.) (உஎ)

## அதிசயவணி வகை

ருரு. அதுதான்,
பொருள்குணந் தொழிலையந் துணிவே திரிபெனத்
தெருளுறத் தோன்று நிலைமைய தென்ப.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட அவ்வலங்காரம் பொருளதிசயம், குணவதிசயம், தொழிலதிசயம், ஐயவதிசயம், துணிவதிசயம், திரிபதிசயம் என ஆறுவகையான் தெளிவுறத் தோன்றும் நிலைமையை யுடைத்து (எ-று.)

அவற்றுள்,

க-வது, பொருளதிசயம்.

### நேரிசை வெண்பா

வ-று. "பண்டு புரமெரித்த தீமேற் படாந்தின்றும்
அண்ட முகடு நெருப்பற்று—தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி" என வரும்.

(இ - ள்.) ஒளியையுடைய தளிர்க்கைக் கொடியாகிய மலைமகள் தழுவக் குழைந்த (திருமேனியையும்) வடமேருவாகிய வில்லினையும், மேனோக்கிய நெற்றிக்கண்ணினையு முடைய பரமசிவன் முற்காலத்துத் திரிபுரத்தைச் சுடதெரித்த தீயானது விரைந்தோடுதலால், இக்காலத்தும் அண்டத்துச்சியில் நெருப்பு அறாது (எ-று.)

(கு - ரை.) நெருப்பு - இடி.

உ-வது, குணவதிசயம்.

### நேரிசை வெண்பா

வ-று. "மாலை நிலவொளிப்ப மாத ரிழைபுனைந்த
நீல மணிக ணிழலுமிழ மேல்விரும்பிச்

செல்லு மிவள்குறித்த செல்வன்பாற் சேர்தற்கு
வல்லிருளா கின்ற மறுகு" என வரும்.

(இ-ள்.) மாலைக்காலத்திற் றோன்றிய நிலவானது ஒளிப்ப, ஆசையினாற் புனைந்த அணிகளிலுள்ள நீலமணிகள் ஒளியை யுமிழ, இவள் காதலோடு இச்சித்துச் செல்லும்படி குறித்த தலைவனிடத்திற் போதற்குத் தெருக்கள் செறிந்த இருளாகின்றன (எ - று.)

௫-வது, தொழிலதிசயம்.

நேரிசை வெண்பா

வ-று. "ஆளும் பரியும் கரியுஞ் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுழித்தெறிந்து—நீள்குடையும்
வள்வார் முரசு மறிதிரைமேற் கொண்டொழுக
வெள்வா ளுறைகழித்தான் வேந்து" என வரும்.

(இ - ள்.) மள்ளர்களும், பரிகளும், யானைகளும் சொரிகின்ற குருதி வெள்ளமானது, தோள்களையும் தலைகளையும் சுழித்து வீசி, நீண்ட குடைகளையும் வாரிறுக்கிய பேரிகைகளையும் மடங்குகின்ற அலைகளையுடைய கடலின்மேல் அடித்துக்கொண்டோடும்படி அரசன் வெண்மையாகிய வாளை உறையினின்று நீக்கினான் (எ-று.)

௬-வது ஐயவதிசயம்.

நேரிசை வெண்பா

வ - று. "உள்ளம் புகுந்தே யுலாவு மொருநாளென்
உள்ளம் முழுது முடன்பருகும்—ஒள்ளிழையின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோகவல்வேன்
உள்ளம் பெரிதோ வுரை" என வரும்.

(இ - ள்.) ஒள்ளிய ஆபரணத்தையுடையாய்! நினது கள்ள மிக்க விழிகளானவை எனது உள்ளத்துப் புகுந்து உலாவுதலாற் சிறிதாய்த் தோன்றின; அவை புகுந்து என்னுள்ளம் முழுதும் தம்முள்ளே யடக்கினமையின் அவ்வுள்ளஞ் சிறிதாய்த் தோன்றிற்று. இவற்றுள் விழி பெரியவோ? உள்ளம் பெரிதோ? சொல்லுவாயாக (எ - று.)

ரு-வது, துணிவதிசயம்.

நேரிசை வெண்பா

வ - று. "பொங்கிச் செறிந்து புடைதிரண்டு மீதிரண்டு
செங்கலசக் கொங்கை திகழுமால்—எங்கோன்
தில்லையே யன்ன ரிவரல்குற் றேரின்மேல்
இல்லையோ வுண்டோ விடை" என வரும்.

(இ - ள்.) வளர்ந்து நெருங்கி அடிபரந்து திரண்டு மேலே இரண்டு சிவந்த கலசம்போன்ற கொங்கை விளங்காநின்றன; ஆதலால், எந் தலைவனாகிய பரமசிவனுடைய தில்லைப்பதியை ஒத்த இவருடைய அல்குலாகிய தேரின்மேல், இடை இல்லையோ? உண்டு (எ - று.)

ஒகாரம் இரண்டனுள் முன்னது எதிர்மறை; பின்னது அசை நிலை.

சா-வது, திரிபதிசயம்.

நேரிசை வெண்பா

வ-று. "திங்கள் சொரிநிலவு சோவெள்ளி வள்ளத்துப்
பைங்கிளிகள் பாலென்று வாய்மடுக்கும்—அங்கயலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால்
ஏந்திழையார் பூந்துகிலா மென்று" என வரும்.

(இ - ள்.) நிலாமுற்றத்திருந்த வெள்ளிக்கிண்ணத்து உள்ள நிலவைப் பசுங்கிளிகள், பாலென்று கருதி வாய்மடுக்கும்; அதுவேயுமன்றி, அங்கு ஓர் புறத்தது தங்கொழுநரைப் புணர்ந்து நீங்கினாராகிய ஏந்திழையார் தாம் ஒழித்த துகிலெனக் கருதி அந்நிலவிலே கையை நீட்டுவார் (எ - று.)

பிறவாற்றான் வருவனவுங் கண்டுகொள்க. திரிபு - ஒன்றினை வேறொன்றாகத் துணிதல். சிலர் இதனை மலங்கவணி என்பர்.

## கஉ. தற்குறிப்பேற்றவணி

ருசா. பெயர்பொரு ளல்பொரு ளெனவிரு பொருளினும்
இயல்பின் விளைதிற னன்றி யயலொன்று
தான் குறித் தேற்றுதல் தற்குறிப் பேற்றம்.

(இ - ள்.) பெயரும் பொருளும், பெயராத பொருளுமென்னும் இருபொருட்கண்ணும் இயல்பாக நிகழும் தன்மை யொழியக் கவி தான் கருதிய வேறொன்றினை அவற்றின்கண் ஏற்றிச் சொல்லுவது தற்குறிப்பேற்ற மென்னும் அலங்காரமாம் (எ-று.)

அவற்றுள், க-வது, **பெயர்பொருள் தற்குறிப்பேற்றம்.**

## நேரிசை வெண்பா

வ - று.

"மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத தேய்தத வெகுளியால் — விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதூஉம்
தேயுந் தெளிவிசும்பி னின்று" என வரும்.

(இ - ள்.) நிலவுலகத்தைத் தாங்கிய தோள்வலிமையையுடைய சோழனுடைய மதயானையானது மாறுபட்ட அரசர்களுடைய வெண்கொற்றக் குடையைச் சீறிச் சிதைத்த கோபத்தாலே நம் மேலும் வந்து பாயுமோ வென்று குளிர்ந்த ஆகாயததிலே நிறைமதிய மெனப்படுவதும் தேயாநிற்கும்; தெளிந்த விசும்பின்கண் நின்று (எ - று.)

உ-வது, **பெயராதபொருள் தற்குறிப்பேற்றம்.**

## நேரிசை வெண்பா

வ - று. "வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத — தானுடைய
தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினையாற்
போதுமீ தேந்தும் பொழில்" என வரும்.

(இ - ள்.) முதுவேனிற் காலத்து ஆதித்தன் வெயில் வெம்மைக்கு ஆற்றாது உலர்ந்த தமது மெய்வறுமை கண்டு இரங்கி, வானின்கண் நின்று மழைவளத்தைப் பொழிந்து தமது வாட்டம் நீக்கின முகிலுக்குப் பொழில்களானவை தங்கண் உண்டாகிய மேதக்க தாதோடு கூடிய மலர்களையும், தங்கண் மதுவினையும், தமது பெரிய கிளைகளாகிய கைகளாலே மேலேடுக்கித தாங்கா நிற்கும் (எ - று.) (உக)

௫௭. அன்ன போலென் றனைமுத லாகிய
சொன்னிலை விளங்குந் தோற்றமு முடைத்தே

என்பது அவ்வலங்காரத்திற்கு உரியதோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) 'அன்ன' 'போல' என்பவை முதலாகிய உவமைச் சொல் சில புணர்ந்து விளங்குந் தன்மையு முடைத்தாம்; அத் தற் குறிப்பேற்ற மென்னும் அலங்காரம்.

### நேரிசை வெண்பா

வ-று. "காமருதேர் வெய்யவ னெங்குங் கரம்பரப்பித்
தேமருவு சோலை மலர்திறக்கும்—தாமரையின்
தொக்க விதழ்விரித்துப் பார்க்குந் தொலைந்திருள்போய்ப்
புக்க புரைதிளைப்பான் போல்" என வரும்.

(இ - ள்.) அழகு பொருந்திய தேரினையுடைய சூரியனானவன் இருளானது தனக்குத் தோல்வியுற்றுக் கரந்து புகுந்த இடத்தை ஆராய்ந்து பார்ப்பவன்போல எவ்விடத்திலும் தன்னுடைய கதிர்க ளாகிய கரங்களை விரித்து நீட்டி, மதுவார்ந்த சோலையிலுள்ள மலர் களை அலர்த்திப் பார்ப்பான்; மூடிய தாமரை மலரின் இதழ்களைத் திறந்து நோக்குவன் (எ - று.)

வெய்யவன் - சூரியன்; இதற்கு வெப்பத்தையுடையவனென் பது பொருள். புரை - இடம். திளைத்தல் - ஆராய்தல். தொக்க- குவிந்த. இக்குப் 'போல்' என்ற உவமவுருபு தற்குறிப்பேற்ற வுருபாக வந்தது.

## ௧௩. ஏதுவணி

௫௮. யாதன் திறத்தினு மிதனினி திதுவிளைந் தென்
றேதுவிதந் துரைப்ப தேது வதுதான்
காரக ஞாபக மெனவிரு திறப்படும்.

(இ - ள்.) யாதானும் ஒரு பொருட்டிறத்து இதனான் இது நிகழ்ந்ததென்று காரணம் விதந்து சொல்லுவது ஏதுவென்னும்

அலங்காரமாம்; அது காரகவேது என்றும், ஞாபகவேது என்றும இரண்டு கூறுபடும் (எ-று.)

(கு - ரை.) கூறு - வகை. ஏது - காரணம், சந்திராலோகம் என்னும் அலங்காரம் காரணத்தோடு காரியத்தையுஞ் சேர்த்துச் சொல்லுவது ஏதுவணி என்பர். (நக)

ருக.முதல்வனும் பொருளுங் கருமமுங் கருவியும்
ஏற்பது நீக்கமு மெனவிவை காரகம்.

என்பது காரகவேது வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கருத்தா முதல் நீக்கமீறா யீரறுகச் சொல்லப்பட்ட இவை யாறும் காரணமாகத் தோன்றுவது காரக வேதுவாம் (எ - று.)

அவற்றுள், க-வது, கருத்தா காரகவேது.

நேரிசை வெண்பா

வ-று. "எல்லைநீர் வையகத் தெண்ணிறந்த வெவ்வுயிர்க்கும்
சொல்லரிய பேரின்பந் தோற்றியதால்—முல்லைசேர்
தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
பூதலத்து வந்த புயல்."

(அ - ள.) முல்லைப்பூவிற் சேர்ந்த மகரந்தங்களை அசைத்து வளப்பம் பொருந்திய கொன்றை மலர்களையும் அசைத்து, வண்டுகள் இசையைச் செய்யும்படி, பூமியினிடத்து வந்த காற்றானது, கடலாற் சூழப்பட்ட அப் பூதலத்திலுள்ள அளவில்லாத எல்லா உயிர்கட்கும் அளவிட்டுச் சொல்லுதற்கரிய பெரிய இன்பத்தைக் கொடுத்தது (எ - று.)

இன்பது - ஆக்கம். எல்லைநீர் - கடல்; பூமிக்கு எல்லையாக வுடையது என்பது இதன் பொருள். புயல் - காற்று; மேக மென்னு மொன்று. ஆக்கம் - நலம் புரிதல்.

உ-வது, பொருட் காரகவேது.

நேரிசை வெண்பா

வ-று. "கனிகொள் பொழிலருவி கைகலந்து சந்தின்
பனிவிரவிப் பாற்கதிர்கள் தோய்ந்து—தனியிருந்தோர்

சிந்தை யுடனே யுயிருணக்குந் தென்மலயம்
தந்த தமிழ்மா ருதம்'' -என வரும்.

(இ - ள்.) தென்றிசையிலுள்ள பொதியமலையினால் தரப் பெற்ற தமிழோடு சார்ந்த தென்றற் காற்றானது, சோலைகளால் உதிர்க்கப்பட்ட கனிகளோடு விரவிப் பாயாநின்ற அருவியினிடத்தே கலந்து, சந்தனத்தின் குளிர்ச்சியுடனே பொருந்தி, பாலைப்போன்ற சந்திரகிரணங்களில் படிந்து, தன்னியற்கை யொழிந்து, தலைவரைப் பிரிந்து தனியாக விருந்தோரின் மனத்துடனே உயிரையும் வாட்டா நின்றது (எ - று.)

இஃது - அழிவு. சை - இடம். சந்து - சந்தனம். உணக்கல்- வாட்டுதல்; இங்குத் தீங்கு செய்தல் கூறப்பட்டமையால் இஃது அழிவெனப்பட்டது.

ரு-வது, கரும காரகவேது.

நேரிசை வெண்பா

வ-று. ''மலையி னலைகடலின் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தால்—தலைமைசேர்
அம்மாதர் புல்லு மபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்.''

(இ - ள்.) விந்திய மலையிலும், அலையையுடைய கடலிலும், கொடிய பாம்பின் வெவ்விய தலையிலும் நின்று செய்த தவத்தினாலே தலைமை பெற்ற சயமடந்தை, சீதேவி, பூமிதேவி ஆகிய அந்த மாதர்கள் மூவராலும் தழுவப்பட்ட சோழனுடைய புயத்தைத் தழுவுதற்கு, யாம் எவ்வகைச் சிறந்த தவம் புரிந்தோம் (எ - று.)

மலை - விந்தியமலை; சயத்திற்கு அதிதேவதையாகிய துர்க்கை விந்தியமலையில் வசிப்பவள். இலக்குமி பாற்கடலில் வசிப்பவள். பூமிதேவி ஆதிசேடன் முடியிற் றங்குபவள். சயமடந்தை - துர்க்கை; இவள் வெற்றிக் குரியவளாதலின் இப் பெயர் பெற் றனள். அபயன் - பயமில்லாதவன்; சோழன்.

ச-வது, கருவிக்காரகவேது.

நேரிசை வெண்பா

வ - று. "கரடத்தான் மாரியுங் கண்ணால் வெயிலும்
நிரைவயிரக் கோட்டா னிலவும்—சொரியுமால்
நீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்"　　　என வரும்.

(இ - ள்.) மதவொழுக்காலே மழையையும், கண்ணின் கோபத்தாலே வெயிலையும், வரிசையாகிய வயிரப்பூணையுடைய தந் தங்களின் வெண்மையால் நிலவையும் சொரியாநின்றது, நீண்ட ஆத் திப்பூ மாலையையுடைய ஒப்பற்றவனாகிய சோழன், தன் பகைவர் வாழும் கலிங்கதேயத்துச் சென்று வாள் வன்மையாலே கைப்பற் றிக் கொண்ட செல்வமாகிய யானைத்திரள், (எ - று.)

கரடம் - மதம். நிரை - வரிசை. வயிரம் - வயிரப்பூண். சொரிதல் - கொடுத்தல், ஆர் - ஆத்தி. அதுலன் - இணையில்லா தவன். (கஙு)

ஞாபகவேது

கூ0. அவையல பிறவி னறிவது ஞாபகம்.

(இ - ள்.) அச்சொல்லப்பட்ட காரணமன்றிப் பிற காரணத் தினால் உய்த்துணரத் தோன்றுவது ஞாபகவேதுவாம்; (எ - று.)

நேரிசை வெண்பா.

வ - று. "காதலன்மே லூடல் கரையிறத்தல் காட்டுமால்
மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப—மீது
மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து"　　　என வரும்.

(இ - ள்.) மாதர்களின் நெற்றி வியர்க்கவும், வாய் துடிக்க வும், பக்கங்கள் வளையப்பெற்ற புருவங்களாகிய விற்கள் மேலே நெறித்தல் செய்யவும், வாளாயுதமானது தோற்றுக் குறுகிப் போகும்படி கூர்மை பெற்று நீண்ட நீலோற்பலமலர் போன்ற

கண்கள் சிவந்ததன் குறிப்பு, அவர்கள் தம் தலைவன்மீது கொண்ட பிணக்கு அளவுகடந்ததைத் தெரிவிக்கும்; (எ - று.)

ஊடல் - பிணக்கு. கரையிறத்தல் - எல்லையில்லாமற் போதல். ஆல் - அசை. மீது - மேல்; இது இடத்தை யுணர்த்தும். மருங்கு - பக்கம். முரிதல் - வளைதல். இடுக - சிறுத்துப்போக. சேத்தல் - சிவத்தல். (கூச)

## அபாவவேது

சுஈக. அபாவந் தானு மதன்பாற் படுமே.

என்பது, அவ்வலங்காரத்தின் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அபாவமாவது ஒன்றனது இன்மை: அதுவும் அவ்வேதுவின்பாற் படும்; (எ - று.) (கூரு)

சுஉ. என்று மபாவமு மின்மைய தபாவமும்
ஒன்றினொன் றபாவமு முள்ளத னபாவமும்
அழிவுபாட் டபாவமு மெனவைந் தபாவம்.

என்பது, அபாவத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) என்றுமபாவமுதல் அழிவுபாட்டபாவ மீறாகச் சொல்லப்பட்ட ஐந்து பகுதியை யுடையதாம் அவ்வபாவம்; (எ - று.)

எனவே, இவ்வைந்து அபாவமும் ஏதுவாகத் தோன்றுவது அபாவவேதுவா மென்றவாறு.

அவற்றுள்,

க-வது, என்றுமபாவம் என்பது, எக்காலத்து மில்லாமை.

### நேரிசை வெண்பா

உ - று, "யாண்டு மொழிதிறம்பார் சான்றவ ரெம்மருங்கும்
ஈண்டு மயில்க ளினமினமாய்—மூண்டெழுந்த
காலையே கார்முழங்கு மென்றயரேல் காதலர்தேர்
மாலையே நம்பால் வரும்" என வரும்.

(இ - ள்.) இன்று காலையின்கண் இவ்விடத்து மயில்கள் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்தெழுந்து அகவாநின்றன, அது

பற்றிக் கார் முழங்காநிற்கு மென்று வருந்தாதொழிக, அறிவால் நிறைந்தோர் எக்காலத்தும் சொன்னசொற் பிறழார் ஆதலால் அன்னராகிய நம்முடைய காதலர் தேரானது மாலையிலே நம் மிடத்தில் வரும் (எ - று.)

உ-வது, **இன்மையபாவம்** என்பது, இல்லாமையினது இல்லாமை.

## நேரிசை வெண்பா

வ - று. " காரார் கொடிமுல்லை நின்குழன்மேற் கைபுனைய
வாராமை யில்லை வயவேந்தர்—போர்கடந்த
வாளேயேய் கண்ணி! நுதன்மேல் வரும்பசலை
நாளையே நீங்கு நமக்கு " என வரும்.

(இ - ள்.) கார்காலத்து ஓங்கிய கொடியையுடைய முல்லையி னது பூவினை நின்னுடைய கூந்தலின்கண் அலங்கரித்துச் சூட்ட வருகின்றார், வெற்றியையுடைய அரசர், ஆகையால், போர்த் தொழின் முடித்த வாள்போன்ற கண்களையுடையாய்! உன் னுடைய நுதலின்மே லுண்டாகிய பசலை விடியற்காலததே நீங்கும், [ஆதலால்] நமக்கு [யாது குறை?] (எ - று.)

௩-வது: **ஒன்றினொன்றபாவம்** என்பது, ஒன்றன்கண் ஒன்ற னது இல்லாமை.

## நேரிசை வெண்பா

வ - று. " பொய்ம்மை யுடன்புணரார் மேலானோர் பொய்ம்மையு
மெய்ம்மைசூழ் மேலாரை மேவாவாம்—இம்முறையாற்
பூவலர்ந்த தாரார் பிரிந்தாற் பொலங்குழையார்
காவலர்சொற் போற்றல் கடன் " என வரும்.

(இ - ள்.) உலகத்து மேலான அறிவையுடையார் பொய் யோடு கூடுவாரல்லர், அப்பொய்யும் மெய் தழுவிய மேலான அறிவுடையாரைப் பொருந்தாவாகும், இத்தன்மையால் பொலிவு விளங்கிய மாலையையுடைய தலைவர் பிரிந்த காலத்துப் பொற் குழையையுடைய மனையறக் கிழத்தியர்க்குக் காவற்கடன் பூண்'— தலைவர் குறித்துரைத்த பருவத்தை நோக்குதல் கடனன்றே; (எ - று.)

௪-வது, **உள்ளதன்பாவம்** ''என்பது, ஓரிடத்தும் ஒரு காலத்தும் உள்ள பொருள் பிறிதோரிடத்தும் பிறிதொரு காலத்து மில்லாமை.

### நேரிசை வெண்பா

உ - று. '' கரவொடு நின்றார் கடிமனையிற் கையேற்
றிரவொடு நிற்பித்த தெம்மை—அரவொடு
மோட்டாமை பூண்டு முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம் '' என வரும்.

(இ - ள்.) இரப்போர்க்குப் பயந்து காவல் கொண்டிருப்பவருடைய வீட்டிற் போய் எங்களைக் கையேற்று இரந்து நிற்கும்படிச் செய்தது, பாம்பையும் பெரிய ஆமையோட்டையும் அணியாகக் கொண்ட பரமசிவனை முற்பிறப்பில் வணங்கமாட்டாமையைக் கொண்ட மனம்; (எ - று.)

ரு-வது, **அழிவுபட்டபாவம்** என்பது, முன்புள்ளது அழிவுபட்டிலதாதல்.

### நேரிசை வெண்பா

உ - று. '' கழிந்த திளமை களிமயக்கந் தீர்ந்த
தொழிந்தது காதன்மே லூக்கம்—சுழிந்து
கருநெறியுங் கூந்தலார் காதனோய் தீர்ந்த
தொருநெறியே சேர்ந்த துளம் '' என வரும்.

(இ - ள்.) முதுமைப்பருவம் வந்தது; செல்வத்தினால் வரும் மனக்களிப்பாகிய அறியாமையும் நீங்கிற்று; இச்சிக்கப்பட்ட பொருள்களைத் தலைப்படவேண்டி எழாநின்ற ஊக்கமு மொழிந்தது; சுருண்டு நெறிப்பையுடைய கரிய கூந்தலார்மேல் வைத்த ஆசையாகிய நோயுந் தீர்ந்தது; ஒரு தன்மைத்தாய சித்தியைச் சேர்ந்தது என் உள்ளம்; (எ - று.) (௩௬)

## சித்திரவேது

௩௭. தூர காரியமு மொருங்குடன் றோற்றமும்
காரண முந்துறூஉங் காரிய நிலையும்
யுத்தமு மயுத்தமு முத்தனை யோடியாதும்

என்பது அவ்வேது வலங்காரத்தினையே பிறிதொருவகையால் வகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தூரகாரியம் முதல் அயுத்தம் ஈருகச் சொல்லப் பட்ட இவ்வைந்தும் முன்னைய ஏதுவலங்காரத்தோடு நடக்கும்; (எ - று.)

(கு - ரை.) 'முந்தை' என்பது 'முதலை' என வலிந்து நின்றது.

அவற்றுள், க-வது **தூரகாரியவேது** என்பது, ஒருவழிக் காரணம் நிகழப் பிறிதொருவழிக் காரியம் நிகழ்வது.

## நேரிசை வெண்பா

வ - று. "வேறொரு மாதர்மேல் வேந்த னகநுதியால்
ஊறுதா விம்மா துயிர்வாடும்—வேறே
இருவரே மெய்வடிவி னேந்திழை நல்லார்
ஒருவரே தம்மி லுயிர்."

(இ - ள்.) தலைமகனாயினுன் தன்னை யொழித்து ஒரு காதலி மார்பகததே வேந்தன் நகதநின் நுனியினுற் குறியிட, அது கண்டு அழுது வருந்துவாள்; ஆதலால், இவ்வேந்திழை நல்லார் உருவததால் இருவரெனினும், உயிரானது இவர்கட்கு ஒன்றே போலும்; (எ - று.)

ஒருமாது-தலைவி. வேறொருமாது-பரத்தை.

உ-வது, **ஒருங்குடன் றேற்றவேது** என்பது, காரணமுங் காரியமும் ஒக்க நிகழ்வது.

## நேரிசை வெண்பா

வ - று. "விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும்—பிரிந்தோர்
நிறைதளர்வு மொக்க நிகழ்தனவா லாவி
பொறைதளரும் புன்மாலைப் போழ்து" என வரும்.

(இ - ள்.) முழுமதியினது நிலவின் மேம்பாடும், வேட்கை மிகுந்த சிலையை யுடையவனுகிய மதவேள் போரும், பிரிந்தோர் நிறைதளர்வும் ஒருங்கு நிகழ்ந்தன; ஆதலால், தனித்தோர் உயி ராகிய பாரத்தைத் தாங்கமாட்டாத தன்மையையும் புன்கண் மையையுமுடைத்து இம்மாலைப்பொழுது; (எ - று.)

இவையனைத்தும் மாலைப்பொழுதில் நிகழ்ந்தன வென்க.

௩-வது, **காரணமுந்துறூஉங் காரியநிலை** என்பது, காரணத்திற்கு முன்னர்க் காரியம் நிகழ்வது.

(கு - ரை.) 'காரிய முந்துறூஉங் காரண நிலை' எனப் பாடங் கொண்டு இப் பொருளை கொள்ளவேண்டும்.

### நேரிசை வெண்பா

வ - று. "தம்புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த
வம்புலவு கோதையர்க்கு மாரவேள்—அம்பு
பொருமென்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை
வருமென் றிருண்ட மனம்" என வரும்.

(இ - ள்.) தம்மைக் காக்குந் தொழிலைப் பூண்ட தலைவர் பிரிய தனித்து உயிர்கொண்டிருந்த வாசனை பொருந்திய கோதையையுடைய மடவாருக்கு, மாரன் கணை தைக்கு மென்று மென்மையையுடைய மார்பகம் புண்ணுறாநின்றது; அதுவேயு மன்றி, மாலைப்பொழுது வருமென்று அவர்களுடைய மனம் இருண்டது; (எ - று.)

௪-வது, **யுத்தவேது** என்பது, காரணத்திற் கேற்ற காரியம் நிகழ்வது.

(கு - ரை.) யுத்தம் - பொருத்தம்.

### நேரிசை வெண்பா

வ - று. "பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்ன ரசைந்து முகுளிக்கும்—தன்னோர்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
அரவிந்த தாரா யிரம்" என வரும்.

(இ - ள்.) சோழன் ஏந்திய வேலின்க ணுண்டாகிய வெண்மை விளக்கம் பரந்த நிலவினால் முன்னே நடுங்கி மொட்டியா நிற்கும், நேர்நின்று பொருதற்கு எதிர்ந்த வேந்தருடைய புனையப் பட்ட கடகத்தையுடைய சிவந்த கையாகிய தாமரைகள் பலவும் உண்டு; (எ - று.)

மொட்டித்தல் - குவிதல். இங்கே கையாகிய தாமரையின் குவிவு காரியம் எனவும், வேற்படையின் ஒளியாகிய நிலாக் கிரணம் அக்குவிவுக்குப் பொருத்தமான காரணம் எனவும் அறிக.

௫-வது, **அயுக்தவேது** என்பது, காரணத்திற்கு ஏலாத காரியம் நிகழ்வது.

அயுக்தம் - பொருத்தமின்மை.

நேரிசை வெண்பா

வ - று. ' இகன்மதமால் யானை யபாய னெங்கோன்
முகமதியின் மூர லொளிலவால்—நகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல '' என வரும்.

(இ - ள்.) வெற்றியையும் மதத்தையுமுடைய உயர்ந்த யானைகளையுடைய அநபாயனாகிய எம்மரசனுடைய முகமாகிய நிறைமதியின்கணுண்டாகிய முறுவலின் வெண்ணிலவினால் செவ்வரியையுடைய கயல்போன்ற கண்ணினையுடைய நல்லாருடைய திருமருவு வாண் முகமாகிய தாமரைகள் பல விளங்க மலர்கின்றன; (எ-று.)

இங்கே பங்கயங்களின் மலர்ச்சியாகிய காரியத்திற்கு நிலாக்கிரணம் பொருத்தமில்லாத காரணமாதலின், தாமரை மலர்ச்சிக்குச் சூரியகிரணமே பொருத்த காரணம்.

'முடியும்' என்றோதாது, 'இயலும்' என்றதனான், பிறவாற்றான் வருவனவுங் கொள்க.

ஐயவேது :

நேரிசை வெண்பா

வ - று. ''மாத ருமைவாய் மழலை மொழியாலோ
ஓது மறையி னொலியாலோ—யாதாலோ
கோல மிருதிறனுங் கொண்டான் திருமிடற்றின்
ஆல மமிர்தான வாறு '' என வரும்.

(இ - ள்.) உமையாளுடைய வாயினுள்ள அழகிய மழலைச் சொல்லாகிய அமிர்தத்தைச் செவியாற் பருகியவதனாலோ, அன்றியே தானோதப்பட்ட வேதமந்திரவோசைத் தழைப்பினாலோ, இவ்விரண்டனுள்ளும் எதனாலோ? இரண்டு வடிவமாகத் திருமேனியைக் கொண்ட பரமசிவனுடைய சிறந்த மிடற்றிலுள்ள நஞ்சம் அமிருதமாயவாறு (தெரியாது); (எ – று.)

இருதிறம் - உருவும், அருவும். (௯௭)

## கசு. நுட்பவணி

சஅ. தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினும்
அரிதுணர் வினைத்திற நுட்ப மாகும்.

(இ - ள்.) தெரிந்துகொண்டு வேறுபட மொழியாது குறிப்பினானாதல், தொழிலினானாதல் அரிதாக நோக்கி யுணருந் தன்மையை யுடையது நுட்பமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - ரை.) தெரிந்துகொண்டு - பிறர் கருத்தை யறிந்துகொண்டு. வேறுபட மொழியாது - வெளிப்படையாகக் கூறாமல்.

அவற்றுள், க-வது, குறிப்பு நுட்பம்.

### நேரிசை வெண்பா

வ - று. "காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்
பேதைய ராயம் பிரியாத—மாதர்
படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு"    என வரும்.

(இ - ள்.) காதலிக்கப்பட்ட தலைவனுடைய மெல்லுயிர்க்குப் பரிகாரஞ் செய்ததுபோலும், மடப்பத்தையுடைய ஆயத்தாரைப் பிரியாது சூழப்பட்ட மாதர், உலகிற்குப் பட்ர் செய்யும் இருளினது அடியை யறுக்கின்ற ஞாயிற்றினைப் பார்த்து மேற்றிசையைப் பார்க்கும் உள்ளக் கருத்து; (எ - று.)

இதிற் போந்த பொருள், மாலைக்காலத்துக் கூட்டம் நேர்ந்தவாறு.

உ-வது, தொழில் நுட்பம்.

### நேரிசை வெண்பா

வ - று. "பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோள்
கூட லவாவாற் குறிப்புணர்த்தும்—ஆடவற்கு
மென்றீந் தொடையாழின் மெல்லவே தைவந்தாள்
இன்றீங் குறிஞ்சி யிசை"    என வரும்.

(இ - ள்.) பாடுந்தொழிலைப் பயிலும் குளிர்ந்த மொழியாள் தன்னது பணைத்தோளினால் தலைவனைத் தழுவவேண்டு மென்னும்

ஆசையினாலே தலைவற்குத் தன் உள்ளக்கருத்தை அறிவியாநின்றாள், மெல்லிய இனிய நரம்புடைய யாழிலே முறையாக ஆக்கினாள், தித்தித்த ஓசையையுடைய குறிஞ்சியாகிய பண்ணை; (எ - று.)

குறிஞ்சிக்குக் காலம் இடையாம மாகலால், இடையாமத்திற் கூட்டம் நேர்ந்தவாறு. (௯அ)

## கரு. இலேசவணி

**௬௫. குறிப்பு வெளிப்படுக்குஞ் சத்துவம் பிறிதின் மறைத்துரை யாட லிலேச மாகும்.**

**(இ - ள்.)** கருதியது வெளிப்படுக்குஞ் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்தனவாக மறைத்துச் சொல்லுவது, இலேச மென்னும் அலங்காரமாம்; (எ - று.)

சத்துவமென்பன - வெண்பளிங்கிற் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறம்பே தோன்றுமாறுபோல, உள்ளங் கருதியது புலனாக்குங் குணங்கள்; அவை: சொற்றளர்வு, மெய்வியர்ப்பு, கண்ணீர் நிகழ்ச்சி, மெய்விதிர்ப்பு, மெய்வெதும்பல், மெய்ம்மயி ரரும்பல் முதலியன. சத்துவம்-உள்ளதன் தன்மை.

### நேரிசை வெண்பா

வ - று.

"கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று—சொல்லுவரால்
பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள்சேர்ந்
தெங்கண் கலுழ்ந்தனவா லென்று" என வரும்.

**(இ - ள்.)** மலைபோன்ற பெரிய தோள்களையுடைய சோழன் ஏறிய குதிரையைத் தொழுது நீர்வார்ந்த கண்ணையுடைய மெத்தென்ற நடையையுடைய நல்லார், 'எமது கண்ணீர்வார்தற்குக் காரணம் : சினத்தையுடைய சேனை பரந்து வருதலால் ஆகாயத்தி லெழுந்த பொலிவுடைய தூளியானது உட்புக்குக் கண்ணீர் வார்ந்தது' என்று தோழியர்க்கு நிகழ்ந்ததொழிய வேறோருபாயத்தான் மறைத்துச் சொல்லினார்; (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. "மதப்பொழிதார் மன்னவனை மால்களிமேற் கண்ட
விதிர்ப்பு மயிரரும்பு மெய்யும்—புதைத்தாள்
வளைவா ரணநெடுங்கை வண்டுவலை தோய்ந்த
இளவாடை கூர்ந்த தென" எனவும் வரும்.

(இ - ள்.) தேன்பொழி தாரையுடைய சோழனை உயர்ந்த களிற்றின்மேல் வரக்கண்டு அதனா லுண்டாகிய தன்னுடைய மேனி நடுக்கத்தையும், மெய்ம்மயி ரரும்புதலையும், 'அவன் ஏறி வந்த வளைப்புழையுடைய களிற்றின் நெடிய கையி லுண்டாகிய வளவிய நீர்த்திவலையைக் கொண்டுவந்த இளவாடை என் மேனியை நனைத்ததனாலே வந்தது என் மேனி நடுக்கமும் மயிரரும்புதலும்' என நிகழ்ந்தது மறைத்து வேறொன்று தோழியர்க்குச் சொல்லினாள்; (எ - று.) (௩௯)

### இதுவுமது

௯௯. புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
அவையு மன்னவென் றறைகுந ருளரே.

என்பது, அவவிலேசத்தின் பாற்படுத்துப் பிறர் வேண்டுவன சில அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒன்றனைப் புகழ்ந்தாற்போலப் பழித்து உரைத்தலும், பழித்தாற்போலப் புகழ்ந்து உரைத்தலும் என்னும் இரண்டும் அவ்விலேசத்தின் பாற்படும் என்று உரைப்பாரு முளர்; (எ - று.)

அவற்றுள், க-வது, **புகழ்வதுபோலப் பழித்தல்.**

### நேரிசை வெண்பா

வ - று. "மேய கலவி விளைபொழுது நம்மெல்லென்
சாய றளராமற் றாங்குமால்—சேயிழாய்!
போர்வேட்ட மேன்மைப் புகழானன் யாம்விரும்பித்
தார்வேட்ட தோள்விடலை தான்" என வரும்.

(இ - ள்.) தோழீ! கேட்பாயாக! எம்மிற் பொருந்திய கலவி நிகழும்போது அக் கலவிக்கண் நமது மென்மை குன்றாதபடி

பரிகரித் தொழுகுவான்; எப்பொழுதும் போர்த்தொழிலை விரும்பிய மேலாய புகழையுடையவன், யாம் முற்காலத்துக் காதலித்து மாலையிட்ட தோளையுடைய தலைவன்; (எ - று.)

அக்காலத்து அறிவழியாமையால் பழிப்பாயிற்று.

உ-வது **பழிப்பதுபோலப் புகழ்தல்.**

**நேரிசை வெண்பா**

வ - று. " ஆடன் மயிலியலி யன்ப னணியாகம்
கூடுங்கான் மெல்லென் குறிப்பறியான்—ஊடல்
இனிவந்த செய்கை யிரவாளன் யார்க்கும்
வினிவந்த வேட்கை யிலன் " என வரும்.

**(இ - ள்.)** ஆடாநின்ற மயில்போலுஞ் சாயலினையுடையாய்! நம்மீது அன்புவைத்த தலைவனுடைய அலங்கரித்த மார்பகத்தை யாம் கூடுங்கால் நம் மெல்லென்ற நலம் பாராட்ட அறியா னாதலானும், ஊடற்கண் தனக்குத் தகாதன செய்து இரக்கும் இரவாளனாதலானும், யாவர்க்கும் வெறுக்கத்தக்க ஆசைப்பாடுடைய னல்ல னாதலானும், இகழ்தற்கு ஏதுவாயினான்; (எ - று.)

அக்காலத்து அறிவழிந்தமையாற் புகழாயிற்று. (சுO).

கசு. **நிரனிறையணி**

சுஎ. நிரனிறுத் தியற்றுத னிரனிறை யணியே.

**(இ - ள்.)** சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது, நிரனிறை யென்னும் அலங்காரமாம் (எ - று.)

நிரனிறுத்துத லென்றது 'இயற்றுதல்' என்றமையின், மொழிமாற்றிப் பொருள் கொள்வதூஉங் கொள்க.

அவற்றுள், க—வது, **நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது.**

**நேரிசை வெண்பா**

வ - று.

" காரிகை மென்மொழியா ளேக்காற் கதிர்முலையால்
வார்புருவத் தாலிடையால் வாய்த்தளிரால்—சேர்தொலைந்த

கொல்லி வடிநெடுவேற் கோங்கரும்பு விற்கரும்பு
வல்லி கவிர்மென் மலர்'' என வரும்.

(இ - ள்.) அழகு பொருந்திய மாதின் மென்மையான சொல்லினாலும், பார்வையாலும், பிரகாசம் பொருந்திய தனத்தாலும், நீட்சி பெற்ற புருவத்தாலும். இடையினாலும், தளிர் போன்ற மெல்லிய வாயாலும், கொல்லியென்கின்ற இனிமையான பண்ணும், கூர்மை தங்கிய நீண்ட வேலும், கோங்கின் முகையும், மன்மதனுடைய வில்லாகிய கரும்பும், பூங்கொடியும், மென்மையுள்ள முருக்கமலரும் அழகிழந்தன; (எ - று.)

காரிகை - அழகு; அஃது அதனையுடைய பெண்ணிற்காயிற்று. நேர் - செவ்வை; இஃது தழகைக் குறித்தது. தொலைதல் - அழிதல். கொல்லி - ஒருவகைப் பண்.

இதிற் சொல்லப்பட்ட உபமேயப் பொருள்களுள்ளும், உபமானப் பொருள்களுள்ளும் சொல்லாற் பண்ணும், பார்வையால் வேலும், தனத்தாற் கோங்கரும்பும், புருவத்தால் வில்லும், இடையால் கொடியும், வாயால் முருக்கமலரும் என முறையே நேர் நேராக இயையாது பொருள்பட்டு நிற்றல் காண்க.

உ-வது. நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்வது.

நேரிசை வெண்பா

வ - று. ''ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு'' என வரும்.

(இ - ள்.) நீண்ட திருக்கோலத்தையுடைய திருமாலானவன், வெஃகாவையும், பாடகத்தையும், ஊரகத்தையும் தனக்கிடங்களாகக் கொண்டு, அவற்றில் முறையே படுத்தான், இருந்தான், நின்றான்; இஃதன்றோ பல சபைகள் பொருந்தியதும், மதிலாற் சூழப்பெற்றதுமாகிய காஞ்சிப்பதியின் பெருமை! இத்தகைச் சிறப்பு வாய்ந்த அக் காஞ்சிப்பதியை மானிடர்கள் எவ்விதம் விட்டு நீங்குவார்கள்? (எ - று.)

வெஃகாவும், பாடகமும், ஊரகமும் காஞ்சிப்பதியிலுள்ள திருமாலின் திருப்பதிகள். இவற்றுள் திருமால், வெஃகாவில்

படுத்த திருக்கோலமாகவும், பாடகத்தில் இருந்த திருக்கோலமாகவும், ஊரகத்தில் நின்ற திருக்கோலமாகவும் எழுந்தருளி யிருக்கின்றனர்; இவற்றிற் கேற்ப, இப்பாடலில் மாற்றி இயைத்துப் பொருள் கொள்ளப்பட்டது. பஞ்சரம் - இடம். வெஃகா - யதோக்தகாரி சன்னிதி யென்வும், பாடகம் - பாண்டவ தூதர் சன்னிதியெனவும், ஊரகம் - உலகளந்த பெருமாள் சன்னிதி யெனவும் பெயர் பெறும்.

## கஎ. ஆர்வமொழியணி

சூஅ. ஆர்வ மொழிமிகுப்ப தார்வ மொழியே.

(இ - ள்.) உள்ளநிகழ்ந்த ஆர்வம்பற்றி நிகழும் மொழி மிகத் தோன்றச் சொல்லுவது, ஆர்வமொழி யென்னும் அலங்காரமாம்; (எ-று.)

### நேரிசை வெண்பா

வ-று. "சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்
புல்ல விருதோள் புடைபெயரா—மெல்ல
நினைவோ மெனினெஞ் சிடம்போதா தெம்பால்
வினைதாராய் வந்ததற்கு மாறு." என வரும்.

(இ - ள்.) நின்முன்னின்று மறுமொழி தர முயல்வேமாயின், எங்கள் மொழியானது தடுமாறிச் சோர்வுபடா நின்றது; நின் இணை மலர்த்தோள்களைத் தழுவ முயல்வேமாயின், எங்கள் இரண்டு தோள்களும் இடமுண்டாக வளர்வன வல்ல; மெல்ல நின் புகழை நினைப்போமாயின், எங்கள் உள்ளம் இடம்போதாது; அலங்கரிக்கப்பட்ட மாலையை யுடையானே! எம்மிடத்து நீ வந்த இதற்குக் கைம்மாறு யாதென்று சொல்லப்படும்? (சஉ)

## கஅ. சுவையணி

சூசு. உள்ளநிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டி னியல்வது சுவையே.

(இ - ள்.) உள்ளநிகழுந்தன்மை புறத்துப் புலனாய் விளங்க, எட்டுவகைப்பட்ட மெய்ப்பாட்டானும் நடப்பது சுவையென்னும் அலங்காரமாம்; (எ - று.) (சங)

௭௰. அவைதாம்,
வீர மச்ச மிழிப்பொடு வியப்பே
காம மவல முருத்திர நகையே.

என்பது அவ்வலங்காரத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறிய எண் வகைப்பட்ட மெய்ப்பாடாவன: -வீரமும், அச்சமும், இழிப்பும், வியப்பும், காமமும், அவலமும், உருத்திரமும், நகையுமாம் (எ - று.)

அவற்றுள், க-வது, வீரம்.

நேரிசை வெண்பா

வ-று. "சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
ஈர்ந்திட் டுயர்துலைதா னேறினான்—நேர்ந்த
கொடைவீ ரமோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீ ரமோசென்னி பண்பு." என வரும்.

(இ-ள்.) தன்னிடத்தே அடைக்கலம் புகுந்த புறவினது எடைக்காகத் தன் அழகிய உடம்பிலுள்ள தசையை அறுத்திட்டும் எடை போதாததற்குத் தானும் உயர்ந்த துலையில் ஏறினான்; இப்படியேறிய இது, பொருந்திய தனது கொடையின் வீரமோ? மெய்யொழுக்கங் குறையாத வன்கண்மையையுடைய படையின் வீரமோ? இவ்விரண்டு மன்று; சோழன் தனது தன்மையே; (எ - று.)

இது, சூரியகுல மன்னனாகிய சிபிச் சக்கரவர்த்தியின் வரலாற்றை அக் குலத்தினனான சோழன்மேல் ஏற்றிக் கூறியது.

இச் செய்யுளில் தானவீரம் பொருந்தியிருத்தல் காண்க.

புறவு - புறா. நிறை - எடை. ஈர்தல் - அறுத்தல். துலை - தராசு. நிறை - ஒழுக்கம். வன்கண்மை - வீரத்தன்மை. சென்னி - சோழன்.

உ-வது, அச்சம்.

நேரிசை வெண்பா

வ-று. "கைநெறித்து வெய்துயிர்ப்பக் காறளர்ந்து மெய்பனிப்ப
மையரிக்க ணீர்ததும்ப வாய்புலர்ந்தாள்—தையல்

சினவேல் விடலையாற் கையிழந்த செங்கட்
புனவேழ மேல்வந்த போது'' என வரும்.

(இ - ள்.) சினம்பொருந்திய வேற்படையையுடைய வீரனால், துதிக்கையை யிழந்த சிவந்த கண்களையுடைய கான்யானை தன் முன்னே வந்தபோது ஒரு மாது, தன்னுடைய கைகளை நெரித்துக் கொண்டு, பெருமூச்சுண்டாக, கால் தளர்ந்து, தேகம் நடுங்க, அஞ்சன மெழுதப்பெற்ற செவ்வரிகள் பொருந்திய கண்களில் நீர் ததும்ப வாயுலர்ந்து போயினள்; (எ - று.)

வெய்துயிர்த்தல் - பெருமூச்செறிதல். பனித்தல் - நடுங்கல். அரி - இரேகை. புலர்தல் - உலர்தல். விடலை - வீரன். புனம் - காடு.

இச் செய்யுளில் அச்சம் நிகழ்தல் அமைந்திருத்தல் காண்க.

டு-வது, இழிப்பு.

நேரிசை வெண்பா

வ-று. ''உடைதலையு மூளையு மூன்றடியு மென்பும்
குடருங் கொழுங்குருதி யீர்ப்ப—மிடைபேய்
பெருநடஞ்செய் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சீறுங் களம்'' என வரும்.

(இ - ள்.) வெற்றி பொருந்திய போரினையுடைய சோழன், கருநாடக தேசத்தரசர்களைக் கோபித்துத் தாக்கிய யுத்தகளமானது, உடைந்துபோன சிரங்களையும், மூளைகளையும், நிணத்தையும், தசையையும், எலும்பையும், குடலையும், செழித்த* இரத்தவெள்ளம் இழுக்க, நெருங்கிய பேய்கள் பெரிய கூத்தாடுந் தன்மையையுடையது; (எ - று.)

இதில் அருவருப்புத் தோன்ற இழிப்புச் சுவை கூறினமை காண்க.

ஊன் - நிணம். தடி - தசை. என்பு - எலும்பு. குடர் - குடல். ஈர்த்தல்—இழுத்தல். மிடைதல் - நெருங்குதல். பெற்றி- தன்மை. கொற்றம் - வெற்றி. கிள்ளி - சோழன். கருநடர் - கருநாடகர்.

௪-வது, **வியப்பு.**

## நேரிசை வெண்பா

வ - று.
"முத்தரும்பிச் செம்பொன் முறிதழைந்து பைந்துகிரின்
தொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிரும்—கொத்தினதாம்
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
தன்னேர் பொழியுந் தரு" என வரும்.

(இ - ள்.) பொன்னையும், மேன்மையான மணிகளையும், இரு மருங்கிலும் அலைகளால் ஒதுக்குகின்ற அழகிய காவிரி நாடனுக்கு, நேராக வளஞ்சொரியும் கற்பகத்தருவானது, முத்தாகிய அரும்பை யரும்பிச் சிவந்த பொன்னாகிய தளிரினாலே நெருங்கி, பச்சைப் பவளமாகிய கொத்துக்களைத் தோற்றுவித்து, பலவகையாகிய ஆபரணங்களாலுஞ் சூழப்பெற்று விளங்கும் கிளைகளை படைத்தாயிருக்கும்; (எ - று.)

அரும்பல் - தோற்றல். முறி - தளிர். தழைதல் - நெருங்குதல். துகிர் - பவளம். தொத்து — கொத்து. கொத்து - கிளை. தரு-கற்பகத் தரு.

இச் செய்யுளில் வியப்புச்சுவை தோன்றக் கற்பகத்தரு வருணிக்கப்படுதல் காண்க.

௫-வது, **காமம்.**

## நேரிசை வெண்பா

வ-று. "திங்க ணுதல்வியர்க்கும் வாய்துடிக்கும் கண்சிவக்கும்
அங்கைத் தளிர்நடுங்குஞ் சொல்லசையும்—கொங்கை
பொருதாலு மூடிப் புடைபெயருங் காலும்
இருகாலு மொக்கு மிவர்க்கு" என வரும்.

(இ - ள்.) கொங்கைகள் என்மீது அழுந்த இவர் என்னைத் தழுவுங் காலத்திலும், என்பால் பிணக்குக்கொண்டு பக்கத்தே நீங்கிச் செல்லுங் காலத்திலும் இவர்க்கு, மூன்றாம் பிறைச் சந்திரன் போன்ற நெற்றி வியர்க்கும்; வாய் துடிக்கும்; கண் சிவக்கும்; அழகிய கைகளாகிய தளிர்கள் நடுங்கும்; சொல் குளறும்; (ஆதலின்) இவ்விரண்டு பொழுதிலும் இச் செயல்கள் இவர்க்கு ஒரு தன்மையனவாகும்; (எ - று.)

நாதல் வியர்த்தல் முதலிய செய்கைகள், கலவியாலும் ஊடலாலும் நிகழ்வனவாதலின், இவை இங்ஙனம் ஒரு தன்மையனவாகக் கூறப்பட்டன. இஃது, ஒரு தலைவன் தன் காதற் களிப்பு புலப்படக் கூறியது. கூடலும் ஊடலும் காமத்தானே நிகழ்வனவாதலின், இவ்விரண்டாலும் நிகழ்ந்த இவையிற்றை ஒரு தன்மையனவாகக் கூறியவாற்றானே காமச்சுவை அமைந்திருத்தல் காண்க.

புடை - பக்கம். பெயர்தல் - செல்லல். பொருதல் - அழுந்துதல்.

௬ - வது, **அவலம்.**

நேரிசை வெண்பா

௬ - று. "கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய்ப் தீண்டும்
அழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான்—குழல்சேர்ந்த
தாமஞ் சரியா தசையுந் தளிர்மேனி
ஏமந் தரிக்குமோ வென்று" எனவரும்.

(இ - ள்.) வீரக்கழலை யணிந்த பாதங்களையுடைய வீரனானவன், தன்னுடைய காதலியின் மெய்யை யெரிக்கும் அழலைச்சேர்ந்து 'கூந்தலிற் பொருந்திய மாலையைச் சுமக்கப்பொறாது அசைகின்ற தளிர்போன்ற மேனியானது, ஏமத்து எரியைப் பொறுக்க வல்லதோ, என்று தன்னுடைய நெஞ்சம் வருந்தினான் (எ - று.)

இதில் தலைவன் வருந்தியதாக அவலச்சுவை அமைந்திருத்தல் காண்க.

அவலம் - சோகம். கழல் - வீரர்கள் காலில் அணியும் ஓர் அணி; அது பட்டையாய் முனையில் கொக்கி யமைத்துக் காலில் அசைந்துகொண்டிருப்பது. விடலை - வீரன். காதலி - காதலையுடையவள். தாமம்-பூமாலை. ஏமம் - விறகடுக்கு; இது தன்னிடத்துள்ள அக்கினியை யுணர்த்திற்று.

௭-வது, **உருத்திரம்.**

நேரிசை வெண்பா

௭ - று. "நைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான்-வெய்யபோர்த்

தார்வேய்ந்த தோளான் மனைவி தருகென்று
போர்வேந்தன் றூதிசைத்த போது" என வரும்.

(இ - ள்.) கொடுமையான போரில், 'வெற்றிமாலையைச் சூடிய தோள்களையுடைய துருபதமன்னன் மகளாகிய திரௌபதியைச் சபைக்குக் கொண்டுவருவாயாக!' என்று போரில் வல்ல மன்னனாகிய துரியோதனன் தன் தூதனிடத்திற் சொன்ன காலத்தில், (அதைக் கேட்ட வீமன) கைகளைப் பிசைந்து, வாயை மடித்துக் கண் சிவந்து, வெப்பமாகப் பெருமூச்செறிந்து, தேகம் நடுக்குற்று, வியர்த்துக் கோபங்கொண்டு யுத்தம் புரிய வெழுந்தான் (எ - று)

பிசையா, மடியா, சிவவா, உயிரா, குலையா, வேரா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். வெகுண்டு - செய்தெனெச்சம். வெகுளல் - கோபித்தல். வேய்தல் — சூடல். தூது—தூதன். இசைத்தல்-சொல்லல். "ஓர் மன்னனது மகளைத் தனக்கு வலியக் கொண்டுவந்து மணஞ்செய்து கொடுக்கும்படி, பகையரசன் தூதுவனை யனுப்பித் தெரிவித்தபோது அம்மன்னன் இவ்வாறு வெகுண்டெழுந்தான்," என்றும் இச்செய்யுளுக்குப் பிறிதொரு பொருளும் உரைக்கலாம்.

இதில் உருத்திரம் விளங்குதல் காண்க. உருத்திரம் - கோபக் கொதிப்பு. இதனைத் தொல்காப்பியர் வெகுளி என்றும், உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்னும் நான்கும் பற்றிப் பிறக்கும் என்றும் கூறுவர்.

௮-வது, நகை.

## நேரிசை வெண்பா

ஙு-று. "நாண்போலுந் தன்மனைக்குத் தான்சேற லிந்நின்ற
பாண்போலும் வெவ்வழலிற் பாய்வதூஉம்-காண்டோழி!
கைத்தலங் கண்ணாக் களவுகாண் பானொருவன்
பொய்த்தலைமுன் னீட்டியற்றும் போந்து" என வரும்.

(இ - ள்.) தோழியே! நீ அறிவாயாக; தன் மனைக்குத் தான் வருவது நம தலைமகனுக்கு நாணம் போலும். அவர் வெவ்விய தீயிற் பாய்வதாகச் சொல்வதும், இப்பாணனுடைய சமயோசிதமாகிய கற்பனை வார்த்தை போலும்; கைகளையே கண்ணாகக் கொண்டு இருளில் பொருள் தேடிக் களவு புரிவானொருவன் வந்து பொய்த்தலையை முன்னே நீட்டுதல் செய்வான் (எ - று.

சேறல் - செல்லுதல்; அஃதாவது: வருதல். பாண் - பாணன்; இசை பாடித் தலைவனைப் புகழ்வோன். கைத்தலம் - கையிடம். கைத்தலங் கண்ணாக் களவு காணுதல் - கண் தெரியாத இருளில், கைகளையே கண்ணாகக்கொண்டு தடவிப் பொருளாராய்ந்து களவு செய்தல்; இது, தலைவன் பரத்தை வீடு சென்றதைக் குறித்தது. பொய்த்தலை முன் நீட்டுதல் - களவு செய்வோர் தாங்கள் களவு செய்யச் சென்றவிடத்து ஆங்குள்ளாரின் விழிப்பையும் விழிப்பின்மையையும் உணர்வான் வேண்டி முன்னே ஒரு பொய்த் தலையை நீட்டி ஆராய்தல்; இது பரத்தை வீடு சென்று வந்த தலைவன், தலைவிபால் தூதுபேசப் பாணனை யனுப்பிய செயலைக் குறிக்கும். நீட்டு இயற்றும் - நீட்டுதலைச் செய்யும். நீட்டு - முதனிலைத் தொழிற்பெயர்.

தலைவியைப் பிரிந்து பரத்தையைக் கூடிவந்த தலைமகன், தன் செய்கையை யுணர்ந்த தலைவி, தனது வரவை ஏற்றுக் கொள்ளாது மறுக்க, அதனால் வருந்தி, அவளைச் சமாதானப் படுத்தும் பொருட்டு ஒரு பாணனை அவள்பா லனுப்ப, அப் பாணன் அவ்வாறே வந்து, தலைமகளை நோக்கி, "நீ தலைவர் வரவை மறுத்தலால் அவர் நின் மனைக்கு வரக் கூசி நிற்கின்றார்; நீ இனியும் அங்ஙனமே மறுப்பையாயின், அவர் அதனா லெய்துந் துயரால் தீப்பாய்ந்து உயிர் துறப்பர்," என்று சில நயமொழிகளைக் கூற, அவற்றைக் கேட்ட தலைவி, அவனைப் பரிகசித்துத் தோழியை நோக்கிக் கூறியதாக அமைந்தது இச்செய்யுள். இதில் நகைரசம் நிகழ்தல் காண்க.

இவ்வெட்டோடு சாந்தம் என ஒன்று கூட்டி நவரசமென்று கூறலும் உண்டு. சாந்தரசத்துக்கு உதாரணம்:

"தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். (சச)

## கசு. தன்மேம்பாட்டுரை யணி

### எக. தான்றற் புகழ்வது தன்மேம் பாட்டுரை.

(இ - ள்.) ஒருவன் தன்னைத் தானே புகழ்வது தன் மேம் பாட்டுரை யென்னும் அலங்காரமாம் (எ - று)

நேரிசை வெண்பா

வ - று. "எஞ்சினு ரில்லை யெனக்கெதிரா வின்னுயிர்கொண்
டஞ்சினு ரஞ்சாது போயகல்க—வெஞ்சமத்துப்
போரா தவராகத் தன்றிப் பிறர்முதுகிற்
சாராவென் கையிற் சரம்" என வரும்.

(இ - ள்.) கொடிய போரில் எனக்கெதிராக வந்து, போர் செய்து, தமது இனிய உயிரைத் தப்புவித்துக்கொண்டு பிழைத்து ஒழிந்தார் ஒருவரு மில்லை; பயந்தவர்கள், அச்சமில்லாமல் விலகிச் செல்வாராக; என் கையால் ஏவப்படும் அம்புகள், புறங்கொடுத்துச் செல்லாதவர்களின் மார்பிற் சேர்வதன்றிப் புறங்கொடுப்பவராகிய பிறர் முதுகிற் சேரமாட்டா (எ - று.)

'எனக் கெதிரே நின்று போர் செய்து பிழைத்தா ரில்லை,' என்பது இதன் பொருள். இதனுல் தற்புகழ்ச்சி வெளிப்படல் காண்க. இத் தற்புகழ்ச்சி புறப்பொரு ளிலக்கணத்தில், நெடுமொழி கூறல் என்றும், நெடுமொழி வஞ்சி யென்றும் வழங்கப் படும். சமம் - போர். எஞ்சினர் - மிஞ்சியவர். சரம் - அம்பு. ()

## உ0. பரியாய வணி

எஉ. கருதிய துரைவா தப்பொருள் டோன்றப்
பிறிதொன் றுரைப்பது* பரியா யம்மே.

(இ - ள்.) தான் கருதியதனைக் கூறுது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றனைக் கூறுவது, பரியாயமென்னும் அலங்கார மாம் (எ - று.)

(கு - ரை.) பரியாயம் - சாமர்த்தியமாக அறிவிக்கும் சொல்.

நேரிசை வெண்பா

வ - று. "மின்னிகரா மாதே! விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்க ணின்றருணீ—தன்னிகராம்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
இந்தீ வரங்கொணர்வல் யான்" என வரும்.

(இ - ள்.) மின்னலை யொத்த மாதே! வாசனையை யுடைத் தாகிய சந்தனமரத்தைத் தழுவி, உனக்கு நிகராகி நிற்கின்ற இக்

* (பாடம்) கிளப்பது.

குருக்கத்தியின் கீழே நிற்பாயாக; தனக்கு நிகரான சிவந்த தீயின் ஒளி தெரியும்படி மலர்ந்த சிவந்த காந்தள் மலருடனே, குவளை மலரையுங் கொண்டு யான் நின் குழற்கு அணிய வருகின்றேன் (எ - று.)

இது, குறியிடத்து உய்த்து நீங்குவாள் கூறியது; அஃதாவது: தலைவனுக்குக் குறிப்பிட்ட விடத்தில் தலைவியைக் கொண்டு வந்து நிறுத்திச் செல்லுந் தோழி, அப்போது தான் அங்கு நிற்பது அவர்களின்பத்துக்குத் தடையாகு மென்று அவ் விடத்தை விட்டு நீங்கிச் செல்லக் கருதி ஒரு முகாந்தரமாகச் சொன்னது. இதில், தான் கருதியதனை கூறாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றனைக் கூறியதாகிய பரியாய வலங்காரம் அமைந்திருத்தல் காண்க. விரை - வாசனை. சாந்து - சந்தனம். மாதவி - குருக்கத்தி. இந்தீவரம் - குவளை. (சுசு)

## உகூ. சமாகித வணி

எக. முந்து தான் முயல்வுறாஉந் தொழிற்பயன்
[பிறிதொன்று
தந்ததா முடிப்பது சமாகித மாகும்.

(இ - ள்.) முன்பு தன்னால் முயலப்பட்ட தொழிலினது பயனானது அதொழிலானன்றிப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாகக் கூறி முடிப்பது சமாகித மென்னும் அலங்காரமாம் (எ - று.)

(கு - ரை) சமாகிதம் - துணைப்பேறு.

### நேரிசை வெண்பா

வ - று. "அருவியங் குன்ற மரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்பரையன் பாவை—பெருமான்
அணியாக மாரத் தழுவினா டான்முன்
தணியாத வூட றணிந்து" என வரும்.

(இ - ள்.) முன்பு தீராத ஊடலையுடையளா யிருக்கின்ற மலையரையன் பயந்த பாவையாகிய உமையானவள், அருவியினையுடைத்தாய், அழகு பொருந்தி யிருக்கப்பட்ட கைலைமலையை இராவணன் அலைப்ப வெருவி, முக்கட்கடவுளினது அழகிய மார்பகத்தை ஊடல் தணிந்து தானே தழுவினாள். (எ - று.) (சுஎ)

## உ௨. உதாத்த வணி

௭௪. வியத்தகு செல்வமு மேம்படு முள்ளமும்
உயர்ச்சி புனைந் துரைப்ப துதாத்த மாகும்.

(இ - ள்.) வியக்கத்தக்க செல்வத்து உயர்ச்சியையும் மேம்பட்ட உள்ளத்து உயர்ச்சியையும் மிகுத்துச் சொல்லுவது உதாத்த மென்னும் அலங்காரமாம் (எ - று.)

(கு - ரை.) உதாத்தம் - பிறிதொன்றற் கில்லாத மகத்துவம். சிலர் இதை **வீறுகோளணி** என மொழிபெயர்ப்பர்.

௧-வது, **செல்வமிகுதி.**

### நேரிசை வெண்பா

வ - று. " கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்தும்
என்றும் வறிஞ ரினங்கவர்ந்தும்—ஒன்றும்
அறிவரிதாய் நிற்கு மளவினதா லம்ம
செறிகதிர்வேற் சென்னி திரு " என வரும்.

(இ - ள்.) கோபிக்கின்ற வெற்றியையுடைய அரசர்களின் செல்வங்கள் பலவற்றையும் நாள்தோறும் கவர்ந்துகொண்டு வருதலாலும், தரித்திரர் கூட்டத்தால் தாம் வேண்டியபடி எடுத்துக் கொள்ளப்படுவதாலும், நிறைந்த ஒளியையுடைய வேலாயுதத்தைத் தாங்கிய சோழனுடைய செல்வமானது சிறிதேனும் அளவறியப்படாததாய் நிற்கும் (எ - று.)

இங்கே சோழனுடைய செல்வத்தின் மகத்துவஞ் சொல்லப்பட்டவா றறிக. கன்றல்-கோபித்தல். வயம் - வெற்றி. வறிஞர்-தரித்திரர். அம்ம-வியப்பிடைச் சொல். ஆல்-அசை. சென்னி-சோழன்.

௨-வது, **உள்ளமிகுதி.**

### நேரிசை வெண்பா

வ - று. " மண்ணகன்று தன்கிளையி னீங்கி வனம்புகுந்து
பண்ணுந் தவத்திசைந்த பார்த்தன்றான்—எண்ணிறந்த
மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு " என வரும்.

(இ - ள்.) மண்ணாட்சியைக் கைவிட்டு, தன் சுற்றத்தாரை விட்டு நீங்கி, காட்டிற் புகுந்து, செய்யப்பட்ட தவத்தினாலே வருத்த முற்றிளைத்த அருச்சுனனானவன், எண்ணின் அளவற்ற ஆகாயத்தி லுள்ள தேவர்க்கதிபனாகிய இந்திரன் நடுக்கங்கொள்ள வருகின்ற கொடுமையாளராகிய அசுரர்குலங் கெட, தனது வில்லே துணையாகக்கொண்டு அவர்களை யழித்தான் (எ - று.)

இங்கே அருச்சுனனது கருத்தின் பெருமை கூறியவா றறிக. கிளை - சுற்றம். பார்த்தன் - அருச்சுனன். மீது-மேல் ; ஆகாயம். அண்டர் - தேவர். கோதண்டம் - வில். வெய்யோர் - காலகேய நிவாத கவசர்கள். இவற்றுள் முன்னையதில் செல்வமிகுதியும் பின்னையதில் உள்ள மிகுதியும் வந்தவாறு காண்க. உள்ள மிகுதி - ஊக்கம்.

## ௨௩. அவநுதி யணி

[மை

எ௫. சிறப்பினும் பொருளினுங் குணத்தினு முண்
மறுத்துப் பிறிதுரைப்ப தவநுதி யாகும்.

(இ - ள்.) சிறப்பினதாஉம், பொருளினதாஉம், குணத்தினதாஉமான உண்மையை மறுத்துப் பிறிதொன்றாக உரைப்பது, அவநுதி யென்னும் அலங்காரமாம் (எ - று.)

(கு - ரை.) அவநுதி - மறுத்துரைத்தல்.

அவற்றுள்,

க-வது, சிறப் பவநுதி.

### நேரிசை வெண்பா

வ-று. "நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணும்
நிறையு நிலைதளரா நீர்மை—அறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து" என வரும்.

(இ - ள்.) நறுநாற்றத்தையுடைய மாலையை ஆசைப்பட்ட மடவாருடைய அழகும், அணியும், நாணும், நிறையும் நிலைதளராதபடி தாங்கும் அறநெறியினை யுடைத்தாகிய செங்கோலை யுடையனல்லன் ; கொடுங்கோன்மை யுடையவன் ; போர்க்களத்துப் பகைவரை அட்ட வெவ்விய கோபத்தையுடைய பெரிய யானையையுடைய வேந்தன் (எ - று.)

(கு - ரை.) இங்கே அரசனைச் சிறப்பித்தற்கண் 'செங்கோலன்' என்ற சிறப்புண்மையை மறுத்து, 'கொடுங்கோலன்' எனப் பிறிதொரு தன்மையை யேற்றிக் கூறியமை காண்க.

உ-வது, பொருளவநுதி.

நேரிசை வெண்பா

வ-று. "நிலனும் விசும்பா நிமிர்கானீர் தீயாம்
அலாகதிராம் வான்மதியா மன்றி—மலர்கொன்றை
யொண்ணறுந் தாரா னொருவனிய மானனுமாய்
யெண்ணிறந்த வெப்பொருளு மாம்" என வரும்.

(இ - ள்.) விரிந்த கொன்றைப் பூவினாற் செய்த நறுநாற்றத் தையுடைய ஒள்ளிய மாலையை அணிந்தவனும் ஏகனுமாகிய பரமசிவன், நிலமும், ஆகாயமும், உயர்ந்த காற்றும், நீரும், தீயும், பரந்த கதிரையுடைய இரவியும், வெள்ளிய மதியுமாகிய ஏழாதலுமன்றி ஆன்மாவுமாய் எண்ணிறந்த எல்லாப் பொருளு மாவான் (எ - று.)

(கு - ரை.) இங்கே கொன்றை யொண்ணறுந்தாரான் என்னும் பொருளின்கண் ஒருவனுந் தன்மை மறுத்து நிலன் முதலிய பலவாந்தன்மை சொல்லப்பட்டவா றறிக.

ங-வது, குண வவநுதி.

நேரிசை வெண்பா

வ - று.

"மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கு மாரப்
பனிததொடையற் பாரதிபர்கோ னெங்கோன்—தனிககவிகை
தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்கு
வெம்மை நிழற்றாய் மிகும்" என வரும்.

(இ - ள்.) மாந்தர் பூவுலகின் இனிது உயிர்வாழ வேதாகம நெறியை வளர்க்கும் தண்ணிய ஆத்திமாலையையுடைய அரசர்க்குக் கோமானாகிய எம் இறைவனான சோழராசனது தனிக்குடையானது தண்ணிய நிழலையுடையதன்று; அவனைக் கண்ட மடவார்க்கு மிக்க வெய்யதன்மையைப் பண்ணாநிற்கும் (எ - று.)

இங்கே சோழனுடைய குடையின் தன்மையிலே வெம்மை யேற்றிச் சொல்லப்பட்டவா றறிக. 'அவநுதி' என்னாது 'ஆகும்'

என்றதனால், இவ்வலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடியும் வரும்.

(கு - ரை.) பிற அலங்காரம் சிலேடை யலங்காரம்.

### நேரிசை வெண்பா.

வ - று. "நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியா னல்லன்—துறையின்
விலங்காமை நின்று வியன்றமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகு கோ" என வரும்.

(இ - ள்.) மதுவைத் தாங்கிய மாலையை யணிந்த மாதின் அழகைக் கவர்ந்து மீண்டும் அதனை அவளுக்குக் கொடுக்காத கொடுமையுள்ள மன்னன், பிறரை வஞ்சியாதவ னல்லன் (வஞ்சிப் பதியையுடைய சோழனல்லன்) குலாசாரத்தில் வழுவாமல் நின்று பெரிய ஐந்து தமிழ்நாட்டையும் காவல்கொண்டு நடக்கின்ற பாண்டியன் (எ - று.)

இதில் 'வஞ்சியா னல்லன்' என உண்மையை மறுத்து மற்றொரு தன்மையை யேற்றிக் கூறுதலால் அவநுதியணிக்கு இடமாயிருப்பதோடு சிலேடை வகையால் பிறிதொரு பொருளும் படுதல் காண்க. இது, தன்னிடங்காதல் மிகுந்து அழகிழந்த தலைவியைக் கூடி அவட்கு அவ்வழகை மீண்டும் உண்டாக்காத தலைவனைக் குறித்துக் கொடியவ னென்று கூறியதாக அமைந்தது. இவ்வணி: வெற் றொழிப்பு, காரண வொழிப்பு, வேறுபாட் டொழிப்பு, மயக்க வொழிப்பு, வல்லோ ரொழிப்பு, வஞ்ச வொழிப்பு எனப் பலவாறு விகற்பமாகக் கூறவும் படும். நறவு-தேன். ஏந்துதல் - தாங்குதல். நறவேந்து கோதை - அன்மொழித்தொகைக் காரணப் பெயர். துறை-குலதருமநெறி. விலங்காமை - பிசகாமை. வஞ்சி-கருவூர்; சோழன் நகரம். இது வினைபற்றிய சிலேடை யவநுதி. இதனுள், 'வஞ்சியா னல்லன்' என்பதற்குக் 'கருவூரையுடைய சோழனல்லன்' என்றும், 'பிறரை வஞ்சியா தொழியா னல்லன்' என்றும் சிலேடையாகப் பொருள் கொள்க. (௬௧)

## உ௪. சிலேடை யணி

௭௬. ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி
தெரிவுதர வருவது சிலேடை யாகும்.

(இ - ள்.) ஒருவகையா நின்ற தொடர்சொல் பல பொருள்களது தன்மை தெரிய வருவது, சிலேடை யென்னும் அலங்காரமாம். (எ - று.)

எஎ. அதுவே,

செம்மொழி பிரிமொழி யெனவிரு திறப்படும்.

என்பது, அச்சிலேடையை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அச்சிலேடை செம்மொழிச் சிலேடையும், பிரிமொழிச் சிலேடையும் என இருவகைப்படும் (எ - று.)

அவற்றுள்,

க-வது, **செம்மொழிச் சிலேடை** என்பது, ஒருவகையா நின்று பல பொருள் படுவது.

நேரிசை வெண்பா

௯ - று. "செங்கரங்க ளாலிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப்—பொங்குதயத்
தோராழி யேய்யோ னுயர்ந்த நெறியொழுகும்
நீராழி நீணிலத்து மேல்" என வரும்.

(இ — ள்.) சிவந்த கரங்களான் இருள் கடியுந் திறமை மிக்குத தாமரை காதலிக்கும் வனப்புடைத்தாக மேனோக்கிய தோற்றத்தை யுடைய ஒருகாலூர்திப் பகலோன் வானெறி யொழுகுங் கடல் சூழ்ந்த புவிமீது எனவும், சிவந்த கைகளான் உலகிலுள்ளோர் மிடி தீர்க்குந் தொழில் மிககுத திருமடந்தை செல்வம் பெருக மேம்படா நின்ற பொருள் வருவா யுடையானுமாய்த் தனிச்சக்கரத்தை யுடையானுமாய் உலகினுள்ளாரால் விரும்பப்படும் விசேட நெறியே யொழுகுவான், கடல் சூழ்ந்த உலகத்து எனவும் வந்தவாறு காண்க.

இஃது ஆதித்தனுக்குஞ் சோழனுக்குஞ் சிலேடை.

உ-வது, **பிரிமொழிச் சிலேடை** என்பது, ஒருவகையா நின்ற சொல்லைப் பிரித்துத் தொகை வேறுபடுத்துப் பல பொருளாகச் சொல்வது.

## நேரிசை வெண்பா

வ - று. "தள்ளா விடத்தேர் நடந்தா மரையுடைய
எள்ளா வரிமா னிடர்மிகுப்ப—உள்வாழ்தேம்
சிந்துந் தகைமைத்தே யெங்கோன் றிருவுள்ளம்
நந்துந் தொழில்புரிந்தார் நாடு" என வரும்.

(இ - ள்.) அழகு கெடாத நிலங்களி லுண்டாய பசுட்டேர் பெரிய தாமரையைப் பொருந்தவும், இகழப்படாத நெற்சூட்டை உழவர் திரட்டவும், அத் தாமரை மலரி லுண்டாகிய தேன் பொழியும் பெருமையை யுடைத்து, எங்கோமானாகிய சோழனுடைய திருவுள்ளம் சிறக்கும் வகை ஒழுகினோர் நாடு எனவும், அசையாத விடத்தேரென்னும் மரமுடைத்தாய்ப் பெரிய மலைச்சிகரங்களோ தாவும் மரைகளை யுடைத்தாய் இகழப்படாத சிங்கப்போத்துகள் துன்பமுறுத்தவும்பட்டு நல்லோர் உள்ளவர்களில் வாழும். நாடுக ளெல்லாம் அழிவுபடுந் தன்மையை யுடைத்தாம், எம் கோமானாகிய சோழன் திருவுள்ளம் வேறுபடுந் தொழில் பயின்றோர் வாழும் நாடு எனவும் வந்தவாறு காண்க.

இது சோழனுடைய மனங் களிக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும், அவன் மனம் வெறுக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும் சிலேடை.

(கு - ரை.) பகடு ஏர் - உழும் எருது. சூடு - அரிக் குவியல். மரை-மான். இதில் தள்ளா இடந்து ஏர் எனவும், தள்ளா விடத் தேர் எனவும் கொள்க. விடத்தேர் - ஒரு மரம். (௫௧)

## ௭௮. ஒருவினை பலவினை முரண்வினை நியமம் நியம விலக்கு விரோத மவிரோதம் எனவெழு வகையினு மியலு மென்ப

என்பதும் அச்சிலேடை யலங்காரத்தைத் விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அச்சிலேடை, ஒருவினைச் சிலேடையும், பலவினைச் சிலேடையும், முரண்வினைச் சிலேடையும், நியமச் சிலேடையும், நியமவிலக்குச் சிலேடையும், விரோதச் சிலேடையும், அவிரோதச் சிலேடையும் என்னும் ஏழு கூறுபாட்டான் நடக்கு மென்று சொல்லுவர் (நூலோர்) (எ - று.)

அவற்றுள்,

க-வது, **ஒருவினைச் சிலேடை** என்பது, ஒரு வினையான் வருவது.

**நேரிசை வெண்பா**

வ - று. "அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்
வம்புற்ற வோடை மலர்ந்திலங்க—உம்பர்
நவம்புரியும் வானதியு நாணமதியு நண்ணத்
தவம்புரிவார்க் கின்பந் தரும்" என வரும்.

**(இ - ள்.)** அழகிய பொலிவுடைய பருத்த முகத்தின்கண்ணே திண்ணிய கோட்டை யுடைத்தாய அழகு பெற்றிருந்த யானை யானது, கச்சோடு கட்டிய பட்டம் விரிந்து விளங்க, முடிமீது ஒளிமிக்குப் பெரிதாகிய கங்கையும் இளம்பிறையும் பொருந்த வந்து, தவஞ் செய்வோர்க்கு வேண்டிய இந்திர பதங்கள் முதலாகிய இன்பங் கொடுக்கும் எனவும், அழகிய பொன்னோடு கூடிய மூங்கில் மிடைந்த பக்க முடைத்தாய்த் திண்ணிய சிகரங்களையு முடைத்தாய், அழகு பெற்ற மலை வாசனை கமழும் ஓடை பூத்து விளங்கத் தன்மீது ஒளிமிகுப் பெரிதாகிய கங்கையும் பிறையும் மருவும்படி உயர்ந்து தவஞ் செய்வோர்க்கு அவர் வேண்டிய பொருள்களெல்லாங் கொடுக்கும் எனவும் வந்தவாறு காண்க.

**விநாயகர்மேற் செல்லுங்கால்**—பொன்-பொலிவு. பணை - பருத்தல். முகம்-வதனம். கோடு-மருப்பு. நாகம்-யானை. வம்பு-கச்சு. உறுதல் - கட்டுதல். ஓடை-பட்டம். மலர்தல் - பரத்தல். உம்பர்-முடி. இன்பம்-இந்திரபதம் முதலாய போகம்.

**மலைமேற் செல்லுங்கால்**—பொன்-கனகம். பணை - மூங்கில். முகம்-பக்கம். கோடு-சிகரம். நாகம்-மலை. வம்பு-மணம். உறுதல்-உண்டாதல். ஓடை-வாவி; ஒரு மரமுமாம். மலர்தல்-பூத்தல். உம்பர்-மேல். இன்பம்-தவத்தொழில் புரிவார்க்கு அவர் வேண்டிய உணவுகளுந் தண்ணீருமாகிய பலவகைப்பட்ட பண்டங்கள்.

இது விநாயகருக்கும் மலைக்குஞ் சிலேடை.

**(கு - ரை.)** இஃது இன்பந்தரும் என்னும் ஒரு வினையான் முடிந்தது.

உ-வது, பலவினைச் சிலேடை என்பது, பலவினையால் வருவது.

### நேரிசை வெண்பா

வ - று. "தவிரா மதுவுண் களிதளிர்ப்ப நீண்டு
செவிமருவிச் செந்நீர்மை தாங்கி—குயிலிசையும்
மின்னுயிரா நுண்ணிடையார் மென்னோக்கு மேவலார்
இன்னுயிரை யீர்கின் றன" என வரும்.

(இ - ள்.) இடைவிடாமல் நறவுண்ண வந்த களிப்பு உண்டாக நீண்டு செவியுட் புகுந்து நிறைந்து கோடாத நீர்மையவாகி யிருக்கப்பட்ட குயிற்குரல் பிரிந்தோர் உயிர்களை வருத்தஞ் செய்யா நின்றன எனவும், விடுதற்கரிதாகிய கள்ளை யுண்ட மயக்கத்தாலே தழைத்து நீண்டு செவியளவுஞ் சென்று சிவந்த குளிர்ச்சியினை யுடையவாகிய மின்னை யொத்த மருங்குலினை யுடையார் மெல்லியவாகிய கண்கள் தம்மைப் புணருந் தலைவனுடைய இனிய உயிரை நலியாநின்றன வெனவுங் கொள்க (எ - று.)

குயிற்குரன்மேற் செல்லுங்கால்—மது - தேன். செவிமருவி - செவியுட் புக்கு. செந்நீர்மை - கோடாத தன்மை. மேவலார் - பிரிந்தார். இன் - சாரியை.

கண்ணின்மேற் செல்லுங்கால்—மது - கள். செவி மருவி - செவியளவுஞ் சென்று. செந்நீர்மை-சிவந்த குளிர்ச்சி. மேவலார்- புணருந் தலைவர். இன்னுயிர் - இனிய உயிர்.

இது குயிற்குரலுக்கும், மடவார் கண்ணுக்குஞ் சிலேடை.

இது, நீண்டு, மருவி என்பன முதலிய பல வினை பற்றி வந்தன.

௩-வது, முரண்வினைச் சிலேடை என்பது, மாறுபட்ட வினையால் வருவது.

(கு - ரை.) முரண் - மாறுபாடு.

### நேரிசை வெண்பா

வ - று. "மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய்
காலைத் துணைமேவ லார்கடிட— வேலைமிசை
மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்
புக்கார் கலியடங்கும் புள்" என வரும்.

(இ - ள்) மயக்கத்தை மருவிக் கருத்து வேறுபட மிகவும் மணங் கமழுங் காலத்துத் தந்துணைவரைப் பொருந்தாதார் அஞ்சக் கரைமீது மிக்குக் கடல் பொங்கி யார்க்கும், அகன்ற பொழில்கள் புகுந்து ஒலியடங்கும் பறவைகள் எனவும், அந்திப்பொழுது மருவித் திங்கள் உலாவ மிக்கிருந்த கூட்டம் புரியுங்காலத்துத் தந் துணைவரைப் பொருந்தினோர் விளங்க வெனவுங் கொள்க: பின்பு ஒரு தன்மையெனக் கொள்க (எ - று.)

**பிரிந்தார்மேற் செல்லுங்கால்**—மாலை - மயக்கம். மதி - கருத்து. திரிதல் - வேறுபடுதல். மணம் - வாசம். துணைமேவலார்-தம் துணைவரைப் பிரிந்தார். கடிய - அஞ்ச.

**புணர்ந்தார்மேற் செல்லுங்கால்**—மாலை - அந்திப்பொழுது. மதி- திங்கள். திரிதல் - உலாவல். மணம் - கூட்டம். துணைமேவலார் - துணைவரைப் புணர்ந்தார். கடிய - விளங்க.

இது பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்குஞ் சிலேடை.

(கு - ரை.) இங்கு அடங்காது ஆர்க்கும் ஆர்கலி அடங்கும் என வந்த வினைகள் ஒன்றற்கொன்று முரணுமாறு காண்க.

சா-வது, **நியமச் சிலேடை** என்பது, சிலேடித்தவற்றை நியமஞ் செய்வது.

(கு - ரை.) பல பொருளுங் கியையுமாறு சிலேடித்ததைத் தேற்றேகாரம் புணர்த்தி ஒன்றற்கு நியமமாக்குவது நியமச் சிலேடையாகும். (நியமம் - நிச்சயம்.)

### நேரிசை வெண்பா

வ - று. "வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே—பண்ணீர்மை
மென்கோல யாழே யிரங்குவன வேல்வேந்தே!
நின்கோ லுலாவு நிலத்து" என வரும்.

(இ - ள்.) வெற்றியையுடைய வேல் வேந்தனே! நின் செங்கோல் உலாவும் உலகத்து வெண்மை நிறத்தை யுடைத்தா யிருப்பன முத்தே யெனவும், விரைநாற்றத்தையுடைத்தாய் மதுச் சோர நிற்பன பெரிய பொழிலே யெனவும், குளிர்ந்த ஓசையை யுடைத்தாய் அழகோடு கூடி மெல்லியதாய்ப் பிறர்க்கு மனக் குழைவு கொடுப்பன யாழே யெனவுங் கிடந்தமையால், என்னப் பட்ட இவை யொழிய அறிவின்மை தாங்குவதும், மிடியை யுடை

மையாற் கண்ணீர் சொரிவதும், பிறர் மனந் தளர்வதும் இல்லை யெனக் கிடந்தவாறு கண்டுகொள்க (எ - று.)

௫-வது, **நியமவிலக்குச் சிலேடை** என்பது, சிலேடித்த பொருளை நியமஞ் செய்து அந் நியமத்தை விலக்குதல்.

### நேரிசை வெண்பா

வ - று. "சிறைபடுவ புட்குலமே தீம்புனலு மன்ன
இறைவநீ காத்தளிக்கு மெல்லை—முறையில்
கொடியன குன்றநின் மாளிகையே யன்றிக்
கடியவிழ்பூங் காவு முள" என வரும்.

(இ - ள்.) தலைவனே! நீ காத்தளிக்கும் நிலவரைப்பிற் சிறை யுடைத்தா யிருப்பன புட்சாதியே; 'தீம்புனலும் அன்ன' என்றத னுல் தித்தித்த புனல்களுஞ் சிறையுடைய; கொடியை யுடையன குன்றம் போன்ற மாளிகைகளே. அன்றிக் 'கடியவிழ்பூங் காவு முள' என்றவதனுல் நாற்றம் பரந்த பூவை யுடைத்தாகிய சோலை களுங் கொடியை யுடையன (எ - று.)

இதனுல் சிறைபடுதலுங் கொடுமையும் இவன் காக்கின்ற நிலத்தின்கண் இல்லை யெனக் கிடந்தவாறு கண்டுகொள்க.

௬-வது, **விரோதச் சிலேடை** என்பது, முன்னர்ச் சிலேடித் தவற்றைப் பின்னர் விரோதிப்பச் சிலேடிப்பது.

### நேரிசை வெண்பா

வ - று. "விச்சா தரனேனு மந்தரத்து மேவானல்
அச்சுத னேனுமம் மாயனலன்—நிச்ச
நிறைவான் கலையா னகளங்க னீதி
இறையா னநகனெனங் கோ" என வரும்.

(இ - ள்.) விஞ்சையர் ஆகாயத்திலே மேவுவார்; சோழன் கேட்டின்கட் செல்லான்; திருமால் மாயமுடையானுதலால் மாய னெனப் படுவான்; இவன் அம்மாய மிலனுதலால் மாயனெனப் படான்; நாடோறும் நிறைந்த வெண்மை யெய்துங் கலைகளை யுடையனுகிய சந்திரன் களங்கமுடையவன்; நாடோறுங் கலை நூல்களாற் பெருக்கமுடையனேனும் சோழன் அகளங்க னெனப் பட்டான்; முக்கட்கடவுள் பொருப்புடையனுதலால் நகனெனப்

பட்டான்; சோழனாகிய எங்கோன் தீவினையின்மையால் அநக னெனப்பட்டான் (எ-று.)

**விச்சாதரன்** என்பது - விஞ்சையராகிய தேவசாதிக்கும், வித்தையையுடைய சோழனுக்கும் பெயர். **அம்பரம்** என்பது - ஆகாயத்திற்கும், கேட்டிற்கும் பெயர். **அச்சுதன்** என்பது திருமாலுக்கும், கேடில்லானுக்கும் பெயர். **நிறைவான் கலையான்** என்பது - கலையையுடைய சந்திரனுக்கும், கல்வியால் நிறைந்த சோழனுக்கும் பெயர். **களங்கம்** எனபது - மாசுக்கும், கேட்டிற்கும் பெயர். **நீதி யிறையான்** என்பது - முக்கட் கடவுளுக்கும், நீதி நெறி யரசனான சோழனுக்கும் பெயர். **அநகன்** என்பது - மலையில்லா தோனுக்கும், பாவமில்லாதோனுக்கும் பெயர். இதனை நகன் அநகன் எனப் பிரித்துக்கொள்க.

எ - வது **அவிரோதச் சிலேடை** என்பது, முன்னர்ச் சிலேடித்த பொருளைப் பின்னர் விரோதியாமற் சிலேடிப்பது.

நேரிசை வெண்பா

வ - று. "சோதி யிரவி கரந்தா னிரவொழிக்கும்
மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கும்—மீதாம்
அனகமதி தோற்றிக் குமுத மளிக்கும்
தனத னிருநிதிக்கோ னாம்" என வரும்.

(இ - ள்.) ஒளியினை யுடைத்தாகிய ஆதித்தன் தன் கதிர் களாலே இருளை நீக்குவான்; புகழை யுடையனாப் இரவி குலத்தில் தோன்றிய இரவி யென்னும் பெயரினையுடையனாகிய சோழன் கைகளாலே பிறருடைய வறுமையைத் தீர்ப்பான்; உமா தேவியை யிடப்பாகத்தி லுடையான் காமனை மாறுங்கி யழிப்பான்; இவன் மிகுந்த திட்பமுடைய னாதலால் மன்னவர் வலியினை மாறு கொண்டு கெடுப்பான்; ஆகாயத்தில் தோன்றிய குற்றமற்ற மதி உதயஞ்செய்து குமுதங்களை அலர்த்தும்; இவன் மேலாய குற்ற மற்ற அறிவு தோன்றிப் பூதலத்துக்கு ஏற்ற மகிழ்ச்சியைக் கொடுப்பான்; குபேரன் தனத னென்னும் பெயரை யுடையவனாய் இருநிதிக்குத் தலைவனாவான்; இவனும் பிறருக்குப் பொருளை யளித்து மிக்க பொருளுக்கு முதல்வ னென்னப்படுவான் (எ - று.)

கு - பூதலம். முதம் - மகிழ்ச்சி. 'இயலும்' என்றொழியாது 'என்ப' என்ற மிகையான், இவ்வாறன்றிப் பிற வேறுபாட்டான் வருவனவுங் கொள்க. அவை வந்தவழிக் காண்க. (ருஉ)

## உரு. விசேட வணி

எசு. குணந்தொழின் முதலிய குறைபடு தன்மையின்
மேம்பட வொருபொருள் விளம்புதல் விசேடம்.

(இ-ள்.) குணமும், தொழிலும், சாதியும், பொருளும், உறுப்பும் முதலாயின குறைபடுதல் காரணமாக, ஒரு பொருட்கு மேம்பாடு தோன்ற உரைப்பது விசேட மென்னும் அலங்காரமாம் (எ - று.)

அவற்றுள்,

க-வது, **குணக்குறை விசேடம்.**

### நேரிசை வெண்பா

வ-று. "கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டம்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கம்
சிவந்தன செந்தீ தெற" என வரும்.

(இ - ள்.) கொடை பொருந்திய சோழனுடைய அழகிய புருவங்கள் கோட்டத்தை (வளைதலை) கொள்ளவில்லை; அவனுடைய அந்தப் பகைவர்களின் செங்கோல் கோட்டத்தை (கெடுதலை) அடைந்தன; அந்தச் சோழனுடைய கண்கள் சிவக்கவில்லை; பகைவர்களுடைய கலிங்க தேசங்கள் சிவந்த தீ எரித்தலாற் சிவப்புற்றன (எ - று.)

சோழன், நன்றாகச் சினங் கொள்ளாததற்கு முன்பே அவனுடைய பகைவர் நிலைகுலைந்தன ரென்பது இதன் கருத்து. புருவங்கள் நெறிப்புற்று வளைதலும், கண்கள் சிவத்தலும் கோபத்திற் குறிகளாம். கலிங்கம் எழுவகைப்படு மாதலின், 'சிவந்தன' எனப் பன்மையாகக் கூறினார். குணத்திற் குறை கூறிக் காரியத்தில் உயர்வுதோன்றக் கூறினமையின், இது, குணக்குறை விசேடமாம். கோட்டம் - வளைவு. திருந்தார் — பகைவர்.

உ-வது, தொழிற்குறை விசேடம்.

நேரிசை வெண்பா

ய - று. "எங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா—நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டா மரை" என வரும்.

(இ - ள்.) முழங்குதலைச் செய்து மேகம் மழையைச் சொரியாத நாளிலும் நீர் பெருகிப் பாய்கின்ற அழகிய காவிரி சேர்ந்த நாடனுடைய போரில், மதம் பொருந்திய யானைகளின் தாள்களெல்லாம் கழலாதபடி வளைதலைப் பெற்ற வீரக்கழல்களைப் பூண்டன; இவை இவ்வாறு செய்யவே, அன்றே பகையாகிய மன்னவர் பாதங்களாகிய தாமரைகளெல்லாம் தளையாகிய விலங்கைப் பூண்டன (எ - று.)

சோழனுடைய யானைகள், போரணி பூண்ட மாத்திரத்திலே, பகைவர் தோல்வியுற்று விலங்கிடப்பட்டன ரென்பது இதன் கருத்து. போரணி பூண்டு போய்ப் பகைவருடன் எதிர்த்துப் போர் செய்தலாகிய தொழில்களில் போரணி அணிதல் மாத்திரமே கூறிக் குறைவுபாடு விளக்கிக் காரியத்தில் உயர்வு தோன்றச் சொன்னமையால் இது தொழிற்குறை விசேடமாயிற்று. 'எங்கா முகில்பொழியா நாளும் புனல்தேங்கும்' என்றதினும் இவ்வலங்காரம் அமைந்திருத்தல் காண்க. எங்கா - செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

ஏங்குதல்-இடித்து முழங்கல். மாறு-பகை. தளை-விலங்கு.

ந-வது, சாதிக்குறை விசேடம்.

நேரிசை வெண்பா

ய-று. "மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுவுண்ட
ஆயனார் மாறேற் றமர்புரிந்தார்—தூய
பெருந்தருவும் பின்னுங் கொடுத்துடைந்தார் விண்மேற்
புரந்தரனும் வானோரும் போல்" என வரும்.

(இ - ள்.) பசுக்கூட்டங்கள் மேய, அவற்றைக் காத்து, வெண்ணெயைத் தோண்டி யெடுத்துண்ட இடையராகிய கண்ணபிரான் பகையாக நின்று எதிர்த்துப் போர்புரிந்தார்; அங்ஙனம்

செய்யவே, விண்ணுலகிலுள்ள இந்திரனும், தேவர்களும், பரிசுத்தம் பொருந்திய பெருமை பெற்ற பாரிசாதத் தருவையும், தமது முது கையுங் கொடுத்துத் தோல்வியடைந்தார்கள் (எ - று.)

இதில், 'ஆயனார்' என்று சாதியில் இழிவுகூறி உயர்ந்த தேவர்களை வெல்லுதலாகிய காரியத்தில் உயர்வு விளங்கக் கூறின மையால் சாதிக்குறை விசேடம் அமைதல் காண்க. 'மேய நிரை புரந்து' என்பதற்கு, 'பொருந்திய பசுக்கூட்டங்களைக் காத்து' எனப் பொருள் கூறினும் அமையும். 'வெண்ணெய் தொடுவுண்ட வாய னார்' என்பதற்கு, 'வெண்ணெயைத் தோண்டியுண்ட வாயை யுடையவர்' எனவும் ஒரு பொருள் கூறலாம். இது சாதிக்குறைபாடு காட்டாமையின் அத்துணைச் சிறப்பன்று.

நிரை - பசுக்கூட்டம். புரத்தல் - காத்தல். தொடுதல் - தோண்டுதல். மாறு - பகை. அமர் - போர். தரு - பாரிசாத தரு. பின்கொடுத்தல் - புறங்காட்டல். போல் - உரையசை யிடைச்சொல்; இஃது தொப்பில் போலி யெனவும்படும்.

சு-வது, பொருட்குறை விசேடம்.

## நேரிசை வெண்பா

வ - று. "தொல்லை மறைநேர் துணைவன்பா லாண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்
ஓங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை" என வரும்.

(இ - ள்.) மிக்க ஒலியைச் செய்யும் நீர்வளத்தையுடைய காஞ்சிப்பதியினிடத்தே, மெல்லிய தன்மையையுடையவளாகிய ஓர் மாது (அம்பிகை) பழைமையான வேதங்களைத் தேர்ந்த தன் நாயக னிடத்தே ஓராண்டளவும் இருநாழி நெல்லைப் பெற்று அதனாலேயே முப்பத்திரண்டறங்களையும் வளர்த்து, உயர்ந்த உலகத்தில் வாழ்கின்ற உயிர்களை யெல்லாம், உணவூட்டிப் பாதுகாத்து வருவாளாயினாள் (எ - று.)

இதில், 'இருநாழி நெற்கொண்டு' என்று பொருட்குறை காட்டி, 'அதனைக் கொண்டு உயிரனைத்தும் ஊட்டும்' எனக் காரி யத்தில் உயர்வு தோன்றக் கூறினமையால் பொருட்குறை விசேடம் அமைந்திருத்தல் காண்க. துணைவன்-நாயகன். பால் - இடம். மெல்லியலாள்-உமாதேவி. ஆல்-அசை. இடை-இடம்.

௫-வது, உறுப்புக்குறை விசேடம்.

நேரிசை வெண்பா

வ - று. ''யானை யிரதம் பரியா ளிவையில்லை
தானு மனங்கன் றனுக்கரும்பு—தேனார்
மலரைந்தி னல்வென் றடிப்படுத்தான் மாரன்
உலகங்கண் மூன்று மொருங்கு'' என வரும்.

(இ - ள்.) மன்மதனுக்கு யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நால்வகைச் சேனைகளு மில்லை; அவன் தானும் தேகமில்லாதவன்; அவனுடைய வில்லோ வலிமையற்ற கரும்பு; (அப்படி யிருந்தும்) அந்த மாரன், தேன் பொருந்திய ஐந்து மலர்களினாலேயே, மூவுலகங்களையும் ஒருங்கே வென்று தனக்குக் கீழ்ப்படுத்தினான் (எ - று.)

இதில், கருவிகளிற் குறை கூறிக் காரியத்தில் உயர்வு தோன்றச் சொன்னமையால் உறுப்புக்குறை விசேடம் பொருந்தியிருத்தல் காண்க. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (௫௩)

உ௪. ஒப்புமைக்கூட்ட வணி

அ௦. கருதிய குணத்தின் மிகுபொரு ளுடன்வைத்
தொருபொரு ளுரைப்ப தொப்புமைக்
கூட்டம்.

(இ - ள்.) ஒரு பொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குணமுதலாயினவற்றின் மிக்க பொருளைக் கூடவைத்துச் சொல்லுவது ஒப்புமைக்கூட்ட மென்னும் அலங்காரமாம் (எ - று.)

ஒப்புமைக்கூட்டம் - சமதன்மை யுடையவைகளை ஒருங்கு கூட்டுதல். இதனை வடநூலார் துல்லியயோகிதை என்பர். (௫௫)

அக. புகழினும் பழிப்பினும் புலப்படு மதுவே

என்பது அவ்வலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அவ்வொப்புமைக்கூட்ட மென்னும் அலங்காரம், ஒன்றனைப் புகழ்தற்கண்ணும், பழித்தற்கண்ணுந் தோன்றும் (எ - று.)

அவற்றுள், க-வது, புக ழொப்புமைக்கூட்டம்.

நேரிசை வெண்பா

வ - று. "பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும்—நாண்டாங்கு
வண்மைசால் சான்றவருங் காஞ்சி வளம்பதியின்
உண்மையா லுண்டிவ் வுலகு" என வரும்.

(இ - ள்.) ஆபரணங்களை யணிந்த (உமாதேவியின்) தனங்கள் அழுந்துதலால், திருமேனி நெகிழ்வுற்ற மலையும் (ஏகாம்பரநாதரும்), தூண்டப்படாத தெய்வத்தன்மை பொருந்திய பிரகாசமுள்ள விளக்கும் (நந்தா விளக்கும்) பிறர் வெட்கத்தைக் கொள்ளும்படியான ஈகைக்குணம் மிகுந்த பெரியோர்களும், காஞ்சி யென்னும் வளம் பொருந்திய நகரத்திலே இருக்கின்றமையால், இந்நிலவுலகமானது நிலைபெற்றிருக்கின்றது (எ-று.)

இதில் குழைபொருப்பும், தூண்டா விளக்கு மாகிய உயர்ந்த பொருள்களோடு பெரியோரைச் சேர்த்து உயர்த்துக் கூறினமையால், புக ழொப்புமைக்கூட்டம் அமைந்திருத்தல் காண்க. பொர - அழுந்த. பொருப்பு - மலை. வண்மை - ஈகை. சால் - மிகுதி. சான்றவர் - மேலோர்.

உ-வது, பழிப் பொப்புமைக்கூட்டம்.

நேரிசை வெண்பா

வ-று. "கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள்" என வரும்.

(இ - ள்.) கொள்ளும் பொருளைக் கைப்பற்ற விரும்பித் தன்கீழ்க் குடிகளை வருத்துகின்ற அரசனும், உள்ள உண்மையைச் சொல்லாது வழக்கில் வெல்லும்பொருட்டு மாறுபாடான வார்த்தை கூறும் மனிதரும், ஒருவனுடைய வீட்டில் அவனுக்கு மனைவியாயிருந்து அவனது எல்லை கடந்து நடப்பவளும் ஆகிய இம் மூவர்களும் சீக்கிரமாக மழையை அருகப்பண்ணும் கிரகமாவார்கள். (இவர்க ளிருப்பின் மழை பெய்யாதென்றபடி.)

இதில், மூவிடத்தும் சேர்க்கப்பட்ட இழி தன்மைகளால் பழிப் பொப்புமைக்கூட்டம் அமைதல் காண்க. வெஃகல் - விரும்பல். பொருள் - உண்மை. சலம் - மாறுபாடு. அருககல் அருகப் பண்ணல். இல்லிருந தெல்லை கடததல் - ஒருவன் வீட்டில் மனைவியாக அமைந்திருந்து இல்லற வரம்பைக் கடந்தொழுகுதல். அருகப் பண்ணல் - இல்லாமற்போகச் செய்தல். (ருரு)

## உஎ. விரோத வணி

அஉ. மாறுபடு சொற்பொருண் மாறுபாட் டியற்கை
விளைவுதர வுரைப்பது விரோத மாகும்.

என்பது, நிறுத்தமுறையானே விரோத மென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ- ள்.) மாறுபட்ட சொல்லானும் பொருளானும் மாறுபாட்டுத்தன்மை விளைவு தோன்ற உரைப்பது விரோத மென்னும் அலங்காரமாம் (எ - று.)

### சொல் விரோதம்

#### நேரிசை வெண்பா

வ-று. "காலையு மாலையுங் கைகூப்பிக காலெழுதான்
மேலை வினையெல்லாங் கீழவாம்—கோலக
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து" என வரும்.

(இ - ள்.) அழகு பொருந்திய கரிய யானைத் தோலையும், வெண்மையான திருநீற்றையும், சிவந்த திருமேனியையும், பசிய கொன்றை மாலையையு முடைய சிவபெருமானைச் சிதம்பரச் சேத்திரத்தில், காலையிலும், மாலையிலும் கைகளைக் கூப்பித் திருவடிகளைத் தொழுதால், அதிகரித்த ஊழ்வினைகளெல்லாம், கீழ்ப் பட்டனவாம் (அதாவது: குறைந்து நீங்கிவிடும்) (எ - று.)

இதில் காலை, மாலை; கைகூப்புதல், கால் தொழுதல்; மேல், கீழ்; கருமை, வெண்மை செம்மை, பசுமை என்பன ஒன்றோடொன்று மாறுபட்டு விரோதவணி அமைந்திருத்தல் காண்க. 'மேலை வினையெல்லாம் கீழவாம்' என்பதற்கு, 'முற்பிறப்பிலே செய்த வினைகளெல்லாம் அழியும்' எனப் பொருள் கோடலு

மொன்று. கருமான் என்பது யானையை யுணர்த்தியது; ன் - சாரியை.

## பொருள் விரோதம்

### நேரிசை வெண்பா

வ - று. "சோலை பயிலுங் குயின்மழலை சோர்ந்தடங்க
ஆலு மயிலினங்க ளார்த்தெழுந்த—ஞாலம்
குளிர்ந்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த
விளர்ந்த துணைபிரிந்தார் மெய்" என வரும்.

(இ - ள்.) சோலைகளிற் றங்கிய குயில்களின் மழலைச் சோற்கள் சோர்வுற்றடங்க, ஆடுகின்ற மயிற்கூட்டங்கள் ஆரவாரித் தெழுந்தன; பூமி குளிர்ச்சி யடைதற்குக் காரணமான மேகங்கள் கறுத்தன; இந்திரகோபப் பூச்சிகள் சிவந்தன; துணைவரைப் பிரிந்தவருடைய தேகங்கள் வெளுத்தன (எ - று.)

இது, கார்ப்பருவ வருணனை. இதில் முன்னிரண்டடிகளி லும் குயில் மழலை சோர்ந்தடங்கலும், மயிலினங்கள் ஆர்த்தெழுத லும் ஒன்றுடனொன்று மாறுபட்டும, பின்னிரண்டடிகளினும் கறுப்பும், சிவப்பும், வெளுப்பு மாகிய சொற்கள் ஒன்றோடொன்று மாறுபட்டும், விரோதவணி அமைந்திருத்தல் காண்க. மழலை - உச்சரிப்புச் சரிவர நிரம்பா மென்சொல். கோபம் - இந்திரகோப மென்னும் ஒருவகைப் பட்டுப்பூச்சி; இது கார்காலத்தில் தோன்றுவது.

இனி, இவ்வலங்காரம் பிறவலங்காரங்களோடு கூடியும் வரும்.

### நேரிசை வெண்பா

வ - று. "இனமா னிகல வெளிய வெனினும்
வனமேவு புண்டரிகம் வாட்டும்— வனமார்
கரியுருவங் கொண்டு மரிசிதறங் காயும்
விரிமலர்மென் கூந்தல் விழி" என வரும்.

(இ - ள்.)) அலர்ந்த மலர்களையுடைய மெல்லிய கூந்தல் பொருந்திய இவளுடைய விழிகளாகிய இனமான்கள், பகைத்தற்கு எளியன வெனினும், காட்டிற் பொருந்தியிருக்கின்ற புலிகளை வருத்துதற்கு வல்லமையுடையன வாயின. (நிறத்தற்கு வெண் மையை யுடையன வெனினும் நீரிற் பொருந்திய கமலமலரை அழ

கழிக்கும்). காட்டியானையின் வடிவைக்கொண்டும் சிங்கம் பயந்து நீங்கியோடக் கோபிக்கும். (அழகு பொருந்திய கறுத்த வடிவம் பெற்றும் செவ்வரிகள் பரக்க வெம்மையைச் செய்யும்) (எ - று).

இது சிலேடை முரண் எனப்படும். இச் சிலேடைகள் :

**மானின்மேற் செல்லுங்கால்,** 'பகைத்தற்கு எளியன வெளி னும், காட்டிற் பொருந்திய புலிகளை வருத்துதற்கு வல்லமையுடையன வாயின; காட்டியானையின் வடிவைக்கொண்டும் சிங்கம் பயந்து நீங்கியோடக் கோபிக்கும் எனவும்.

**கண்களின்மேல் செல்லுங்கால்,** 'நிகர்த்தற்கு வெண்மையையுடையன வெளினும் நீரிற் பொருந்திய கமலமலரை அழகழிக்கும்; 'அழகு பொருந்திய கறுத்த வடிவம் பெற்றும் செவ்வரிகள் பரக்க வெம்மையைச் செய்யும்' எனவும் மாறுபட்டுச் சிலேடை விரோதமாயினமை காண்க.

இகலுதல் - பகைத்தல், ஒத்தல். வெளிய - எளிய எனவும், வெளிய எனவும் ஆகும்: எளிய - எளிமையான; வெளிய - வெண்மையான. வனம் - காடு, நீர். புண்டரீகம் - புலி, தாமரை. வனம் - காடு, அழகு. கரி - யானை, கருமை. அரி - சிங்கம், செவ்வரி. சிதறல் - அழித்தல், பரத்தல். காய்தல் - கோபித்தல், வருத்தல். செவ்வரி - சிவந்த இரேகை. (௫௬)

## ௨௮. மாறுபடு புகழ்நிலையணி

**௮௧. கருதிய பொருடொகுத் தாங்கது பழித்தற்கு வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை.**

என்பது, நிறுத்தமுறையானே மாறுபடு புகழ்நிலை யென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கவி, தான் கருதிய பொருளை மறைத்து அதனைப் பழித்தற்கு வேறொன்றினைப் புகழ்வது மாறுபடு புகழ்நிலை யென்னும் அலங்காரமாம (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. "இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுத் தண்ணீரும் புல்லும்—ஒருவர்

படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேற்
றுடைத்தனவே யன்றோ துயர்'' என வரும்

(இ - ள்.) இந்தப் புள்ளிமான்கள், யாசித்தலை அறியமாட்டா; எவரிடத்தும் தம் குறைகளைச் சொல்லிப் பின்செல்லமாட்டா; ஒருவர் ஈட்டியனவாகிய நல்ல மரத்தின் நிழலையும், குளிர்ந்த நீரை யும், புல்லையும் கொள்ளா; அவற்றைத் தாமே பெறும்; ஆதலின், இவை இந்தப் பூமியின்மேல் துன்பத்தை ஒழித்தனவன்றோ (எ - று.)

இது, தனவந்தர்களை யடைந்து யாசித்து அவர் பின் சென்று குறைவுற்று வருந்தும் ஒரு யாசகனை இழித்துக் கூறியதாக அமைந் தது. இதில், மானைப் புகழ்தலால் யாசகனது நிந்தை தோன்றி மாறுபடு புகழ்நிலையணி அமைந்திருத்தல் காண்க.

நேரிசை வெண்பா

வ - று. '' போதுந் தளிரும் புனைந்து மணம்புணர்ந்து
சூதப் பனைதழுவித் தோன்றுமால்—மாதே
பலமா தவங்கள் பயின்றதோ பண்டிக்
குலமா தவியின் கொடி '' என வரும்.

(இ - ள்.) இந்த நற்குல மாதவிக் கொடியானது, மலர்களி னாலும் தளிர்களினாலும் அலங்கரிக்கப்பட்டு, மணக்கோலத்தையும் அடைந்து மணம் புரிந்து, தம்முடைய நாயகரைத் தழுவிக்கொண்டு நின்ற நற்குல மாதரைப்போலத் தானும், மலர்களினாலும், தளிர்களி னாலும் அலங்கரிக்கப்பட்டு நறுமணத்தை யடைந்து மாமரக் கிளை களைச் சேர்ந்து தோன்றுகின்றது; ஆதலின், மாதே! முற்காலத்தில் பல சிறந்த தவங்களைச் செய்ததோ (எ - று.)

இது, களவிற் கூடிவந்த தலைவியைப் பழித்ததற்கு மாதவி யைப் புகழ்ந்ததாக அமைந்தது. இதில், மாதவியைப் புகழ்தலால், தலைவியின் நிந்தை விளங்கி மாறுபடுபுகழ்நிலை யணி அமைதல் காண்க. சூதம் - மாமரம். பனை - கிளை. மாதவி - வசந்த மல் லிகைக்கொடி.

இவ்விரண்டும் யாசகனையும் களவிற் கூடிவந்த தலைவியையும் பழித்ததாம். (ருள)

## ௨௯. புகழாப்புகழ்ச்சி யணி.

### ௮௪. பழிப்பது போலும் பான்மையின் மேன்மை புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.

(இ - ள்.) பழித்தல் போலும் பாகுபாட்டான், ஒன்றற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப்புகழ்ச்சி யென்னும் அலங் காரமாம் (எ - று.)

நேரிசை வெண்பா.

வ-று. ''போர்வேலின் வென்றதூஉம் பல்புகழாற் போர்த்ததூஉம்
தார்மேவு திண்புயத்தாற் றாங்குவதூஉம்—நீர்நாடன்
தேரடிக்கூர் வெம்படையாற் காப்பதூஉஞ் செங்கண்மால்
ஓரடிக்கீழ் வைத்த வுலகு'' என வரும்.

(இ - ள்.) நீர்வளம் பொருந்திய நாட்டையுடைய சோழன் போர் செய்யத்தக்க வேலாயுதத்தினால் சயித்ததும், பலவகைப் பட்ட புகழினாலே மூடியதும், மாலையை யணிந்த வலிமைபெற்ற தோளினால் தாங்குவதும், தேர்க்காலின் பெயரையுடைய கூர்மை யும் கொடுமையு முள்ள ஆயுதத்தால் (அஃதாவது சக்கராயுதத்தால்) காப்பதும், சிவந்த கண்களையுடைய திருமால் ஒரு பாதத்தினடியில் அடக்கி வைத்த இவ்வுலகமேயாம் (எ - று.)

இதில் 'திருமால் ஒருவித சிரமமுமின்றி ஓரடியின்கீழ் வைத்த உலகைச் சோழன் பலவிதமாகச் சிரமப்பட்டுப் பாதுகாக்கின்றனன்' என்ப் பழித்தாற்போலக் கூறியதால், பூமி முழுவதையும் சோழன் சக்கரவர்த்தியாய் ஒருங்கே ஆட்சிபுரிகின்றனன்' என்ற புகழ்ச்சி தோன்றுதல் மூலம் புகழாப் புகழ்ச்சியணி அமைந்திருத்தல் காண்க. தேர்க்கால்-சக்கரம்; அதன் பெயரையுடைய ஆயுதம்- சக்கராயுதம். திண்புயத்தால் தாங்குவது - தோள் வல்லமையால் ஆள்வது. சக்கரத்தாற் காப்பது ஆக்ஞாசக்கரத்தினாலே பரிபாலிப்பது.

நேரிசை வெண்பா

வ - று. ''நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோர்
அனைவரையும் புல்லினா ளன்றே—மனுநூல்
புணர்ந்த நெறியொழுகும் பூழியர்கோ னிந்நாள்
மணந்த தடமலர்மேன் மாது'' என வரும்.

(இ - ள்.) மனுதரும சாத்திரத்திற் பொருந்திய நன்னெறிப் படி நடக்கின்ற சோழனே! நீ இந்நாளில் உரிமையாகச் சேர்ந்தவளாகிய பெரிய தாமரை மலரில் தங்குந் திருமகள், நினைத்தற்கும் அரிய பலவகைக் கீர்த்தியை யுடையவராகிய உன் குலத்துப் பழமையானவ ரெல்லோரையும் உரிமையாகக் கொண்டு கூடினவ ளன்றோ? (எ - று.)

இதில், 'உன்னால் உரிமையாகச் சேரப்பட்டவள் பலர்க்கும் உரிமையானவள்' என்று பழித்தாற்போலக் கூறியவாற்றான், 'நீ பரம்பரையாக உனக்குரிய இராச்சிய லட்சுமியைச் சேர்ந்தனை' என்று புகழ்ச்சி தோன்றுதல்மூலம் புகழாப்புகழ்ச்சியணி அமைதல் உணர்க. தொல்லோர் - பழமையானவர். புல்லல்-சேர்தல். பூழியன்-சோழன். தடம் - விசாலம்.

அஃதேல், மேல் இலேசத்தின்பாற் படுத்துக் கூறிய பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தலோடு இப் புகழாப்புகழ்ச்சிக்கு வேற்றுமையும், புகழ்வதுபோலப் பழித்திறம் புனைதலோடு மேற்கூறிய மாறுபடுபுகழ்நிலைக்கு வேற்றுமையும் யாதோவெனின்,

**பழிப்பதுபோலப் புகழ் புலப்படுத்தல்**-ஒன்றனையே பழித்தாற் போலப் புகழ்வது.

**புகழாப் புகழ்ச்சி** - ஒன்றனைப் பழிக்க, வேறொன்றற்குப் புகழாய்த் தோன்றுவது.

**மாறுபடு புகழ்நிலை** - ஒன்றனைப் புகழ, வொன்றற்குப் பழிப்பாய்த் தோன்றுவது.

**புகழ்வதுபோலப் பழித்திறம் புனைதல்** - ஒன்றனையே புகழ்ந்தாற் போலப் பழிப்பது.

அல்லதூஉம் அவை யிரண்டும் ஒருசார் ஆசிரியர் இலேசத்தின் பாற்படுத்துக் கூறினா ரென்ப தறிவித்தற்கு ஆண்டுக் கூறப்பட்டது. ஈண்டு ஒருசார் ஆசிரியர் வேறுபடுத்து வேறலங்காரமென்று வேண்டுவரென்பது அறிவித்தற்கு ஈண்டும் கூறப்பட்ட தென்க. (௫௯)

## ௩௦. நிதரிசன வணி

௮௫. ஒருவகை நிகழ்வதற் கொத்தபயன் பிறிதிற்குப்
புகழ்மை தீமை யென்றிவை புலப்பட
நிகழ்வ தாயி னிதரிசன மதுவே.

(இ - ள்.) ஒருவகையான் நிகழ்வதொன்றற்குப் பொருந்திய தொரு பயனை பிறிதொன்றற்கு நன்மை புலப்பட நிகழ்வதாதல், தீமை புலப்பட நிகழ்வதாதல், செய்வதெனச் சொல்லுவது நிதரிசன மென்னும் அலங்காரமாம் (எ - று.)

க - வது, புகழ்மை.

நேரிசை வெண்பா

வ-று, "பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொறாத திறமும்—அறிவுறீஇச்
செங்கமல மெய்ம்மலர்ந்த தேங்குமுத மெய்யயர்ந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது" என வரும்.

(இ - ள்.) பிறர் செல்வத்தைக் கண்டால் பெரியோர் மகிழ்ச்சி யடைவதையும், சிறியோர் பொறாத தன்மையும் அறிவுறுத்தி, அதி கரித்த பிரகாசத்தை யுடையவனாகிய சூரியன் உதயஞ்செய்து பிரகாச மிகுங் காலத்தில் செந்தாமரை மலர்கள் உடல் நெகிழ்ந்து மலர்ந்தன; தேன் பொருந்திய அல்லிமலர்கள் உடல்வாடிக் குவிந் தன (எ - று.)

இது நற்பொருட்காட்சி.

பொங்கொளியோன் - சூரியன். வீறு-பிரகாசம்; பெருமை.

உ-வது. தீமை.

நேரிசை வெண்பா

வ - று. "பெரியோ ருழையும் பிழைசிறி துண்டாயின்
இருநிலத்துள் யாரு மறிதல்—தெரிவிக்கும்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு" என வரும்.

(இ - ள்.) நீர் நிறைந்த கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் தெளி வான அமுதத்தைத் தன் கிரணங்களிலே யாவர்க்கும் பொழிகின்ற சந்திரனிடத்தே பொருந்திய களங்கமானது, பெரியோர்களிடத் திலும் சிறிது குற்றமுண்டானால், அது பெரிய இப்பூமியில் யாவ ராலும் அறியப்படு மென்பதை விளக்கிக் காட்டும் (எ - று.)

இது தீப்பொருட்காட்சி. சந்திரனிடத்தே மறு விளங்குதல் பெரியோரிடத்தே குற்றம் விளங்குதலை உணர்த்துவது போலு

மென்க. இருநிலம் - பெரியபூமி. தேக்குதல் - மிகுதல். வாக்குதல் - பொழிதல். மறு-களங்கம். (௫௯)

### ௩௧. புணர்நிலை யணி

அ௬௯. வினைபண் பெனவிவை யிருபொருட் கொன்றே
புணர மொழிவது புணர்நிலை யாகும்.

(இ - ள்.) வினையானும் பண்பானும் இரண்டு பொருளுக் கொன்றே பொருந்தச் சொல்லுவது புணர்நிலை யென்னும் அலங் காரமாம் (எ - று.)

அவற்றுள், க-வது, வினைப்புணர்நிலை.

நேரிசை வெண்பா

வ-று. "வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து
நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த—ஆண்டகையோர்
மேவல் விரும்பும் பெருநகையான் மெல்லாவி
காவல் புரிந்திருந்தோர் கண்" என வரும்.

(இ - ள்.) தான் வேண்டிய உருவத்தைக் கொண்டு கறுத்த நிறத்தை யுடையதாய் ஆகாயத்திலே பரந்து பெரியதா யிருக்கப்பட்ட மழைமுகிலுடனே நீர் பொழியாநின்றன, பிறரிச்சிக்குந் தன்மையை யுடைத்தாகிய உருவத்தை யுடைத்தாய் அலங்கரித் தெழுதப்பட்ட மையோடு கூடிய வெண்மையா னீண்டிருக்கப்பட்ட கண்கள் (எ - று)

ஆண்மைத் தன்மையையுடைய தலைவரைச் சேர்தலை விரும்பி யிருக்கப்பட்ட காதலாலே தம்முடைய மெல்லிய உயிர் போகாத படி காக்குந் தொழில் மிக்கிருக்கின்ற மடவாருடைய கண் ணெனக் கூட்டுக.

உ-வது பண்புப் புணர்நிலை.

நேரிசை வெண்பா

வ - று. "பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போழ்துடனே
நீங்காத வெம்மையவாய் நீண்டனவால்—தாங்காதல்
வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி
உய்க்குந் தமியா ருயிர்" என வரும்.

(இ - ள்.) காதலிக்கப்பட்ட துணைவர் வருங்காலம் பார்த்திருந்த மடவாருடைய உயிரானது, பூம்பொழிற்கண்ணே புட்களெல்லாம் ஒடுங்கப்பட்ட மாலைப்பொழுதுடனே, நீங்காத துயருஞ் செய்து தானுங் கழியாதே நின்றது (எ - று.)

'ஒன்றே மொழிவது' என்றொழியாது 'புணரமொழிவது' என்ற மிகையான், மூன்றும் வேற்றுமை அதனொடியைந்த வொரு வினையெனப் பொருள் படவரினே இவ்வலங்காரமாவது எனக் கொள்க. (சுo)

## கஉ. பரிவருத்தனை யணி

அஎ. பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே.

(இ - ள்.) பொருள்கள் ஒன்றற்கு ஒன்று கொடுத்து ஒன்று கொண்டனவாகச் சொல்லுவது பரிவருத்தனை யென்னும் அலங்காரமாம் (எ - று.)

### நேரிசை வெண்பா

வு - று. "காமனை வென்றோன் சடைமதியுங் கங்கையுந்
தாம கிழவொன்று தாங்கொடுத்து—நாமப்
பருவா ளரவின் பணமணிக டோறும்
உருவா யிரம்பெற் றன" என வரும்.

(இ - ள்.) காமனை வென்ற முக்கட்கடவுளுடைய சடைமீது உண்டாகிய மதியும், கங்கையும், வருத்தஞ்செய்யுந் தன்மை யுடைத்தாய்ப் பெரியதாயிருக்கப்பட்ட ஒளியினையுடைத்தாய் அங்கேயிருந்த அரவின் படங்களி லுண்டாகிய மணிகடோறும் தத்தம் உருவத்தைக் கொடுத்து, ஆயிரமாயிரம் உருவத்தைப் பெற்றன (எ - று.)

## கக. வாழ்த் தணி

அஅ. இன்னார்க் கின்ன தியைக வென்றுதா
முன்னிய துரைத்தல் வாழ்த்தெனமொழிப.

(இ - ள்.) இன்னதன்மையை யுடையார்க்கு இன்னது நிகழ்க என்று கவிகள் தாம் கருதியதனை விதிப்பது வாழ்த் தென்னும் அலங்காரமென்று சொல்லுவர் புலவர் (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. "மூவாத தமிழ்பயந்த முன்னூான் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லனபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை."

(இ - ள்.) அழியாத தமிழானது தோற்றுவித்த பழைமையான நூல்களை உணர்ந்த அகத்தியமுனி வாழ்க; பசுக்களெல்லாம் வாழ்க; அரிய வேதங்களைக் கற்றுணர்ந்த வேதியர் வாழ்க; காவிரி நதி பாய்கின்ற சோழநாட்டுக்கு இறைவனாகிய அனபாயனென்னும் சோழன் வாழ்க. அவனரசாட்சிக் குட்பட்ட உலகத்தில் மழை வாழ்க (எ - று.)

மூவா - கெடாத. பயத்தல் - தருதல். அண்ணல் - தலைவன்; பெருமையிற் சிறந்தவன். (கூஉ)

## ௩௪. சங்கீரண வணி

அகூ. மொழியப் பட்ட வணிபல தம்முட்
டழுவ வுரைப்பது சங்கீ ரணமே.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட அலங்காரங்கள் பலவுந் தம்முட் பொருந்த உரைப்பது சங்கீரணமென்னும் அலங்காரமாம் (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. "தண்டுறைநீர் நின்ற தவத்தா லளிமருவு
புண்டரிக நின்வதனம் போன்றதால்—உண்டோ
பயின்றா ருளம்பருகும் பான்மொழியாய்! பார்மேல்
முயன்றான் முடியாப் பொருள்" என வரும்.

(இ - ள்.) குளிர்ந்த துறை நீரிலே தவம்புரிந்த இதனாலே வண்டு மருவப்பட்ட தாமரை நின் முகமண்டலத்தை யொப்பப் பெறுதலால், அணைந்தா ருள்ளத்தை வவ்வும் பால்போன்ற மொழியினை யுடையாய்! உலகத்தில் முயற்சியார் முடியாத பொருள் யாதுமில்லை (எ - று.)

'உண்டோ' என்பதற்கு 'இல்லை' எனப் பொருள் கொள்க.

இதனுள், 'தண்டுறை நீர்நின்ற தவம்' என்பது **தற்குறிப்பேற்றம்**. 'தவத்தால்' என்பது **காரகவேது**. 'அளிமருவு' என்பது **சிலேடை**. 'புண்டரீக நின்வதனம் போலும்' என்பது **உவமை**. 'உண்டோ முயன்றால் முடியாப்பொருள்' என்பது **வேற்றுப்பொருள் வைப்பு**. 'உளம்பருகும் பான்மொழியாய்' என்பது **சுவை**. இப் பாட்டிற்கு இவ் வண்ணமே பல அலங்காரங்களும் காண்க.

இஃது, உருப்பனைத்துங் கூட்டிய கலவை போல்வதோர் தன்மைத்தாய், ஒன்றற்கு மிகுதி தோன்றாமல் உரைப்பதா மெனக் கொள்க. அல்லதூஉம், சந்தனத்தோடு கருப்பூரம் விரவினும், மான் மதத்தோடு கருப்பூரம் விரவினும் சந்தனமும், மான்மதமும் என்பதல்லது கலவை யெனப்படா! அவ்வாறே, இரண்டு அலங்காரம் கூடின் இவ்வலங்கார மெனப்படாது; பல அலங்காரங்களும், இரண்டிறந் தனவே கூடின், இவ்வலங்காரமாவது. இரண்டிறந்த பல என்பதே ஈண்டு ஆசிரியர் கருத்தெனக்கொள்க. (௯௩)

## உவமையுருவகங்கட்குப் புறனடை

௯௦. ஒப்புமை யில்லது மையமு முவமையிற்
செப்பிய திறமு முவமை வுருவகமும்
உருவகத் தடக்கலு முணர்ந்தனர் கொளலே.

(இ - ள்.) ஒப்புமையில்ல தென்பது - **பொதுநீங்குவமை**. அது:

" தானே யுவமை தனக்கு " என வரும்.

இச் செய்யுளை இப்புத்தகத்தின் ௫0—ஆம் பக்கத்திற் காண்க.

ஐயமென்பது - **ஐயவுவமை**; அது:

" தாதளவி வண்டு " என வரும்.

இச் செய்யுளை இப்புத்தகத்தின் ௬௬-ஆம் பக்கத்திற் காண்க.

இதனுள், தாமரைகொல்'முகங்கொல் என்பது ஐயம்.

இவை யிரண்டும், முன்னர் உவமையனைத்திற்கும் பொதுவாக ஓதிய சூத்திரத்துள் 'பண்பு தொழில் பயன்' என்பன காரணமாய ஒன்றாகியும் பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயைக

வைத்து ஒப்புமை புலப்பட உரைப்பதே உவமை' என்பதே கொண்டு, 'பொதுவாகிய குணம் முதலாகியன காரணமாகப் பொருளோடு பொருள் இயையவைத்து ஒப்பித்தன இல்லை' என்று குற்றங் கூறப்படாது.

என்னை யெனின், 'தானே யுவமை தனக்கு' என்றவழியும், ஒக்கும் பொருளை யெடுத்தே அவற்றினுஞ் சிறந்தது இஃது என்று உரைத்த துணையே; அவற்றோடு ஒப்புமை வேண்டியதிலனாயின் முன்னர்க் கூறான்: அதனால் பொருளோடு பொருள் இயைய வைத்து அவற்றின் ஒப்புமை கருதியே உரைததாலும் எனக் கொள்க.

ஐயவுவமையும், 'தாமரைகொல் முகங்கொல்' என்றவழித் தாமரைக்கும் முகத்திற்கும் பொதுவாகியதொரு தன்மை கருதியே யுரைத்தது. அவ்வாறன்றேல், தாமரையோடு முகத்திடை ஐயந் தோன்ற உரையா னென்பது.

இனி, **உவம வுருவகம்.**

வ-று. ''வதனமதிய முதய மதியமே யொக்கும்'' என வரும்.

இச் செய்யுளை இப் புத்தகத்தின் சுஅ-ம் பக்கத்திற் காண்க.

என்றவழி, முன் குணப்பொருளை முக்கியப் பொருளோடு உருவகஞ் செய்து 'வதனமதியம்' என்றான். பின்னர் முக்கியப் பொருளோடு உவமித்து 'உதய மதியமே யொக்கும்' என்றான் என்பது.

எனவே, முன்னர் உருவகஞ் செய்த அதனைப் பின்னரும் உவமிப்பது புனருத்தமாம் பிறவெனின், ஆகாது.

**(கு-ரை.)** புனருத்தம்-கூறியது கூறல் என்னுங் குற்றம்.

அஃது ஓர் சொல்லுதல் வகைமையான், முன்னர் இயல்பாகிய விளக்கமும், கிளர்ச்சியும் நோக்கி முக்கியப் பொருளோடு குணப் பொருளை ஒற்றுமை கொளுததி உருவகஞ் செய்து, பின்னரும், செயற்கையால் உளமாகிய மதர்ப்புஞ் செம்மையும் நோக்கி 'மது நுகர்ந்தார் முகம் உதயமதியம் போலும்' என்று உவமித்தமையின் வேற்றுமை யுடைத்தாதலால் உருவகத்துள்ளே அடக்கப்பட்டது. உவமைப்பாற் படுப்பினும் இஃது ஒக்கும்.

'ஐயமும் ஒப்புமையில்லதும்' என்றது, முறை பிறழக் கூறிய வதனான், இவ்வோத்தின் ஒழிபுள்ளன தழீஇக் கொள்க வென்பது.

(கு - ரை.) ஒத்து - இயல்.

அவை இடத்திற் கேற்ற வுவமையும், காலத்திற் கேற்ற வுவமையும், பொருளிற் கேற்ற வுவமையும், பண்பிற் கேற்ற வுவமையும், சாதிக் கேற்ற வுவமையும், மரபிற் கேற்ற வுவமையும், பிறவாறும் பொருத்தமுடையன சிறப்புடையன வெனக் கொள்க.

அவற்றுள், க-வது, **இடத்துக் கேற்றது.**

வ - று. " பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுநீர் மொக்குள் " என வரும்.

(இ - ள்.) சுக்கான் கற்களாகிய பகையாலே, வருந்தின நோயோடே பொருந்தி, மரல்பழுத்தாற் போன்ற துளும்பு நீரையுடைய கொப்புளம் (எ - று.)

இச் செய்யுளடிகள், **பொருநராற்றுப்படையில்** கடுஞ்சுரத்தைப் பற்றிக் கூறுமிடத்தே யுள்ளன. அப் பாலைநிலத்தில் நடத்தலால் காலிலுண்டாகும் கொப்புளத்துக்கு அவ்விடத்தே யுண்டாகும் மரலென்னும் கற்றாழைப்பழத்தை உவமை கூறியதால் இஃது இடத்திற் கேற்ற உவமையாம்.

பரல் - பருக்கைக்கல் ; இது பாலைநிலத்தில், கால்களை யழுத்தி வேதனை செய்யத்தக்க கூர்ப்பாகங்களையுடையனவாய்ச் சிறு மணிகளைப் போன்று கிடக்கும் ஒருவகைச் சுக்கான் கல். மரல் - பாலைவனத்தில் உண்டாகும் ஒருவகைக் கற்றாழை. சிவணல் - பொருந்துதல். கடுஞ்சுரம் - கொடுமையான பாலைநிலம்.

உ-வது, **காலத்துக் கேற்றது.**

வ - று. " நிழற்கோபமல்க " என வரும்.

இச் செய்யுளை இப் புத்தகம் சுகூ-ம் பக்கத்திற் காண்க.

இச் செய்யுள் கார்கால வர்ணனை. இதில் அக்காலத்திற்கு உரிய இந்திரகோபம், காயாமலர், தோகை விரித்தாடும் மயில் என்பவற்றை எடுத்து, அக்காலத்திற் பெரும்பாலும் தழலில் தோன்றிய புனைவை பூட்டுங் கூந்தலையுடைய மகளிரோடு உவமித்துக் கூறியமை காண்க.

ங-வது, **பொருளுக் கேற்றது.**

வ-று. " கடலுமலையும் போலக் கரியோய் " என வரும்.

(இ - ள்.) கடலும் மலையும் போலக் கரிய நிறமுடையவனே! அல்லது அவைபோல உயர்ந்த தோற்றமுடையவனே! (எ - று.)

இஃது, உவமேயத்தின் நிலைமைக் கேற்ற உவமையாதல் காண்க.

ச-வது, பண்பிற் கேற்றது.

வ - று. "புலிநா வன்ன புல்லிதழ்த் தாமரை" என வரும்.

(இ - ள்.) புலியின் நாவை நிகர்த்த செறிந்த இதழ்களையுடைய தாமரை (எ - று.)

இதிலுள்ள உவமை செந்நிறமிகுதிக்கும், மெல்லியதன்மைக்கும் ஏற்றதாதல் காண்க.

ரு-வது, சாதிக் கேற்றது.

ஆசிரியப்பா

வ-று. "சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை" என வரும்.

(இ - ள்.) சேற்றில் வளருந் தாமரை மலர்ந்த ஒள்ளிய நிறத்தையுடைய நூறிதழ்கள் பொருந்திய மலரின் வரிசையைக் கண்டாற் போன்ற ஏற்றத்தாழ்வற்ற பரிசுத்தமாகிய குடியிடத்திற் பிறந்து தங்கியிருந்த அரசர்களை எண்ணுங்காலத்தில் (எ-று.)

இதில் வரும் உவமை சாதியின் கௌரவத்திற்கு ஏற்றதாதல் காண்க.

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்" எனவும் வரும்.

(இ - ள்.) மிருகங்களைக் காட்டினும் மனிதர் எவ்வளவு சிறப்புடையவரோ அவ்வளவு இழிவுடையராவர், சிறப்புற்ற நூல்களைக் கற்றவரினும் கல்லாதவர் (எ - று.)

இதில் கல்லாத மனித சாதிக்கு விவேகமற்ற மிருக சாதியை உவமை கூறியமை காண்க.

சா-வது, மரபிற்கு ஏற்றது.

வ - று. " கவிர்போலுஞ் செவ்வாய் " எனவும்,
" பவளம்போலுஞ் செவ்வாய் " எனவும் வரும்.

இவை செம்பருத்தியுங் கரவீரமும் உரையாமையின், பிற அலங்காரங்கட்கும் இவ்வாறே ஏற்புடைமை அறிந்து பாடுவன சிறப்புடைய வெனக் கொள்க.

கவிர் - முருக்கிதழ். கரவீரம் - செவ்வலரி.

செம்பருத்தியையும் செவ்வலரியையும் வாய்க்கு உவமை கூறுதல் மரபன் றென்பதூஉம், முருக்கிதழையும் பவழத்தையுங் கூறுதல் மரபென்பதூஉம் இவற்றா லுணரப்படும்.

அல்லதூஉம், பண்பு தொழில் பயன் என்பனவற்றின் மேல் நிகழும் சொல்லின்றி அவற்றிற்கு முதலாகிய பொருள் கூறவே. அவ்வாற்றாற் பண்பு முதலாயின பெறப்படும் உவமையும் உள. அவை வருமாறு :—

## நேரிசை வெண்பா

வ-று. " மயில்போன் மடப்பிடிபோன் மான்போன் மழலைக்
குயில்போ லொளிர்மென் கொடிபோற்—பயிலும்
கொலைவா ரணத்துங்கன் கோழிக்கோன் கொல்லி
மலைவாணர் காதன் மகள் " என வரும்.

இச் செய்யுட் பொருளாவது :—பகைவரைக் கொல்லுகின்ற யானையைக்கொண்டு சிறந்தவனும், கோழி யென்னும் படை வீட்டிற்குத் தலைவனுமான அரசனது கொல்லிமலையில் வாழும் வேடுவர்களுடைய விருப்பமுற்ற பெண், மயில் போலவும், இளமைப் பருவமுள்ள பெண்யானை போலவும், மானைப்போலவும், மழலைக் குயில்போலவும், விளங்குகின்ற மெல்லிய கொடிபோலவும் பயிலுவாள் என்பதாம்.

இதனுள், மயில்போலும் இயலினை யுடையாள் எனவும், பிடி நடைபோலும் நடையினை யுடையாள் எனவும், மானோக்குப் போலும் நோக்கினையுடையாள் எனவும் குயின்மொழிபோலும் மொழியினையுடையாள் எனவும் கொள்ளக் கிடந்தமை யறிந்து கொள்க. என்னை ?

**சூத்திரம்**

"சுட்டிக் கூறா வுவமை யாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்துவ கொளலே"
என்பவாகலின்.

இயல் - சாயல். பிடி - பெட்டை யானை. மழலை - நிரம்பா மென் சொல். பயிலல் - பொருந்தியிருத்தல்.

தொல்காப்பியச் சூத்திரப் பொருளாவது : உபமானத்திற்கும் உபமேயத்திற்கும் பொதுவான ஒப்புத்தன்மையை விரித்துக் கூறாவிடத்து, அவ்விரண்டையும் ஒப்பிட்டு நோக்கி, அவ்விடத்துக்குப் பொருந்திய தன்மையைக் கொள்ள வேண்டு மென்பதாம். 'பவளம்போற் செந்துவர்வாய்' என்பது இரண்டுக்கும் பொதுவான செம்மைக்குணத்தையே சொல்லி உவமை கூறினமையின், சுட்டிக் கூறிய உவமையாம். 'பவளவாய்' என்றவிடத்துச் சுட்டிக் கூறா உவமையாம். இதில், பவளத்தையும் வாயையும் ஒப்பிட்டு நோக்கிச் செம்மைக் குணம்பற்றி உவமை கூறியதென் றுணர வேண்டும். அங்ஙன மின்றேல் வலிமையுள்ள பவளத்திற்கும் மெல்லிய வாயிதழுக்கும் உள்ள ஒப்புமை யில்லையா மென்க.

## கரு. பாவிகவணி

**கஅக. பாவிக மென்பது காப்பியப் பண்பே**

என்பது நிறுத்தமுறையானே பாவிக மென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பாவிக மென்று சொல்லப்படுவது பொருட்டொடர் நிலைச் செய்யுட்டிறத்துக் கவியாற் கருதிச் செய்யப்படுவதொரு குணம் (எ - று.)

அஃது, அத் தொடர்நிலைச் செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படுவதல்லது, தனித்து ஒரு பாட்டால் நோக்கிக் கொள்ளப் புலப்படாதது.

**ஆசிரியப்பா**

வ - று. "பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப
பொறையிற் சிறந்த கவச மில்லை
வாய்மையிற் கடியதோர் வாளி யில்லை"
என்பன போலக் கிடப்பது.

‘பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப’ என்பதற்குப் பொருள், ‘பிறன் மனைவியை விரும்புவோர் சுற்றத்தொடுங் கெடுவர்’ என்பதாம்; இஃது இராமாயணத்தா லுணரப்படும்.

‘பொறையிற் சிறந்த கவச மில்லை’ என்பதற்குப் பொருள். ‘பொறுமையைப் பார்க்கிலும் சிறப்புற்ற பாதுகாப் பில்லை’ என்பதாம்; இது பாரதத்தால் உணரப்படும்.

‘வாய்மையிற் கடியதோர் வாளி யில்லை’ என்பதற்குப் பொருள் ‘சத்தியத்தைக் காட்டினும் துன்பத்தைச் சிதைக்கத்தக்க கடியதோர் அம்பில்லை’ என்பதாம்; இஃது அரிச்சந்திர சரித்திரத்தா லுணரப்படும்.

அஃதேல், முன் அதிகாரச் சூத்திரத்துப் பிற அலங்காரங்களுடன் வைத்த இதனை ஈண்டுப் புறனடையின் பின்னாக வைத்தது என்னை யெனின், பிற அலங்காரங்கள் ஒரு பாட்டானே யுணரப் புலப்படும்; இஃது அன்னதன்று; ஆகலான், ஆசிரியன் வாழ்த்தென்னும் அலங்காரத்தின் பின்னரே விரவியல் வைத்தது. முன்னாளவே விரவுவன வென்ப தறிவித்தற்கு இஃதன்னதன் றென்பது.

## பொருளணியியல் முற்றிற்று.

# ௩. சொல்லணியியல்

---

௯௨. எழுத்தின் கூட்ட மிடைபிறி தின்றியும்
பெயர்த்தும்வேறு பொருடரின் மடக்கெ
[னும் பெயர்த்தே.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், சொல்லானும் அணிகளது இயல்புணர்த்தினமையிற் சொல்லணியிய லென்னும் பெயர்த்து. அஃதேற் குற்றமுங் குணமும் ஈண்டே யன்றே கூறியது. இதனைச் சொல்லணியியலென்ற தென்னையெனின், அவையுங் கூறினரேனும், அவை சிறுபான்மைய வாகலானும், இதுணைச் சிறப்புடையன அன்மையானும், சொல்லானும் அணிகளது தலைமையும், பன்மையும் நோக்கி அப்பெயர்த்தாயிற் றென்பது. என்னை,

"ஒருபெயர்ப் பொதுச்சொ லுள்பொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்த றலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினு மஃறிணை மருங்கினும்"

என்பவாகலின்.

இவவோததினுள இச சூததிரம எனனுதலிறறோ வெனின, பொது வகையான மடககெனனும அலஙகாரம உணாததுதல நுதலிறறு.

(இ - ள்.) எழுததுக்களது தொகுதி, பிறவெழுத்தானும் சொல்லானும், இடையிடாதும் இடையிட்டும் வந்து பெயர்த்தும் வேறு பொருளை விளைப்பது மடக்கென்னும் அலங்காரமாம் (எ - று.)

எழுத்துக்களது தொகுதி எனவே, இரண்டு முதல் எனைத் தெழுத்தானும் வருமெனக் கொள்க. 'பிறிதின்றியும்" என்பது எதிரதுதழீஇய எச்சவும்மை. 'பெயர்த்தும்' என்பது இறந்தது தழீஇய எச்சவும்மை. மடக்கு - யமகம் ; அஃதாவது :: வந்த சொல்லே வருதல். (௧)

௯௩, அதுதான்,

> ஓரடி முதலா நான்கடி காறும்
> சேரு மென்ப தெளிந்திசி னோரே

என்பது.

இதுவும் அதனையே வகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அம் மடக்கு, நான்கடிச் செய்யுளுள்ளே மடக்குங் கால், ஓரடிக்கண்ணும், ஈரடிக்கண்ணும், மூன்றடிக்கண்ணும், நான்கடிக்கண்ணு நடக்குமென்று சொல்லுவர் தெளிந்தோர் (எ - று.)

நான்கடிச் செய்யுளென்பது ஆற்றலாற் போந்த பொருள். ஓரடிக்கண் வருவன - முதலடிக்கண்ணும், இரண்டாமடிக்கண்ணும், மூன்றாமடிக்கண்ணும், நான்காமடிக்கண்ணும் வருவனவாம். அவை முன்னர்க் காட்டுதும். (உ)

௯௪. ஆதி யிடைகடை யாதியோ டிடைகடை
இடையொடு கடைமுழு தெனவெழு [வகைத்தே.

என்பது, என்னுதலிற்றோவெனின், இதுவு மது.

(இ - ள்.) அம் மடக்கு : ஆதிமடக்கும், இடைமடக்கும், கடைமடக்கும், ஆதியோடு இடைமடக்கும், ஆதியோடு கடைமடக்கும், இடையோடு கடைமடக்கும், முழுதுமடக்கும் என எழுவகைப் படும் (எ - று.)

௯௫. ஓரடி யொழிந்தன தேருங் காலை
இணைமுதல் விகற்ப மேழு நான்கும்
அடைவுறும் பெற்றியி னறியத் தோன்றும்

எனபது, என்னுதலிற்றோவெனின், இதுவு மது.

(இ - ள்.) ஓரடிமடக்கு ஒழிந்தன ஆராயுங்காலத்துத் தொடையின் இணைமுதலாகிய விகற்பத்தொடை யேழும் நான்கு மாகிய பதினொன்றும் போல விளங்கித் தோன்றும் (எ - று.)

அவை :

(1) முதலீரடிக்கண்ணு மடக்குதலும், (2) முதலடிக்கண்ணும் மூன்றாமடிக்கண்ணு மடக்குதலும், (3) முதலடிக்கண்ணும் நான்காமடிக்கண்ணு மடக்குதலும், (4) கடையீரடிக்கண்ணு மடக்குதலும், (5) இடையீரடிக்கண்ணு மடக்குதலும், (6) இரண்டாமடிக்கண்ணு நான்காமடிக்கண்ணு மடக்குதலும் என்னும் இரண்டடிமடக்கு ஆறும் ;

(1) ஈற்றடி யொழிந்த ஏனை மூன்றடிக்கண்ணு மடக்குதலும், (2) முதலடி யொழித்து ஏனை மூன்றடிக்கண்ணு மடக்குதலும், (3) முதலயலடி யொழித்து ஏனைய மூன்றடிக்கண்ணு மடக்குதலும், (4) ஈற்றயலடி யொழித்து ஏனை மூன்றடிக்கண்ணு மடக்குதலும் என மூன்றடி மடக்கு நான்கும் ;

நான்கடியு மடக்கிய முற்றுமடக் கொன்றுமாகிய பதினொன்றும், யாப்பதிகாரத்துள், தொடை விகற்பங்கட்கு நாற்சீரடியுளோதிய வதனை நான்கடிச் செய்யுளுளோதினார், 'ஒப்பின் முடித்தல்' என்னுந் தந்திரவுத்தியான். இப் பதினொன்றும், ஓரடிமடக்கு நான்கும், ஆகிய பதினைந்தும், மேற்கூறிய ஏழு கூறுபாட்டோடு கூட்ட நூற்றைந்து வகைப்படும்.

அவை, இடையிட்டு வருவனவும், இடையிடாது வருவனவும் இடையிட்டு மிடையிடாதும் வருவனவுமாகிய மூவகையோடுங் கூட்ட முந்நூற்றொருபத்தைந்து வகைப்படும். அவற்றுள் சில வருமாறு :—

## அடிமுதன் மடக்கு

க-வது, முதலடி, முதன்மடக்கு.

### நேரிசை வெண்பா

வ - று. "துறைவா துறைவார் பொழிற்றுணைவர் நீங்க
உறைவார்கது முண்டாங்கொல் சேவல்—சிறைவாங்கிப்
பேடைக் குருகாரப் புல்லும் பிறங்கிருள்வாய்
வாடைக் குருகா மனம்."

(இ - ள்.) நெய்தனிலத் தலைவனே! துறையின்கண் பெருத் திருக்கப்பட்ட பொழிலிடத்துத் தலைவர் பிரியத் தனித்திருப்

பார்க்கும் உண்டாகுமோ, சேவற்குருகானது தன் சிறகை வளைத்துப் பேடைக் குருகை யிறுகப் புல்லும் மிக்க இருளினையுடைய யாமத்துக்கண் வாடைக்காற்று வந்தாற் கரையாத மனம் (எ - று.)

இதில் முதலடி முதலில், 'துறைவா, துறைவா' என ஒரே சொல் மடங்கி வந்தமை காண்க.

உ-வது, இரண்டாமடி முதன்மடக்கு.

நேரிசை வெண்பா

வ - று. "கனிவா யிவள்புலம்பக் காவலநீ நீங்கில்
இனியா ரினியா ரெமக்குப்—பனிநாள்
இருவராத் தாங்கு முயிரன்றி யெங்குண்
டொருவராத தாங்கு முயிர்" என வரும்.

(இ - ள்.) கனிபோன்ற மொழியினையுடைய இவள் புலம்பும்படி அரசனே! நீ பிரிந்தகாலத்து எங்களுக் கினியரா யினிமையான சொற்களைச் சொல்லிக் காக்குந் தலைவ ரினி யாவர்? பனிக் காலத்தது தம்மிற் புணர்ந்து பிரியாதிருந்த இருவருங் கூடித் தாங்காநிற்கு முயிரல்ல தொரு திறத்தாராகப் பிரிந்திருந்த மடவார் தாங்கு முயிர் எக்காலத தெவ்விடத் துண்டு சொல்லுவாயாக! (எ - று.)

இதன் இரண்டாமடியில், 'இனியா ரினியார்' என ஒரு சொல் மடங்கிவந்தமை காண்க.

௩-வது, மூன்றுமடி முதன்மடக்கு.

நேரிசை வெண்பா

வ - று. "தேங்கானன் முத்தலைக்குந் தில்லைப் பெருந்தகைக்கு
ஓங்காரத் துட்பொருளா மொண்சுடர்க்கு—நீங்கா
மருளா மருளா தரித்துரைக்கு மாற்றம்
பொருளாம் புனைமாலை யாம்" என வரும்.

(இ - ள்.) தேனை யுடைத்தாகிய கழிக்கானற்க ணுண்டாகிய முத்தம் வந்தலைக்கப்படாநின்ற தில்லை மூதூர்ப் பெரியோனுக்குப் பிரணவத்தி னுட்பொருளா யிருக்கப்பட்ட ஒள்ளிய சோதிவடிவாகிய

கடவுளுக்கு இடையறாத ஆசையாகிய மயக்கத்தினை மேற்கொண்டு ஒருவன் சொல்லுகிற அறிவழிந்த சொல்பொருளுமாம்; பூணப் பட்ட மாலையுமாம் (எ - று.)

இதன் மூன்றாமடியில், 'மருளா மருளா' என்றொரு மொழி மடங்கி யிருத்தல் காண்க.

ச-வது, ஈற்றடி, முதன்மடக்கு.

### நேரிசை வெண்பா

வ - று. " இவளளவுந் தீயுமிழ்வ தென்கொலோ தோயும்
கவள மதமான் கடத்திற்—றிவளும்
மலையார் புனலருவி நீயணுகா நாளில்
**மலையா மலையா** நிலம் " என வரும்.

(இ - ள்.) தலைவனே! நீ இவளை வந்து அணையாதபோது தோயும் கவள மதமான் கடத்தை யொத்துப் புரளும் அருவியை யுடைத்தாகிய பொதியமலைக்கண்ணே பிறந்து எல்லார்க்குங் குளிர்ச்சியைச் செய்கின்ற தென்றல், இவளளவும் அனலைச் சொரிகின்ற காரணமென் சொல்லுவாயாக! (எ - று.)

இத னீற்றடியில், 'மலையா மலையா' என்றொரு சொல் மடங் கினமை காண்க.

இவை நான்கும் ஓரடி முதன்மடக்கு.

ரு-வது, முதலடியும், இரண்டாமடியு முதன்மடக்கு.

### நேரிசை வெண்பா

வ - று. " **நினையா நினையா** நிறைபோ யகலா
**வினையா வினையா** மிலமால்—அனையாள்
குரவாருங் கூந்தற் குமுதவாய்க் கொம்பிற்
புரவாளா நீபிரிந்த போது " என வரும்.

(இ - ள்.) தலைவனே! குரவம்பூவினை யுடைத்தாகிய கூந்த லினையும், அல்லி மலரை யொத்த வாயினையு முடைத்தா யிருப்ப தொரு வஞ்சிக்கொம்புண்டாயின், அக் கொம்பு போன்றவள் இவளை நீ பிரிந்த பொழுதே நின்னை யாங்கள் நினைத்து எங்கள் நிறையாயின தெங்களை விட்டு நீங்கி வருந்தி ஒரு செய்தியு மறியோ மாகுதும். ஆதலால், எங்களைப் பிரியா தொழிவாயாக (எ - று.)

இதன் முதலடியில், 'நினையா நினையா' என்றும், இரண்டா மடியில், 'வினையா வினையா' என்றும் மடக்குகள் வந்தமை காண்க. 'நின்னை' என்பது 'நினை' என விகாரமாயிற்று.

௬-வது, முதலடியு மூன்றாமடியு முதன்மடக்கு.

நேரிசை வெண்பா

வ - று. " **அடையா ரடையா** ரரணழித்தற் கின்னல்
இடையாடு நெஞ்சமே யேழை—உடையோர்
**மயிலா மயிலா** மதர்நெடுங்கண் மாற்றம்
குயிலாமென் றெண்ணல் குழைந்து" என வரும்.

(இ - ள்.) ஊசற்கயிறொப்ப இடையாடு முள்ளமே! நீ தலைவியி னுடைய சாயலை மயிலா மென்றும், அவளது மதர்த்த நெடிய கண்ணை வேலா மென்றும், மொழியானது குயிலா மென்றும், இளகி நினையா தொழிவாயாக. அன்றி, நினைத்தியாயின் பகைவரடையும் அரிய அரணை யழித்தற்கு வருத்தமாம் (எ - று.)

இதன் முதலடியில், 'அடையா ரடையார்' எனவும், மூன்றா மடியில், 'மயிலா மயிலா' எனவும் மடக்குகள் வந்தமை காண்க.

எ-வது, முதலடியு மீற்றடியு முதன்மடக்கு.

நேரிசை வெண்பா.

வ - று. " **மானவா மானவா** நோக்கின் மதுகரஞ்சூழ்
கானவாங் கூந்தலெங் காரிகைக்குத—தேனே
பொழியாரந் தார்மேலு நின்புயத்து மேலும்
**கழியா கழியா** தரவு" என வரும்.

(இ - ள்.) மனுகுலவேந்தனே! மான்கள் ஆசைப்படு நோக் கத்தையும், வண்டுகள் மதுவுண்ணும்படி சூழுங் கூந்தலையு முடைய எமது காரிகையாட்கு, மதுப்பொழியு நினதழகிய ஆத்தித் தார்க்கண்ணும், நினது புயத்தின்கண்ணும், மிக்க ஆசை நீங்காது (எ - று.)

இதன் முதலடி முதலில், 'மானவா மானவா' எனவும் ஈற்றடி முதலில், 'கழியா கழியா' எனவும் சொற்கள் மடங்கினமை காண்க.

அ—வது, மூன்றாமடியு நான்காமடியு முதன்மடக்கு

நேரிசை வெண்பா

வ - று. " மாதருயிர்தாங்க வள்ளல் வருநெறியில்
பேதுறவு செய்யும் பெரும்பாந்தள்—யாதும்
வரையா வரையா மெனுமா மதமா
விரையா விரையா வெழும் " 　　என வரும்.

(இ - ள்.) வள்ளலே! இவளுயிரைத் தாங்குதல் காரணமாக நீ வரும் வழியில் நடுக்கஞ் செய்யவற்றாகிய பெரும் பாந்தளானவை யாதொன்றையும் வரையாதே கொல்லவற்றாகிய பெரிய மலை போன்ற மதத்தையுடைய யானைகளை யிரையாக நினைந்து இரைந்து கொண்டு வரும் (எ - று.)

இதன் மூன்றாமடி முதலில், 'வரையா வரையா' எனவும், நான்காமடி முதலில், 'விரையா விரையா' எனவும் மடங்கினமை காண்க.

ஊ-வது, இரண்டாமடியு மூன்றாமடியு முதன்மடக்கு

நேரிசை வெண்பா

வ - று. " குரவார் குழலாள் குவிமென் முலைதாம்
விரவா விரவா மென்றென்றல்—உரவா
வரவா வரவா மெனநினையாய் வையம்
புரவாளர்க் கீதோ புகழ் " 　　என வரும்.

(இ - ள்.) குராம்போதினை யுடைய குழலாளாகத் திரண்ட மெல்லிய முலையின்மேல் நீ கூடாத இரவின்கண் ணுண்டாகிய மெத்தென்ற தென்றல் வரவு அதனைப் பாயும் பாம்பாகுமென நினையாதே பிரிகின்றாய் தலைவனே! வையங் காவலைப் புரிந்த தலைவற்கு இதுவோ புகழ் (எ - று.)

இதன் இரண்டாமடி முதலில், 'விரவா விரவா' எனவும், மூன்றாமடி முதலில், 'வரவா வரவா' எனவும் மடக்குகள் வருதல் உணர்க.

### ௧0-வது, இரண்டாமடியு மீற்றடியு முதன்மடக்கு

#### நேரிசை வெண்பா

வ - று. " மழையார் கொடைத்தடக்கை வாளபய னெங்கோன்
**விழையார் விழையார்** மெல்லாடை—குழையார்
தழையா முணவுங் கனியா மினமு
**முழையா முழையா** முறை " என வரும்.

(இ - ள்.) மழைபோலு மிகக் கொடுக்கவல்ல பெரிய கையினையும், ஒளியினையுமுடைய அபயனாகிய வெங்கோனைப் பகைத்தால் விரும்பப்பட்ட அரிய மெல்லிய ஆடை தளிரார்ந்த தழையாம், உணவுங் கனிகளாம், அவர்களுக்குச் சுற்றமும் மான்களாம், இருப்பிடமும் மலைக் குகையாம் (எ - று.)

இதன் இரண்டாமடி முதலில், 'விழையார் விழையார்' எனவும், ஈற்றடி முதலில், 'முழையா முழையா' எனவும் மடக்குகள் வந்தமை காண்க.

இவை யாறும் ஈரடி மடக்கு.

### ௧௧—வது, ஈற்றடி யொழித்து ஏனை மூன்றடியு முதன்மடக்கு

#### நேரிசை வெண்பா

வ - று. " **இறைவா விறைவால்** வளைகாத் திருந்தியார்
**உறைவா ருறைவார்** புயலால்—நறைவாய்
**வண்டளவு வண்டளவு** நாளின்மயி லாலக்
கண்டளவி னீர்பொழியுங் கண் " என வரும்.

(இ - ள்.) இறைவனே! இறைக்கண் வெள்ளிய வளைகள் வீழாதபடி காத்திருந்து யார் உயிரோடு வாழ்வார்? துவலைமிக்க புயலினாலே, தேனை யிடத்திலேயுடைய வளப்பதத்தையுடைய முல்லை மலரின் மீதே வண்டுகளிருக்கப்பட்ட கார்காலத்து மயிலாடக் கண்டு அளவில்லாத நீரைப் பொழியுங் கண்களாதலால் (எ - று.)

இதில், 'இறைவா விறைவா' என்று முதலடி முதலிலும், 'உறைவா ருறைவார்' என்று இரண்டாமடி முதலிலும், 'வண்டளவு வண்டளவு' என்று மூன்றாமடி முதலிலும் மடக்குகள் வந்தமை காண்க.

கஉ-வது முதலயலடி யொழிந்து ஏனை மூன்றடியு முதன் மடக்கு :

நேரிசை வெண்பா

வ - று. " கொடியார் கொடியார் மதின்மூன்றுங் கொன்ற
படியார் பனைத்தடக்கை நால்வாய்க்—கடியார்
உரியா ருரியா ரெமையாள வோதற்
கரியார் கரியார் களம் " என வரும்.

(இ - ள்.) கொடியரா யுள்ளாருடைய கொடிகள் பொருந்திய முப்புரத்தையு மெரித்த தன்மையினை யுடையார், பனை போன்ற பெரிய கையினையுடைய யானையின் அச்சத்தைத்தருந்தோலை யுடையார், எம்மை யாண்டுகோடற் குரியார், யாவராலும் புகழ்தற் கரியார், கறுத்த மிடற்றினை யுடையார் (எ - று.)

மதில் - முப்புரம். இதில், 'கொடியார் கொடியார்' என்று முதலடி முதலிலும், 'உரியார் உரியார்' என்று மூன்றுமடி முதலிலும், 'கரியார் கரியார்' என்று நான்காமடி முதலிலும் மடக்குகள் அமைந்திருத்தல் காண்க.

கஙு-வது, ஈற்றயலடி யொழிந்து ஏனை மூன்றடியு முதன் மடக்கு.

நேரிசை வெண்பா

வ - று. " மலையு மலையு மகிழ்ந்துறையும் வேயும்
கலையுங் கலையுங் கடவும்—தொலைவில்
அமரி யெமக்கரணு மென்னு மவர்முன்னிற்
குமரி குமரிமேற் கொண்டு " என வரும்.

(இ - ள்.) பொருப்பின்கண்ணும் கடலின்கண்ணும் மகிழ்ந்து உறைபவளும், இளம்பிறையைச் சூடுபவளும், கலையேற்றை யுகைப்பவளும், தொலைவில்லாத அமரினை யுடையளுமாகியாள், எமக்குக் காவலா மென்பார்க்கு முன்னே சிங்கத்தை யுகைத்துத் தோன்றுங் குமரி (எ - று.)

இதில், 'மலையு மலையும்' என முதலடி முதலிலும், 'கலையுங் கலையும்' என இரண்டாமடி முதலிலும், 'குமரி குமரி' என நான்காமடி முதலிலும் மடக்குகள் வந்தமை காண்க.

கசு-வது, முதலடி யொழிந்து ஏனை மூன்றடி முதன்மடக்கு

### நேரிசை வெண்பா

வ - று. "பாலையாழ் தன்னிற் பதிற்றிரட்டி வெய்தன்றே
மாலைவாய் மாலைவா யின்னிசை—மேலுரை
மேவலர் மேவலர் மெல்லாவி வாட்டாதோ
காவலர் காவலராங் கால்" என வரும்.

(இ - ள்.) பாலையாழ்தன்னிலும் இருபது மடங்கு வெம்மையை யுடையதன்றோ, அந்திப்பொழுதின்கண் விறலிபாட்டின்கணுண்டாகிய இன்பத்தையுடைய இசைமேலாயுள்ள புகழ்ச்சியைப் பொருந்தாதார் விரும்பிக்கூறும் அலர்; அஃது எங்களுடைய மெல்லிய உயிரை வாட்டாதொழியுமோ, தலைவர் நம்மைக் காவாரான காலத்து (எ - று.)

மாலை - பாட்டு. இதில், 'மாலைவாய் மாலைவாய்' என்று இரண்டாமடி முதலிலும், 'மேவலர் மேவலர்' என மூன்றாமடி முதலிலும், 'காவலர் காவலர்' என நான்காமடி முதலிலும் மடக்குகள் வருதல் காண்க.

இவை நான்கும் மூன்றடி முதன்மடக்கு.

கரு-வது, முற்றுமடக்கு.

### நேரிசை வெண்பா

வ - று. "வரைய வரைய சுரஞ்சென்றார் மாற்றம்
புரைய புரையவெனப் பொன்னே—உரையல்
நனைய நனைய தொடைநம்மை வேய்வர்
வினையர் வினையர் விரைந்து" என வரும்.

(இ - ள்.) களவொழுக்காகாது, வரையவேண்டு மென்னும் ஆசையாற் பிரிந்து மலைகளையுடைய சுரங் கடந்து போயினார், 'நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன்' என்று முற்காலத்து நம்மைத் தேற்றிய வார்த்தை இப்பொழுது நமக்குப் பெரிதாகிய குற்றத்தைப் பயந்தன வென்று, பொன்னை யொப்பாய்! சொல்லற்பாலை யல்லை; மதுவோடும், குளிர்ச்சியோடுங் கூடிய தொடையலை நமக்குச் சூட்டுவர். அவர் பல செய்தியு மறிவினையு முடையராதலால் விரைந்து வந்து (எ - று.)

இதில், 'வரைய வரைய' என்று முதலடி முதலிலும், 'புரைய புரைய' என இரண்டாமடி முதலிலும், 'நனைய நனைய' என மூன்றாமடி முதலிலும், 'வினையர் வினையர்' என நான்காமடி முதலிலும் மடக்குகள் வந்தமை காண்க.

இவை பதினைந்தும் அடிமுதன் மடக்கு.

**இடை முற்று மடக்கு**

நேரிசை வெண்பா

வ-று. "மனமேங் **குழைய குழைய**வாய் மாந்தர்
இனநீங் **கரிய கரிய**—புனைவதனத்
துள்**வாவி வாவி**க் கயலொக்கு மென்னுள்ளம்
கள்**வான வான**வாங் கண்" என வரும்.

(இ - ள்.) மனந்தளர்ந்த மாளிரேக்கத்தை யுடையவுமாய்க், குழையைத் தொடர்வனவுமாய், இளைஞர் குழாம்விட்டு நீங்குதற் கரியனவுமாய்க கருமையையு முடைததாயிருப்பன. அலங்கரிக்கப் பட்ட முகததிலுலாவிப் பொய்கைக் கயல்போலும் என்னுள்ளத் தைக் களவுகொண்டவளுடைய அவ் வாளொத்த கண்கள் (எ - று.)

இதில், முதலடியின் இடையில், 'குழைய குழைய' எனவும், இரண்டாமடியின் இடையில், 'கரிய கரிய' எனவும், மூன்றாமடியி னிடையில், 'வாவி வாவி' எனவும், நான்காமடியின் இடையில், 'வான வான' எனவும் மடக்குகள் வந்தமை காண்க.

ஒழிந்த இடைமடக்கு வந்தவழிக் கண்டுகொள்க.

**இறுதி முற்று மடக்கு**

இன்னிசை வெண்பா

உ-று. "மாலை யருளாது **வஞ்சியான் வஞ்சியான்**
மேலை யமரர் கடை**வேலை வேலை**
வளையார் திரைமேல் வரு**மன்ன மன்ன**
இளையா ளிவ**ளை வளை**" என வரும்.

(இ - ள்.) வஞ்சிக்காவலன் தன் மார்பின் மாலை கொடாதே வஞ்சனை செய்து கொள்வானல்லன், மேலாயுள்ள வானவர் கடைந்த காலத்துக் கரையினையும் சங்குகளையுமுடைய கடலிற்

றோன்றின திருமகளாகிய அன்னத்தை யொத்த பேதையாகிய இவளுடைய வளைகளை (எ - று.)

இதில் நான்கடிகளின் ஈற்றிலும், 'வஞ்சியான் வஞ்சியான்' எனவும், 'வேலை வேலை' எனவும், 'மன்ன மன்ன' எனவும், 'வளை வளை' எனவும் மடக்குகள் வந்தமை காண்க.

ஒழிந்த இறுதி மடக்கு வந்தவழிக் கண்டுகொள்க. இவை யனைத்து மோரிடத்தே மடக்கின. இவளை என்பது வேற்றுமை மயக்கம்.

முதற்கண்ணு மிடைக்கண்ணு முற்று மடக்கு

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வ-று. "கொண்டல் கொண்டலர் பொழிறொறும்
பண்ணையாய்ப் பண்ணையா யத்துள்ளார்
வண்டல் வண்டலர் தாதுகொண்
டியற்றலின் வருமண மணன்முன்றில்
கண்டல் கண்டக மகிழ்செய
வோதிமங் கலந்துறை துறை வெள்ளம்
மண்டன் மண்டல முழுதுடன்
வளைதரு வளைதரு மணிவேலை" என வரும்.

(இ - ள்.) கீழ்க்காற்று மோத அலர்கின்ற சோலைதோறும், இசையை ஆராயும் விளையாடற் கூட்ட மகளிர் சிற்றிலை வண்டுக ளரற்றிய தாதுக்களைக்கொண்டு செய்ததால், மணம்வீசு மணல் முற்றமாகிய கைதைமீதே கண்டார் கண் களிகூரும்படி அன்னங் கள் கூடி யிருக்குந் துறையில் வெள்ளத்தைக்கொண்டு ஏறுதொழி வாயாக. நிலவலய முழுதையுஞ் சூழும் சங்குகளாற் றரப்பட்ட முத்துக்களையுடைய கடலே! (எ - று.)

இதில், 'கொண்டல கொண்டல' என்று முதலடி முதலிலும், 'பண்ணையாய்ப் பண்ணையாய்' என இடையிலும், 'வண்டல் வண்டல' என இரண்டாமடி முதலிலும், 'மண மண' என இடையிலும், 'கண்டல் கண்டக' என மூன்றாமடி முதலிலும், 'துறை துறை' என இடையிலும், 'மண்டன் மண்டல' என நான்காமடி முதலிலும், 'வளை தரு வளை தரு' என இடையிலும் மடக்குகள் வந்தமை காண்க.

ஒழிந்த ஆதியோ டிடைமடக்கு வந்தவழிக் கண்டுகொள்க.

## முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் முற்றுமடக்கு

### கலிநிலைத்துறை

வ - று. "நிரையா நிரையா மணிபோனிறை கோடல் கோடல்
வரையா வரையா மிருண்முன்வரு மாலை மாலை
விரையா விரையா வெழுமின்னொளி மேக மேகம்
உரையா வுரையா ரினுமொல்லன முல்லை முல்லை"
என வரும்.

(இ - ள்.) ஆனிரைகளின் ஒழுங்கா மணியோசைபோல எங்கள் நிறையைக் கவராதை காந்தளே! அளவிட வரிய அரையா மிருளுக்கு முன்னே வரும் மயக்கத்தைச் செய்யு மாலையானது கடுகி யிரைந்து மின்னொளியையு முடைத்தாய்ச் செல்லு மேகங்களும், ஒன்றுஞ் சொல்லாத புகழையுடைய தலைவரினும் பகையாயின முல்லை நிலத்துள்ள முல்லைக்கொடிகளும் ' (எ - று.)

இதில், 'நிரையா நிரையா,' 'கோடல் கோடல்' என முதலடி முதற்கண்ணும் இறுதிக்கண்ணும், 'வரையா வரையா,' 'மாலை மாலை' என இரண்டாமடி முதற்கண்ணும் இறுதிக்கண்ணும், 'விரையா விரையா,' 'மேக மேகம்' என மூன்றாமடி முதற்கண்ணும் இறுதிக்கண்ணும், 'உரையா வுரையா,' 'முல்லை முல்லை' என நான்காமடி முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் மடக்குகள் வந்தமை காண்க.

## இடைக்கண்ணும் இறுதிக்கண்ணு முற்றுமடக்கு

### கலிநிலைத்துறை

வ-று. "வருகம் புளினம் புளினம்பயில் வேலை வேலை
ஒருகா லுலவா வுலவாவரு மோத மோத
வருகே தகைகே தகைசேர்தரு மன்ன மன்ன
பெருகா தனவே தனவேரசை மாதர் மாதர்" என வரும்.

(இ - ள்.) வாராநின்ற கம்புட் குழாங்கள் மணற்குன்றுகளிலே யிருக்குங்காலத்தில், கடலானது ஒருகாலுங் குறையாது உலாவிக் கரையை மோத வரும். அருகே நின்று தடுக்கப்பட்ட

தாமரைமீதே அன்னங்கள் சேருமாதலால் தலைவனே! பெருகா தொழியுமோ மூலைகளின தழுகழிய மடவாருடைய காதல் (எ - று)

இதில், 'புளினம் புளினம்,' 'வேலை வேலை' என முதலடியி னிடையிலு மீற்றிலும், 'உலவா வுலவா,' 'மோத மோத' என இரண்டாமடியி னடுவிலும் மீற்றிலும், 'கேதகை கேதகை,' 'மன்ன மன்ன' என மூன்றாமடியி னடுவிலு மீற்றிலும், 'தனவே தனவே,' 'மாதர் மாதர்' என நான்காமடியி னடுவிலு மீற்றிலும் மடக்குகள் வந்தமை யுணர்க.

## அடிதோறு மூன்றிடத்து மடக்கு

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

வ-று. "களைகளைய முளரியரு கடைகடைய
மகளிர்கதிர் மணியு மணியும்
வளைவளைய காதலமு மடையமடைய
மதுமலரு மலைய மலைய
இளையிளைஞர் கிளைவிரவி யரியரியின்
மிசைகுவளை மலரு மலரும்
கிளைகிளையொ ளிசையளிகண மகிழ்மகிழ்செய்
கெழுதகைய மருத மருதம்" என வரும்.

(இ- ள்.) களைகளை வாங்கத் தாமரை யருகே யடைந்த, கடைசியருடைய ஒளியினையுடைய மணிகளும், இடப்பட்ட வளை சூழ்ந்த கையும், அடைத்த மடையிலுள்ள தேனையுடைய பூவும், மிகவு மாறுபடாநிற்க, இளங்குறுமாக்கள் சுற்றங் கூடி, அறுத் திடப்பட்ட அரியின்மீதே குவளைப்பூவு மலரும், இனத்துடனே கிளையென்னு நரம்பினின்று மெழு மோசை போலப் பாடாநின்ற அளிக்குலம கள்ளை மகிழ மலரினுண்டு மகிழ் செய்யும் விளக்க முடைய மருதமரத்தினையுடைய மருதநிலமானது (எ- று.)

இதில், 'களை களை', 'கடை கடை,' 'மணியு மணியும்' என முதலடி மூன்றிடத்தும், 'வளை வளை,' 'மடைய மடைய', 'மலைய மலைய' என இரண்டாமடியின் மூன்றிடத்தும், 'இளை இளை,' 'அரி யரி,' 'மலரு மலரும்' என மூன்றாமடி மூன்றிடத்தும், 'கிளை கிளை,' 'மகிழ் மகிழ்,' 'மருத மருதம்' என நான்காமடியின் மூன்றிடத்தும் மடக்குகள் வந்தமை யுணர்க.

ஒழிந்த முழுதுமடக்கு வந்தவழிக் கண்டுகொள்க.

இனி இடையிட்டு வந்த மடக்கும், இடையிட்டும் இடையிடாதும் வந்த மடக்கு மிவ்வாறே கண்டுகொள்க.

அவற்றுள் சில வருமாறு:—

**இடையிட்டு வந்த முதன் முற்றுமடக்கு.**

**கலிநிலைத்துறை**

வ - று. "தோடு கொண்டளி முரன்றெழுங் குடைபவர் குழல்சோர்ந்த
தோடு கொண்டதே மலாசுமந் தகில்கமழ்ந் தவர்தம்
தோடு தைந்தசெஞ் சாந்தணி திரண்முலை யிடைதோயத்
தோடு தண்புன லிதநிலந் துறைதொறுஞ் சொரியும்"

என வரும்.

(இ - ள்.) கூட்டங்கொண்டு வண்டுக ளொலித்தெழப் புனலாடுவார் குழலிற் சோர்ந்த இதழ்கொண்ட தேனோடு கூடிய மலரைச் சுமந்து அகிலுறைப்பட்ட மாதருடைய தோளைச் செறிந்த செஞ்சந்தனம் அணியப்பட்ட திரண்ட முலையிடை ஒழுகியோடாநின்ற குளிர்ந்த புனலானது முததுக்களைத் துறைதோறுங் குவியாநிற்கும் (எ - று.)

இதில், 'தோடு' என்ற சொல் நான்கடிகளினும் முதலில் மடக்காக வந்தமை காண்க.

**இடையிட்டு வரும் மடக்காவது**—ஒருசொல், இடையிற் பல்வேறு வகைப்பட்ட சொற்கள் வர வெவ்வேறிடத்தில் மடங்கி வருவது.

**இடையிடாது வரும் மடக்காவது**—ஒரு சொல் இடையில் வேறு சொற்கள் கலவாமல் அடுத்து, '**வஞ்சியான் வஞ்சியான்**' என மடங்குவது.

**இடையிட்டுவந்த இடைமுற்று மடக்கு**

**கலிநிலைத்துறை**

வ - று. "பரவி நாடொறும் **படியவாம்** பலபுகழ்ப் பரப்பின்
இரவி சீறிய **படியவாம்** பரியெரி கவா

விரவி மான்பயில் **படியவாம்** வேய்தலை பிணங்கும்
அருவி வாரணம் **படியவாம்** புலர்பனை மருதம்''
என வரும்.

(இ - ள்.) வழுத்தி நாடோறும் உயர்ந்தோர் விரும்பும் பல புகழை யுடைத்தாகிய நாடுகளுடனே செம்பியன் சிறிய வூர்கள் வரவிததெறும் எரியாற் கொள்ளப்பட்ட மானினந் திரண்டு சஞ் சரிக்குந் தன்மையவாம். வேய்தலை பிணங்கும், அந்தச் செம் பியன் யானை புகுந்து கலங்க நீர் புலருந் தடங்களையுடைய வயல் மருதம் (எ - று.)

செம்பியன் சிறியவூர் மான்பயிலுங் காடாகவும், மருதம் மூங்கில்செறியுங் குறிஞ்சியாகவும் மாறுமென்பதாம்.

'இதில் **படியவாம்**' என்ற சொல், நான்கடிகளி னிடையிலும் மடங்கிவந்தமை யுணர்க.

## இடையிட்டு வந்த இறுதி முற்றுமடக்கு

கலிநிலைத்துறை

௯ - று. ''சொன்ன நாளிது சுரும்பிமி ரிதழிபொன் **கால**
மின்னு வாள்விட வில்வளைத் தூன்றிய **கால**
இன்ன கார்முகி லினமிருண் டெழுதரு **கால**
மன்னர் வாரலர் தான்வரு மயின்மருங் **கால**''
என வரும்.

(இ - ள்.) தாம் வருதுமென்று சொன்னநா ளிதுவா யிருந் தது. சுரும்புகள் பாடாநின்றகொன்றைக ளெல்லாம் பொன் பொழிய, மின்னானது ஒளியை யுமிழ, இந்திரதனுவை வளைத்து வீழ்ந்த மழைத்துளிகளை யுடைத்தா யிப்படி வந்த பருவமுகில் இனமா யிருண்டெழுதரும் பொழுதும் தலைவர் வந்திலர்; பருவந் தான் வாராநின்றது, பக்கமெல்லா மயில்கள் ஆட (எ - று.)

இதில், '**கால**' என்னுஞ் சொல் நான்கடிகளி னீற்றிலும் மடங்கி வருதல் காண்க. இவை மூன்றும் இடையிட்டு வந்தன.

இனி யிடையிட்டும் இடையிடாதும் வருவன —

## இடையிட்டும் இடையிடாதும் வந்த இடையும் இறுதியு முற்று மடக்கு

கலிநிலைத்துறை

வ - று. " வாமான மான மழைபோன்மத மானமான
நாமான மானக மூற்றுழக மானமான
தீமான மானவர்புகாத்திற மானமான
காமான மான கல்சுரங்கனன் மானமான "

என வரும்.

(இ - ள்.) தாவு மான்களை யுடையன. பெரிய முகில்போன்று மதமமைந்த யானைக ளுடையன. அச்சமான புலியுகி ருறுதலால் தாழ்ந்த மனத்தையுடைய விலங்குகளை யுடையன. தீமையை யுடையன; மக்க ளோடாடாத திறமான தன்மையை யுடையன. சோலைகளை யொப்ப வலிய கற்களை யுடையன. இத்தன்மையை யுடைய வழிகள் நெருப்பி னளவா யுள்ளன (எ - று.)

தீமை - தீமென ஈற்றுயிர் கெட்டது. கல்ல - கல்லென ஈறு குறைந்தது. இதில் 'மான மான' என்ற சொல், நான்கடிகளின் இடையிலு மீற்றிலும் இடையிட்டும் இடையிடாதும் மடங்கி வந்தமை காண்க. இன்னும் பலவிதமாக வரும் மடக்குகளின் வேறுபாடுகளையும் வந்துழிக் கண்டுகொள்க. அவற்றுள் சில காட்டப்படுகின்றன.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

"வருமறை பலமுறை வசையறப் பணிந்தே
மதியொடு சடைமுடி மருவுமப் பணிந்தே
அருநட நவில்வது மழகுபெற் றமன்றே
யருளொடு கடவுவ தணிகொள்பெற் றமன்றே
திருவடி மலரன திகழொளிச் சிலம்பே
தெளிவுட னுறைவது திருமறைச் சிலம்பே
இருவினை களைபவ ரடைபதத் தனன்றே
யிமையவர் புகலிறை யெனநினைத் தனன்றே"

என வரும்.

(இ - ள்.) வேதங்கள் பலகாலும் தங் குற்றமறத் தொழுது போற்றச் சடையையுடைய முடியில் பிறையோடு சேரப்பட்ட கங்கையைத் தரித்து, அரிய நடனமாடுவது அழகுடைய திருவம்பலத்தே, பிரியத்துடன் ஏறுவது அலங்காரத்தையுடைய

விடையே; திருவடித் தாமரையிற் கிடப்பன விளங்காநின்ற ஒளியையுடைய சிலம்பே; விளக்கத்துடனே யெழுந்தருளியிருப்பது அழகிய வேதரூபமான கைலைமலையே; இருவினையுங் கடிந்தாரடையும் பாதத்தன் அநாதியே வானவர்க்குப் பகலாகிய முதல்வனென்று தியானித்தல் அழகு (எ - று.)

கலிவிருத்தம்

"அனைய காவலர் காவலர் காவலர்
இனைய மாலைய மாலைய மாலைய
எனைய வாவிய வாவிய வாவிய
வினைய மாதர மாதர மாதரம்; என வரும.

(இ - ள்.) அத்தன்மையாகிய சோலையின் மலராகிய காமன் கணைக்கோ நம் தலைவர் காத்தலிலர்; இத்தன்மையையுடைய மயக்கத்தைத் தருகிற மாலைப்பொழுது அத்தன்மையையுடைய என்னை நீங்காது காதலித்த உயிர்போன்ற வருத்துந் தொழிலையுடைய தோழி அரத்தினை யொத்தாள்; ஆசையானது மிகுதியாம் (எ - று.)

இச் செய்யுட்களில், முதற் செய்யுளில் 'பணிந்தே' என்ற சொல் முதலடி நடுவினு மீற்றினும், 'பெற்றமன்றே' என்ற சொல் இரண்டாமடியி னடுவினு மீற்றினும், 'சிலம்பே' என்ற சொல், மூன்றாமடியி னடுவினு மீற்றினும், 'தனன்றே' என்ற சொல் நான்காமடியி னிடையினு மீற்றினும்;

இரண்டாவது செய்யுளில், முதலடியி னிடையில், 'காவலர்' என்ற சொல் மும்முறையும், இரண்டாமடியில் 'மாலைய' என்ற சொல் மும்முறையும், மூன்றாமடியில், 'வாவிய' என்ற சொல் மும்முறையும், நான்காமடியில், 'மாதர' என்ற சொல் மும்முறையும் மடங்கி, வெவ்வேறு விதமாக வருபவைகளின் வேறுபாடுங் கண்டுகொள்க. சொன்மடக்கு முற்றும். (௬)

## ௯௬. அடிமுழுது மடக்கலு மாங்கதன் சிறப்பே

எனபது, ஈண்டு அம மடக்கென்னும் அலங்காரத்தையே வேறுப்படுத்துக் கூறுகின்றது.

(இ - ள்.) அடிகள் முழுவதிலும் மடக்கிவருதலும், அம் மடக்கிற்குச் சிறப்புடைத்து (எ - று.)

அவை : ஈரடிமடக்கும், மூவடிமடக்கும், நான்கடி மடக்கும் என மூன்று வகைப்படும்.

க-வது, முதலீரடியு மடக்கு

விருத்தம்

வ-று. " விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாகம்
விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாகம்
வரைமேவு நெறியூடு தனிவாரன் மலைநாட !
நிரைமேவு வளைசோர விவளாவி நிலைசோரும் "

என வரும்.

(இ - ள்.) கமழுங் கடமுடைய துன்பமுறுங் கடிய யானைக்களை யிரையாக விரும்பும் வலிய முழையுள் ளுறையும் நஞ்சையுடைய பாந்தளையுடைய மலை பொருந்திய வழியினூடு தனிமையாய் வாராதொழிவாயாக; குறிஞ்சிநிலத் தலைவனே! வருவையாயின் நிரை பொருந்திய வளை சரிய இவளாவியு நிலையினின்று நீங்கும் (எ - று.)

இதில், 'விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாகம்' என்ற சொற்றொடர் முதலிரண்டடி முழுவதிலும் மடங்கி வந்தமையுணர்க.

உ-வது, முதலடியும் மூன்றாமடியு மடக்கு

விருத்தம்

வ-று. " கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்கள்
உடன்மேவு நிறைகோர மெலிவாட லுயிர்நோவு
கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்கள்
உடன்மேவு பெடைகூடு மறுகாலு முறையாதொல் "

என வரும்.

(இ - ள்.) முறையாகப் புணரு மிக்க காதல் வளர நாள்தோறும் மகிழ்வார்களுடனே கூடிக்கொண்டு, பொருந்திய ஒழுக்கங் குன்ற ,வருந்துவானது உயிர் வருத்தத்தைக் கடலிற் பொருந்திய

கழிக்கண் காதன்மிக்க காலைதோறுங் களிப்புமிக்க மலர்க்களை விரும்பும் பெடையோடு கூடிய வண்டுகளுந் தலைவற்குச் சொல்லா போலும் (எ - று.)

இச் செய்யுளில், 'கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ் வார்கள்' என்ற சொற்றொடர் முதலடியிலும் மூன்றாமடியிலும் முழுவதும் மடங்கி வந்தமை யுணர்க.

கூ-வது, இடையீரடியுமடக்கு

விருத்தம்

வ-று. " கருமாலை தொறுகாதல் கழியாது தொழுதாலும்
உருமாய மதனாக மடுமாறு புரிவார்முன்
உருமாய மதனாக மடுமாறு புரிவார்முன்
வருமாய வினைதீர ஒருநாளு மருளார்கொல் "
என வரும்.

(இ - ள்.) பிறவித் தொடர்ச்சிதோறும் அன்பு நீங்காது தம்மை வணங்கினாலும், வடிவழியும்படி காமனுடலைக் கெடுக்குந் தன்மையைச் செய்வார், முன்னே உருமுப்போல வந்த கடாத்தை யுடைய யானையைக் கொல்லும் இயல்பினை யுடையார், தொல்லை யாய் வரும் வஞ்சவினை நீங்க ஒருகாலமும் எமக் கருளார்போலும் (எ - று.)

இதில், 'உருமாய மதனாக மடுமாறு புரிவார்முன்' என்ற சொற்றொடர், இரண்டாமடியிலும் மூன்றாமடியிலும் முற்றும் மடங்கிவருதல் காண்க.

சா-வது, முதலடியு மீற்றடியு மடக்கு

வஞ்சிவிருத்தம்

வ - று. "மறைநுவல் கங்கை தாங்கினார்
நிறைதவ மங்கை தாங்கினார்
குறையென வண்டர் வேண்டவே
மறைநுவல் கங்கை தாங்கினார் " என வரும்.

(இ - ள்.) வேதம் புகழுங் கங்காநதியைத் தரித்தார், மிக்க தவத்தையுடைய உமாதேவியை யிடப்பாகத்திற் றாங்கினார், எமக்

குக் குறை யிது வென்று வானவர் தொழுதிரப்ப அற்றங்களைப் பிறர்க்கு உபதேசிக்கும் பிரமன் றலையைக் கையிலே தாங்கினார் (எ - று.)

இதில், 'மறைநுவல் கங்கை தாங்கினார்' என்ற சொற்றொடர் முதலடியிலும், நான்காமடியிலும் மடக்கி வருதல் காண்க.

(கு -ரை.) அற்றம் - இரகசியம்.

ரு. வது, கடை யீரடியு மடக்கு

கலிவிருத்தம்

வ - று. "கொல்லியம் பொருப்பனை மேவார் கோநகர்
இல்லறி மேவுவ தியம்ப வேண்டுமோ
வல்லியந் தாமரை வனங்க ளாயின
வல்லியந் தாமரை வனங்க ளாயின" என வரும்.

(இ - ள்.) கொல்லி மலையை யுடைய செம்பியனை மேவாராகிய அரசர் நகரத்து மாளிகைகளை யெரி கவருதல் சொல்லவேண்டுமோ? வல்லியோடு கூடிய அழகிய தாமரைகளையுடைய நீர்த்தடங்க ளாயின வெல்லாம், புலியையும், தாவு மரைகளையு முடைய காடாயின (எ-று.)

இதில், 'வல்லியந் தாமரை வனங்க ளாயின' என்ற சொற்றொடர் மூன்றுமடியிலும் நான்காமடியிலும் மடங்கி வருதல் காண்க.

சா - வது, இரண்டாமடியு மீற்றடியு மடக்கு

கலிவிருத்தம்

வ - று. "நலத்தகை பெறவிரு சரண மோதுநம்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே
நலத்தகை மடவொரு பாக நண்ணுமேல்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே" எனவரும்.

(இ - ள்.) நல மிகுதி பெறவேண்டி யிரண்டு சீர்பாதத்தையு மோத்து நமது குலத்துள்ளார் கைகளைத் தொழில்கொள்ளும் ஏகாம்பரத்தையுடையான், நன்மை மிக்க தலைமகளை ஒரு பாகத்திலே சேர்க்கும் குலத்தான் மிக்க பாம்பாற் புனையப்பட்ட ஒற்றையாடையை யுடையான் (எ - று.

(கு - ரை.) ஏகாம்பரன் - தனி மாவை யுடையான்.

இதில், 'குலத்தனை பணிகொளே காம்ப ரத்தனே' என்ற சொற்றொடர், இரண்டாமடியிலும், ஈற்றடியிலும் மடங்கி வருதல் காண்க.

இவை யாறும் ஈரடி மடக்கு. இனி மூன்றடி மடக்கு வருமாறு :—

க-வது, ஈற்றடி யொழித்து ஏனை மூன்றடி மடக்கு

கலி விருத்தம்

வ - று. "காம ரம்பயி னீரம துகரம்
காம ரம்பயி னீரம துகரம்
காம ரம்பயி னீரம துகரம்
நாம ரங்கை யுறனினை யார்நமர்" என வரும்.

(இ - ள்.) சோலையின் மரந்தோறும் நெருங்கின வண்டின மானவை காமர மென்னு மிசையைப் பாடாநின்றன. தேன் பொழியும் மதவேளம்பு வேற் செய்தியை யுடையவாயின, வேனிற் காலத் தெதிர்ப்பட்ட நாம் துயருழப்பவும் நினையாதொழிந்தார் நம் காதலர் (எ - று.)

(கு - ரை) மது - வேனிற்காலம். கரம் - எதிர்ப்படல்.

இதில், 'காம ரம்பயி னீரம துகரம்' என்ற சொற்றொடர், ஈற்றடி யொழிய மற்றைய மூன்றடிகளினும் மடங்கி வந்தமை யுணர்க.

உ-வது, முதலடி யொழித்து ஏனை மூன்றடியு மடக்கு

கலிவிருத்தம்

வ - று. "வரிய வாங்குழன் மாத ரிளங்கொடி
அரிய வாங்கய தானவ னங்கனே
அரிய வாங்கய தானவ னங்கனே
அரிய வாங்கய தானவ னங்கனே" என வரும்.

(இ - ள்.) வண்டுகள் விரும்பப்படும் அளகத்தையுடைய காத லிளங்கொடியே! அடைதற்கரிய அவ்விடத்தும் பன்னத்தி லுண்டான புனல்களான வண்டுகள் தாவப்படாநின்ற யானையினது மதசலங்

களை, சிங்கங்கள் உலாவப்படும் பெரிய இடத்தோடு கூடியிருந்த காடுகள் (எ - று.)

(கு - ரை.) அயம் - பள்ளம். கய - பெரிய.

இதில், 'அரிய வாங்கய தானவ னங்களே' என்ற சொற்றொடர், முதலடி யொழிய மற்றைய மூன்றடிகளிலும மடங்கி வந்தமை யுணர்க.

௩-வது, இரண்டாமடி யொழித்து ஏனை மூன்றடியு மடக்கு

கலிவிருத்தம்

வ - று. " **கடிய வாயின காமரு வண்டினம்**
அடிய வாவகன் றுருழை வாரலர்
**கடிய வாயின காமரு வண்டினம்**
**கடிய வாயின காமரு வண்டினம்** " என வரும்.

(இ - ள்.) விளக்கமுடையவாய அழகு பெற்ற வளை படியிலே விழுக்கண்டும் நம்மைப் பிரிந்தவர் நம்மிடத்து வந்திலர்; நறு நாற்றத்தை விரும்பாநின்றன; சோலைகளிற் பயிலுகிற வண்டின் கூட்டம் அஞ்சததகாநின்றன; அழகுடன் புணர்ந்தவள் விய ளுடைகள் (எ - று.)

இதில், 'கடிய வாயின காமரு வண்டினம்' என்ற சொற்றொடர் இரண்டாமடி யொழிய மற்றைய மூன்றடிகளிலும் மடங்கி வருதல் காண்க.

௪-வது, மூன்றுமடி யொழித்து ஏனை மூன்றடியு மடக்கு

கலிவிருத்தம்

வ - று. " **கோவ னர்ப்பன கோநக ரங்களே**
**கோவ னர்ப்பன கோநக ரங்களே**
மேவ லக்கர் வியன்றிரை வேலைசூழ்
**கோவ னர்ப்பன கோநக ரங்களே** " என வரும்.

(இ - ள்.) ஒளியை மிகுப்பன தலைமையையுடைய நகரங்கள். செம்பியன் பெருக்குவன வேற்றரசருடைய திறைகளை. பொருந்திய கடலானது பெரிய திரையோடுங் கரையோடுஞ் சூழப்பட்ட நில வலயத்தைக் காப்பன இச்செம்பியனுடைய கைகள் (எ-று.)

இவை நான்கும் மூன்றடியு மடக்கு.

(கு - ரை.) கரம் - இறை. கோ - சோழன்.

இதில், 'கோவ ளர்ப்பன கோகந ரங்களே' என்ற சொற்றொடர் மூன்றாமடி யொழிய மற்றைய மூன்றடிகளினும் மடங்கி வருதல் காண்க.

இனி நான்கடி மடக்கு வருமாறு :—

**நான்கடியு மடக்கு**

கலிவிருத்தம்

வ - று. "வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின" என வரும்.

(இ - ள்.) மேகங் கடலினிடத்திற் கொடுக்கும் ஓசையோடு கூடி யிருந்தன; ஆகாயத்தை வவ்விக்கொள்ளும் எழுச்சியை யுடையவாயின. விண்ணுலகத்தை யொக்கும் புகழை யுடையன; மரங்களை யுச்சியிலே யுடையன பெரிய மலைகள் (எ - று.)

இதில் நான்கடிகளும் ஒரே விதமாக மடங்கினமை யுணர்க. இஃது ஏகபாதமுமாம்.

ஒரு சொல்லானே நான்கடியு மடக்குவதனை, இயமாவியமக மென்ப.

வஞ்சித்துறை

(வ - று.) "உமாதர னுமாதர
னுமாதர னுமாதர
னுமாதர னுமாதர
னுமாதர னுமாதரன்" என வரும்.

(இ - ள்.) உமையைத் தரித்தவனும், ஆதரிக்கின்றவனும், மானைத் தரித்தவனும், திருவைத் தரித்தவனும், ஆனிரையைக் காத்தவனும், யானைத்தோலைத் தரித்தவனும், இடபத்தை நடத்துவானும், பெருமையைத் தரித்த முக்கட்கடவுள் (எ - று.)

இதில், 'உமாதரன்' என்ற ஒரு சொல்லே நான்கடிகளிலும் மடங்கி வந்தமை யுணர்க. அளவடிச் செய்யுளாக்கிற் செந்துறையு மாம்.

இரண்டடிப் பாடகமடக்கு

கலிவிருத்தம்

வ - று. "பணிப வனந்தன தாக மன்னுவார்
பணிப வனந்தன தாக மன்னுவார்
அணியென மேயது மன்ப ராகமே
அணியென மேயது மன்ப ராகமே" எனவும்,

(இ - ள்.) பாம்புகளுக்கு இடம் தனது மார்பகமாக நிற்பார். பிறப்பிறப்பு இல்லையாக நிலைபெறுவார். அழகென்று சொல்ல உறைவதும் அன்பருடைய உள்ளமே. அலங்காரமென்று சொல்ல விரும்புவதும் என்றுமுள்ள திருவெண்ணீற்றை (எ - று.)

(கு - ரை). பவனம் - இடம். பணிபவம் - தாழ்ந்த பிறப்பு. நதாக - இல்லையாக.

விருத்தம்

"கோடா ராவிப் பாற்குருகே!
கோடா ராவிப் பாற்குருகே!
கொண்டற் போது மருங்கடலே
கொண்டற் போது மருஙகடலே
வீடா விருப்புக் காப்புள்ளே!
வீடா விருப்புக் காப்புள்ளே
வீயுந் துயர முண்டகமே!
வீயுந் துயர முண்டகமே
நாடா மேகாம் பரதருவி
நாடா மேகாம் பரத்தருவி
நற்காஞ் சிவனத் தானத்தான்
நற்காஞ் சிவனத் தானத்தான்
சூடா மலர்க்கண் டலந்தேனே
சூடா மலர்க்கண் டலந்தேனே
சுற்ற மலைவாய்த் தவராலே
சுற்ற மலைவாய்த் தவராலே" எனவும்,

(இ - ள்.) கரை பொருந்திய தடத்தின்கட் குருகுகாள்! கொள்ளக் கொடாரா இப்புறம் வளைகள்; மேக முகக்கும் அரிய கடலே! கீழ்காற்றே யமையும் பக்கத்து நின்று துன்புறுதற்குக் காவே வீடாக விருக்கும் புட்குலமே! நெகிழாதாசைக்கட்டு மனத் தின்கண்; மதுகா மலைக்கு முயர்ந்து அழகிய தாமரையே! சாதற் றுயரமுண்டு மனையிலுள்ளோரால், உடுக்குலந் தாவு மாகாயதது லவு முகிலா லுண்டான அருவியையுடைய நாட்டினுண்டா மொரு மா மரத்தினையுடைய, அழகிய காஞ்சிவனத்தினை யுடையான்; நஞ்சையுண்டான் சிவன் நந்தேந்திக்கு அததான்; வளையாத தாழை மலரின்கணுள்ள தேனீக்காள்! சூடுதலை யொத்த அயலார் அலர் தூற்றுதலைக் கேட் டெய்த்தேன்; சூழநீர்த் தரங்கத்திலுள்ள வரால்மீன்களே! உறவு பகையாகத் தந்த தலைவரால் (எ - று.)

கலிவிருத்தம்

" கலைநி லாவரு மாலைம ணங்கொள்வான்
மலைய மாருத மாறல மாதர்கண்
கலைநி லாவரு மாலைம ணங்கொள்வான்
மலைய மாருத மாறல மாதர்கண் " எனவும்,

(இ - ள்.) கலைநில்லா அரிய அந்திப்பொழுதிற் புணர்ச்சியை வேண்டிக் காதலொடு கூடிய கண் மிகவும் அழுகை நீங்காது. மதியின்கணுண்டாகிய நிலவெழும் தொடையலின் வாசங் கொள்ளவேண்டித் தென்றலானது நீங்காது, இவளுழை (எ - று.)

கலிவிருத்தம்

"ஓத நின்றுல வாவரும் வேலைவாய்
மாத ரங்க மலைக்கு நிகரவே
ஓத நின்றுல வாவரு வேலைவாய்
மாத ரங்க மலைக்கு நிகரவே" எனவும் வரும்.

(இ - ள்.) நின்று சொல்ல முடிவில்லாத அரிய காலத்தின்கண் இவளுடைய அவயவங்களை யழிக்குமாறு பட்டன, நீர் நிலை பெற்று உலவிவருகின்ற கடலிற் பெரிய திரைகள் மலைக்கொப்பாக விருக்கும் (எ - று.)

இவற்றுள் வரும் மடக்கு, பாடகமடக்குப் போன்று இரண் டிரண்டடிகள் ஒரே யளவினை யுடையனவாய் மடங்குதலின் பாடகமடக்கு எனப்பட்டது.

(கு-ரை.) பாடகம் என்பது வளைவாக மடங்கியிருக்கும் ஒருவகைக் காலணி.

**அந்தாதி மடக்கு :**

**கலிநிலைத்துறை**

வ - று. "மாலை யாகவெய் யனங்கவேள் பயிறரு மாலை
மாலை வேட்டவர் மனங்கொலோ வவன்றுழாய் மாலை
மாலை யோவுடைத் ததுநினைந் தெழுதரு மாலை
மாலை யாவுடை யவரைவந் திடர்செயு மாலை" என வரும்.

(இ - ள்.) ஒழுங்காக வெய்து மாரனாயுதம் பயிலுமிடம் அரியைக் காதலித்தவருடைய உள்ளம்போலும் அவனுடைய துளப மாலை சேர்தற்கு அருமை யுடைத்து. அதனை நினைந்தெழு முன்னை மயக்கத்தை யியல்பாக உடையவரை வந்து துயர முறுக்கும் அந்தியம்பொழுது (எ - று.)

இதனைச் சந்தட்டய மடக்கு மென்ப; அல்லது இடை யிட்டு முதலும் இறுதியு மடங்கிய முற்றுமடக் கெனலுமாம்.

**அந்தாதி மடக்கு வேறு :**

**கலிவிருத்தம்**

வ - று. "கயலோர் தரவருங் கடிபுனற் காவிரி
காவிரி மலருகக் கரைபொரு மரவம்
மரவம் பூஞ்சினை வண்டொடுஞ் சிலம்பும்
சிலம்புசூழ் தளிரடித் திருமனைக் கயலே" என வரும்.

(இ- ள்.) கயல்க ளழகுபெற வரும் விரைந்த புனலையுடைய காவிரியாறு சோலையின் விரிந்த மலர்க ளுகும்படி கரையைப் பொரும் அரவமானது பிடாமரத்தி லுண்டான பூங்கொம்புகள் வண்டோடு கூடி ஆர்ப்பெடுக்கும். சிலம்பாற் சூழப்பட்ட தளிர் போலு மடியினை யுடையாள் செல்வமனைக் கருகு (எ - று.)

இஃது அந்தாதி மடக்கு. அந்தாதியாவது ஓரடியின் அல்லது ஒரு செய்யுளின் ஈற்றில் வருஞ் சொல் அடுத்த அடியின் அல்லது அடுத்த செய்யுளின் முதலில் வருவது. அந்தம் ஆதி யென்பது

அந்தாதி யென்றாயது; அந்தம் - ஈறு; ஆதி - முதல்; அந்தமே முதலில் வருவது என்பது இதன் பொருள். (௫)

## ௧௭. ஓரெழுத்து மடக்கலு முரித்தென மொழிப

என்பது, இன்னும் மடக்கிற்கு எய்தியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல்,

"எழுத்தின் கூட்ட மிடைபிறி தின்றியும்
பெயர்த்தும்வேறு பொருடரின் மடக்கெனும் பெயர்த்தே"

என்றாராயினும்,

ஓரெழுத்தே பெயர்த்து மடக்குதலும் அம்மடக்கணி பெறுபார் (எ - று.)

### விருத்தம்

வ-று. "நாநா நாதவ கூடிசை நாடுந் தொழிலோவா
தாதா தாரமாகவிரைத்தண் மலர்மீதே
வாவா வார்தண் சோலையில் வாழும் வரிவண்டே
யாயா யாளிற் சேர்த்தலை தன்பற் இசையாமல்"

என வரும்.

(இ - ள்.) நாநாவிதமான ஓசையோடுகூடு மிசைகளை யாரா யுந் தொழிலினீங்காது தாதேயாதாரமாக வாசனையையுடைய குளிர்ந்த மலர்மீதே தாவி நீட்சியையுடைய குளிர்ந்த சோலையின் மீது வாழும் பாடலையுடைய வண்டே! அன்னையாயுள்ளாள் இற் செறித்தலைத் தலைவற்குச் சொல்லுவாயாக (எ - று.)

இதில், 'நாநாநா' என முதலடியிலும், 'தாதாதா' என இரண் டாமடியிலும், 'வாவாவா' என மூன்றாமடியிலும், 'யாயாயா' என நான்காமடியிலும் ஒவ்வோரெழுத்தே மடங்கினமை காண்க.

'மடக்கலும்' என்ற உம்மையால் ஓரெழுத்தும், ஈரெழுத்தும், மூன்றெழுத்தும், நான்கெழுத்தும், இனவெழுத்தும், மெய் யெழுத்தும், உயிரெழுத்தும் மடக்கும். உயிர்மெய் மடக்குங் கால் உயிர்மெய்யாய் வரும். இவையெல்லா மொரு செய்யுண்முழு தும் மடங்கலும், ஓரடி முழுதும் மடங்கலும் உரிய வெனக் கொள்க.

அவற்றுள்,

## ஒருயிர் மடக்கு குற்றுயிரான் வந்த மடக்கு

### கலித்தாழிசை

வ-று. "அமல லகல மகல லபய
கமல பவன மவள
வமல மடர வளக வதன மடர மதன"

என வரும்.

(இ-ள்.) சேரா தொழிவாயாக, எங்கண் மாயினை யகல் இரவின்கண் அபயனே! தாமரையே யிடமாகவுடைய தேவியை யனைய இவளுடைய குற்றமற்ற செறிந்திருக்கப்பட்ட குழலினை யுடைய முகத்தை யழிவுசெய்யா தொழிவாயாக, காமனை யொத்தாய் (எ-று.)

(கு-ரை.) அமல்-சேருதல். அல் - ஒழிதல். 'அடரல்' என்பது 'அடர' எனக் கடை குறைந்து நின்றது.

இதில், எல்லாவிடத்தும் அகரக் குற்றுயிரே வந்தமை காண்க.

## நெட்டுயிரான் வந்த மடக்கு :

### இன்னிசை வெண்பா

வ-று. "தாயாயா னாராயா டாமாறா தாராயா
யாமாரா வாளூடா மாதாமா தாவாவா
யாவாகா லாறாகா வாகாகா ளூகாமா
மாலாறா மாகாதா வா"

என வரும்.

(இ-ள்.) தாயாயுள்ளவளினது விதனத்தை யறியாளாதலால், வருத்தமாறாது இதனை யாராய்; அங்ஙன மாராயாதனக்கு அறிவுணர்த்த யாகுமாராக, வானநாட்டை யொத்த நாட்டை யுடையவனே! மாதானவள் பெரிய வருத்தமுறுவன் வருவாயாக; வந்தால் வாயாதது ஏது? வரும்பொழுதும் காவாறி வருவாயாக; எங்களைக் காப்பாயுமாக; இவை யாகாதனகாண்; அயலவர் நாவால் எங்களுக்கு அச்சமுண்டாகாநின்றது; மயக்கமு மாறாது; பெருமையையுடைய கர்த்தாவே! வருவாயாக (எ-று.)

இதில் எல்லாவிடத்தும் ஆகார நெட்டுயிரே வந்தமை புணர்க.

**ககரவிகற்பத்தான் வந்த மடக்கு :**

### சிந்தியல் வெண்பா

வ-று. "காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூ காக்கைக்குக் கொக்கொக்க-கைக்கைக்குக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா" என வரும்.

(இ-ள்.) காக்கைக் குலங்கட் காற்றா கூகைக்குலம். கூகைக் குலங்கட் காற்றா காக்கைக்குலம். காலவசத்தானாதலால், அரசர்க்குப் பூமியைக் காத்தற்கும், கொக்கினை யொத்துப் பகையை அழித்தற்கும் காலவாய்ப்பு வேண்டும். அக் காலவாய்ப்பு இன்றேல் இந்திரற்கும் பகை யழித்தற்குக் கூடாது (எ-று.)

காலம், பகை யென்னுஞ் சொற்கள் எஞ்சி நின்றன.

**தகரவிகற்பத்தான் வந்த மடக்கு :**

### இன்னிசை வெண்பா

வ-று. "ததிதத்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைதத்தா தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது" என வரும்.

(இ-ள்.) பாய்ந்து தாதுக்களையுடைய பூக்களின் மதுவை யுண்ணாநிற்றி; அங்ஙன முண்டு மீண்டும் வேறொரு பூவிற் பாயாநிற்றி; அங்ஙன முண்டு பாய்ந்து செறியாநிற்றி; மீண்டும் வேறொரு செறிந்த பூவின் தாதுக்களைக் கோதாநிற்றி; இப்பூக்களில் தித்தித் தின்பந்தரும் பூ வெது? தித்தித்த தாதுக்களையுடைய பூ வெது? இதழ் அழகிய பூ வெது? எமக்குச் சொல்லுவாயாக (எ-று.)

இதில் வண்டென்னுஞ் சொல் எஞ்சி நின்றது. தலைவி யவயவங்களை வியந்த தலைவன் தலைவி கேட்ப வண்டினை நோக்கிக் கூறியது. இதுவும் ஒரு மெய்யான் வந்ததெனப்படும்.

(கு-ரை.) இவ்விரண்டையும் ஒருவருக்கப்பாட்டு எனவும் கூறுப.

ஈரெழுத்தான் வந்த மடக்கு:

நேரிசை வெண்பா

வ - று. " மன்னுமான் மான்முன்ன மானமு மீனமா
மின்னமா னேமுன்னு மானினி—மென்மென
மின்னுமா மென்னினு மன்னமுமா மென்மனனே
மன்னுமா மானுமான் மான் " என வரும்.

(இ - ள்.) உண்டாகாநின்றது மயக்கம். முன்னுறவே மான முங் குறையாநின்றது. இத்தன்மையான எம்மால் நினையப்படு மாதினை மெல்லென மின்னையு மொப்பா ளென்பேமாயின், அன்னமுமா மெனலாய் நிற்பள். என்னுள்ளத்துள்ளே தங்கு வதுஞ் செய்யாநிற்பள். மாமைநிறத்தையுடைய மானை யொக்குங் கண்ணினையுடைய அம்மாது (எ - று.)

(கு - ரை.) இதில், மகரமும், னகரமுமாகிய ஈரெழுத்துக்களே வருதல் காண்க. இதனை இருவருக்கப்பாட்டு எனவும் கூறுப.

மூன்றெழுத்தான் வருவது:

நேரிசை வெண்பா

வ - று. " மின்னுவான் முன்னு மெனினு மினிவேனின்
மன்னு வினைவே னெனைவினவா—முன்னனை
வானவனை மீனவனை மான வினைவென்வேன்
மானவனை மானுமோ வான் " என வரும்.

(இ - ள்.) மின்னி யுருமேற்றினைத் தோற்றுவிக்குமாயினும், பின்பு வேனிற்காலத்து நிலைபெற்று வருந்து மென்னை யாராயாத எவர்க்கு முதலாயுள்ள சேரனை, மீனவனை, மிக்க வினைகளோடுகூட வென்ற வேலையுடையனாகிய மனுகுலக் காவலனை ஒக்கவல்லதோ இத்தன்மைத்தாகிய மேகம் (எ - று.)

என்னை யாராயாத மனுகுலக் காவலனை யெனக் கூட்டுக.

(கு - ரை,) வான் - உருமேறு. வென்ற என்பது ஈறு குறைந்தது. இதில், மகரமும், னகரமும், வகரமுமாகிய மூன் றெழுத்துக்களே வருதல் காண்க. இதனை மூவருக்கப்பாட்டு எனவுங் கூறுப.

**நான்கெழுத்துக்களால் வருவது :**

**நேரிசை வெண்பா**

வ - று. "யானக வென்னை யினையன வாக்கின
கானக யானை யனையானைக்—கோனவனைக்
கொன்னயன வேனக்க கோகனகக் கைக்கன்னிய
கன்னிக் கனியனைய வாய்" என வரும்.

(இ - ள்.) எத்துணையுஞ் சிறிய யான் பழிக்கக் காட்டி யானையை யொத்த நமது தலைவனை இத்தன்மையாகப் பண்ணினவை கன்னியுடைய கொல்லுந் தன்மையையுடைய வேலை யொக்கு நயனமும், மலர்ந்த தாமரைபோன்ற கையும், ஒருவராற் றீண்டாத கொவ்வைக்கனிபோலும் வாயுமா யிருந்தது. ஏதோ வாச்சரியமா யிருந்தது (எ - று.)

(கு - ரை.) இதில், யகரமும், னகரமும், ககரமும், வகரமு மாகிய நான் கெழுத்துக்களே வருதல் காண்க. இதனை நால் வருக்கப் பாட்டு எனவுங் கூறுப.

**ஒற்றெழுத்தின்றி வருவது :**

**நேரிசை வெண்பா**

வ - று. "நுமது புனலி லளியி வரிவை
யமுத விதழி னிகலு—குமுத
மருவி நறவு பருக வளரு
முருவ முடைய துரை" என வரும்.

(இ - ள்.) வண்டே! நீ பயிலும் பூந்தடங்களில் இம்மடந்தை யுடைய அமுதம் பொதியும் அதரமொக்குங் குமுதமலர்களிற் பல்காலும் பயின்று தேனைப் பருகப் பின்புந் தேனுண்டாகும் படியை யுடையது உண்டாயிற் சொல்லுவாயாக (எ - று.)

(கு - ரை.) இதில், ஒற்றெழுத்தின்றி யிருத்தல் காண்க. இதனை ஒற்றெழுத்தில்லாப் பாட்டு எனவும் கூறுப.

**வல்லினத்தான் வருவது :**

**நேரிசை வெண்பா**

வ - று. "துடித்துத் தடித்துத் துடுப்பெடுத்த கோட
றொடுத்த தொடைகடுக்கை பொற்போற்—பொடித்துத்

> தொடிபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
> கடிபடைத்துங் காட்டிற்றுங் காடு" என வரும்.

**(இ - ள்.)** மின்னானது நடுங்கித்தோன்றக் காந்தள்கள் பூத்துக் குலைகளைத் தாங்காநின்றன. கொன்றைகள் பொன்போன்ற நிறத்தை யுடைத்தாகிய பூங்கொ மாலையாகத் தொடுத்துத் தூக்காநின்றன. எல்லாருக்குந் தோன்ற வளையையுடைய தோளும் இடப்பக்கந் துடியாநின்றது. மயில்கள் களித்தாடப் புதுமையை விளைத்துக்காட்டாநின்றது காடு (எ - று.)

**(கு - ரை.)** இதில், முற்றும் வல்லெழுத்துக்களே வருதல் காண்க. இதனை வல்லினப் பாட்டு எனவும் கூறுப.

**மெல்லினத்தான் வருவது :**

நேரிசை வெண்பா.

(வ - று.) "மானமே நண்ணா மனமென் மனமென்னு
மானமால் மன்ற நனிநாணும்—மீனமா
மானு மினன்மின்னி முன்முன்னே நண்ணினு
மானு மணிமேனி மான்" என வரும்.

**(இ - ள்.)** மானம் யாதுமேவாதவுள்ள மென துள்ளமென்னும், பெரிய யானைகளையுடைய வேந்தனே! மிகவுநாணுங் குறைபடாநிற்கும், நீங்காது மின்னானது விளங்கி முன்னே முன்னே தோற்றினும் ஒவ்வாத அழகிய உருவத்தையுடைய மானை யொப்பாள் (எ - று.)

**(கு - ரை.)** இதில், முழுதும் மெல்லெழுத்துக்களே வருதல் காண்க. இதனை மெல்லினப் பாட்டு எனவும் கூறுப.

**இடையினத்தான் வருவது :**

**நேரிசை வெண்பா**

வ - று. "யாழியல் வாய வியலா வாயவொலி
யேழிய லொல்லாவா லேழையுரை—வாழி
யுழையே லியலா வயில்விழி யையோ
விழையே லொளியா லிருள்"

**(இ - ள்.)** யாழி னியற்றப்படாநின்ற இசைநூல் சொல்லிய அளவையுடைய இசையேழுங் கூடி இப்பேதையுடைய மொழி

யுடனே தீர்க்கமாட்டா; மானின் விழியும் இவள் வேல் போலும் விழியை யொக்கமாட்டா; வியக்கத்தக்க ஆபரணங்களினது ஒளியும் இப் பேதையுடைய ஒளியாலே நிறங்கெட்டு இருளாம் (எ - று.)

(கு - ரை.) இதில் இடையெழுத்துக்களே வருதல் காண்க. இதனை இடையினப் பாட்டு எனவும் கூறுப.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (சஅ)

மடக்கு முற்றிற்று

———

## சித்திரகவி வருமாறு

கூஅ. கோமூத் திரியே கூட* சதுக்கம்
மாலை மாற்றே யெழுத்து வருத்தனம்
நாக பந்தம் வினாவுத் தரமே
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரஞ் சுழிகுளஞ் சருப்பதோ பத்திரம்
அக்கரச் சுதகமு மவற்றின் பால

என்பது, இன்னும் அவ்வெழுத்து மடக்கலங்காரத்துட் படுவனவான சில சித்திரகவியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கோமூத்திரி, கூடசதுக்கம், மாலைமாற்று, எழுத்து வருத்தனம், நாகபந்தம், வினாவுத்தரம், காதைகரப்பு, கரந்துறைச் செய்யுள், சக்கரம், சுழிகுளம், சருப்பதோபத்திரம், அக்கரச் சுதகம் ஆகிய பன்னிரண்டும், அவ்வெழுத்து மடக்கலங்காரத்தின் பாலவாய் வரும்.

அக்கரச் சுதகமும் என்னும் உம்மையால் நிரோட்டம், ஒற்றுப் பெயர்த்தல், மாத்திரைச்சுருக்கம், மாத்திரை வருத்தனை, முரச பந்தம், திரிபாதி, திரிபங்கி, பிறிதுபடுபாட்டு முதலிய சித்திர கவிக ளெல்லாம் கொள்க.

* சதுரத்தம் எனவும் பாடம்.

அவற்றுள்,

க-வது, **கோமூத்திரி** என்பது இரண்டிரண்டு வரியாக ஒரு செய்யுளை யெழுதி மேலுங் கீழும் ஒன்றிடையிட்டு வாசித்தாலும் அச் செய்யுளேயாவது.

**கலிவிருத்தம்**

வ - று. "பருவ மாகவி தோகன மாலையே
பொருவி லாவுழை மேவன கானமே
மருவு மாசைவி டாகன மாலையே
வெருவ லாயிழை பூவணி காலமே" என வரும்.

(இ - ள.) அவர் குறித்த கால மிதுவாதல் வேண்டும். மேக வொழுங்கானது திசைகளெல்லாம் பொருந்தும்; அதுவுமன்றி மாலைப் பொழுதின்கண் மழையை விடாது பொழியும்; ஒப்பில்லாத மான்கள் பொருந்தாநின்றன காட்டின்கண். ஆதலால், குற்றமற்ற ஆபரணங்களையடையாய்! அஞ்சாதொழிவாயாக; தலைவர் நம்மைப் பூவால் அலங்கரிக்கும் கால மிது (எ - று.)

இதனுள் 'வேண்டும்' என்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது. 'மேவின' என்பது 'மேவன' எனத் திரிந்துநின்றது.

பசுவானது நடந்துகொண்டே நீர் விடும்போது, அந் நீர் ஒழுகிய தாரையானது இவ்வாறே நெளிந்த வடிவமா யிருக்கும்; அது பற்றியே இதற்குக் **கோமூத்திரி** யெனப் பெயர் ஏற்பட்டது.

உ-வது, **கூடசதுக்கம்** என்பது, ஈற்றடி யெழுத்துக்கள் ஏனை மூன்றடியுள்ளும் கரந்துநிற்கப் பாடுவது.

(கு-ரை.) கரந்து-மறைந்து. கூடம்-மறைவு. சதுக்கம்-நான்காவது; மறைவான நான்காமடி யுடையது.

**கட்டளைக்கலித்துறை**

வ-று.

"புகைத்தகைச் சொற்படைக் கைக்கதக் கட்பிறைப் பற்கறுத்த
பகைத்திறச் சொற்கெடச் செற்றகச் சிப்பதித் தூர்க்கை பொற்புத்
தகைத்தகித் தித்தழுத் தத்தசொற் றத்தைப்பத் தித்திறத்தே
திகைத்தசித் தத்தைத் துடைத்தபிற் பற்றுக் கெடக்கற்பதே"
எனவரும்

# [க] கோமூத்திரி

——:o:——

உகஎ - ஆம் பக்கத்தி லுள்ளது.

ப ரு வ மா க வி தோ க ன மா லை யே பொ ரு வி லா வு ழை மே வ ன கா ன மே



ம ரு வு மா சை வி டா க ன மா லை யே வெ ரு வ லா யி ழை பூ வ ணி கா ல மே

பருவ மாகவி தோகன மாலையே
பொருவி லாவுழை மேவன கானமே
மருவு மாசைவி டாகன மாலையே
வெருவ லாயிழை பூவணி காலமே.

இது, முன்னிரண்டடி மேல்வரியாகவும், பின்னிரண்டடி கீழ்வரியாகவு மெழுதி, அவ்வரி இரண்டையும் மேலுங் கீழும் ஒன்றிடையிட்டுக் கோமூத்திர ரேகைவழிப் படிக்க, ஒன்றுவிட்டொன்று மாறுடி அச்செய்யுளே முடியுமாறு காண்க.

(இ - ள்.) நெருப்பின் தன்மையையுடைய சொற்களையும் ஆயுதங்களோடு கூடிய கைகளையும், வெகுளியோடு கூடிய பார்வையையும், பிறைபோன்ற கோரப்பற்களையும், கரிய நிறத்தையுமுடைய பகைஞராகிய அவுணசாதி யென்னும் வார்த்தை மாளச் செறுத்த காஞ்சீபுரப் பெரும்பதியிலுள்ள கொற்றவை யழகு தங்கிய இன்பந் தாநின்ற யாழினிசைபோன்ற சொல்லையுடைய கிள்ளையை யொப்பா ளிடத்து அன்பு செய்யாது அறிவழிந்த உள்ளத்தை நீக்கிய காலத்து, இருபற்றும் கெடுதற் கேதுவாகிய ஞானத்தை யறிவது (எ - று)

கிள்ளை மொழியினை யொத்த மொழியினையுடைய தூதனை யெனக் கூட்டுக. இச்செய்யுளில் முதல் மூன்றடிகளிலும் ஆராயின் ஈற்றடி யெழுத்துக்கள் காணப்படும். இங்ஙனம் ஓரடியின் எழுத்துக்கள் மற்றையடிகளில் மறைந்து நிற்றலால், இது கூட சதுக்க மெனப்பட்டது. கூடம் - மறைவு, சதுக்கம் - நான்கடிக் கூட்டம்; இது செய்யுளை யுணர்த்தும.

ரு - வது, **மாலைமாற்று** என்பது, ஒரு செய்யுளை யீறு முதலாக வாசித்தாலும் அச் செய்யுளே யாவது.

(கு - ரை.) மாலை - வரிசை. மாற்று - மாறுதலுடையது.

"ஒருசெய்யுண் முதலீ றுரைக்கினு மஃதாய்,
வருவதை மாலை மாற்றென மொழிப"

என்பது, மாறனலங்காரம்.

## குறள் வெண்பா

"நீவாத மாதவா தாமோத ராகமோ
தாவாத மாதவா நீ" எனவும்,

(இ - ள்.) நீங்காத பெரிய தவத்தை யுடையாய்! மிக்க மயக்க வேட்கை கெடாது; ஆதலால், அழகிய மாதினுடைய ஆசையை நீக்குவாயாக (எ - று.)

## குறள் வெண்பா

"வாயாயா நீகாவா யாதாமா தாமாதா
யாவாகா நீயாயா வா" எனவும்,

(இ - ள்.) எங்கட்குக் கிடையாதன யாவை? நீ யருள்புரி வாயாக. என்னும். இவள் மிக்க வருத்தமாவள். யாவை நினக்கா காதன? ஆயனே நீ வருவாயாக (எ - று)

குறள் வெண்பா

"பூவாளை நாறுநீ பூமேக லோகமே
பூநீறு நாளைவா பூ" எனவும் வரும்.

(இ - ள்) இயல்பாய்ப் பூப்பிலாதாளைக் கலந்து புலால் கம ழுமீ யெமக்குப் பூமழையும், பொன்மழையும், பொழியு மேகமோ. பூவுந் திருநீறும் புனைந்து நாளைவா. இவளிப்பொழுது பூப்பினளா யிருக்கின்றாள்.

பூப்புனைதல் புலால்நாற்ற நீங்க. திருநீறு புனைதல் குற்றம் நீங்க.

மாலையை எப்பக்கந் திருப்பினும் அஃது ஒரே தன்மைத்தா யிருத்தல் போல, இச்செய்யுளும் எவ்வாறு மாற்றி வாசிப்பினும் ஒரே தன்மைத்தா யிருத்தலின் **மாலைமாற்று** எனப் பட்டது.

(கு - ரை.) இக்குறள் வெண்பாக்கள் இறுதியிலே தொடங்கிப் படிக்கும்போது, முதற்கணின்று படிக்கும்போது முடிவது போல முடியுமா றுணர்க.

ச - வது, **எழுத்து வருத்தனம்** என்பது, ஒரெழுத்தா னொரு மொழியாய்ப் பொருள் பயந்து, பின் ஒரெழுத்தேற்றப் பிறிதொரு மொழியாய்ப் பொருள் பயந்து, அவ்வாறே முறைமுறையா னேற்ற ஒவ்வொரு மொழியாய்ப் பொருள் பயப்பது.

(கு - ரை.) வருத்தனம் - வளர்தல்.

நேரிசை வெண்பா

வ - று "ஏந்திய வெண்படையு முன்னொ னெடுத்ததுவும்
பூந்துகிலு மாலுந்தி பூத்ததுவும்—வாய்ந்த
உலவி லெழுத்தடைவே யோரொன்றாச் சேர்க்கத்
தலைமலைபொன் றாமரையென் றாம்."

(இ - ள்) திருமால் தாங்கிய சம்புவும், அவனெடுத்த நகமும், அவனது ஆடையாகிய கநகமும், அவனுந்தி மலர்ந்த கோகநகமும், என்னப்பட்ட இவற்றிற் கேடில்லாத எழுத்தினடைவேயென்று ஒன்றின் ஒரெழுத்தாக எடுத்துச் சேர்க்கப் பின்பு அது தலை

யென்றும், மலை யென்றும், பொன் னென்றும், தாமரை யென்று மாம். அவ்வாறு சேர்த்த லெங்ஙன மெனின்,

**கம்பு** என்பதில், கம் என்கிற எழுத்தைப் பிரித்துத் தலை யெனவும், (கம்பு-சங்கு).

**நகம்** என்பதில், ந-என்கிற எழுத்தைப் பிரித்து, முன் கம என்பதற்கு முன் கூட்டி 'நகம்' ஆக்கி 'மலை' எனவும், **கநகம்** என்பதில், க-என்கிற எழுத்தைப் பிரித்து, முன் நகம் என்பதற்கு முன் கூட்டிக 'கநகம்' ஆக்கிப் 'பொன்' எனவும், **கோகநகம்** என்பதில், கோ என்னு மெழுத்தைப் பிரித்து, முன் கநகம் என் பதற்கு முன் கூட்டிக 'கோகநகம' ஆக்கித 'தாமரை' எனவுங் கொள்க.

இதில் எழுத்துக்களைப் பெருக்கி மொழியாக்கிப் பொருள் கொள்ளலால், இந்த **எழுத்துவருத்தனம்** எனப்பட்டது. எழுத்து வருத்தனம் - எழுத்துப் பெருகுதல். வருத்தனம் - பெருகுதல்.

ரு-வது, **நாகபந்தம்** என்பது, இரண்டு பாம்புகள் தம்முள் இணைவனவாக உபதேச முறைமையா னெழுதி, ஒரு நேரிசை வெண்பாவும், ஓர் இன்னிசை வெண்பாவு மெழுதிச, சந்திகளி னின்ற எழுத்தே மற்றையிடங்களினு முறுப்பாய் நிற்கப் பாடுவது. மேற் சுற்றுச்சந்தி நான்கினு நான்கெழுத்தும், கீழ்சுற்றுச் சந்தி நான்கினு நான்கெழுத்தும், இரண்டு பாம்பிற்கு நடுச்சந்தி நான்கினும் இரண்டுபாட்டிற்கும் பொருந்த நான்கெழுத்துமாகச் சித்திரத்தி லடைப்பது.

## நேரிசை வெண்பா

உ - று. " அருளின் றிருவுருவே யம்பலத்தா யும்பர்
தெருளின் * மரு வாருசீர்ச் சீரே—பொருவிலா
வொன்றே யுமையா ளுடனே †யுறுதிதரு
குன்றே தெருளா வருள் " எனவும்,

**(இ - ள்.)** அறத்தினது அழகிய மேனியாய்! திருச்சிற்றம் பலத்தினையுடையாய்! தேவர்கள் அறிவிற்கும் எட்டாதாய்! அழ கிய புகழையுடையாய்! குற்றமில்லாத ஏகரூபத்தையுடையாய்!

* "மாருவார்ச்சீரச் சீரே" எனவும் பாடம். † "புருகதரு" எனவும் பாடம்.

உமையோடு பொருந்தின மலைபோல்வாய்! யாங்கள் தெளிய அறிவை அருள்வாயாக (எ - று.)

அறிவு என்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது.

### இன்னிசை வெண்பா

"மருவி னவருளத்தே வாழ்சுடரே நஞ்சு†
பெருகொளியான் ‡மேயபெருஞ் சோதி—திருநிலா
வானஞ் சுருங்க மிகுசுடரே சித்த
மயரு மளவை யொழி" எனவும் வரும்.

(இ - ள்.) அடைந்தவருள்ளத்தே கெடாத விளக்கமாயுள்ளாய்! நஞ்சின்கணுண்டாகிய பெருகிய நிறநிறைந்து பொருந்தின திருமிடற்றையுடைய பெரிய சோதியாயுள்ளாய்! அழகிய மதியையுடைய ஆகாயமானது சிறுகப் பெருகிய வொளியே திருமேனியாயுள்ளாய்! எனதுள்ளம் நினதடியை மறக்கு மெல்லையை யொழிப்பாயாக.

இது நாகவுருவத்தில் பந்திக்கப்படுவதாதலின் **நாகபந்தம்** எனப்பட்டது. இன்னும் நாகபந்தங்கள் பல வுள.

சா-வது, **வினவுத்தரம்** என்பது, வினவினதொரு சொற்றொடரைப் பிரித்து, அப் பதந்தோறும் வினயதற்கு உத்தரமாகப் பதப்பொருளுரைத்துக் கடைக்கால் அவ் வினயதற்கு உத்தரமான அச சொற்றொடர் முழுவது மொரு பொருளாகி யுரைப்பது. அப் பதம் விரிக்குங்காற் செவ்வன் விரியாது அருமை தோன்ற விரித்துக் காட்டுவது.

### இன்னிசை வெண்பா

வ - று. " பூமகள்யாா? போவானை யேவுவா னேதுரைக்கும்?
நாமம் பொருசாதத்திற் கேதென்பர்? தாமழகின்
பேரென்? பிறைசூடும் பெம்மா னுவந்துறையுஞ்
சேர்வென்? **திருவேகம்பம்**" எனவும்,

† ராய் நஞ்சு எனவும் பாடம். ‡ "மேயபெருஞ் சோதித்" எனவும் பாடம். இப்பாடங்கட் கேற்பவும் நாகபந்தம் அமைத்துக்கொள்ளலாம்.

# (௨) இரட்டை நாகபந்தம்

---

௨௨௧, ௨௨௨-ஆம் பக்கங்களி லுள்ளது.



இதன் விவரம் மறுபக்கம் பார்க்க.

அருளின் றிருவுருவே யம்பலத்தா யும்பர்
தெருளின்மரு வாருசிர்ச் சீரே—பொருவிலா
வொன்றே யுமையா ளுடனே யுறுதிதரு
குன்றே தெருள வருள.

மருவி னவருளத்தே வாழ்சுடரே நஞ்சு
பெருகொளியான றேயபெருஞ் சோதி—திருநிலா
வானஞ் சுருங்க மிகுசுடரே சித்த
மயரு மளவை யொழி.

இவ்விரண்டு பாட்டும், இரண்டு நாகங்களின் தலைநின்று தொடங்கி வால்முனைக ளிறுதியாக இடையிடையே தத்தம் உடலினும், பிறிது பிறிதுடலினும் மாறுடிச் சந்திகளினின்ற எழுத்தே மற்றை யிடங்களினு முறுப்பாய் நிற்க, ஒவ்வொரு பாம்பிற்கும் மேற்சுற்றுச் சந்தி நான்கினும் நான்கெழுத்தும், கீழ்சுற்றுச் சந்தி நான்கினும் நான்கெழுத்தும், இரண்டு பாம்பிற்கு நடுச் சந்தி நான்கினும் இரண்டு பாட்டிற்கும் பொருந்த நான்கெழுத்துமாகச் சித்திரத்தி லடைப்பட்டு முடியுமாறு காண்க.

(இ - ள்.) இதனுள் 'பூமகள் யார்?' 'திரு' எனவும்; 'போர் வானை எவ்வான் எதிரைக்கும்? 'எகு' எனவும்; 'நாமம் பொரு சாத்திற் சேர்தென்பர்?' 'அம்பு' எனவும்; 'அழகின் பேரென்?' 'அம்' எனவுங் கூட்டித 'திருவேகம்பம்' எனக் கண்டுகொள்க

(கு - ரை.) திரு + எகு + அம்பு + அம் = திருவேகம்பம்.

நேரிசை வெண்பா

" நீத்தொழிந்த வாறைந் தடக்கிப்பின் னிச்சயமே
வாய்த்தமைந்த வாயில்பெண் ணானைபே—கூர்த்தரு
வாளோறோ டோசை விளைநிலமிவ் வல்லாற்
கேளா யுடன்வருவ தில் "

எனவும்,

(இ - ள்.) இதனுள் நீத்தொழிந்த ஆறு - நிலை எனவும், ஐந் தடக்கி - ஆமை எனவும், வாயில் - கடை எனவும், பெண்ணானை - பிடி எனவும், வாளோறு - புண் எனவும், ஓசை - இயம் எனவும், விளைநிலம் - செய் எனவும் கூட்டி, 'நிலையாமை கடைப்பிடி, புண்ணியஞ்செய்' எனக் கண்டுகொள்க (எ - று.)

நேரிசை வெண்பா

வ - று. " நல்வினை நாற்கால் விலங்கு நவைசேரும்
கொல்வினை யஞ்சி குயக்கல—மெல்ல
உறுதியு மல்லவு நாட்பேர் மரப்பே
ரிறுதியி லின்ப நெறி "　　எனவும் வரும்.

(இ - ள்.) இதனுள், 'நல்வினையையுடைய நாற்கால் விலங்கு யாது?' 'முயல்' எனவும், 'நவைசேருங் கொல்வினை யஞ்சி யாது?' 'ஆமை' எனவும், 'குயக்கலம் யாது?' 'அகல்' எனவும், 'மெல்ல உறுதியையும், உறுதியல்லனவற்றையுஞ் சொல்லு நாட்பெயர் யாது?' 'சோதி' எனவும், 'மரப்பெயர் யாது?' 'தேறு' எனவும் கூட்டி, 'முயலாமை யகல், சோதி தேறு' எனக் கூட்டுக. இறுதியி லின்பநெறி (எ - று.)

இச் சித்திரகவி வினாவும், விடையுமாக அமைதலின் வினாவுத்தரம் எனப்பட்டது.

எ-வது, **காதைகரப்பு** என்பது, ஒரு செய்யுள் முடியவெழுதி, அதனிற்று மொழிக்கு முதலெழுத்துத் தொடங்கி, ஒவ்வோ ரெழுத் திடையிட்டு வாசிக்கப் பிறிதொரு செய்யுட் போதுவது.

இன்னிசை வெண்பா

உ - று. "தாயேயா னோவவா வீரு வெமதுநீ
பின்னை வெருவா வருவதொ ரதப
வெம்புகல் வேறிருத்தி வைத்திசினிச் சைகவர்
தாவா வருங்கலநீ யே" என வரும்.

(இ - ள்.) தாயாயுள்ளாய்! யாங்கள் வருந்தும் அவாவினை நீக்கு; எமது சார்வாயுள்ளாய் நீ பின்பு அச்சமாக வருவது ஆராய்; அது கெட எமக்குப் புகலாயுள்ள இடம் வேறாகச் சமைத்து வைப்பாய்; ஆசைப்பாடு நைக்கொள்; எங்கட்குக் கேடிலாத அரிய ஆபரணமாயுள்ள கடவுளே! (எ - று.)

இதனுட் போந்த செய்யுள்,

வஞ்சித்துறை

உ - று. "கருவார் கச்சித்
திருவே கம்பத்
தொருவா வென்னீ
மருவா நோயே."

(இ - ள்.) மனமே! நீ கச்சித் திருவேகம்பத்துறையும் ஒப்பில்லாதவனே யென்று சொல்லக் கருவார் நோய் மருவா (எ- று.)

'வருங்கலநீயே' என்பதில் லகர மொழிக்கு முதலாகாமை யின் அதனை நீக்கிக் ககரமுதலாகக் கொள்க. இதில் வேறொரு செய்யுளின் சொல் முறையே மறைந்து நிற்றலால், இது **காதைகரப்பு** எனப்பட்டது; காதை - சொல், கரப்பு - மறைவு. (காதை - கவி எனினுமாம்.)

அ-வது, **கரந்துறைப்பாட்டு** என்பது, ஒரு செய்யுட் பிறிதொரு செய்யுட்சொற் புகாது எழுத்துப் பொறுக்கிக் கொள்ளலாம்படி பாடுவது.

### நேரிசை வெண்பா

வ - று, "அகலல்குற் றேரே யதர மமுதம்
பகர்தற் கரிதிடையும் பார்க்கின்—முகமதிய
முத்தென்ன லாமுறுவன் மாதர் முழுநீல
மைத்தடங்கண் வெவ்வேறு வான்."

(இ - ள்.) நண்பனே! நான் கண்ட மாதருடைய உருவத் தன்மை கேட்பாயாக:—அல்குலானது தேரினது தட்டாயும், அதரமானது அமுதமாயும், இடையானது விசாரித்துச் சொல்லுவதற்கு அரிதாயும், முகமானது மதியமாயும், முறுவலானது முத்தமாயும், மைத்தடங் கண்ணானது நீலப்பூவாயும், வேறுபட வைத்த வானாயு மிருக்கும்.

இதனுட் போந்த செய்யுள்,

### குறள் வெண்பா

வ - று. "அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" என்பதாம்.

இதில் எழுத்துக்களெல்லாம் ஆங்காங்கு வருமாறமைத்து அக் குறட்கவியை மறைத்தவாறுணர்க. இதில் ஒரு செய்யுள் மறைந்து கிடத்தலான், இது **கரந்துறைச் செய்யுள்** ஆயிற்று.

**கூ-வது, சக்கரபந்தம்:** இது நான்காரைச் சக்கரமும் ஆறாரைச் சக்கரமும், எட்டாரைச் சக்கரமும் என மூன்று வகைப் படும்.

## [௩] நான்காரைச் சக்கரம்

உஉகூ-ஆம் பக்கத்திலுள்ளது.



மேரு சாபமு மேவுமே
மேவு மேயுண வாலமே
மேல வாமவ ரையமே
மேய ரனடி சாருமே.

இது, 'மே' என்னும் எழுத்து நடுவே நின்று, ஆர்மேல் ஒவ்வோ ரெழுத்து நின்று சூட்டின்மேற் பன்னிரண்டு எழுத்து நின்று, நடுவுநின் றோரின வழியிறங்கி யிடஞ்சென்று அடுத்த ஆரினவழி நடுவடைந்து முதலடி முற்றி, மற்றதும் நடுவுநின்று அவ்வாரின்வழித் திரும்பி யிடஞ்சென்று அடுத்த ஆரின்வழி நடுவுசென்று இரண்டாமடி முற்றி, அவ்வாறே மூன்றாமடி நான்காமடிகளும் வலஞ்சென்று முற்றியவாறு காண்க.

அவற்றுள்,

**நான்காரைச்சக்கரம்**

**வஞ்சி விருத்தம்**

வ - று. "மேரு சாபமு மேவுமே
மேவு மேயுண வாலமே
மேல வாமவ னையமே
மேய னையடி சாருமே" என வரும்.

(இ - ள்.) மேருவை வில்லாகக் கொள்ளுவனவாயும், நஞ்சை யுணவாக விரும்புவனவாயும், உயர்ந்த உருவத்தை யுடையனவாயு மிருக்கும் அவன் விளையாடுதற் கிடமாயுள்ள கூளியாகலான், அத் தன்மையா னடிகளைப் பொருந்துவீராக (எ - று.)

இது நான்காராய், நடுவே 'மே' என்னு மெழுத்து நின்று, ஆர்மே லொவ்வோ ரெழுத்து நின்று, சூட்டின்மேற் பன்னிரண் டெழுத்து நின்று முற்றுப்பெற்றது. நான்காரைச் சக்கரமாவது:— நான்கு ஆர்க்கால்களையுடைய சக்கரம். சூட்டு வட்டை.

**ஆறாரைச் சக்கரம்**

**கட்டளைக் கலித்துறை**

வ - று. "தண்மலர் வில்லிதன் போரன தஞ்ச நமக்களித்த
கண்மலர்க் காவிக் கெதிர்வன வன்று கரமனைந்த
பண்மலர் யாழ்பயில் வாரன்பு சூழ்பதி நாகைமிக்க
தண்மைய கததுப் பதுமத்த மாதர் தடங்கண்களே"
என வரும்.

(இ - ள்.) கைகளாற் றைவந்த விரிந்த பண்ணையுடைய யாழ் வல்லோர், அன்பு மேவிய நாகபட்டணத்தில், காமனுடைய போரில் நமக்கு அபயங்கொடுத்த கண்ணாகிய நீலப்பூவுக்கு ஒப்பாவன வல்ல மிகக் குளிர்ச்சியையுடைய தாமரைமலரி லுறைவோர்க் கொத்த பெண்களின் அகன்ற கண்கள் (எ - று.)

இஃது ஆறாராய், நடுவே ரகாரநின்று ஆர்மேல் ஒன்பதொன்ப தெழுத்தாய்க், குறட்டின்மேற் போதிவானவ னென்னும் பெயர்

நின்று சூட்டின்மே லிருபத்து நான்கெழுத்து நின்று முற்றும் பெற்றது. .

குறடு-ஆர்க்கால்களுக் கடியில் உள்ள குடத்தின் வளைவான பாகம்.

**எட்டாரைச் சக்கரம் :**

**ஆசிரியப்பா**

வ - று. “மலர்மலி சோலை யகநலங் கதிர்க்க
மடமயி லியற்றக மாதிரம் புதைத்து
வளைந்து புகன்மேக வல்லிருண் மூழ்ந
வரியளி துதைந்த கதுப்பினி தடைச்சி
மன்னுமா மடமொழி வடிவாள் வளவன்
கன்னித் துறைவன் கனகச் சிலம்பே”

என வரும்.

(இ - ள்.) மலர்மிக் கிருந்த சோலையுள் நலம் விளங்க, மடப் பத்தோடு கூடியிருந்த மயிலியலுக்கு ஒக்கும்படியாகத் திசைகளை மறைத்துச் சூழ்ந்து மிக்க மேகங்க ளொன்றுநின்ற வலிய இருளி னாலே முழுகுந்தன்மைத்தாய், இசை மருவிய வண்டுகள் குடையத் தகாநின்ற மலர்களைக் குழலின்மீதே அழகுபெற அணிந்து பொருந் துமா மடப்பத்தோடு கூடாநின்ற மொழியையுடையாள் கூரியவாள் வளவனாகிய கன்னித்துறைவனது க்னக மலையின்கண் (எ - று.)

இமய மலையின்கண் திசைகளை மறைத்து மேகஞ் சூழ்ந்து மலர் மலிந்து சோலைக்கு அழகுண்டாகத் தன் குழலை யலங்கரித்து மயிலிய லொப்ப அழகுபெற்ற மடப்பத்தோடு கூடிய மொழியாள் நிற்ப னெனக் கூட்டுக.

இஃது எட்டாராய், ஆர்மே லவ்வா றெழுத்தாய், நடுவே ககர நின்று குறட்டின்மேல் அறமேதனமாவது என்னுஞ் சொன் னின்று சூட்டின்மேன் முப்பத்திரண்டெழுத்து நின்று முற்றுப்பெற்றது.

# [௪] ஆரூரைச் சக்கரம்

———

௨௨௯-ஆம் பக்கத்தி லுள்ளது.



தண்மலர் வில்லிதன் போரன தஞ்ச நமக்களித்த
கண்மலர்க் காவிக் கெதிர்வன வன்று கரமளந்த
பண்மலர் யாழ்பயில் வாரன்பு சூழ்பதி நாகைமிக்க
தண்மை யகத்துப் பதுமத்த மாதர் தடங்கண்களே.

இது, ஆரூராய் நடுவே ரகர நின்று ஆர் ஒன்றுக்கு ஒன்பதொன்ப தெழுத்தாய், குறட்டின்மேல் 'போதிவான வன்' என்னும் பெயர் நின்று, சூட்டின்மேல் இருபத்து நான்கெழுத்து நின்று, இடக்குறுக்காரின் முனை

தொடங்கி அதனெதிராரின் முனையிறுதி சென்று முதலடி முற்றி, அடுத்த வலக்கீழாரின் முனைநின்று அதனெதிராரின் முனை யிறுதிசென் றிரண்டாமடி முற்றி, அடுத்த வலக்கீழாரின் முனைநின்று எதிர்ந்த மேலாரின் முனையிறுதி சென்று மூன்றாமடி முற்றி அதற்கடுத்த வலக்கீழாரின் முனைநின்று வட்டைவழி வலஞ்சுற்றி நான்காமடி முதல் காண்க.

'கண்மலர்' என்ற அடி முடிவில் வட்டையில் நிற்கும் தகரத்தை இவ்வடிக்கு உயிர்மெய்யாகவும், வட்டைசுற்றி வாசிக்கும் நான்காமடிக்கு மெய்யாகவும் கொள்க. தகர வுயிர்மெய்யில் (த்) என்னும் மெய் இருத்தலான் இங்ஙனம் கொள்ளற்கு நியாயம் ஏற்பட்டதென்க. இன்னும் இவ்வடியை வாசிக்கும்போது நடுவே நிற்கும் ரகர வுயிர்மெய்யை மேற்கூறிய நியாயப்படி மெய் (ர்) ஆக்கக் கூட்டிக் கொள்க.

## [௫] எட்டாரைச் சக்கரம்

௨௬௦-ஆம் பக்கத்திலுள்ளது.



மலர்மலி சோலை யகலங் கதிர்க்க
மடமயி லியற்றக மாதிரம் புதைத்து
வளைந்து புகனமேக வல்லிருண் மூழ்க
வரியளி துதைந்த கதுப்பினி தடைச்சி
மன்னுமா மடமொழி வடிவாள் வளவன்
கன்னித் துறைவன் கனகச் சிலம்பே.

இது, எட்டாராய், ஆர் ஒன்றுக்கு அவ்வாறெழுத்தாய் நடுவே ககர நின்று குறட்டினமேல் 'அறமே தன

மாவது' என்னுஞ் சொல் நின்று, சூட்டின்மேல் முப்பத்தி ரண்டு எழுத்து நின்று, இடக் குறுக்காரின் முனை நின்று தொடங்கி அதனெதிர் முனையி னிறுதி சென்று முதலடி முற்றி, முதல் தொடககத்துக்கு வலக்கீழாரின் முதற் றொடங்கி எதிரேறி இரண்டாமடி முறறி, அதறகடுத்தது அவ்வாறே ஏறி மூனறுமடி முற்றி, அதற்கடுத்தது அவ்விதமே ஏறி நானகாமடி முறறி, முதல் தொடஙகிய ஆரின முதலெழுத்திலிருந்து வட்டைமேல் வலஞசுற்றி ஐநதாவது ஆறுவது அடிகள முடிந்தமை காண்க.

———

## இதுவும் ஒருவகை நான்காரைச் சக்கரம்

### இன்னிசை வெண்பா

வ - று. "மாதவா போதி வரதா வருளமலா
பாதமே யோத சுரரைநீ—தீதகல
மாயா நெறியளிப்பா யின்றன் பகலாச்சீர்த்
தாயே யலகில்லா டாம்" என வரும்.

(இ - ள்.) புத்ததேவா! குற்றமில்லாதாய்! உன்னுடைய பாதத்தை வழுத்தாநிற்கும் அசுரருக்கு நீ பாவங்கெட மோட்ச மளிப்பாய்! அன்பு நீங்காத அழகிய தாய்போல்வாய்! எல்லையில் லாத மிக்க வலிதாகிய தவத்தை யுடையாய்! இன்று அருள்வா யாக (எ-று.)

இதுவும் நான்காராய், நடுவே ரகரநின்று, குறட்டின் மேல் வசுதாரையென்னும் பெயர்நின்று, ஆர்மேல் நந்நான்கெழுத்து நின்று, சூட்டின்மே லிருபத்தெட் டெழுத்து நின்று முற்றுப் பெற்றது. ஆடு - வலி.

கரு-வது, சுழிகுளம் என்பது, ஒரு செய்யுளை எவ்வெட் டெழுத்தாய் நான்கு வரியாக எழுதி, மேனின்று கீழிழிந்தும், கீழ்நின்று மேலேறியும், புறநின்று வந்துள் முடிய உச்சரித்தாலும், அவ்வரி நான்குமேயாகி அச் செய்யுளாயே முற்றுப்பெறுவது.

### வஞ்சி விருத்தம்

வ - று. "கவிமுதி யார் பாவே
விலையு் மா நற்பா
முயல்வ துறுநர்
திருவ ழிந்து மாயா" என வரும்.

(இ - ள்.) கவிகளால் முதிர்ந்தார் செய்யுங் கவியே விலை யிடுதற்கரிய கவி யெனவும், இடைவிடாது முயல்வார் செல்வ மழிந்து கெடாதெனவுமாம் (எ - று.)

இதுவு மது

### வஞ்சி விருத்தம்

வ-று. "மதன விராகா வாமா
தநத சகாவே நீவா

# [6] சுழிகுளம்

௨௱௫-ம் பக்கத்திலுள்ளது




கவிமுதி யார் பாவே
விலையரு மா நற்பா
முயல்வ துறு நர்
திருவ ழிந்து மாயா.

இது, செவ்வே யெழுதிய நாலடி நான்கு வரியுள், முதலடி முதலெழுத்தினின்றும சுழிரேகை வழியே மேனின்று கீழிழிந்தும், கீழ்நின்று மேலேறியும், புறநின்று வந்துள் முடிய இடஞ்சுற்றிப் படிக்க நாலடியு முடியுமாறு காண்க.

நதிதக தாதா வேகா
விசநவி ரோதா காரா — என வரும்.

(இ - ள்.) மதனா! ஆசையில்லாதவனே! ஒளியையுடையானே! குபேரனுக்குத் தோழனாயுள்ளானே! மேகத்தினும் அதனமான வள்ளலே! பணிப்பூணால் விரோதமான தோற்றத்தை யுடையானே! எங்கள் விதனங்களை நீக்கிக் காப்பாயாக (எ - று.)

நீக்கப்பொருண்மையின்கண் வந்த ஐந்தனுருபு ஆறனுருபாய் மயங்கின. இதனுள், 'நீக்கி' என்பது வருவித்துரைக்கப்பட்டது.

கக-வது, **சருப்பதோபத்திரம்** என்பது, ஒருநிரை எட்டாக அறுபத்து நான்கறை கீறி, ஒரு செய்யுள் எவ்வெட்டெழுத்தால் ஓரடியாக நான்கடி பாடி, மேனின்று கீழ் இழியவும், நான்கடியுமெழுதி, கீழ் நின்று மேலேறவும், நான்கடியமெழுதி, மேனின்று கீழிழியவும், கீழ் நின்று மேலேறவும், முதறொடங்கி இறுதியாகவும், இறுதி தொடங்கி முதலாகவும், மாலைமாற்றாக நான்கு முகத்தினும் வாசித்தாலும் அச் செய்யுளேயாவது.

**கலி விருத்தம்**

வ - று. "மாவா நீதா தாநீ வாமா
வாயா வாமே மேவா யாவா
நீவா ராமா மாரா வாநீ
தாமே மாரா ராமா மேதா" — என வரும்.

(இ - ள்.) பெரியோனே! நீதியுடையோனே! மிக்க நீங்காத செல்வத்தையுடையோனே! என்னைக் கடவது, பொருந்துவாயாக. இப்படி யென்னைச் சேர்ந்தால் வாயாதன யாவை? நீ வருவாயாக. இராமனை யொப்பாய்! காமனுமா யுள்ளாய்! மழையை யொப்பாய்! நீ யாதலால் பெரிய மேம்பாட்டையுடைய நின் மார்பினிறைந்திருக்கப்பட்ட ஆராகிய தாரினைத் தருவாயாக (எ - று.)

அரசர் மாளிகைகளி லுள்ளதோர் கட்டிடத்திற்கு, சருப்பதோபத்திர மென்று பெயர்; அந்தக் கட்டிடம் நாற்புறமும் வாயிலுள்ளதாய் நினைத்த பக்கத்தில் மேலேறவும், கீழிறங்கவும் கூடியதாயிருக்கும்; இச் சித்திரகவியும் அதேபோன் றிருத்தலால் அப்பெயர் பெற்ற தென்க.

# [எ] சருப்பதோ பத்திரம்

உ௱௬எ-ஆம் பக்கத்திலுள்ளது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |

*மாவா நீதா தாநீ வாமா*
*வாயா வாமே மேவா யாவா*
*நீவா ராமா மாரா வாநீ*
*தாமே மாரா ராமா மேதா.*

*இது, நாற்புறமும் தலைப்பாக வைத்து வரிசையாகப் படித்தாலும், மடக்கிப் படித்தாலும், நான்கடிகளையும் மேனின்று கீழிறக்கியும், கீழ்நின்று மேலேற்றியும் படித்தாலும் சொரூபங் கெடாமல் மாலைமாற்றாய் முடியுமாறு காண்க.*

கஉ-வது, **அக்கரச்சுதகம்** என்பது, ஒருபொருள் பயப்ப தொரு சொற்கூறி, அதனில் ஒவ்வொரு எழுத்தாக நீக்க வெவ் வேறு பொருள் பயக்கப் பாடுவது.

### கலித்துறை

வ - று. " பொற்றூணில் வந்த சுடர் பொய்கை பயந்த வண்ணல்
சிற்றாயன் முன்வனிதை யாகி யளித்த செம்மல்
மற்றியார் கொல்லென்னின் மலர்தூவி வணங்கி நாளும்
கற்றோர் பரவுங் கநகாரி நகாரி காரி " என வரும்.

(இ - ள்.) பொன்னாகிய தூணிலே தோற்றியே சோதியாயுள் ளான் யார்? பொய்கையானது பெற்ற தலைமை யுடையவன் யார்? சிற்றாயனாகிய மால் முன்னாள் மோகினி வடிவுகொண்ட போது பெற்ற பிள்ளை யாரென்று கேட்பீராயின், கற்றாரால் மலர் தூவி நாடோறும் வணங்கப்பட்ட கநகாரி என்றும், நகாரி என்றும் காரி என்றுங் கொள்க (எ - று.)

கநகாரி-திருமால். நகாரி - முருகவேள். காரி - மாசாத்தன். அக்கரச்சுதகம் - அட்சரநீக்கம்.

கங-வது, **நிரோட்டம்** என்பது, இதழ் குவிக்கும் உயிரு மெய் யுந் தீண்டாமற் பாடுவது.

### நேரிசை வெண்பா

வ - று. " சீலத்தான் ஞானத்தாற் றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தா லாராத காதலான்—ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாங்
கச்சிக்கச் சாலைக் கனி "

என வரும். என்னை?

(இ - ள்.) தொழிலாலும், அறிவாலும், மனத் தெளிவாலும் தன்னிடனாகச் செலுத்தின காலத்தின் பெருமையாலும், ஒப்பில் லாத ஆசையாலும், உயர்ந்தோராயினோர் நினைப்பவும், எத்தனையுந் தாழ்ந்த எனக்கு, மிகவுஞ் சிறந் தினிதாகாநிற்குங் கச்சிப்பதியி லுண்டாகிய திருக்கச்சாலையிற் றோற்றிய கனியை யொப்பான் (எ - று.)

## சூத்திரம்

" உஉஐஓ ஔபம வலிவற் றியைபு
சேராநி ரோட்டத் திறத்து" என்றாராகலின்.

நிரோட்டம் என்பதற்கு இதழோ டிதழ் ஒட்டாதது என்று பொருள்.

கசு-வது, **ஒற்றுப்பெயர்த்தல்** என்பது, ஒரு மொழியுந் தொடர்மொழியுமாய்ப் பொருள்படு மவற்றை அப் பொருளொழிய வேறுபொருள்பட வைப்பது.

## நேரிசை வெண்பா

வ - று. " வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலர்ந்து
மண்குளிரச் சாயல் வளர்க்குமாந்—தண்கவிகைக்
கொங்கா ரலங்க லநபாயன் கொய்பொழில்சூழ்
கங்கா புரமா ளிகை என வரும்.

(இ - ள்.) வளப்பத்தையுடைய மேகங்கள் கீழாக மேலோங்கி, வானகத்தின்க ணுண்டாகிய கற்பகப்பூக்களை உச்சிமீது உடைத்தாய், உலகெலாம் தன்னுருவச் சாயையாகிய நிழலைப் பெருக்கும் குளிர்ச்சி பொருந்திய குடையினையும், மதுநிறைந்த மாலையையுமுடைய அநபாயனது கங்காபுரத்தின் மாளிகை எனவும்,

வளப்பத்தையுடைய மேகத்தைப் பழிக்குந் தன்மையை யுடையதாய், வானகத்தி னுண்டாகிய கற்பகத்தோடு பகை கொண்டு கொடுத்து உலகத்துள்ளாருடைய உள்ளங் குளிரும் வண்ணம் காவல்புரியுங் கங்காபுரத்தை யாளும், குளிர்ந்த குடையினை யுடைய அநபாயனது கை எனவும், வந்தவாறு காண்க.

கங்காபுரம்—கஙகைகொண்ட சோழபுரம்.

## இதுவு மது

## நேரிசை வெண்பா

" பொற்புடைய மாதர் புலவாரோ பொய்ம்மருவாச்
சொற்பயிலும் பாண சுடர்மணித்தேர்—நற்புடைய
வஞ்சிநகர் சேரினற மாமருதா ரான்மகிழா
நஞ்சனைய நல்வயலூ ரற்கு."

(இ – ள்.) பொய்யோடு கூடாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லாநின்ற பாணனே! அவரது சுடர்மணித்தேர் தமது கற்புடைய மனைவி மனையிலே சேருமாயிற் பொலிவினையுடைய பரத்தையர் முனியாரோ? தேனால் வண்டு மருவப்பட்ட தாரானின்புறுநகையமல்ல; நல்வயலூரனாகிய தலைவற்கு நாங்கள் நஞ்சோடொவ்வோமோ நீ கொண்டுவிடத்து (எ - று.)

இப் பாட்டின் ஓரடியில், வஞ்சி - நகர் - சேர் - இல் - நறவு - மா - மருது - ஆர் - ஆல் - மகிழ் - என்னும் பத்து மரம் வந்தன. என்னை,

நேரிசை வெண்பா

வ - று. "ஓரடியுட் பத்து மரமுடனொற் றுப்பெயர்த்துத்
தேர்மருவி யூடற் றிறம்புனைந்து—சீர்மை
மருதம் புணர்ந்ததுவும் வெண்பாவாய் வையம்
கருதப் பகர்வன் கவி."

(இ - ள்.) அஃதாவது: ஒற்றுப்பெயர்த்து ஓரடியிற் பத்து மரம் வருதலோடு, தலைவன் தேர் சேர்ந்துவரத் தலைவியின் பிணக்கின் தன்மையைச் சேர்த்துவைத்து, மருதநிலத்தின் றகவுசார, இவை அடங்கியதும் வெண்பாவாக உலகத்தார் கருதக் கவி கூறுவான் (எ - று.) என்றாராகலின்;

ஆல்-கனைக்கும், ஓர் மரத்துக்கும் பெயர். 'ஒற்றுப்பெயர்த்தல்' என்பதற்கு 'ஒன்றிநிற்கும் வேறு பொருளைப் பெயர்த்தெடுத்தல்' என்று பொருள்.

௧௫-வது, மாத்திரைச் சுருக்கம் என்பது, ஒரு பொருள் பயந்துநிற்ப தொருசொல், ஒரு மாத்திரையைக் குறைப்பப் பிறி தொரு பொருள் பயக்குஞ் சொல்லாய் நிற்பது.

நேரிசை வெண்பா

வ - று. "நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்—சீரளவும்
காட்டொன் றொழிப்ப விசையா மதனளவில்
மீட்டொன் றொழிப்ப மிடறு" என வரும்.

(இ - ள்.) நேரிழையார் கூந்தல்-ஓதி; இதில் ஒரு மாத்திரையைச் சுருக்க ஒதி என்னும் மரமாம்; நீர்நிலை—ஏரி; இதில்

ஒரு மாத்திரையைச் சுருக்க, எரியாகிய நெருப்பாம்; காடு - காந்தாரம்; இதில் ஒரு மாத்திரையைச் சுருக்க கந்தாரம் என்னும் பண்ணாம்; இதில் மீட்டும் ஒரு மாத்திரையைச் சுருக்க கழுதாம் (எ - று.)

இதில் புள்ளிபெறு என்றது ஒகார எகாரங்கள் அக்காலத்துப் புள்ளி பெறுதலை நோக்கி யென்க எனினு மமையும்.

கசஅ-வது, **மாத்திரை வருத்தனம்** என்பது, இதனை மறுதலைப் படப் பாடுவது.

### கலி விருத்தம்

வ - று. "அளபொன் றேறிய வண்டதி ளார்ப்பினால்
அளபொன் றேறிய மண்ணதிர்ந் தாக்குமால்
அளபொன் றேறிய பாட லருஞ்சுனை
அளபொன் றேறழ கூடலைந் தாடுமால்" என வரும்.

(இ - ள்.) வண்டு - அளி; அளபேறிய வண்டு - ஆளி எனவும்; மண் - தரை; அளபேறிய மண் - தாரை எனவும்; பாடல் - கவி; அளபேறிய பாடல் - காவி எனவும்; அழகு - வனப்பு, அளபேறிய அழகு - வானப்பு எனவும் காண்க (எ-று.)

இது, நற்றாயிரங்கல் துறையாக அமைந்தது; 'தலைவி தலைவனுடன் அடவியிற் செல்லுங்காலத்தே ஆளி ஆர்ப்பினால், அவளுடைய காவிபோன்ற கண்கள், மழைபோன்ற கண்ணீரில் மூழ்கியாடும்; கண்ணீர்த்தாரைகள் மார்பின்மேல் உகும்' என்பது இதன் பொருள். மாத்திரை வருத்தனமாவது: மாத்திரையை அதிகப்படுத்தல்.

கஎ-வது, **முரசபந்தம்** என்பது, ஓரடி ஒருவரியாக நான்கு வரியெழுதி மேலிரண்டு வரியும் தம்முட் கோமூத்திரியாகவும், கீழிரண்டு வரியுந் தம்முட் கோமூத்திரியாகவும், இருவார் போகி, மேல்வரி யிரண்டாம் வரியினும், மூன்றாம் வரியினும், நான்காம் வரியினுங் கீழுற்று மீண்டு மேனோக்கவும், கீழ்வரியினும், அவ்வாறே மேலுற்று மீண்டு கீழ்நோக்கவும் பெருவார் போகி, இந்த வார் நான்கும் நான்கு வரியாகவும் பாடுவது.

# [அ] முரச பந்தம்

உ௪உ – ஆம் பக்கத்திலுள்ளது.




கானா வாரண மரிய வாயினனே
தானா வாரண மரிய வாயினனே
மானா வாரண மரிய வாயினனே
கானா வாரண மரிய வாயினனே.

இது, மேலிரண்டடிகளுந் தம்முட் கோமூத்திரியாகவும், கீழிரண்டடிகளுந் தம்முட் கோமூத்திரியாகவும், சிறுவார் போக்கி, மேல்வரி மற்ற மூன்று வரிகளிலும் கீழுற்று மீண்டு மேனோக்கவும், கீழ்வரியும் அவ்வாறே மற்ற மூன்று வரிகளிலும் மேலுற்று மீண்டு கீழ்நோக்கவும் பெருவார் போக்கி, இந்தவாறா நான்கும் நான்கு வரிகளாகவும் முடியுமாறு காண்க.

## கலி விருத்தம்

வ - று. "கான வாரண மரிய வாயினவே
தான வாரண மரிய வாயினவே
மான வாரண மரிய வாயினவே
கான வாரண மரிய வாயினவே" எனவரும்.

(இ - ள்.) சோழன் வலியமிக்க போர்செய்த இடமானவை, இசையோடு கூடிய வேதம் அரியவாய், கூட்டம் பொருந்திய மதயானை யரியவாய், காட்டுக் கோழியையும் சிங்கங்களையு முடைய வாயின (எ - று.)

சோழன் போர்செய்யாத முன்னர் மறைமுழக்கமும், யானைகளுமுடைய இடங்கள், போர்செய்த பின்னர்க் காட்டுக்கோழி முழக்கமும், யானையைக் கொல்லவல்ல சிங்கங்களுமுடைய வாயின வெனக் கொள்க. இது, முரசின் வார்களைப்போல் அமைந்திருத்தலின் **முரசபந்தம்** எனப்பட்டது. முரசம்-மிருதங்க வாச்சியம்.

௧௮ - வது, **திரிபாகி** என்பது, மூன்றெழுத்துங் கூட ஒரு மொழியாகியும், அதில் முதலெழுத்துங் கடையெழுத்துங் கூட வேறொருமொழியாகியும், இடையெழுத்துங் கடையெழுத்துங் கூட மற்றொருமொழியாகியும் வருவது.

## நேரிசை வெண்பா

வ - று. "மூன்றெழுத்து மெய்ப்போ முதலீ றொருவள்ளல்
என்றுலகங் காப்ப திடைகடை—யான்றுரைப்பிற்
பூமாரி பெய்துலகம் போற்றிப் புகழ்ந்தேத்துங்
காமாரி காரிமாரி" எனவரும்.

(இ - ள்.) இதனுள் மூன்றெழுத்து மெய்ம்முடைய கோவாகிய **காமாரி** எனவும், இதன் முதலெழுத்துங் கடையெழுத்துங் கூடக் **காரி** என்றொருவள்ளல் எனவும், இதன் இடையெழுத்துங் கடையெழுத்துங் கூட **மாரி** என்று உலகங்காக்கும் மழை எனவும் வந்தவாறு கண்டுகொள்க (எ - று)

திரிபாகி யென்பதற்கு மூன்று பாகத்தையுடையது என்று பொருள்;

(கு - ரை.) காமாரி - காமனுக்குப் பகைவனாகிய சிவன்.

கக-வது, திரிபங்கி என்பது, ஒரு செய்யுளாய் உறுப்பமைந்து ஒரு பொருள் பயப்பதனை மூன்றாகப் பிரித்து எழுத வெவ்வேறு செய்யுளாய்த் தனித்தனியே பொருள் பயந்து தொடையுங் கிரியையும் தனித்தனியே காண வருவது.

### கட்டளைக் கலித்துறை

வ-று. "ஆதரந் தீரன்னை போலினி யாய்! அம்பி காபதியே!
மாதுபங் கா! வன்னி சேர்சடை யாய்! வம்பு நீண்முடியாய்!
ஏதமுய்த் தாரின்னல் சூழ்வினை தீரெம்பி ரானினியார்
ஓதுமொன் றே! உன்னு வாரமு தே! உம்பர் நாயகனே!"

என வரும்.

(இ-ள்) அன்னைபோல இனிமை செய்பவனே! அம்பிகைக்கு நாயகனே! உமையை இடப்பாகத்தி லுடையவனே! கையில் நெருப்பை (மழுவை)த் தாங்கிய சடைக்கடவுளே! வாசனை தங்கிய நீண்ட சடைமுடியை யுடையவனே! குற்றத்தினின்று நீங்கி நின்னருள் பெற்று வாழ்ந்தவர்களுடைய துன்பஞ் சூழ்ந்த இருவினைகளைத் தீர்க்கின்ற எமது கடவுளே! முத்தி யின்பத்தை யடையவர்கள் துதிக்கின்ற ஏகவஸ்துவே! நினைப்பவர்க்கு அமுதம் போன்றவனே! தேவர்களுக்கு நாதனே! என்னுடைய ஆசையைத் தீர்ப்பாயாக என்பதாம் (எ-று.)

இதனுள்,

### வஞ்சித்துறை

"ஆத ரந்தீர்
மாது பங்கா!
ஏத முய்த்தார்
ஓது மொன்றே!" எனவும்,

"அன்னைபோ லினியாய்!
வன்னிசேர் சடையாய்!
இன்னல்சூழ் வினைதீர்
உன்னுவா ரமுதே!" எனவும்!

"அம்பிகா பதியே!
வம்புநீண் முடியாய்!

எம்பிரா னினியார் ?
உம்பர்நா யகனே !'' எனவும்,

மூன்று வஞ்சிததுறைகள் வந்தவாறு காண்க. இச் செய்யுட்களுக்கும் முதற் கலித்துறையின் பொருள்களே பெரும்பாலும் அமையும். இவற்றுள், 'எம்பிரா னினி யார்' என்பதற்கு, 'எமது கடவுளே! இனி எமக்கு உன்னையன்றி வேறுகதி யாவர்?' என்று பொருள் கொள்க.

இதுவுமது

நேரிசை வெண்பா.

வ - று. ''சங்கந்தா பூணாரந் தாமே கலைதாநற்
புங்கவன்மால் காணாப் புலவுடைய—கங்கரா!
கோணா கலாமதிசேர் கோடீர ! சங்கரா !
சோணா சலா ! சலமே தோ?'' என வரும்.

(இ - ள்.) நல்ல பிரமனும், திருமாலும் முடியையும் அடியையுந் தேடிக் காண முடியாதவனும், பகைவர் ஊன் தங்கிய மழுப்படையை யுடையவனுமாகிய அரனே ! வளைவாகிய ஒற்றைக் கலையையுடைய சந்திரன் சேர்ந்த சடையையுடையவனே ! சங்கரித்தற் றொழிலையுடையவனே ! அருணாசலத்திலுள்ளவனே ! சங்குவளையலைக் கொடு ; அணியத்தக்க ஆரத்தைக் கொடு ; மேகலாபரணத்தைக் கொடு ; உனக்குச் சஞ்சல மியாது ? என்பதாம் (எ - று.)

இது, அருணாசலேசுரராகிய தலைவரைக் கண்டு ஆசைமிக்குக் கைவளை முதலியவற்றை நழுவவிட்ட தலைவி யொருத்தி அவரைக் கண்டு, தன்னைக் கூடி அவற்றைத் தன்பாற் சேர்ப்பிக்கும்படி வேண்டிக் கூறியதாக அமைந்தது. சங்கு என்பதற்கு அழகெனினும் பொருந்தும். கங்கு - மழுவைக் குறித்தது.

இவ் வெண்பாவே,

'' பூணாரந் தாமே கலைதாநற் புங்கவன்மால்
காணாப் புலவுடைய கங்கரா !—கோணா
கலாமதிசேர் கோடீர ! சங்கரா ! சோணா
சலா!சலமே தோ?சங்கந் தா'' எனவும்,

"சலமேதோ? சங்கந்தா பூணாரந் தாமே
கலைதாநற் புங்கவன்மால் காணப்—புலவுடைய
கங்கரா! சோணா கலாமதிசேர கோமர!
சங்கரா! சோணா சலா!" எனவும்,

மூன்று வெண்பாவாய்த் திரிபங்கியானது காண்க. இவற்றிற்கும் முதல் வெண்பாவின் பொருளே அமையும். இது, ஒரு செய்யுளை மூன்று பங்காவதால் **திரிபங்கி** யெனப்பட்டது.

(கு - ரை.) திரி - மூன்று. பங்கி - பங்கமுடையது. பங்கம்—பேதம்.

உ0-வது, **பிறிதுபடுபாட்டு** என்பது, ஒரு செய்யுளை அடியுந் தொடையும் வேறுபடுப்பச் சொல்லும் பொருளும் வேறுபடாது வேறொரு செய்யுளாய் முடிவது.

**கட்டளைக் கலித்துறை**

வ-று. "தெரிவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும் பரிசுகொண்டு
வரிபளி பாட மருவரு வல்லி யிடையடைத்தாய்த்
திரிதருங் காமர் மயிலிய லாயநண் ணுந்தேமொழி
யரிவைதன் னேரென லாகுமெம மையயா மாடிடமே"
என வரும்.

(இ - ள்.) எம்மையனே! யாம் விளையாடும் இவ்விடமானது, தெரிதற்கரிய காதலினாலே கூடியவர் விரும்பும் விதத்தைக்கொண்டு இசைபாடத்தக்க வண்டுகளென்னும் பாடன்மகளிர் பாடுதலைச் செய்ய, மருவுதற்கரிய கொடிகளாகிய இடையினையடைத்தாய்த், திரிகின்ற அழகிய மயில்களென்னும் தோழியர் கூட்டத்தைப் பொருந்தி, தேன்போலு மொழியினையுடைய அரிவைக்கொப்பாகு மென்று சொல்லலாந் தகைமைத்து (எ - று.)

இது,

"தெவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும்
பரிசு கொண்டு வரியளி பாட
மருவரு வல்லி யிடையுடைத் தாய்த்திரி
மருங்காமர் மயிலிய லாய நண்ணுந்
தேமொழி யரிவைதன் னேரென
லாகுமெம் மைய யாமா டிடமே"

கான ஆறடியாய், ஏற்றயலடி மூச்சீராய், ஏனையடி நாற்சீராய் வந்து நேரிசை யாசிரியப்பாவாமாறு காண்க. இனித் திரிபங்கிக்குச் சொன்ன பாட்டையே, இரண்டு பாட்டாகக் கூட்டி அடி தொடை பேதித்துச் சொல்லலுமாம்.

பிறிதுபடு பாட்டாவது:—வேறொரு பாட்டுத் தன்னிடத்தே உண்டாகும் பாட்டு. (௭)

சித்திரகவி முற்றிற்று.

---

## வழுக்களின் வகை.

[குன்றெ மொழி

கசக. பிரிபொருட் சொற்றொடர் மாறுபடு பொரு
ண்மொழிந்தது மொழிவே கவர்படு பொருண்மொழி
நிரனிறை வழுவே சொல்வழு யதிவழு
செய்யுள் வழுவொடு சந்தி வழுவெனா
வெய்திய வொன்பது மிடனே காலம்
கலையே யுலக நியாய மாகம
மலைவுமென் றாறுந் தவும் வரைந்தனர் புலவர்.

(இ - ள்) அவை: (1) பிரிபொருட் சொற்றொடரும், (2) மாறுபடு பொருண்மொழியும், (3) மொழிந்தது மொழிதலும், (4) கவர்படு பொருண்மொழியும், (5) நிரனிறைவழுவும், (6) சொல்வழுவும், (7) யதிவழுவும், (8) செய்யுள் வழுவும், (9) சந்திவழுவு மென்னும் ஒன்பது வழுவும்;

(1) இடமலைவும், (2) காலமலைவும், (3) கலைமலைவும், (4) உலகமலைவும், (5) நியாயமாலைவும், (6) ஆகமமலைவும் என்னும் ஆறுமலைவும், உள்ளிட்ட பதினைந்துஞ் செய்யுளிடத்து வரைந்தனர் புலவர் (எ - று.)

முன்னரொன்பது வழுவுங் குற்றமாதல் பெரும்பான்மைய, குணமாதல் சிறுபான்மையவென்றற்கும்; பின்னாறு மலைவும், ஒருதலையாகவே குற்றமாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந்துரை யாகப் புணர்க்கத்தக்க புலவரான் மொழியப்படும் சிறுபான்மைய வென்றற்கும் இவ்வாறு வைத்ததென்றறிக. அஃதேல், குற்றஞ் செய்யுணுக்கு வருவனவல்லவோ ஆதலால், செய்யுட் இலக்கணங

கூறும் யாப்புநூலுள்ளன்றே புணர்ந்துவந்து, என்றுரைத்த தென்னை யெனின்,

செய்யுளென்பது சட்டகம், அலங்காரமென்பது அச் சட்டகத்தைப் பொலிவு செய்வது; ஆதலாற் செய்யுட்குப் பொலிவு என்று உரைக்கப்பட்டது. இக் குற்றம் அச் செய்யுட்குப் பொலிவழிவு செய்வன ஆதலால் அச் செய்யுட்குப் பொலிவழிவு வாராமற் புணர்க்க வேண்டுமென்பான் ஈண்டே யுணர்த்தப்படு மாதலாற் பிறி தெடுத்தோதலன் றென்க.

அஃதேல், இச் சூத்திரத்துட் செய்யுளென்பது பெற்றிலமா லெனின், மேற் பொதுவியலுள் அதிகரித்த செய்யுட்கன்றே அலங்கார முணர்த்தியதாதலால் இக் குற்றமும் அச் செய்யுட்கண் வாராமற் புணர்க்கவேண்டுமென்றே கொள்ளப்படும். அல்லதூஉம், இச் சூத்திரத்துட் சொற்றொடரென்றது அச் செய்யுளையே யன்றோவென்க. (அ)

## பிறன்கோட்கூறி மறுத்தல்

க௦௦. மேற்கோ ளேது வெடுத்துக் காட்டென
ஆற்றுளி னிழுக்கு மவற்றது வழூஉநிலை
நிரம்ப வுணர்த்த வரம்பில வென்ப.

(இ - ள்.) மேற்கோளும், ஏதுவும், எடுத்துக்காட்டும் என முறையாற் சொல்லப்படும் அவற்றது வழூஉநிலையை ஈண்டு முற்ற வுணர்த்த அளவில்லவாதலாற் கூறிற்றிலமென்று சொல்லுவார் (எ - று).

மேற்கோண்முதன் மூன்றும் நியாயநூலுட் சொல்லப்படும். அவைதாமும் மதந்தோறும் வேறுபட்டு வருவன வாதலால் இன்பந்தரு முரைக்கு மலங்கார இலக்கணத்தின்கண் மொழியின்ப மழிந்து பிறிதெடுத்து விரித்தலென்பதா மாதலால் ஈண்டு வேண்டிற்றிலர். (கூ)

(கு - ரை.) இதனைப் புறனடை யெனவுங் கூறுப.

## க. பிரிபொருட் சொற்றொடர்

க௦க. அவற்றுள்,

பிரிபொருட் சொற்றொடர்செய்யுண் முழுவதும்
ஒருபொருள் பயவா தொரீஇத் தோன்றும்.

(இ - ள்.) பிரிபொருளென்பது - ஒன்றாதபொருள், சொற்றொடரென்பது - செய்யுள் ; ஆதலால், ஒன்றாப்பொருளுடைச் செய்யுள் (எ - று.)

அஃதாவது, வாக்கியங்களை வெவ்வேறு நோக்கப் பொருளுடையவாய்க் கூட்டி நோக்க ஒரு பொருளாக வுணரப்படாதது தாய் வருவது.

## நேரிசை வெண்பா

வ - று. " கொண்டன் மிசைமுழங்கக் கோபம் பரந்தனவாற்
றெண்டிரைநீ ரெல்லாந் திருமுனியே—உண்டுமிழ்ந்தான்
வஞ்சியார் கோமான் வரவொழிக மற்றிவளோர்
பஞ்சியார் செஞ்சீ றடி" என்பதனுள்,

வானின்கண் மேகங்கள் முழங்க நிலத்தின்கண் கோபம் பரந்தன எனவும் ;

தெளிந்த அலைகளையுடைய கடனீரையெல்லாம் அகத்திய முனியே யுண்டுமிழ்ந்தான் எனவும் ;

கருவூராருக்கு கோமானாகிய சோழனை வருதலை யொழிவாயாக எனவும் ;

இவள் செம்பஞ்சியை யூட்டிய சிவந்த சிற்றடியாள் எனவும் ;
தனித்தனி நோக்கப் பொருள் பயந்து, கூட்டி நோக்கப் பொருள் பயவாமையின் அப்பெயராயினவாறு காண்க. (கo)

## இதற்குச் சிறப்பு விதி

## க0உ. களியினும் பித்தினுங் கடிவரையின்றே

என்பது, என்னுதலிற்றோவெனின், எய்தியதிகந்துபடாமற் காத்தலுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேன் மொழிந்த பிரிபொருட் சொற்றொடர், கள்ளுண்டு களிப்போன் கூற்றின்கண்ணும், பித்துடையோன் கூற்றின்கண்ணும் கடிந்து நீக்கப்படாது ; (எ - று.)

அவற்றுட் களியான் மொழிந்தது

நேரிசை வெண்பா

வ - று. "காம ருருவங் கலந்தேன்யான் காங்கேயன்
வீமனெதிர் நின்று விலக்குமோ—தாமரைமேல்
மால்பொழிய வந்தா ரருகர் மதுவுடனே
பாற்பொழியு மிவ்வூர்ப் பனை"

என்றதனுள், அழகிய வுருவங்களிலே யான் புகுந் கலந்தேன் எனவும்;

காங்கேயனாகிய அரசன் வீமனெதிர் நின்று போரை விலக்குமோ எனவும்;

தாமரை மலர்மே லருகர் மால்பொழிய வந்தார், எனவும்;
இவ்வூர்ப் பனை மதுவுடனே பாலைப்பொழியும் எனவும் வரும்.
இவ்வாறு சொல்லப்பட்டமையான் நீக்கப்பட்டது. வரையின் றென்னாது கடிவரையின் றென்றதனாற் பிள்ளைக ளிளமைத் தன்மையான் மொழியுங்காலும் வரையப்படாதென்றறிக. அதுவும் பித்தின் மயங்கிய கூற்றும் வந்துழிக் காண்க. (௩௧)

## உ. மாறுபடு பொருண்மொழி.

கரு௩. மாறுபடு பொருண்மொழி முன்மொழிந் ததற்கு
மாறுபடத் தோன்றி வருமொழித் தாகும்.

(இ - ள்.) மாறுபடு பொருண்மொழியாவது, முன்மொழிந்த சொற்பொருளோடு, மாறுபட்ட பொருடோன்றி வருமொழி யுடைத்து (எ - று.)

வருமொழி யென்றது அதன் பொருளை.

நேரிசை வெண்பா

வ - று. "மின்னார் மணிப்பைம்பூண் வேந்தே! நினக்குலகில்
இன்னா தவர்யாரு மில்லையால்—ஒன்னார்

குலமுழுதுங் கூற்றங் கொள வெகுண்டு நீயே
தலமுழுதுந் தாங்க றகும்" என வரும்.

(இ - ள்.) இதனுள், ஒளியினையுடைய மணிகளிழைத்த பசும் பொன்னாற் செய்த ஆபரணங்களையுடைய வேந்தனே! நினக்கின்னாதார் உலகில் யாவருமில்லை யென்று, பின்பு நின் பகைவருயிரை யெல்லாங் கூற்றுவன் குலத்தோடு கொள்ளும்படியாக வெகுண்டு நீயே யித்தல முழுவதுந் தாங்குதல் நினக்குத் தக்க தென்றமையின் மாறுபடு பொருண்மொழியாயிற்று (எ - று.) (கஉ)

## சிறப்பு விதி

கoச. காமமு மச்சமுங் கைம்மிகி னுரித்தே.

(இ - ள்.) காமங் கைம்மிகினும், அச்சங் கைம்மிகினும் அவ் வாறுரைக்கப்படும் (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. "என்னோ டிகல்புரியப் பஞ்சவர்க ளஞ்சாரோ
மின்னனைய பாஞ்சாலி யைவிடேன்—அன்றே
மிகல்புரியுங் கூற்றனைய வீம னெதிர்நின்
றிகல்புரிய வாற்றுவலோ யான்" என வரும்.

(இ - ள்.) இதனுள், என்னோடு மாறுபட்டெதிர்த்தற்குப் பஞ்சபாண்டவர் அஞ்சாரோ என்றும், மின்னனைய பாஞ்சாலியை விடேன் என்றும், மேம்பாட்டினையுடைய கூற்றத்தை யொத்த வீமனுக்கெதிரே நின்று மாறுபடுதற்கு யான் வல்லனோ வென்றுஞ் சொன்னமையால் அவ்வாறுதல் காண்க (எ - று.)

இஃது அச்சம். மிகல்-மேம்பாடு. புரிதல்-செய்தல். (கங)

## ௩. மொழிந்தது மொழிவு

கoரு. மொழிந்தது மொழிவே கூறியது கூறி
வேறுபட வொருபொருள் விளங்கா ததாகும்.

(இ - ள்.) மொழிந்தது மொழிதலாவது - முன்னே கூறியவதனையே மீண்டுங் கூறி அதனால் வேறுபட வொருபொருள் விளங்காதது (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. "அங்கமி லாதவ னங்கன் றலம்புரியும்
வெங்கணையுங் காக்குங்கொல் வேல்வேந்தர்—தங்கோன்
நிலையார்ந்த தொடையலானேரிழைக்காய் முன்னோர்
மலையாற் கடல்கடைந்தான் மால்" என வரும்.

(இ - ள்.) வேலேந்தாங்கிய அரசர்க்கரசனாகிய, நிலைத்த ஆத்திமாலையைத் தரித்த ஒப்பில்லாத சோழன், அங்கமில்லாதவனாகிய மன்மதன் ஐந்தலம்புகளால் எய்யப்படுகின்ற கொடிய அம்புகளையுங் காப்பானோ? காப்பான்; எனெனில், ஆதியில் திருமால் திருமகளைப் பெறவேண்டி ஒரு மலையாலே பாற்கடலைக் கடைந்தான் (எ - று.)

இதனுள், அங்கமல்லாதவ னென்றும், பின்னு மவனையே அனங்கனென்றுஞ் சொல்லினமையான் மொழிந்தது மொழிவாம் குற்றமாயிற்று.

அஃதேல, சொற்பின்வருநிலையும், பொருட்பின் வருநிலையும், சொற்பொருட்பின் வருநிலையும் அவ்வாறன்றேயெனின், அற்றன்று.

**சொற்பின்வருநிலையாவது**—மொழிந்த சொல்லே மொழியினும் பொருள் வேறுபடும். அது,

"மால்யானை காத்தளித்த மால்." என்பது

(இ - ள்.) மதம்படைத்துடைய யானையைக் காத்த திருமால் என்பதாம் (எ - று.)

இதில் முதற்கணுள்ள மால் - மதமயக்கம். ஈற்றிலுள்ள மால் - திருமால் என்பது,

**பொருட்பின்வருநிலையாவது**—மொழிந்த பொருளே மொழியினும் சொல் வேறுபடப் பொருடோறும் வருவதோரலங்காரமுண்டாம். அது,

"அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா" என்பது.

(இ - ள்.) மலர்ந்தன காந்தள்கள், மலர்ந்தன காயாமலர்கள், என்பதாம் (எ - று.)

இதில் அவிழ்ந்தன அலர்ந்தன ஒரு பொருட்சொற்கள் என்பது.

**சொற்பொருட்பின்வருநிலையாவது** —சொல்லும் பொருளும் அதுவேயெனினும் அவற்றான் வெவ்வேறு பொருள்படுதல். அது,

" வைகலும் வைகல் " என்பது.

(இ - ள்.) நாள்தோறும் நாள் என்பதாம் (எ - று.)

இரண்டும் நாள் என்னும் பொருளை யுணர்த்துவனவாயினும், பின்னது கழிவுநாள் என்று வேறு பொருள்பட்டு நிற்கும். (கச)

## சிறப்பு விதி

கருசு. விரைவினுஞ் சிறப்பினும் வரைவின் றதுவே.

(இ - ள்.) மேல் ஒருசொற் பொருண்மேற் பலசொல் வருத லன்றோ வழுவென்பது, அதுவே விரைவின்கண்ணும், சிறப்பின் கண்ணுமாயிற் குற்றமன்று (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. " ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்துவட நாட
ரருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது " என வரும்.

(இ - ள்.) சோழனுடைய படைவீரர், போரையுடைய கலிங்க தேசத்தின்மீது சண்டைக கெழுந்தபோது, அவ்வடநாடர், ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து, 'நாம் குறைவுற்றவரானோம், குறை வுற்றவரானோம்' என்று பயந்து மயங்கி, 'நெருப்பு மூண்டது, நெருப்பு மூண்டது, நெருப்பு மூண்டது' என்று வாடுவார்கள் என்பதாம் (எ - று.)

அருவுதல் - குறைதல்; அருவர் - குறைந்தவர். சென்னி - சோழன். இது விரைவு. பிறவுமன்ன. (கரு)

## ச. கவர்படுபொருண்மொழி

கருஎ. ஒருபொரு ணியவுரைக்க லுற்றசொல்
இருபொருட் கியைவது கவர்படு பொருண்
[மொழி.

என்பது, என்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே கவர்படு பொருண்மொழி யென்னும் வழுவமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒரு பொருளைத் தெரிவுற உணர்த்தற்கு வந்த சொல் அதனையே ஐயுறும்படி பல பொருண்மே னிற்பது கவர்படு பொருண்மொழி யென்னுங் குற்றமாம் (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. “புயலே புறம்பொதிந்து பூந்தா தொழுக்கி
மயலே கடவுளர்க்கு வாய்த்துச்—செயலை
எரிமருவு பூந்துணர்த் தாய யாவருமூ டாடார்
அரிமருவு சோலை யகத்து” என வரும்.

(இ - ள்.) மேற்புறம் மேகத்தால் மூடப்பட்டு அழகிய மகரந் தங்களைச் சொரிந்து, தேவர்களுக்கும் மயக்கத்தைச் செய்தலை யுடைய, நெருப்பைப்போன்ற நிறம்பொருந்திய பூங்கொத்துக்களை யுடையதாய், வண்டுகள் சார்ந்திருக்கின்ற சோலையினுள் எவரும் ஊடே செல்லார் என்பதாம் (எ - று.)

இதனுள் ‘அரிமருவு சோலை யகத்து’ என்றவழி, அரியென்பது-வண்டு, சிங்கம், நெருப்பு முதலிய பல பொருள்களுக்கும் பொது வாதலான் ஒன்று துணியப்படாமையின் வழுவாயிற்று.

### சிறப்புவிதி

**க௦அ. வழூஉப்பட லில்வழி வரைவின் றதுவே.**

(இ - ள்.) அக் கவர்படு பொருண்மொழியும் வழுவில்லாத விடத்துப் பொதுப்பட வரைப்பினுங் குற்றமன்று (எ - று.)

என்னை,

### சூத்திரம்

“வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.”

அஃதாவது; சொல்வேறு படாத பலபொருளொரு சொல், ஆராயுமிடத்து, குறித்துச்சொன்ன பொருளின்படி நடக்கும் என்ப வாகலின்.

### நேரிசை வெண்பா

வ - று "வானவர்க டாழ்ந்து பணிகேட்ப மாறுப
தானவர்கள் சுற்றந் தடிந்தொழித்த—மேன்மை
அரியே யனைத்துலகுங் காக்குங் கடவுள்
எரியே மறையோர்க் கிறை" எனவரும்.

(இ - ள்.) தேவர்கள் பணிந்து ஏவல் கேட்ப, பகையான அசுரருடைய குலத்தைச் சேதித்துக் களைந்த, மேன்மை பொருந்திய அரியே யனைத்துலகுங் காக்குங்கடவுள். அக்கினியே வேதியருக்கு இறை.

இதனுள் இத் தொழில் திருமாலுக்கு முக்கியம், இந்திரனெனினுமாம். அரியென்பது இந்திரனுக்கும் திருமாலுக்கும் பொதுப் பெயராதலின், ஈவற்றெழில், யாவர்மே னிற்பினுங் குற்றமன்றென்க. (கஎ)

## ரு. நிரனிறைவழு

க௦௯. ஒருநிரன் முன்வைத் ததன்பின் வைக்கும்
நிரனிறை பிறழ்வது நிரனிறை வழுவே.

(இ - ள்.) ஒருநிரல் முன்னெண்ணி வைத்துப் பின்மொழி மாற்றிக்கொள்ளு நிரலைப் பிறழவைப்பது **நிரனிறை** வழுவாம் (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. "தெற்குக் குடக்கு வடக்குக் குணக்குமேல்
நிற்குந் திறத்துலகை நீடளிக்கும்—பொற்பினோர்
ஈரெண் கலையோன் வருண னிரவியமன்
யாரும் புகழியல்பி னோர்" எனவரும்.

(இ - ள்.) தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு என்னுந் திசைகளின்மேல் நிற்குந் திறமையினாலே உலகைக் காக்கும் பொற்பினையுடையார், பதினாறு கலைகளையுடைய சந்திரன், வருணன், சூரியன், யமன் என வெவரும் புகழ்க்கூடிய இயல்பினையுடையார் என்பதாம் (எ - று.)

இதனுள், தென்றிசைமுதற் குணதிசை யீறாக அடைவே யெண்ணி அத்திசைகளினின்றும் உலகங் காப்பவர்—சந்திரன்,

இயமன், வருணன், சூரியனென முறையே வையாது, சந்திரன், வருணன், சூரியன், இயமனென முறைபிறழ வைத்தமையின் வழுவாயிற்று. (௧௮)

## சிறப்புவிதி

**௧௧௦. உய்த்துணர வரும்வழி யவ்வாறு முரித்தே.**

(இ - ள்.) அந் நிரனிறை உய்த்துக்கொண் டுணர்வதாகத் தோன்றுவதாயிற் பிறழினும் பிறழ்வன்று (எ-று.)

### நேரிசை வெண்பா

வ - று. "குடபால் வடபால் குணபாறென் பாலென்
றடைவே திசைநான் கவற்றுள்—இடையிரண்டு
நன்மைபுரி வோர்பயந்து நோக்குப வேனைய
வன்மை புரிவோர்க்கே யாம்" என வரும்.

(இ - ள்.) மேற்குத்திசை, வடக்குத்திசை, கீழ்த்திசை, தென்றிசை என்று முறையே எற்பட்ட திக்குகள் நான்கனுள், இடையி லுள்ள இரண்டும் நன்மைபுரிவோர் அவற்றைக் கொடுத்து நோக்கு வனவாம்; மற்றைய தீமை புரிவோர்க் குரியனவாம் (எ - று.)

நன்மைக்கு மறுதலை - அன்மை. இதனுள் உய்த்துணர்ந்து கொள்ளப் பிறழாதென வைத்தவாறுவது, மேற்றிசை முதலாகத் தென்றிசை யீறாக அடைவே யெண்ணி நடுக்கிடந்த வடதிசையுங் குணதிசையும் நற்கருமஞ் செய்வோர் நோக்கற்பால வென்றும், மேற்குந் தெற்குந் தீக்கருமஞ் செய்வோர் நோக்கற்பால வென்றும் உய்த்துணர வைத்தவாறு காண்க. (௧௯)

## ௯. சொல்வழு

**௧௧௧. சொல்வழு வென்பது சொல்லிலக் கணத்
புல்லா தாகிய புகர்படு மொழியே** [தொடு

எனபது, என்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே சொல்வழுவை மாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சொல்வழுவாவது, சொல்லதிகாரத்திற் சொல்லிய இலக்கணத்தோடு, மாறுபட்டு வருஞ்சொற் புணர்க்கப்படுவது (எ - று.)

நேரிசை வெண்பா

வ - று. "யாவகைய தாயார்க்கு மெங்களுக்கு மெந்தையர்க்கும்
ஆவி யிவளே யனையவர்க்கும்—கோவே!
நுனக்க பயமிந்த நுண்மருங்குன் மாது
தனக்கிடரொன் றில்லாமற் றாங்கு" என வரும்.

(இ - ள்.) பெற்றவள், வளர்த்தவள், பாராட்டுபவள் முதலிய எல்லாத் தாய்மார்களுக்கும், எங்களுக்கும், எங்கள் தந்தையாருக்கும், இன்னும் எல்லோருக்கும் இவளே உயிராவள்; ஆதலின், அரசனே! இந்த நுட்பமாகிய இடையினையுடைய மாது உனக் கடைக்கலம்; இவளுக்கு இடரொன்று மில்லாமல் இவளைக் காத்துக் கொள்வாயாக (எ - று.)

'யாவகைய தாயர்க்கும்' என்று கூறிப் பின்னர் 'எங்களுக்கு' என்று கூறியது தவறாம்; இக் கூற்றிற் குரியாளும் தாய்மார்களில் ஒருத்தியாதலின்.

இது, கையடை கொடுத்தல். இதனுள் 'எங்களுக்கு' எனவும், 'நுனக்கு' எனவும், வழூஉச்சொற் புணர்க்கப்பட்டன வாதலாற் சொல்வழு வாயிற்று. (உ0)

சிறப்பு விதி

கக௨. வழக்கா றயின் வழுவின் றதுவே.

(இ - ள்.) அச் சொற்கள் வழக்காறு யடிப்பட்ட சான்றோரால் வழங்குவனவாயின் வரையப்படா வழக்காறென்று தழுவப் படும் (எ - று.)

மரூஉக் கட்டுரைக்கண் இலக்கண மின்றியும் வரப்பெறு மென்க.

நேரிசை வெண்பா

வ - று. "யாவ ரறிவா ரிவரொருவ ரிக்குறிஞ்சிக்
காவலரோ விஞ்சையர்தங் காவலரோ—பாவாய்!

அருமந்தன் னார்நம் மகன்புனம்விட் டேகார்
தெருமந் துழலுந் திறம்" என வரும்.

(இ - ள்.) பாவை போன்ற பெண்ணே! ஒப்பற்றவராகிய இவர், இக் குறிஞ்சி நிலத்திற்குத் தலைவரோ? வித்தியாதரர்களுடைய தலைவரோ? அருமருந்துபோன்ற இவர், நம்முடைய விசாலமான தினைக்கொல்லையை விட்டுப் போகாதவராய் மயங்கி வருந்தும் தகைமையை எவரறிந்து சொல்ல வல்லார்? (எ - று.)

இதனுள் 'அருமருந்தன்னார்' எனற்பாலது, 'அருமந்தன்னார்' என அடிப்பட்டு வந்து, வழக்காறாயிற்று. அல்லதூஉம், 'மலைய மாநாடு - 'மலாடு' எனவும், 'பாண்டியநாடு' - 'பாண்டிநாடு' எனவும் வருவனவும், அவ் வழக்காறே யெனக் கொள்க. [உ௧]

ஏ. யதிவழு

௧௧௩. யதிவழு வென்ப தோசை யறுவழி
நெறிப்பட வாரா நிலைமைய தென்ப.

(இ - ள்.) யதிவழுவாவது, ஓசைகொண்டு சீரறுக்கும் வழி, அறுத்தற்கரிதாய் வேறுபட்டு வருந் தன்மையதாம் (எ - று.)

நேரிசை வெண்பா

வ - று. "மாடு பயிலும் வரையாளி மால்யானைக்
கோடுபுயத் துண்டுழலுங் கொள்கைத்தாம்—காடு
அரிதா மியல்பிற் றரையிருட்கண் வாரல்
பெரிதாகு மைய! பிழை" என வரும்.

(இ - ள்.) மலைப்பக்கங்களிலே தங்குகின்ற சிங்கம், மதயானையினது கோட்டைப் புயத்திலே தாங்கி வருந்தும் இயல்பினையுடையதாகிய காடு, எவரும் செல்லற் கரிதாந் தன்மை யுடையதாம்; ஆதலின், ஐயனே! அக் காட்டில் நள்ளிரவில் வருதல் ஒழிவாயாக; அங்ஙனம் வரின் பெரிதும் பிழையாகும் (எ - று.)

'யாளி யானைக்கோடு புயத்துண்டு' என்றது, யானை மதங் கொண்டு சிங்கத்தையும் பாய அதன் தோளில் தந்தம் முறிந்திருக்க

அதனோடு சிங்கம் வருந்தித் திரியு மென்றபடி. இங்ஙனம் யானை சிங்கத்தையும் பாயு மெனவே காட்டின் மிகுதிப்பாடு விளங்கும்.

இதனுட் 'காடரிதாம்' எனற்பாலது 'காடு அரிதாம்' என்று, அச் சொற்கூடாது அறுதநிசைத்து யதிவழு வாயிற்று. (உஉ)

## சிறப்பு விதி

**கக௪. வகையுளி யுரைப்புழி வரைவின் றதுவே.**

(இ - ள்.) அச் சீர் அறற்பாலவழி யறாது நின்றதெனினும், வகையுளி சேர்த்துக் கொள்வாமெனிற் குற்றமன்று (எ - று.)

(கு - ரை.) வகையுளியாவது பதம் நோக்காது இசைநோக்கிப் பிரிக்கப் படுதலுடையது.

### நேரிசை வெண்பா

வ - று. "மேவிவாழ் வார்மே லிருணீக்கி யாருமலர்த்
தேவிநீங் காள்செம்பொற் றோளிணைகள்—கோவினனி
சென்னிவிடா மாலினடி வேலினுதி நீலநிறக்
கன்னிவிடா ளீகைவிடா கை" என வரும்.

(இ - ள்.) தான்மேவி வாழ்வாரிடத்தே, வறுமை யென்னு மிருளை நீக்கி, ஐசுவரியமென்னும் தன்னுடைய பிரகாசத்தைப் பரப்பிப் பொருந்துகின்ற செந்தாமரை மலரில் வாசம் செய்யுந் திருமகள், இறைவனுடைய செம்பொன் போன்ற தோள்களை விட்டு நீங்காள்; அவனது அழகிய சிரம் திருமாலி னடியைவிட்டு நீங்காது; நீலநிறம் பொருந்திய சயமடந்தை அவனுடைய வேலின் முனையை விட்டு நீங்காள்; அவன் கை ஈகையை விடமாட்டாது (எ - று.)

இங்ஙனம் கூறவே, மன்னன் மிக்க ஐசுவரியத்தோடும், காத்தற் கடவுளாகிய விஷ்ணு பக்தியோடும், வெற்றியோடும், கொடையோடும் வாழ்வானென்பது பெறப்படும். மேல் - ஏழாம் வேற்றுமை யுருபு. இருள்-வறுமையைக் குறிக்கும். அரசனுக்குப் புஜ பலமே ஐசுவரியத்துக்குக் காரணமாதலின் இலக்குமி தோளில் சேர்வாள் என்றார். நீலநிறக்கன்னி - துர்க்கை; இவள் ஜயத்திற் குரியளாதலின், 'நீலநிறக் கன்னி வேலினுதி விடாள்' என்றார்;

வேலை வெற்றிக்குத் துணையாதலின், அதில் சயமகள் இருப் பாள் என்றார். இதனுள் வகையுளி சேர்த்துக் கொள்ளக் குற்ற மன்றாயிற்று. வகையுளியாவது : அந்தந்தச் சொன்முடிபே சீர் முடிவாகத் தளைகொள்ளாமல் வேண்டியவிடத்துச் சீர்முடிவு செய்து தளைகொள்ளுதல் எனினு மமையும். (உ௮)

### அ. செய்யுள் வழு

கக௫. செய்யுள் வழுவே யாப்பிலக் கணத்தோ
டெய்த லில்லா வியல்பிற் றாகும்.

(இ - ள்.) செய்யுள் வழுவாவது யாப்பிலக்கணத்தோடு பொருந்தாத இயல்பினை யுடைத்து (எ - று.)

### நேரிசை வெண்பா

வ - று. " ஆதரந் துயர்தர வயர்தருவ கொடிக்குப்
பூதலம் புனைபுகழ் வளவன்—தாதரு
தாங்கரும் பாலன்றித தணியுமோ தாரனங்கன்
பூங்கரும்பால் வந்தடுதத போர்" என வரும்.

(இ - ள்.) ஆசையானது வருத்தத்தைத் தர அதனாலே வருந்துகிற பூங்கொடிபோலும் மாதினுக்கு, பூமியை அலங்கரிக் கும்படியான புகழுள்ள சோழன் அணிந்திருக்கின்ற, மகரந்தம் நீங்காத பூவரும்புகளாலாகிய மாலையாலன்றி, மாலையைத் தரித்த மன்மதனுடைய அழகிய கருப்புவில்லால் வந்து சேர்ந்த போர்த் துன்பமானது தணியுமோ (எ - று.)

இது, முன்ன ராசிரியம் வந்து பின்னர் வெண்பாவாய் முடிந் தது. இங்ஙன முடிதற் கிலக்கண மின்மையால் யாப்புவழுவா யிற்று. (உ௯)

### சிறப்பு விதி

கக௬. ஆரிடத் துள்ளு மவைபோல் பவற்றுளு
நேரு மென்ப நெறியுணர்ந் தோரே.

(இ - ள்.) செய்யுள் வழு ஆரிடத்துள்ளும் ஆரிடப்போலி யுள்ளும், சிறுபான்மை வரையப்படா (எ - று.)

நேரிசை வெண்பா

வ - று. " கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
ஒண்செங் குருதியு ளோஃ கிடப்பதே—கொண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுதகண் ணீர்துடைத்த கை " என வரும்.

(இ - ள்.) தலைவரது பிரிவின் கூட்டமில்லாத யான், பூமியிற் கிடந்து பிணங்கப் பலநாளும் அழுத கண்ணீரைத் துடைத்த எனது கை, வாளைப்பற்றிக் கடகத்திலுள்ள இரத்தினம் ஒளிவிடச் சிவந்த இரத்தத்தினுள்ளே கிடப்பதே (எ - று.)

கொண்டி - தறித்தல்; அதாவது: வேறுபடுத்தல்; அஃது இங்கே பிரிவை யுணர்த்திற்று.

இது, பதினாறுசீர் வெண்பாவாய் யாப்பிலக்கணத்தோடு பொருந்தாது வந்தது.

**ஆரிடமாவன** - இருடிகளாற் சொல்லப்படுவன.

**ஆரிடப்போலியாவன**-சாவவும், கெடவும், வாழவும், மனத்தது பாடவும் வல்ல புலவராற் சொல்லப்படுவனவாம். (உரு)

## கூ. சந்தி வழு

ககஎ. சந்தி வழுவே யெழுத்திலக் கணத்துச்
சந்தியொடு முடியாத் தன்மைத் தாகும்.

(இ - ள்.) சந்திவழுவாவது எழுத்ததிகாரத் தோதப்பட்ட புணர்ச்சியிலக்கணத்தோடு பொருந்தாது வருவது (எ - று.)

நேரிசை வெண்பா

வ - று. " என்பூ டுருக வினைவேன் மனங்கலக்கும்
பொன்பூண் சுமந்த புணர்முலையீர் !—மின்போல்
நுடங்கிடைக்குங் காதலாய் ! நோக்கக் கவரும்
படங்கிடைக்கு மல்குற் பரப்பு " என வரும்.

(இ - ள்.) எலும்பும் உள்ளே உருகும்படி வருந்துவேனுடைய எனது மனத்தைக் கலக்குகின்ற பொன்னாபரணங்களைத் தாங்கிய

கொங்கைகளை யுடையீர்! நும் கடிதடப் பரப்பானது, மின்னலைப் போல் அசைகின்ற இடைக்குங் காவலாய், பார்ப்பவரது நோக்கங் கவரும் அரவப்பட்டத்தின் தன்மை பொருந்தி யிருக்கும் [எ-று.)

இதனுள் 'பொற்பூண்' என்பது 'பொன்பூண்' என வந்தமை யிற் சந்தி வழு வாயிற்று. [உசு)

## சிறப்பு விதி

கக அ. இரண்டாம வேற்றுமைக் கெதிர்மறுத்தும வருமே.

(இ - ள்.) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியாயின் வல்லெழுத்து மொழிக்கு முதலாய் வந்துழி ஈனை வேற்றுமையோடு மாறுபட்டு முடியவும் பெறும் (எ - று.)

### நேரிசை வெண்பா

(வ - று.) "இரவி துணைத்தா ளிகல்வேந்தர் சென்னி
விரவு மலர்பொழியு மேவா—அரசிரிய
மின்பொழியுஞ் செவ்வேல் வெறியோ ரினங்கவரப்
பொன்பொழியுஞ் செங்கைப் புயல்" என வரும்.

(இ - ள்.) சோழனுடைய இரண்டு பாதங்களும், பகையரசர் களுடைய சிரசிலே சேர்ந்திருக்கின்ற மலரைச் சொரியும்; செம்மையாகிய வேலானது பகையரசர்கள் பயந்தோட மின்னலைச் சொரியும்; சிவந்த கையாகிய மேகமானது வறிஞர் கூட்டங் கொள்ளும்படி பொன்னைச் சொரியும் [எ - று.)

இரவி - சோழன். வெறியோர் - வெறுமையோர்; ஒன்று மில்லாதவர். வறுமை என்னும் பண்புப்பகுதி திரிந்து இங்ஙன மாயது.

இதனுள், 'மலர் பொழியும்' 'மின் பொழியும்' 'பொன் பொழியும்' என இயல்பாய் முடிந்தன. என்னை,

### சூத்திரம்

"இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றினும்
.......................................
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்."

என்பவாகலின், என்றார்க்கு மிதுவு மிலக்கணமன்றே; எழுத்ததிகாரத்தோடு மாறுபட்டுவந்த துண்டோ வெனின், மாறுபட்டு வருமென்ற தன்று; ஐகாரவேற்றுமை பொதுவகையா னோதிய முடிவோடு பொருந்தாது இவ்வாறு சிறுபான்மை வருமென்றோதினு ரென்றறிக. பிரிபொருட் சொற்றொடர் முதலாக வோதிய ஒன்பதும் இவ்வாறு வரின் வழுவெனப் பொதுவிலக்கணங் கூறிச் சிறப்புவகையா னிவ்வாறு வரின் வழுவன்றெனக் கூறியதல்லது வேறெனை விதிக்கப்படா தெனக் கொள்க. (௨௭)

## ௰. இடமலைவு

௧௧௯. இடமெனப் படுபவை மலைநாடி யாறே.

(இ - ள்.) இட மென்று கூறப்படுவன மலையும், நாடும், யாறும் (எ - று).

**மலையாவன**—இமயமலை முதலியன.

**நாடாவன**—பதினெண் மொழி வழங்கு நிலங்கள்.

**யாறுவன**—கங்கை முதலியன.

இவற்றின் மலைவாவது ஒன்றினுள்ள பொருள் ஒன்றினுளதாகச் சொல்லுதல். மலைவு - விரோதம்.

### நேரிசை வெண்பா

௩ - று. "தென்மலையின் மான்மதமுஞ் சாமரையுந் தேமருசீர்ப்
பொன்மலையின் சந்தனமு மாரமும்—பன்முறையும்
பொன்னி வளநாடன் முன்றிற் பொதுளுமே
மன்னர் திறைகொணா வந்து" எனவும்,

(இ - ள்.) பொதிகையிலுள்ள கஸ்தூரியும், சாமரையும், வாசனை பொருந்திய சிறப்பையுடைய மேருமலையிலுள்ள சந்தனமும், பூமாலையும், அரசர்கள் திறைப்பொருள்களாகப் பன்முறையும் கொண்டுவர வந்து, காவிரிபாயும் வளம் பொருந்திய சோழநாட்டை யாளும் சோழனுடைய முன்றிலிலே நிறையும் (எ - று.)

### நேரிசை வெண்பா

"தண்பொருநைச் செங்கனக மாதங் கிரித்தரளம்
வண்கலிங்கத் தந்த வயப்புரவி—பண்பு

மருவும் யவனத்து மால்யானை சென்னி
பொருநர்க்கு வீசும் பொருள்'' எனவும் வரும்.

(இ - ள்.) குளிர்ச்சி பொருந்திய பொருநை யாற்றிலுள்ள செம்பொன்னும், மாதங்கிரியிலுள்ள முத்தும், வளப்பம் பொருந்திய கலிங்கதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட வெற்றி பொருந்திய குதிரைகளும், நற்குணம் சேர்ந்த யவன தேசத்து மதயானையும் ஆகிய இவைகளை, சோழன், தன்னைப் புகழ்ந்து பாடுவோர்க்கு வாரி யிறைக்கும் பொருள்களாம் (எ - று.)

பொருநர் - புகழ்ந்து பாடுவோர். இவற்றுள், இமயத்திலுள்ளன பொதியத்திற்கு உரியவாகவும், பொதியத்திலுள்ளன இமயத்திற்கு உரியவாகவும் கூறினமையின், **மலையிடமலைவு** ஆயிற்று.

பொருநைக்குரிய தாளத்தை மாதங்கிரியோடு புணர்த்தும், மாதங்கிரிக்குரிய கனகத்தைப் பொருநையோடு புணர்த்துங் கூறினமையின், **யாறிடமலைவு** ஆயிற்று.

யவனத்திற்குரிய புரவியைக் கலிங்கத்தோடு புணர்த்தும், கலிங்கத்துக்குரிய யானையை யவனத்தோடு புணர்த்துங் கூறினமையின் **நாடிடமலைவு** ஆயிற்று.

இடமலைவு - இடத்தின் மாறுபாடு; மலைவு - மாறுபாடு. இங்ஙனமே மேல் வருவனவற்றிற்குங் கொள்க. (உஅ)

## கக. கால மலைவு

### கஉ0. காலம் பொழுதொடு பருவமென் றிரண்டே.

(இ - ள்.) காலமாவது - பொழுதும் பருவமும் என விரண்டாம் (எ - று.)

அவற்றுள், **பொழுதாவன**: விடியல் - உச்சி - ஏற்பாடு - மாலை - யாமம் - வைகறை என வினை. இவற்றுள், ஒரோவொன்றுக்கு நாழிகை பப்பத்தாக ஆறுபொழுதிற்கு நாழிகை அறுபதாம். இவை தமிழ்நூல் முடிப.

**மலைவாவது**: ஒன்றற்குரிய பூவும் - புள்ளும் - தொழிலும் பிறிதொன்றற்கு உரியவாக வுரைப்பது.

### நேரிசை வெண்பா

வ - று. " செங்கமலம் வாய்குவியத் தேங்குமுதங் கண்மலர
எங்கு நெடுவானின் மீனிமைப்பப்—பொங்குதயத்
தேராழி வெய்யோ னுகந்தான் மலர்ந்ததே
நீராழி சூழ்ந்த நிலம் " என வரும்.

(இ - ள்.) சிவந்த தாமரை மலர்கள் முகங் கூம்ப, வாசனை பொருந்திய அல்லி மலர்கள் முகமலர, நீண்ட ஆகாயத்தில் எங்கும் நாள்மீன் ஒளிர, பொங்குகின்ற தோற்றத்தையுடைய ஒற்றைச் சக்கரம் பொருந்திய தேரினையுடைய சூரியன் மகிழ்ந்து உதயஞ் செய்தான்; கடல்சூழ்ந்த உலகம் விளங்கிற்று (எ - று.)

இதனுள் மாலைக்குரியன, காலையோடு புணர்த்ததனாற் **பொழுது மலைவு ஆயிற்று.** பிறவு மன்ன.

**பருவமென்பன:** 'கார் - கூதிர் - முன்பனி - பின்பனி - இளவேனில் - முதுவேனில் என வினை. ஆவணிமுத லிவ்விரண்டு திங்கள் ஒவ்வொன்றாக அறுவகைப்படும். இவை வடநூற்கு மொக்கும். அவற்றின் மலைவாவது: ஓர் பருவத்திற் குரியன பிறிதோர் பருவத்திற் றோன்றினவாகக் கூறல்.

### நேரிசை வெண்பா

வ - று. " காதலர் வாரார் களிக்கு மயிலகவத
தாதவிழ் பூங்குருந்தின் றண்பணையின்—மீதே
தளவேர் முகைநெகிழத் தண்கொன்றை பூப்ப
இளவேனில் வந்த திதோ " என வரும்.

(இ - ள்.) மகிழ்கின்ற மயில்களாட, மகரந்தங்கள் பரந்த மலர் களையுடைய குருந்தமரத்தின் கிளைமீதே படர்ந்த முல்லைக் கொடியில் அழகிய முல்லை யரும்புகள் மலர, குளிர்ந்த கொன்றை பூத்தலைச் செய்ய, இதோ இளவேனிற் பருவம் வந்தது; எனது காதற் குரியார் வந்திலர் (எ - று.)

மயிலாடலும், முல்லை கொன்றை பூத்தலும், கார்ப்பருவத்திற் குரியன.

இதனுட் கார்ப்பருவத்திற் குரியன, இளவேனிற் பருவத்திற் றோன்றினவாகப் புணர்த்தமையின் பருவ மலைவு ஆயிற்று. பிறவு மன்ன. (உ௯)

## கஉ. கலை மலைவு

கஉக. கலையெனப் படுபவை காண்டக விரிப்பிற்
காமமும் பொருளு மேமுறத் தழுவி
மறுவறக் கிளந்த வறுபத்து நான்கே.

(இ - ள்.) கலை யென்று சொல்லப்படுவனவற்றை விளங்க விரித்துரைப்பின், இன்பமும், பொருளும் அழிவுபடாமற் றழுவிக் குற்றமறச் சொல்லப்படுவன அறுபத்துநான்குமாம் (எ - று.)

கலை - சாத்திரம்; அவை: கீதம், வாத்தியம், கணிதம் முதலியன.

இவற்றின் மலைவாவது, அவ்வந்நூலிற் கூறியபடி கூறாது பிறழக் கூறுவது.

நேரிசை வெண்பா

உ - று. " ஐந்தாம் நரம்பாம் பகைவிரவா தாறாக
வந்த கிளைகொள்ள நான்காய—முந்தை
இணைகொண்ட யாழ்முயற்று மேந்திழைதன் றைவித்
துணைவன் புகழே தொடுத்து " என வரும்.

(இ - ள்.) ஐந்தாம் நரம்பாகிய பகை சாராது, ஆறும் நரம்பாக வந்த கிளையைக் கொள்ள, நான்காம் நரம்பாகிய முதன்மைத்தான இணையைக் கொண்ட யாழை, சுமந்த ஆபரணங்களையுடைய பெண்ணானவள், தனது ஆவிக்குத் துணைவனாகிய தலைவனது புகழையே தொடுத்து வாசிப்பாள் (எ - று.)

இதனுள் நின்ற நரம்பிற் கைந்தாவது கிளையாகலான் அதனைப் 'பகை' என்றும், ஆறாவது பகையாகலான் அதனைக் 'கிளை' என்றும், நான்காவது நட்பாகலான் அதனை 'இணை' என்று எட்டாவதன் பெயர் கொடுத்துஞ் சொன்னமையின் கலைகளிற் சங்கீத நூன் மலைவாயிற்று. பிறவு மன்ன. (௩0)

## கங. உலக மலைவு

கஉஉ. உலகெனப் படுவதின் றொழுக்கின்மேற்றே.

(இ - ள்.) உலகென்று சொல்லப்படுவது ஈண்டு ஒழுக்கத்தின் மேலது (எ - று.)

உலகென்றால், மக்கண்மேலும், நிலத்தின்மேலும், ஒழுக்கத்தின் மேலும் நிற்கும் பலபொருளொருசொல்லாகலின், இவ்விடத்து ஒழுக்கத்தையே கோடற்கு 'ஈண்டு' என்றுரைக்கப்பட்டது; அவ்வொழுக்கம் எல்லாருமறியக்கிடந்தமையான் இன்னதென்று பகுத்தெடுத்துரைக்க வேண்டுவதில்லை. அதன் மலைவாவது, உலகத்தொழுகலாற்றோடு மாறுபட்ட ஒழுக்கம் நிகழ்ந்தனவாகக் கூறுதல்.

நேரிசை வெண்பா

வ - று. " அலைகடல்க ளேழுந்தூர்த் தந்தரத்தி னூடே
மலையனைய மால்யானை போட்டிக்—கலவாரை
நீறாக்கி வையமொடுங் குடையின்கீழ் வைத்தான்
மாறாச்சீர் மாநிலத்தார் மன் " என வரும்.

(இ - ள்.) மாறாத சிறப்பினையுடைய பெரிய பூமியிலுள்ளார்க் கிறைவன், அலைகளையுடைய சப்த சமுத்திரங்களையும் தூர்த்து, ஆகாயத்தினூடே, மலையை நிகர்த்த தனது மதயானையைச் செலுத்தி, பகைவர்களைப் பொடியாக்கி, இந்தப் பூமி முழுவதையும் நீண்ட தனது குடை நிழலின்கண்ணே தங்கும்படி செய்தான் (எ - று.)

தூர்த்தல் - வேறு பொருள்களை நிரப்பி மேடாக்குதல்.

இதனுள், ஒரு நில வேந்தனை எழுகடலுந் தூர்த்தானாகவும், ஆகாயத்தே தன் யானையைச் செலுத்திப் பகைவரை வென்றானாக வும், உலகொழுக்கோடு மாறுபடக் கூறினமையின், உலகமலைவு ஆயிற்று. (ூக)

## கச. நியாய மலைவு

கஉ௬. நியாய மென்பது நெறியுறக் கிளக்கின்
அளவையிற் றெளிக்கும் வினைபொருட் டிறமே.

(இ - ள்.) நியாய மென்பதனை யிலக்கணவகையாற் கூறுங்காற் காண்டல் முதலிய அளவையாற் பொருள் வினை திறக்கைத் தெளிவிப்பது (எ - று.)

அஃது அறுவகைப்பட்ட சமயத்தோரு மூலகத்திற் பொருள்களது தோற்றமும், நிலையும், அழிவும் இன்ன வகைய வென்று கூறுதல். அவற்றின் மலைவாவது: அவ்வவர் கூறியவாறு கூறாது மாறுபடக் கூறல்.

### நேரிசை வெண்பா

வ - று. "ஆய பொருள்கள் கணந்தோ றழியுமெனத்
தூய வசோகின் முனியுரைத்த—தாயவன்றே
காதலர் நீங்க வெழுங்காம வெங்கனல்வாய்
மாத ருயிர்தாங்கு மாறு" என வரும்.

(இ - ள்.) உலகத்தில் உண்டாகிய பொருள்களெல்லாம், ஒவ்வொரு கணத்திலும் அழிந்துபோமென்று, பரிசுத்தமாகிய அசோக மரத்தினடியி லிருக்கின்ற முனிவனாகிய அருகன் சொன்னது, ஆராயத் தக்கதன்று; தம் காதலர் பிரிய, உண்டாகின்ற வெப்பமாகிய ஆசைக்கடலி னிடத்தே அகப்பட்டு மாதர் உயிரைத் தாங்கியிருக்கும் வீரத்தால் என்பதாம் (எ - று.)

இதனுள், தோன்றும் பொருள்களெல்லாங் கணந்தோறும் அழியு மெனப் போதிமுனி யுரைத்தா னெனற்பாலதனை, அசோகின்முனி யுரைத்தா னென்றமையால் **நியாய மலைவு** ஆயிற்று. போதிமுனி-புத்தன். அசோகின்முனி-அருகன். பிறவு மன்ன. (௧௨)

## ௧௫. ஆகம மலைவு

**௧௨௪. ஆகம மென்பன மநுமுத லாகிய
அறனொடு புணர்ந்த திறனறி நூலே.**

(இ - ள்.) ஆகம மென்று சொல்லப்படுவன, மநுமுதலாகப் பதினென் வகையவாய் அறத்தொடு பொருந்திய திறத்தை யறிவிக்கு நூல்கள்.

அவற்றின் மலைவாவது: இந் நூல் இன்னது செய்தல் அறமென்று விதிக்கப்பட்ட விதியிற் பிறழ வருவது. ஆகமம்-ஆப்தர்கள் கூறிய சாத்திரம்.

### நேரிசை வெண்பா

வ-று. "தெய்வம் விருந்தொக்க றென்புலத்தார் தாமென்னும்
ஐவகையுந் தம்பொருள்கொண் டாற்றுவார்—மையிலா

முக்கோலுங் கற்றோய் முழுமடியுந் தாங்கியே
தக்கோ ரெனப்படுவார் தாம்'' என வரும்

(இ - ள்.) குற்றமற்ற திரிதண்டமும், காவியிற் றோய்த்த முழு வஸ்திரமுந் தரித்துப் பெரியோ ரெனப்பட்ட சந்நியாசிகள், தேவதைகள், விருந்தினர், பந்துக்கள், பிதுர்க்கள், தாங்கள் என்னும் ஐவகையாரையும், தாங்கள் சம்பாதித்த பொருளைக் கொண்டே காப்பாற்றுவார்கள் (எ - று.)

கல் - காவிக்கல். ஆற்றுதல் - துயர்தீர்த்தல், பசிதணித்தல். இதனுள் - இல்வாழ்வார்க்குரிய தொழிலைத் துறவு புரிந்தோரோடு புணர்த்தமையின் ஆகம மலைவு ஆயிற்று. (கூ௩)

## இட மலைவு முதலியவற்றிற்குச் சிறப்பு விதி

கஉ௫. கூறிய நெறியி னறுவகை மலைவு
நாடக வழக்கி னட்டுதற் குரிய.

(இ - ள்.) மேற்கூறிய வழுவொன்பதும், இவ்வகையாற் புணர்ப்பின் ஆமென்றமையான், அதுபோல இச் சொல்லப்பட்ட அறுவகை மலைவும் நாடக வழக்கிற் சொல்லுதற்குரிய (எ - று.)

நாடக வழக்கும், உலகியல் வழக்கும், பாடல்சான்ற புலனெறி வழக்கு மென்னும் மூன்று வழக்கினுள்,

**நாடக வழக்காவது,** இல்பொருளாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந் துரையாகத் தோன்றுவது. எனவே, அவ்வாறு மலைவும் புகழ்ச்சி யிடத்து நீக்கப்பட்டது அலங்காரமாகியே வரு மென்பதாம்.

க-வது, **இடமலைவமைதி**

நேரிசை வெண்பா

வ - று. '' மரகதச் சோதியுடன் மாணிக்கச் சோதி
இருமருங்குஞ் சேர்ந்தரிவை பாகன்—உருவ
மலைக்கு மகில்சுமந் தாரத்து வான்கோ
டலைத்து வரும்பொன்னி யாறு '' என வரும்.

(இ - ள்.) அகிற்கட்டைகளைத் தாங்கிச் சிறந்த சந்தனக்கிளை களையும் அலையினால் அசைத்துக் கொண்டுவரும் காவிரியாறானது

பச்சை யிரத்தினத்தின் சோதியுடனே, செம்மணியின் பிரகாசத்தையும் இரண்டு பக்கத்திலும் சேர்ந்து, அவ்விரு நிறத்தையுங் கொண்ட உமைபாகனாகிய சிவபெருமானுடைய வடிவத்தையும் குறைவறச் செய்யும் (எ - று.)

சிவந்த தமது திருமேனியின் பாதிபாகத்தில் நீல நிறத்தை யுடைய உமாதேவி யிருப்பதால் சிவன் பசுமை நிறத்தையும் செந் நிறத்தையு முடையவராவர்.

இதனுள் காவிரியுட் பிறமலைக்கும் பிறநாட்டிற்கு முரிய மரகதமும், மாணிக்கமும், சந்தனமும் அலைத்து வருகின்றது என் றமையான், **இடமலைவாய்ப்** புகழ்ச்சியிடத்துப் பொருந்துவதால் அலங்காரமாயிற்று.

௨-வது, **காலமலை வமைதி**

நேரிசை வெண்பா

உ - று. "மண்டபத்து மாணிக்கச் சோதியான் வாவிவாய்ப்
புண்டரிக மாலைப் பொழுதலரும்—தண்டரளத்
தாமஞ் சொரியுந் தகைநிலவான் மெல்லாம்பற்
பூவலருங் காலைப் பொழுது" என வரும்.

(இ - ள்) மண்டபத்தினுள்ள செம்மணியின் சூரியப் பிரகாசம் போன்ற சோதியினாலே, தடாகத்தினிடத்திலே தாமரையானது மாலைநேரத்திலும் மலரும்; சந்திரப் பிரகாசத்தை நிகர்த்த குளிர்ந்த முத்துமாலை பொழிகின்ற நற்றகுதி வாய்ந்த நிலவினாலே மெல்லிய ஆம்பல் மலரானது காலை நேரத்திலும் மலரும் (எ - று.)

இதனுட் காலை மலருங் கமலம் மாலை மலர்ந்ததாகவும், மாலை மலரு மாம்பல் காலை மலர்ந்ததாகவும் கூறினமையின், **காலமலைவாய்ப்** புனைந்துரையிடத்துப் பொருந்துவதால் அலங்காரமாயிற்று.

௩-வது, **கலைமலைவமைதி**

நேரிசை வெண்பா

உ - று. "கூடம் விரவிக் குறைநிலத்தா னத்தியன்ற
பாட லமுதம் பருகினான்—ஆடுகின்ற
ஊசலயற் றோன்றி யொளியிழைக்கு நாணளித்த
ஆசில் வடிவே லவன்" என வரும்.

(இ - ள்.) ஆடுகின்ற ஊசலின் பக்கத்திலே தோன்றி, பிரகாசம் பொருந்திய ஆபரணங்களை யணிந்த பெண்ணிற்கு, நாணைக் கொடுத்த குற்றமற்ற கூர்மை தங்கிய வேலாயுதத்தையுடையவன், ஆறும் நரம்பாகிய பகையோடு கூடிக் குறைநிலத் தானத்தா னியன்ற பாடலாகிய அமுதத்தைப் பருகினான் (எ - று.)

இதனான்-ஆறும் நரம்பாகிய பகையதனோடு கூடிக் குறைநிலத் தானத்தா னியன்றதனைப் பாடலமுதம் என்றமையின் **கலைமலை வாய்ப்** புனைந்துரைத்தமையின் அலங்காரமாயிற்று.

ச-வது, **உலகமலை வமைதி**

**நேரிசை வெண்பா**

(வ - று.) ''கடனான்கும் வந்தலைக்குங் காலாளுந் தேரும்
அடல்செய் திருதுணியா யிற்றே—உடலொன்றி
அந்தரமே யேகுவன் காண்மினோ யானியற்றும்
இந்திர சால மிது'' எனவரும்.

(இ - ள்.) நான்கு கடலையும் வந்தலைக்கின்ற காலாட்படையுந் தேர்ப்படையும் போர்செய்து இருகூறாயின; அவை தேகத்தோடு பொருந்தி அந்தரத்தே செல்வதைப் பாருங்கள்; இது யான் செய்யும் இந்திரசாலம் (எ - று.)

**இதனான், உலகமலைவாய்ப்** பொருள்வந்து இந்திரசாலமென்றதனால் அலங்காரமாயிற்று.

ரு-வது, **நியாயமலை வமைதி**

**நேரிசை வெண்பா**

வ - று. ''வானாகி மண்ணாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாந் திருமாலே—ஆனாயா
வெண்ணெய் விழுங்க நிறையுமோ மேலொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு'' எனவரும்.

(இ - ள்.) விண்ணாகி, மண்ணாகி, அலைகளால் மடங்குகின்ற கடலாகி, காற்றாகி, தேனாகி, பாலுமாகும் இலக்குமியை மார்பிற் றரித்த மாலே! பசுக்களைக் காத்த இடையனே! முன்னொருநாள் மண்ணை உமிழ்ந்த உன்னுடைய வயிறன்று, இப்பொழுது வெண்ணெயை விழுங்குவதால் நிறைவுறுமோ (எ - று.)

இதனுள், அனைத்துப் பொருளு மானா னென்றும், மண்ணனையை விழுங்கினா னென்றும், மண்ணை யுமிழ்ந்தா னென்றும் மாறுபடக் கூறினமையின் **நியாயமலைவாய்ப்** புணர்ந்துரைபால அலங்காரமாயிற்று.

௬-வது, **ஆகமமலை வமைதி**

நேரிசை வெண்பா

வ - று. " காய்கதிரோனுக்குங் கன்னனையீன் றங்கன்னி
ஆகிப்பின் மூவரையு மீன்றளித்த—தோகை
தலைமைசேர் கற்பினா டான்வணங்கு முன்னாள்
மலையெடுத்துக் கார்காத்த மால் " எனவரும்.

(இ - ள்.) வெப்பத்தைச் செய்கின்ற சூரியனுக்கு முன்னே கன்னனைப் பெற்றுங் கன்னியாகிப் பின்னர், தருமர், வீமன், அருச்சுனன் ஆகிய மூவரையும் யமன், வாயு, இந்திரன் ஆகிய மூன்று தேவர்களுக்கும பெற்ற மயில்போன்ற சாயலை யுடையவளும், முதன்மையான கற்பினை யுடையாளுமாகிய குந்தியை வணங்கினன், முன்னாளிலே கோவர்த்தனகிரியை எடுத்து மழையைத் தாங்கி ஆயரைக் காத்த திருமால் (எ - று.)

இதனுள், சூரியனுக்குக் கன்னனைப் பெற்றும் பின்னருங் கன்னியாயினா ளென்றும், அதன்பின் மூவரையும் பெற்றாளென்றும், இவள் கற்புடைமையாற் றிருமால் வணங்கினானென்றும் கூறினமையின் **ஆகமவழு**வாய அவ்வாறு சொல்லுதல் தகுதியாதலின் அலங்காரமாயிற்று. (ந சு)

**புறனடை**

கஉ_சா. மெய்பெற விரித்த செய்யுட் டிறனும்
மெய்திய நெறியு மீரைங் குணனும்
ஐயெழு வகையி னாறிவ றணியு
மடியினுஞ் சொல்லினு மெழுத்தினு மியன்று
முடியா வந்த மூவகை மடக்கும்
கோமூத் திரிமுதற் குன்றா மரபி
னேமுற மொழிமிறைக் கவியி ராறும்

மிவ்வகை யியற்றுதல் குற்ற மிவ்வகை
யெய்த வியம்புத லியல்பென மொழிந்த
வவ்வகை முத்திறத் தாங்கவை யளப்பட
மொழிந்த நெறியி னொழிந்தவுங் கோட
லான்ற காட்சிச் சான்றோர் கடனே

என்பது, என்னுதலிற்றோவெனின், இந் நூலுரைக்கப்பட்ட இலக்கண மனைத்துந் தொகுத்து இவ்வாறன்றிப் பிறவாறு வருவன வுளவெனினுந் தழீஇக்கொள்க வென்பதனை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பொருள்பெற விரித்த முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை யெனாக் கூறப்பட்ட **செய்யுண் மரபும்;**

அச் செய்யுட்குச் சொற்ற டம், வைதருப்பம் எனப் பொருந்திய **நெறியும்;** அவற்றொடு தொடர்ந்த செறிவு, தெளிவு, சமனிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி யென்று கூறப்பட்ட **பத்துவகைக் குணமும்;** தன்மை முதல் பாவிக மீறாகக் கிடந்த முப்பத்தைந்து **அலங்காரமும்;** அடியினானும், சொல்லினானும், எழுத்தினானுங் கூறி முற்றுப்பெற வந்த **மூவகை மடக்கலங்காரமும்;**

கோமூத்திரி முதலாகக் குறைபாடில்லா இலக்கணத்திற் பிழைப் பின்றிவந்த **மிறைக்கவி பன்னிரண்டும்;**

இவ்வாறு கூறுதல் வழுவென்றும், அவற்றையே யிவ்வாறு கூறுதல் வழுவன்றென்றுஞ் சொல்லப்பட்ட பதினைந்து வேறுபாடும் உள்ளிட்டுக் கூறப்பட்ட இலக்கணங்க ளொழிந்து வருவன வுள வெனினுந் தழீஇக்கோடல், அமைந்த அறிவுடையோராகிய மேலோரது கடன்.

அஃதேல், மேற் கூறியவற்றையே மீண்டுங் கூறியது புனருத்த மாம் பிறவெனின், "தொகுத்து முடித்தல்" என்பது தந்திர வுத்தி யாகலான் இவ்வா றுரைக்கப்பட்டதென்க. அஃதேல், 'எழுத்தின் கூட்ட மிடைபிறி தின்றியும்' என எழுத்து மடக்கேயன்றோ முன் சொன்னது; ஈண்டடியினுஞ் சொல்லினுமென்று முறைபிறழக் கூறிய தென்னையோவெனின், இதுவும் "தலைதடு மாற்றம் என்னும் உத்தி வகையா னுரைக்கப்பட்டது. அல்லதூஉம், அடி மடக்கென்பனவும்,

சொன்மடக்கு என்பனவும், எழுத்தின் கூட்டமென்ப தறிவித்தற்கும், ஓரெழுத்தானும் ஓரினத்தானும் வருவனவு மப்பாற்படு மென்றற்கும், கோமூத்திரி முதலாகக் கூறப்பட்ட மிறைக்கவியை நோக்கி ஆராயுங்காற் பெரும்பான்மையு மெழுத்தின் மடக்கின்பாற் படுமாயினும் இவை வெவ்வேறு சிறப்புப் பெயருடையவாய் உலகி லுண்டாகின்றன வாதலாற் சொல்லின் முடிபு மிலக்கணத்தா னவ்வாறு சொல்லப்பட்ட தென்றற்குஞ் சொல்லப்பட்ட தெனினு மமையும்.

சொல்லின்முடிபு மிலக்கண மாண் டியாதோவெனின், ஒப்பினானாகிய பெயரும், குணங் காரணமாகிய பெயரும் குறித்துரைக்கப் படுதலா னப்பொருளே யுணர்ந்துகொள்ளப்பட்டது.

அஃதேல் மாலைமாற்றும், சுழிகுளமும், கோமூத்திரியம், சருப்பதோபத்திரமுமென நான்குமேயன்றே ஆண் டாசிரியனால் வடநூலி லுரைக்கப்பட்டன. ஈண் டுரைத்தனவாகிய ஒழிந்த மிறைக்கவி மிகைபடக் கூறிற்றாம் பிறவெனின், ஆகா; ஒழிந்தன, "ஒன்றின முடித்த றன்னின முடித்தல்" என்னுந் தந்திரவுத்தியால் உரைக்கப்பட்டன. அல்லதூஉம், இது வடநூலுக்கு வழிநூலாத லாற் றனது விகற்பம்பட வுரைத்தானெனினு மமையும். என்னை,

### சூத்திரம்

"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
யழியா மரபினது வழிநூ லாகும்" என்றாராகலின்.

**சொல்லணியியல் முற்றிற்று.**

ஆக இயல் ௩-க்குச் சூத்திரம் ௧௨௬

**தண்டியலங்காரம் மூலமும் உரையும் முற்றும்.**

# அட்டநாகபந்தத்தின் விதி

ஒருநான்கு கரத்தொடுநாற் பத்தொன்றுமா
    றுடனாற்பத் தைந்தாமெட் டுடனேந் நான்காம்
இருளறுபன் னிரண்டுடனே பதினெட்டாகு
    மிருபத்தி ரண்டுடனே நாற்பத் தேழாம்
பரவுமிரு பத்துநான் குடன்முப்பத் தொன்
    பானு முப்பான்மூன்றோ டைம்பத் தொன்றாம்
அருமுப்பத் தேழுடனே நாற்பத்தொன்
    பானுமட் டநாகபந்த மாஞ்செய் யுட்கே.

(இ - ள்.) நான்காமெழுத்து நாற்பத்தோரா மெழுத்தாகவும், ஆறாமெழுத்து நாற்பத்தைந்தா மெழுத்தாகவும், எட்டாமெழுத்து இருபதாமெழுத்தாகவும், பன்னிரண்டாமெழுத்துப் பதினெட்டா மெழுத்தாகவும், இருபத்திரண்டாமெழுத்து நாற்பத்தேழா மெழுத்தாகவும், இருபத்துநான்காமெழுத்து முப்பத்தொன்பதா மெழுத்தாகவும், முப்பத்துமூன்றாமெழுத்து ஐம்பத்தோரா மெழுத்தாகவும், முப்பத்தேழாமெழுத்து நாற்பத்தொன்பதா மெழுத்தாகவும் வரும் படி ஒற்றுள்பட ஐம்பத்தோரெழுத்தினுலொரு செய்யுட்செய்து உபதேச முறைமையால் அட்டநாகபந்தம் வரைந்து அதிலடைத்துக் கொள்வது அட்டநாகபந்தத்தின் விதியாம் (எ - று.)

# தண்டியலங்கார

# சூத்திர முதற்குறிப் பகரவரிசை


| சூத்திரம் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அடிமுழுது | உ00 |
| அதுதான், முடி | கஅச |
| ,, பொருள் குண | ௬உஉ |
| அதுவே, அடையும்பொரு | கசசு |
| ,, குணம்பொரு | கசஉ |
| ,, செம்மொழி | கருச |
| ,, பொருள் குணத் | ௬உ |
| ,, பொருள் குணம | ௬ச |
| ,, பாலை விருத் | அகூ |
| ,, விரோ | ௯௬ |
| அபாவந்தானு | கநO |
| அவற்றுள், பிரிபொருட் | உசசு |
| ,, பெருங்காப் | எ |
| ,, முந்தகச் | உ |
| அவைதாம், ஒருதிறப் | ௬O |
| ,, வீரமச்ச | கசஉ |
| அவைபல்பிறவி | கஉசு |
| அறமுதனான்கி | ௬O |
| அற்புதஞ்சிலேடை | ருக |
| அன்னபோலெனு | கஉகூ |
| **ஆ** | |
| ஆகமமென்பன | உகூசு |
| ஆதிமிடைகடை | கஅச |
| ஆரிடத்துள்ளு | உகூக |
| ஆர்வமொழி | கசக |
| **இ** | |
| இடமெனப்படு | உகூச |
| இரண்டாம் | உகூ௬ |
| இன்னாக்கின்னா | கஎச |
| **உ** | |
| உண்ணின்றதன்மை | ௬சக |
| உதாரமென்ப | உO |
| உய்த்துணரவரு | உருஎ |
| உரியபொருளின்றி | உகூ |
| உருவகமுவமை | எஉ |
| உலகறிகாரண | கசரு |
| உலகெனப்படுவ | உகூஎ |
| உலகொழுக்கிறவா | உ௯ |
| உவமையும் பொருளும் | ருசு |
| உவமைபேது | கூஅ |
| **எ** | |
| எவ்வகைப்பொருளு | ௯க |
| எழுத்தின்கூட்ட | கஅ௯ |
| என்றுமபாவமு | கநO |
| என்னையுடையாள் | உசு |
| **ஏ** | |
| ஏற்றசெய்யுட் | உஅ |
| **ஒ** | |
| ஒப்புமையில்லது | கஎகூ |
| ஒருநான்கக்கர | உஎகூ |
| ஒருநிரன்முன் | உருகூ |

| சூத்திரம் | பக்கம் |
|---|---|
| ஒருபொருண்மிசை | ௨௫௪ |
| ஒருவகைச்சொற் | ௩௫௩ |
| ஒருவகைநிகழ்வ | ௧௭௧ |
| ஒருவினைபலவினை | ௧௫௫ |
| ஒழுங்கிசையென்பது | ௬௮ |
| **ஓ** | |
| ஓரடிபொழிந்தன | ௧௮௪ |
| ஓரெழுத்துமடக்கலு | ௨௩௦ |
| **க** | |
| கருதியகுணத்தின் | ௩௯௪ |
| கருதியதுகிளவா | ௩௪௮ |
| கருதியபொருளோர் | ௨௩ |
| கருதியபொருடொகுத்த | ௧௩௬ |
| கருதியபொருடொகுத்தாங் | ௩௯௮ |
| கலியெனப்படு | ௨௯௭ |
| களியினும்பித்தினும் | ௨௫௦ |
| **கா** | |
| காமமுமச்சமும் | ௨௫௨ |
| காலப்பொழுது | ௨௯௫ |
| **கு** | |
| குணந்தொழில் | ௭௯ |
| குணந்தொழின் | ௩௯௩ |
| குளகம்பலபாட் | ௯ |
| குறிப்புவெளிப்படு | ௩௬௭ |
| **கூ** | |
| கூறியநெறியி | ௨௭௦ |
| கூறியஉறுப்பிற | ௯ |
| கூற்றினுங் | ௧௦௮ |
| **கோ** | |
| கோமூத்திரியே | ௨௧௯ |
| **கௌ** | |
| கௌடமென்பது | ௩௨ |
| **ச** | |
| சந்திவழுவே | ௨௯௨ |
| **சி** | |
| சிறப்பினும் | ௧௫௩ |
| **செ** | |
| செப்புளந்தாதி | ௩௬ |
| செய்யுளென்பவை | ௨ |
| செய்யுள் வழுவே | ௨௯௬ |
| செறிவெனப்படு | ௩௭ |
| செறிவேதெளிவே | ௩௬ |
| **சொ** | |
| சொல்லினும்பொரு | ௧௯ |
| சொல்லின்கிழத்தி | ௧ |
| சொல்வழுவென்ப | ௨௫௭ |
| **த** | |
| தன்மையுவமை | ௨௪ |
| **தா** | |
| தான்றற்புகழ்வது | ௧௪௭ |
| **தூ** | |
| தூரகாரியமு | ௧௬௨ |
| **தெ** | |
| தெரிபுவேறு | ௧௬௯ |
| தெளிவெனப்படு | ௧௪ |
| **தொ** | |
| தொகைநிலைச்செய்யுட் | ௪ |
| தொகையேனிரியே | ௯௦ |
| **நி** | |
| நியாயமென்பது | ௨௯௮ |
| நிரனிறுத்தியற்றுத | ௧௬௯ |

| சூத்திரம் | பக்கம் |
|---|---|
| **ப** | |
| பண்புந்தொழிலு | ௯௫ |
| பழிப்பதுபோலும் | ௧௭௦ |
| **பா** | |
| பாவிகமென்பது | ௧௮௩ |
| **பி** | |
| பிரிபொருட் | ௨௬௮ |
| **பு** | |
| புகழினும் | ௧௬௪ |
| புகழ்வதுபோலப் | ௧௩௮ |
| **பெ** | |
| பெயர்பொரு | ௧௨௪ |
| பெருங்காப்பியமே | ௬ |
| **பொ** | |
| பொருளினுஞ் | ௫ |
| பொருள் பரிமாறுதல் | ௧௭௪ |
| **போ** | |
| போலமானப் | ௫௯ |
| **ம** | |
| மனப்படுமொரு | ௧௨௩ |
| **மா** | |
| மாறுபடுசொற் | ௧௬௬ |
| மாறுபடுபொருண் | ௨௫௧ |
| **மி** | |
| மிகுதலுங்குறைதலு | ௫௭ |
| **மு** | |
| முதல்வாறும் பொருளுங் | ௧௨௭ |
| முருகரன் | ௧௪௯ |
| முழுவதுஞ்சேற | ௧௦௪ |
| முன்வருஞ்சொல்லும் | ௯௦ |
| முன்னத்தின் | ௯௨ |
| முன்றொன்று | ௧௦௪ |
| **மெ** | |
| மெய்ப்பெறவிரித்த | ௨௭௩ |
| மெய்ப்பெறுமரபின் | ௧௧ |
| **மே** | |
| மேற்கோளது | ௨௪௯ |
| **மொ** | |
| மொழிந்தது | ௨௫௨ |
| மொழியப்பட்ட | ௧௭௫ |
| **ய** | |
| யதிவழுவென்ப | ௨௫௯ |
| **யா** | |
| யாதன்றிறத்தினு | ௧௨௬ |
| **வ** | |
| வகையுளியுரை | ௨௬௦ |
| வலியெனப்படுவது | ௨௪ |
| வழக்காறுயின் | ௨௫௮ |
| வழூஉப்பட | ௨௫௫ |
| வன்சொல்வாழ்த்து | ௯௬ |
| **வி** | |
| வியத்தகுசெல்வ | ௧௫௦ |
| விரவத்தொடுப் | ௧௫ |
| விரைவினுஞ் | ௨௫௪ |
| வினைபண்பென | ௧௭௩ |
| **வே** | |
| வேற்றுப்பொருள் | ௧௦௨ |